மூவர் தமிழ் இலக்கணம்

(மொழிப் பயிற்சியும்—கட்டுரைப் பயிற்சியும்)

697
4-6

பதினோராம் வகுப்பு

(புதிய பாடத்திட்டப்படி)

2 DEC 1967

ஆசிரியர் :

புலவர் கோ. வில்வபதி

இந்து தியலாஜிகல் உயர்நிலைப்பள்ளி, சென்னை.

(10·9. கி. கிராம் வெள்ளைத்தாளில் அச்சிடப்பட்டது)

வர்தா பதிப்புக் கழகம்

திருவல்லிக்கேணி :: சென்னை

[விலை ரூ. 2

உரிமையுடையது

Copy Right

முதற் பதிப்பு—டிசம்பர், 1967

TB
P31 (11)
N67

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
145963
சென்னை-600 008.

மாணிக்கம் பிரஸ், அமைந்தகரை, சென்னை-29.

REGISTRAR OF ... 20 DEC 1967

முன்னுரை

இந்நூல் அரசியலாற் அண்மையில் (*31-8-1966*) வெளியிட்ட புதிய இலக்கணப் பாடத்திட்டப்படி பதினோராம் வகுப்புக்கென எழுதப்பட்டதாகும்.

மாணவர்கள் இலக்கணத்தை விரும்பிக் கற்கும் வகையில் இனிய எளிய நடையில் மிகவும் தெளிவாகவும் விளக்கமாகவும் இந்நூல் எழுதப்பட்டுள்ளதை இதனைக் கண்ணுறுவோர் நன்கு உணரலாம். தக்க எடுத்துக் காட்டுகளின் வாயிலாக இலக்கண விதிகளை மாணவர்கள் எளிதில் உணர்ந்து கொள்ளும் வகையில் விளக்க முயன்றுள்ளேன். பாடத்திட்டத்தில் கண்டவாறு நன்னூல் சூத்திரங்கள் யாவும் உரிய இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

இலக்கணம் பயிற்சியினாலேயே மாணவர் உள்ளத்தில் பதிவதாகும். படித்த இலக்கணப் பகுதிகள் நன்கு மனத்தில் பதியும் பொருட்டு ஒவ்வொரு பகுதியின் இறுதியிலும் சிறந்த பல வினாக்களும் பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன. அப்பகுதியைக் கற்று முடிந்தவுடன் தரப்பட்ட பயிற்சிகளை மாணவர்கள் தாமே செய்து பழகினால் இலக்கணத்தில் சிறந்த தேர்ச்சி பெறுவார்கள் என்பது என் நம்பிக்கை.

பாடத்திட்டத்தை யொட்டி எழுதப்பட்டுள்ள மொழிப் பயிற்சிகளும் கட்டுரைப் பயிற்சிகளும் மாணவர்களின் மொழியறிவை வளர்த்து அழகிய இனிய நடையில் கட்டுரை முதலியன எழுதும் திறமைபெற நல்வழி காட்டும் என எண்ணுகிறேன்.

தக்க சிந்தனையோடு எழுதப்பட்ட இந்நூலை ஆதரித்து எனக்கு மேலும் இத்துறையில் எழுச்சியூட்டுமாறு அறிஞர் பெருமக்களை வேண்டிக் கொள்கிறேன்.

ஆசிரியர்.

பொருளடக்கம்

தோற்றுவாய்

I எழுத்திலக்கணம்

1. பிறப்பின் பொது இலக்கணம் ... 3
2. முதல் எழுத்துக்களின் பிறப்பிடம் ... 4
3. முயற்சி ... 5

II சொல் இலக்கணம்

1. தனிமொழி—தொடர்மொழி—பொது மொழி ... 11
2. பெயர்ச்சொல் (விரிவாக) ... 13
3. ஆகுபெயர் அன்மொழித் தொகை வேறுபாடு ... 25
4. பொதுப் பெயர்கள் (தான், தாம், எல்லாம்) ... 26
5. உருபு மயக்கம் ... 28
6. வினைச்சொல் (விரிவாக) ... 31
7. பொதுவினைகள் (வியங்கோள், வேறு இல்லை, உண்டு, யார், எவன், செய்யும் என்னும் வினைமுற்றுக்கள்) ... 55
8. சினைவினை முதல்வினை ... 61
9. காலம் காட்டும் உறுப்புக்கள் ... 62
10. இடைச்சொல் (விரிவாக) ... 70
11. எல்லாவிடத்தும் வரும் அசைச்சொல் ... 75
12. உரிச்சொல் (விரிவாக) ... 77

III பொது இலக்கணம்

1. வினவகை ... 84
2. விடை வகை ... 85

3. அடைமொழி ... 87
4. பொருள் கோள் ... 89
5. உவம உருபுகள் ... 93

IV புணர்ச்சி இலக்கணம்

1. பல சில என்பவற்றின் புணர்ச்சி ... 95
2. பூ என்னும் சொல்லின் புணர்ச்சி ... 97
3. தெங்கு என்னும் சொல்லின் புணர்ச்சி ... 98
4. மரப்பெயர்ப் புணர்ச்சி ... 98
5. தேன் என்னும் சொல்லின் புணர்ச்சி ... 99
6. ணகர னகர ஈற்றுப்புணர்ச்சி ... 101
7. யகர ரகர ழகர ஈற்றுப்புணர்ச்சி ... 103
8. லகர ளகர ஈற்றுப் புணர்ச்சி ... 105
9. செய்யுள் விகாரங்கள் ... 106

V பொருள் இலக்கணம்

1. அகத்திணை (முதல், கரு) ... 111
2. புறத்திணை (பன்னிரண்டு) ... 118

VI யாப்பு இலக்கணம்

1. வெண்பா (குறள்-நேரிசை-இன்னிசை) ... 121
2. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் ... 125
3. அலகிடுதல் (சீர்பிரித்து வாய்பாடு கூறி, தளை மோனை எதுகைகளை எடுத்து எழுதல்) ... 126

VII அணி இலக்கணம்

1. வேற்றுப் பொருள் வைப்பணி ... 131
2. வேற்றுமையணி ... 132
3. இரட்டுற மொழிதலணி ... 132
4. மடக்கணி ... 134
5. வஞ்சப் புகழ்ச்சியணி ... 134
6. சொற்பொருட் பின்வரு நிலையணி ... 135

மொழிப் பயிற்சி

1. வாக்கியம் - பலவகைகள் ... 137
2. வாக்கிய அமைப்பு (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், எச்சங்கள் நிற்கும் முறை) ... 139
3. ஒரே கருத்தைப் பல உருவ வாக்கியங்களில் வெளியிடுதல் ... 141
4. பத்தியமைப்பு (முன்னிலும் விரிவாக) ... 145
5. நடை (விரிவாக) ... 147
6. வழூஉச் சொற்களும் திருத்தமும் (முன்னிலும் விரிவாக) ... 153
7. விலக்குதற்குரிய இழிவழக்குகள் ... 155
8. நிறுத்தற்குறிப் பயிற்சிகள் ... 156
9. மரபு ... 159
10. உவமைகளும் பழமொழிகளும் வைத்து எழுதல் ... 161
11. உவமை உருவக மாற்றம் ... 164
12. வல்லெழுத்து மிகும் இடங்களும் மிகா இடங்களும் (முன்னிலும் விரிவாக) ... 165
13. இடம்விட்டு எழுதுதலும் சேர்த்து எழுதுதலும் ... 169
14. சொற்களை இடம்விட்டு எழுதுதலும் சேர்த்து எழுதுதலும் ... 171

கட்டுரைப் பயிற்சி

1. செய்தித்தாள்களுக்குச் செய்திப் பத்திகள் எழுதி அனுப்புதல் ... 173
2. வருணனைக் கட்டுரை ... 175
3. விளக்கக் கட்டுரை ... 178
4. கருதியல் கட்டுரை ... 181
5. எடுத்தியம்பும் கட்டுரை ... 184
6. வாழ்க்கைக் குறிப்புக் கட்டுரை ... 187
7. சமுதாய இயல் கட்டுரை ... 190
8. பொருளியல் கட்டுரை ... 193
9. கல்வியியல் கட்டுரை ... 196

10. பிறர் சொற்பொழிவுகளைக் கேட்டுக் குறிப்பெடுத்தல் ... 199
11. பிறர் வானொலிப் பேச்சைக் கேட்டுக் குறிப்பெடுத்தல் ... 200
12. அக்குறிப்புக்களை விரித்து எழுதல் ... 202
13. கொடுத்த தலைப்புக்கள் பற்றிக் கட்டுரை எழுதல் ... 205
14. கொடுக்கப்பட்ட மேற்கோள் நூல்களி லிருந்து கட்டுரைப் பொருள் திரட்டல் ... 208
15. பொருள் வகையாலும் நடை வகையா லும் சிறந்த கடிதங்கள் எழுதல் ... 210
16. அரசியல் அலுவலகங்களுக்கும் ஊராட்சி நகராட்சி மன்றங்களுக்கும் விண்ணப்பம் எழுதல் ... 212
17. கற்பனைக் கட்டுரை ... 214
18. நிறைவேறிய தீர்மானங்களை உரிய இடங் களுக்கு அனுப்பி வைத்தல் ... 218
19. ஒரு பொருள் அல்லது சூழ்நிலை பற்றி ஒட்டியும் வெட்டியும் உரையாடல் அமைத்தல் ... 220
20. நூல் மதிப்புரை எழுதல் ... 224
21. செய்யுள் திரண்ட பொருள் எழுதல் ... 227
22. கூட்டங்கள், மாநாடுகளுக்கு வரவேற் புரை எழுதல் ... 228
23. பிரிவுரை எழுதல் ... 230
24. வெள்ளி விழாக்காலப் புகழுரையும் மறுமொழியும் ... 232
25. நாடகக் காட்சிகள் அமைத்தல் ... 235
26. மாணவர் மன்றங்களுக்கு விதிகள் அமைத்தல் ... 239

M.K. Rama Subrahmanian

மூவர் தமிழ் இலக்கணம்

பதினோராம் வகுப்பு

தோற்றுவாய்

உலகில் பலமொழிகள் வழங்குகின்றன. அவற்றுள் சிலவே திருந்திய சிறந்த மொழிகள் எனப் போற்றப்படுகின்றன. சிறந்த இலக்கிய இலக்கண வளமும் சீரிய நாகரிகமும் செம்மையும் தொன்மையும் வாய்ந்த மொழிகளே திருந்திய மொழிகளாகும். அத்தகைய மொழிகளை **உயர் தனிச் செம்மொழிகள்** என வழங்குவர் மொழி நூலறிஞர். அங்ஙனம் சிறப்பித்துக் கூறப் பெறுகின்ற உயர்தனிச் செம்மொழிகளில் நம் தாய்மொழியாகிய தமிழும் ஒன்றாகச் சிறந்து விளங்குகிறது.

தமிழ்மொழி அத்தகைய பெருமையினைப் பெறுவதற்கு அதன் பண்பட்ட இலக்கண அமைப்பும் இலக்கிய வளமுமே முக்கியமான காரணமாம். தமிழ் மொழியில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட இலக்கியங்கள் உள்ளன. அந்த இலக்கியங்களுக்கெல்லாம் வரம்பு கோலி அமைக்கப்பட்ட இலக்கணங்களும் அப்பழங் காலத்திலேயே சிறந்து

விளங்கின. **அகத்தியர்** என்பவர் இயற்றிய **அகத்தியம்** என்னும் இலக்கணமே தமிழ்மொழிக்கு அமைந்த பழைய இலக்கணம் என்பர். அந்நூல் முழுவதும் கிடைக்கவில்லை. அதற்குப் பிறகு **தொல்காப்பியம்** என்னும் இலக்கணம் தோன்றியது. அதனை இயற்றியவர் **தொல்காப்பியர்** என்னும் பேரறிஞராவர். அந்நூலே இன்று வரை தமிழ் மொழிக்குரிய ஒப்பற்ற இலக்கண நூலாய் விளங்கிவருகிறது. அந்நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணங்களையும் கூறுவதாகும். பொருள் இலக்கணம் என்பது தமிழ் மொழிக்கே உரிய சிறப்பான இலக்கணமாகும்.

தொல்காப்பியம் என்னும் பேரிலக்கணத்தைப் படித்துணர்தல் கற்றறிந்த பேரறிஞர்களுக்கே இயல்வதாயிற்று. தமிழ்மொழியைக் கற்கப் புகுவோர் எளிதாக உணர்ந்து கொள்ளக் கூடிய வகையில் ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த **பவணந்தி முனிவர்** என்பவர் **நன்னூல்** என்னும் இலக்கண நூலை இயற்றினர். அந்நூலை யொட்டிச் சில இலக்கண விதிகளை முன்வகுப்புக்களில் படித்துள்ளீர்கள். இவ்வகுப்பில் மேலும் சில இலக்கண விதிகளை அறிந்து தமிழ்மொழியில் நல்லறிவு பெற்றுச் சிறப்பீர்களாக.

I. எழுத்திலக்கணம்

மாணவ மணிகளே !

எழுத்துக்களைப் பற்றியும் அவற்றின் வகைகளைப் பற்றியும் முன் வகுப்புக்களில் ஓரளவு படித்தீர்கள். இவ்வகுப்பில் அவ்வெழுத்துக்கள் பிறக்கும் வகையைப் பற்றி அறிந்து கொள்வீர்களாக.

1. பிறப்பின் பொது இலக்கணம்

அமிழ்தினும் இனியது தமிழ்

இத்தொடரில் உள்ள ஒவ்வோர் எழுத்தையும் எவ்வாறு உச்சரிக்கிறோம் என்று கவனியுங்கள். அ, இ என்னும் எழுத்துக்கள் எங்கிருந்து பிறக்கின்றன? அ, இ என ஒலித்துப்பார்த்தால் அவை கழுத்திலிருந்து பிறப்பது விளங்கும்.

அங்ஙனமே 'ம்' என்னும் மெய்யெழுத்து மூக்கிலிருந்தும், 'ழ்' என்னும் மெய்யெழுத்து கழுத்திலிருந்தும் பிறக்கின்றன. எனவே ஒவ்வொரு வகை எழுத்தும் வெவ்வேறு இடங்களிலிருந்து பிறப்பது விளங்கும்.

ஒவ்வோர் எழுத்தையும் ஒலிக்க நாம் செய்யும் முயற்சிகளும் வெவ்வேருக உள்ளன. 'அ' என்னும் எழுத்து வாய் திறத்தலாகிய முயற்சியாலேயே பிறக்கிறது. 'த' என்னும் எழுத்து நுனி நாக்குமேல் வாய்ப்பல்லேத் தொடுவதாலும் 'ழ்' என்னும் எழுத்து நுனி நாக்கு மேல்வாயை வருடுவதாலும் பிறக்கின்றன.

இங்ஙனம் நாம் உள்நின்று எழுப்பும் காற்றினுல் உண்டாகும் ஒலியணுக்களின் கூட்டம் மார்பு, கழுத்து, மூக்கு, தலே ஆகிய இடங்களே அடைந்து வாய் வழியாக வெளிப்படும்போது, உதடு, நாக்கு, பல், மேல்வாய் ஆகியவை புரியும் முயற்சி வேறுபாட்டினுல் வெவ்வேறு ஓசையுடைய எழுத்தாகப் பிறக்கின்றது.

எனவே, எழுத்து ஒலிவடிவம் பெறுவதற்கு இடம், முயற்சி ஆகிய இவையே காரணமாக அமைகின்றன என்பது விளங்கும். மேலே அவற்றைப் பற்றி விரிவாகப் படிப்போம்.

இலக்கணம்: உயிரின் முயற்சியால் உள்ளிருந்து எழுப்பப்படும் காற்ருனது எழுத்துக்களுக்குக் காரணமான

ஒலியணுக்களைச் செலுத்த, அவ்வணுத்திரள் மார்பு, கழுத்து தலை, மூக்கு ஆகிய இடங்களில் ஒன்றைப் பொருந்தி வாய் வழியாக வெளிப்படும்போது, இதழ், நாக்கு, பல், மேல் வாய் ஆகிய உறுப்புக்கள் செய்யும் முயற்சி வேறுபாடு களால் வெவ்வேறு ஓசையுடைய எழுத்துக்களாய் ஒலிக் கின்றன. இதுவே எழுத்துக்கள் பிறக்கும் முறையாம்.

நன்னூல் :

நிறையுயிர் முயற்சியின் உள்வளி துரப்ப
எழுமணுத் திரள்உரம் கண்டம் உச்சி
மூக்குற் றிதழ்நாப் பல்அணத் தொழிலின்
வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே.

2. முதல் எழுத்துக்களின் பிறப்பிடம்

அன்னம்	ஆலமரம்
பாக்கு	பட்டம்
பந்து	சங்கு
யாழ்	சால்பு

இச் சொற்களை நன்கு ஒலித்துப் பாருங்கள். அ, ஆ என்னும் உயிர் எழுத்துக்கள் எங்கிருந்து பிறக்கின்றன? உள்ளேயிருந்து வரும் காற்று கழுத்தை அடைய, அங்கி ருந்து இவ்வெழுத்துக்கள் பிறக்கின்றன அல்லவா? அங்ஙனமே க், ட் என்னும் வல்லின மெய்யெழுத்துக்கள் மார்பிலிருந்து பிறக்கின்றன. ங், ந், ம் என்னும் மெல்லின மெய்யெழுத்துக்கள் மூக்கை இடமாகக் கொண்டு பிறக் கின்றன. ழ், ல் என்னும் இடையின மெய் எழுத்துக்கள் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

1. அ முதல் ஔ வரையுள்ள உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கும்.

2. க், ச், ட், த், ப், ற் என்னும் வல்லின மெய் யெழுத்துக்கள் ஆறும் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கும்.

3. ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் மெல்லின மெய் யெழுத்துக்கள் ஆறும் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கும்.

4. ய், ர், ல், வ், ழ், ள் என்னும் இடையின மெய் யெழுத்துக்கள் ஆறும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கும்.

இலக்கணம்: உயிர் எழுத்துக்களும் இடையின மெய் யெழுத்துக்களும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கும். வல்லின மெய்யெழுத்துக்கள் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கும். மெல்லின மெய்யெழுத்துக்கள் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கும்.

நன்னூல் :

அவ்வழி,
ஆவி இடைமை இடம்மிட றாகும்
மேவும் மென்மைமூக் குரம்பெறும் வன்மை.

3. முயற்சி

அம்மா இறைவன் உலகம்

இச்சொற்களை ஒலித்துப் பாருங்கள். 'அ' என்னும் எழுத்து வாயைத் திறப்பதால் பிறக்கிறது. 'இ' என்னும் எழுத்து வாய் திறத்தலுடன் அடி நாவின் ஓரம் மேல் வாய்ப் பல்லைப் பொருந்துதலால் பிறக்கிறது. 'உ' என்னும் எழுத்து இதழ்களைக் குவித்து ஒலிப்பதால் பிறக்கிறது. இங்ஙனம் எழுத்துக்களை ஒலிக்க இதழ், நாக்கு, பல், மேல் வாய் ஆகிய உறுப்புக்கள் செய்யும் செயல்களே **முயற்சி** எனப்படும்.

(1) அ, ஆ – இவற்றின் பிறப்பு

உயிர் எழுத்துக்களுள் அ, ஆ என்னும் எழுத்துக்கள் அண்ணத்தின் (மேல்வாயின்) தொழிலாகிய வாய் திறத்தலால் பிறக்கும்.

நன்னூல் :

அவற்றுள்
முயற்சியுள் அ ஆ அங்காப் புடைய.

(2) இ, ஈ, எ, ஏ, ஐ – இவற்றின் பிறப்பு

உயிர் எழுத்துக்களுள் இ, ஈ, எ, ஏ, ஐ என்னும் எழுத்துக்கள் வாய் திறத்தலுடன் அடிநாவின் ஓரங்கள் மேல்வாய்ப்பல்லைப் பொருந்துதலால் பிறக்கும்.

நன்னூல் :

இ ஈ எ ஏ ஐ அங்காப் போடு
அண்பல் முதல்நா விளிம்புற வருமே.

(3) உ, ஊ, ஒ, ஓ, ஔ – இவற்றின் பிறப்பு

உயிர் எழுத்துக்களுள் உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் எழுத்துக்கள் உதடுகளைக் குவித்து ஒலிப்பதனால் பிறக்கும்.

நன்னூல் :

உ ஊ ஒ ஓ ஔ இதழ் குவிவே.

(4) க், ங், ச், ஞ், ட், ண் – இவற்றின் பிறப்பு

மெய்யெழுத்துக்களுள் க், ங் என்னும் எழுத்துக்கள் அடி நா அடியண்ணத்தைப் பொருந்துதலால் பிறக்கும்.

ச், ஞ் என்னும் எழுத்துக்கள் நடு நா இடையண்ணத்தைப் பொருந்துதலால் பிறக்கும்.

ட், ண் என்னும் எழுத்துக்கள் நுனிநா நுனி அண்ணத்தைப் பொருந்துதலால் பிறக்கும்.

(அண்ணம் – மேல் வாய்)

நன்னூல் :

கஙவும் சஞவும் டணவும் முதலிடை
நுனிநா அண்ணம் உறமுறை வருமே.

(5) த், ந் – இவற்றின் பிறப்பு

மெய்யெழுத்துக்களுள் த், ந் என்னும் எழுத்துக்கள் மேல்வாய்ப் பல்லின் அடியை நாவின் நுனி பொருந்துதலால் பிறக்கும்.

நன்னூல் :

அண்பல் அடிநா முடியுறத் த ந வரும்.

(6) ப், ம் – இவற்றின் பிறப்பு

மெய்யெழுத்துக்களுள் ப், ம் என்னும் எழுத்துக்கள் மேல் உதடும் கீழ் உதடும் பொருந்துதலால் பிறக்கும்.

நன்னூல் :

மீ கீழ் இதழுறப் பம்மப் பிறக்கும்.

(7) ய் – என்பதன் பிறப்பு

மெய்யெழுத்துக்களுள் 'ய்' என்னும் எழுத்து அடி நாக்கு அடியண்ணத்தைப் பொருந்துதலால் பிறக்கும்.

நன்னூல் :

அடிநா அடியணம் உறயத் தோன்றும்.

(8) ர், ழ் – இவற்றின் பிறப்பு

மெய்யெழுத்துக்களுள் ர், ழ் என்னும் எழுத்துக்கள் நுனி நாக்கு மேல் வாயை வருடுவதால் பிறக்கும்.

நன்னூல் :

அண்ணம் நுனிநா வருட ரழவரும்.

(9) ல், ள் – இவற்றின் பிறப்பு

மெய்யெழுத்துக்களுள் 'ல்' என்னும் எழுத்து மேல் வாய்ப் பல்லின் அடியை நாவின் ஓரம் தடித்துப் பொருந்து

வதால் பிறக்கும். 'ள்' என்னும் எழுத்து மேல் வாயை நாவின் ஓரம் தடித்து வருடுவதால் பிறக்கும்.

நன்னூல் :

அண்பல் முதலும் அண்ணமும் முறையின்
நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்
லகார ளகாரமாய் இரண்டும் பிறக்கும்.

(10) 'வ்' – என்பதன் பிறப்பு

மெய்யெழுத்துக்களுள் 'வ்' என்னும் எழுத்து மேல் வாய்ப் பல்லைக் கீழ் உதடு சென்று பொருந்துதலால் பிறக்கும்.

நன்னூல் :

மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே.

(11) ற், ன் – என்பவற்றின் பிறப்பு

மெய்யெழுத்துக்களுள் ற், ன் என்னும் எழுத்துக்கள் மேல்வாயை நுனி நாக்கு நன்கு பொருந்துதலால் பிறக்கும்.

நன்னூல் :

அண்ணம் நுனிநா நனியுறில் றன வரும்.

(12) சார்பெழுத்துக்களின் பிறப்பு

சார்பெழுத்துக்களில் ஒன்றாகிய ஆய்த எழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறக்கும். இதற்குரிய முயற்சி வாய் திறத்தல் ஒன்று மட்டுமேயாம்.

உயிர் மெய்யெழுத்துக்கள் தத்தம் முதல் எழுத்துக் களுக்கு உரிய பிறப்பிடம், முயற்சி ஆகியவற்றையே தாமும் இடமாகக் கொண்டு பிறக்கும்.

'க' என்னும் உயிர்மெய் எழுத்து மார்பு, கழுத்து ஆகிய இரண்டு இடங்களையும் பிறப்பிடமாகக் கொண்டு பிறக்கும். 'க' என்ற உயிர்மெய்யெழுத்தில் 'க்' என்னும் மெய்யெழுத்தும் 'அ' என்ற உயிர் எழுத்தும் உள்ளன. 'க்'

என்ற வல்லெழுத்துக்குப் பிறப்பிடம் மார்பு, 'அ' என்ற உயிர் எழுத்துக்குப் பிறப்பிடம் கழுத்து. எனவே 'க' என்னும் உயிர் மெய்யெழுத்து தன் முதலெழுத்துக்களுக் குரிய பிறப்பிடங்கள் இரண்டனையும் கொண்டு பிறக் கிறது.

முயற்சியும் இங்ஙனமே அமையும். 'க்' என்னும் மெய் யெழுத்து அடிநா அடியண்ணத்தைப் பொருந்துவதால் பிறக்கிறது. 'அ' என்னும் உயிரெழுத்து வாய்திறத்தலால் பிறக்கிறது. 'க' என்ற உயிர்மெய் எழுத்து இவ்விருவகை முயற்சியும் சேர்ந்து பிறக்கிறது.

இங்ஙனமே ஏனைய உயிர்மெய் எழுத்துக்களும் தத்தம் முதல் எழுத்துக்களுக்குரிய பிறப்பிடங்களையும் முயற்சிகளை யும் தமக்கு உரியனவாகக் கொண்டு பிறக்கும் என அறிக.

நன்னூல்:

ஆய்தக் கிடந்தலை அங்கா முயற்சி
சார்பெழுத் தேனவும் தம்முதல் அனைய.

வினாக்கள்

1. தமிழ் எழுத்துக்கள் பொதுவாக எவ்வாறு பிறக்கின்றன?
2. முதல் எழுத்துக்கள் யாவை? அவை பிறக்கும் இடங்கள் யாவை?
3. அ, இ, உ என்ற எழுத்துக்கள் பிறக்க நாம் செய்யும் முயற்சி வேறுபாடுகளை விளக்கிக் கூறுக.
4. க்ங், ச்ஞ், ட்ண் என்ற மெய்யெழுத்துக்கள் பிறக்கும் வகையை விளக்கி எழுதுக.
5. உதடுகளின் தொழில் முயற்சியால் பிறக்கும் எழுத்துக்கள் யாவை? எவ்வாறு பிறக்கின்றன?
6. ய், ர், ழ் என்னும் மெய்யெழுத்துக்கள் பிறக்கும் முறையை விளக்கிக் கூறுக.

7. ல், ள் என்னும் மெய்யெழுத்துக்கள் எவ்வாறு பிறக்கின்றன?

8. வ், ற், ன் என்னும் மெய்யெழுத்துக்கள் பிறக்கும் முறையை விளக்குக.

9. ஆய்த எழுத்திற்குரிய பிறப்பிடமும் முயற்சியும் யாவை?

10. உயிர்மெய் எழுத்துக்கள் எவ்வாறு பிறக்கும்?

பயிற்சி 1

1. தமிழ் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் பிறக்கும் முறையை நன்கு ஒலித்துப் பார்த்து அவை பிறக்கும் இடங்களையும் முயற்சி வேறுபாடுகளையும் கவனித்துக் குறிப்பிடுக.

2. பின்வரும் எழுத்துக்களுக்குரிய பிறப்பிடம், முயற்சி வேறுபாடு ஆகியவைகளைக் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடுக:-

அ, ஈ, ஔ, ஏ, ற், க், ம், ள், ழ், ங், வ், ஞ், ண், ஃ, க, கி, தீ, மை, வை, டு, பா.

எழுத்து	பிறப்பிடம்	முயற்சி
அ	கழுத்து	அங்காத்தல் (வாய் திறத்தல்)

II. சொல் இலக்கணம்

ஓர் எழுத்து தனித்தோ, இரண்டு முதலாக எழுத்துக்கள் பல தொடர்ந்தோ ஒரு பொருளை உணர்த்தி வருமாயின் அது சொல் எனப்படும். அச்சொல் தனிமொழி, தொடர் மொழி, பொதுமொழி என மூன்று வகைப்படும்.

1. தனிமொழி-தொடர்மொழி-பொதுமொழி

நிலம்	நடந்தான்
நிலம் வலிது	நடந்தான் வளவன்
வேங்கை	தாமரை

இவற்றைக் கவனியுங்கள். இவற்றுள் நிலம் என்னும் சொல் ஒன்றன் பெயராய்ப் பூமியை உணர்த்தியது. நடந்தான் என்னும் சொல் ஒன்றன் வினையாய் ஒரு தொழில் நிகழ்ச்சியை உணர்த்தியது. இங்ஙனம் பகாப்பதமேனும், பகுபதமேனும் ஒன்று நின்று ஒரு பொருளைத் தருவது **தனி மொழி** அல்லது ஒரு மொழி எனப்படும்.

நிலம் வலிது என்பது இரண்டு சொற்கள் பொருளால் தொடர்ந்த ஒரு தொடர். அவை முறையே பூமி என்ற இடத்தையும், வன்மையானது என்ற வினையையும் உணர்த்துகின்றன. அங்ஙனமே நடந்தான் வளவன் என்ற இரு சொற்கள் தொடர்ந்து வளவன் செய்த தொழிலை உணர்த்துகின்றன. இங்ஙனம் இரண்டு முதலான சொற்கள் தொடர்ந்து இரண்டு முதலிய பல பொருள்களை உணர்த்தி வருவது **தொடர் மொழி** எனப்படும்.

வேங்கை என்பது ஒரு சொல்லாய் ஒரு வகை மரம், அல்லது புலியை உணர்த்துகிறது. அதுவே வேம்+கை என

இரு சொற்களாய்ப் பிரிந்து வேகின்ற கை எனப் பொருள் தந்து தொடர் மொழியாகவும் அமைகிறது. அங்ஙனமே தாமரை என்பது ஒரு சொல்லாய் ஒருவகைத் தாவரத்தைக் குறிப்பதுடன், தா+மரை எனப் பிரிந்து தாவுகின்ற மான் என்று பொருள் தந்து தொடர் மொழியாகவும் அமைகிறது.

இங்ஙனம் ஒரு சொல்லாய் ஒரு பொருள் தரும் சொல்லே பல சொற்களாய்ப் பல பொருளும் உணர்த்தி வருமாயின் அது **பொதுமொழி** எனப்படும்.

எடுத்துக்காட்டு

ஒருமொழி : பொன், பொன்னன், படி, படித்தான் கொல், மன், தவ, நனி.

தொடர் மொழி : பொன் உயர்ந்தது, அதுகொல், சாலப் பகை.

பொதுமொழி : எட்டு, எழுந்திருந்தான், உரைத்திட்டான்.

(இவை தனிமொழியாய் ஒரு பொருளை உணர்த்தி வருவதோடு எள்+து எனப் பிரிந்து, எள்ளை உண் எனவும், எழுந்து+இருந்தான் எனப் பிரிந்து, எழுந்து பிறகு அமர்ந்தான் எனவும், உரைத்து+இட்டான் எனப் பிரிந்து, சொல்லிப் பிறகு கொடுத்தான் எனவும் பல பொருள் உணர்த்தி வருதலின் பொது மொழிகளாம்.)

இலக்கணம் : பகாப்பத மேனும், பகுபத மேனும் ஒன்று நின்று ஒரு பொருளை உணர்த்தி வருவது தனிமொழி யாகும். இரண்டு முதலாகப் பல சொற்கள் தொடர்ந்து பல பொருள் உணர்த்தி வருவது தொடர் மொழியாம். ஒரு சொல்லாய் ஒரு பொருள் உணர்த்தி வருவதே தொடர் மொழியாய்ப் பல பொருள் உணர்த்தி வருமாயின் அது பொது மொழியாம்.

2. பெயர்ச்சொல் (விரிவாக)

மரம் பறவை

இச் சொற்கள் ஒரு பொருளின் பெயரைக் குறித்து வருவதால் பெயர்ச்சொல் எனப்படும். இங்ஙனம் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறனுள் ஒன்றைக் குறிப்பது பெயர்ச் சொல்லாகும். பெயர்ச் சொற்கள் காலம் காட்டா; வேற்றுமைகளை ஏற்கும்; திணை, பால், எண், இடங்களை உணர்த்திவரும்.

மரம் என்பது ஒரு பொருளுக்கு நம்முன்னோர் காரணம் கருதாமல் இதற்கு இது பெயர் என இட்டு வழங்கிய பெயராகும். அத்தகைய பெயர் இடுகுறிப் பெயர் எனப் படும். முன்னோர்கள் இடுகுறியாய் வழங்கிய அதனை அம் மரபு பற்றி நாமும் அப் பெயராலேயே வழங்கி வருகிறோம். மரபாவது தொன்று தொட்டு வழங்குவதாம். ஆதலால் மரம் என்பது இடுகுறி மரபுப் பெயராகும்.

பறவை என்பது பறக்கும் காரணம் பற்றி ஒரு பொருளுக்கு நம் முன்னோர் வழங்கிய பெயராகும். ஆகவே அது காரணப் பெயராம். நாமும் அம்மரபு பற்றி அதனை அப்பெயராலேயே வழங்கி வருகிறோம். ஆதலால் அது காரண மரபுப் பெயர் ஆகும்.

பொய்யா மொழிப் புலவர் முன் வேட்டுவனாய் வந்த முருகன் தன் பெயர் **'முட்டை'** என்றார். முட்டை என்பது காரணம் இல்லாத இடுகுறிப் பெயர். ஆயினும் அப்போதைக்கு உண்டாக்கிக் கொள்ளப்பட்ட பெயராத லால் அஃது **இடுகுறியாக்கப் பெயர்**. ஆக்கப் பெயர் என்பது இடையில் உண்டாக்கிக் கொள்ளும் பெயராகும்.

செல்வம் உடையவனை அக்காரணம் பற்றிப் **பொன்னன்** என வழங்குவது காரணம் கருதி உண்டாக் கப்பட்ட பெயராதலால் **காரண ஆக்கப் பெயர்** ஆகும்.

எனவே பெயர்ச்சொல் இடுகுறி மரபுப் பெயர், இடுகுறி ஆக்கப் பெயர், காரண மரபுப் பெயர், காரண ஆக்கப் பெயர் என நான்கு வகைப்படும்.

எடுத்துக்காட்டுக்கள்

கல், மண்—இடுகுறி மரபுப்பெயர்கள்.

முட்டை, கட்டை—காரணம் கருதாமல் ஒருவனை முட்டை, கட்டை என்பன போலப் பெயர் இட்டு வழங்குவது இடுகுறி ஆக்கப் பெயர்கள்.

அணி, விலங்கு—காரண மரபுப் பெயர்கள்

பொருளன், பூணன் — பொருளை உடைய காரணத்தால் பொருளன் என்றும், பூணை உடைய காரணத்தால் பூணன் என்றும் பெயர் வழங்கியமையால் காரண ஆக்கப்பெயர்கள்.

பெயர்ச் சொல் காலம் காட்டாது. ஆனால் வினையாலணையும் பெயர் காலம் காட்டும்.

(எ–டு) நடந்தானைக் கண்டேன்
நடக்கின்றானைக் கண்டேன்
நடப்பானைக் காண்பேன்

எனவே வினையாலணையும் பெயர் ஒழிந்த ஏனைய பெயர்கள் காலம் காட்டா என அறிக.

பெயர்ச்சொல் வேற்றுமை ஏற்பதற்கு இடமாய் நிற்கும். வேற்றுமை எட்டு வகைப்படும் என அறிவீர்கள். பெயர்ச்சொற்கள் அவ்வேற்றுமை உருபுகளை ஏற்று வரும்.

(எ–டு) வளவன் வந்தான், வளவனைக் கண்டன்,
வளவனால் தரப்பட்டது, வளவனுக்குத் தந்தேன்,
வளவனின் நீங்கினேன், வளவனது கை,
வளவனிடம் சென்றேன், வளவா வருக.

பெயர்ச்சொற்கள் திணை, பால், எண், இடம் உணர்த்தி வரும்.

(எ-டு) நான், யான்	—	தன்மை ஒருமை
நாம், யாம்	—	தன்மைப் பன்மை
நீ	—	முன்னிலை ஒருமை
நீர், நீவிர், நீயிர்	—	முன்னிலைப் பன்மை
அவன், வளவன்	—	படர்க்கை ஆண்பால்
அவள், பொன்னி	—	படர்க்கைப் பெண்பால்
அவர், சான்ரோர்	—	படக்கைப் பலர்பால்
அது, பசு	—	படர்க்கை ஒன்றன்பால்
அவை, பறவைகள்	—	படர்க்கைப் பலவின்பால்

இங்ஙனம் பெயர்ச் சொற்கள் இருதிணை, ஐம்பால் மூவிடங்களில் ஒன்றற்கே உரிய பெயராய் வருவதுடன் சில பெயர்கள் அவற்றில் பலவற்றை உணர்த்தும் பொதுப் பெயராகவும் வரும்.

(எ-டு)

சூரியன் உதித்தான்
சூரியன் உதித்தது } இருதிணைப் பொதுப் பெயர்

இவ்விலக்கணங்கள் அமையவரும் பெயர்கள் பொருட் பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப் பெயர், குணப் பெயர், தொழிற்பெயர் எனப் பொதுவாக ஆறு வகைப் படும்.

(எ-டு)

கல், மண், அவன், அவள், மனிதன், பறவை—பொருள்
வீடு, தோட்டம், பள்ளி, குறிஞ்சி, முல்லை, நாடு—இடம்
ஆண்டு, திங்கள், நாள், நாழிகை —காலம்
கண், காது, கால், கை, இலை, பூ, அரும்பு —சினை
நன்மை, செம்மை, வட்டம், அண்மை, — பண்பு
நடத்தல், உண்ணல், வாழ்வு, மறதி, கோவை—தொழில்

இவை தவிர மூவிடப் பெயர்கள், ஐம்பாற் பெயர்கள் எனப் பெயர்ச் சொற்கள் பலவகைப்படும். அவற்றை விளக்கமாக அடுத்து அறிந்து கொள்ளுங்கள்.

இலக்கணம் : இடுகுறி, காரணம் என்பன மரபையும் ஆக்கத்தையும் தொடர்ந்து, வினையாலணையும் பெயரைத் தவிர்த்து ஏனையவை காலம் காட்டாதனவாய், இருதிணை ஐம்பால் மூவிடங்களில் ஒன்றனை ஏற்பனவும் பலவற்றை ஏற்பனவாயும் வரும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.

நன்னூல் :

இடுகுறி காரண மரபோ டாக்கம்
தொடர்ந்து தொழிலல காலம் தோற்ரு
வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்று
ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே.

(அ) மூவிடப் பெயர்கள்

யான்	யாம்
நீ	நீவிர்
அவன்	அவள்

இவற்றுள் யான் என்பது பேசுவோன் தன்னைக் குறித்துக் கூறுவதால் **தன்மை ஒருமைப் பெயராம்.** யாம் என்பது பேசுவோன் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் சேர்த்துக் கூறுவதால் **தன்மை பன்மைப் பெயராம்.**

நீ என்பது முன்னின்று கேட்பவன் ஒருவனைக் குறிப்பதால் **முன்னிலை ஒருமைப் பெயராம்.** நீவிர் என்பது முன்னின்று கேட்பவர் பலரைக் குறிப்பதால் **முன்னிலைப் பன்மைப் பெயராம்.**

அவன், அவள் என்பன பேசுவோரையும் முன்னின்று கேட்பவரையும் உணர்த்தாமல் அயலாரைக் குறிப்பதால் **படர்க்கைப் பெயராம்.** படர்க்கைப் பெயர் இருதிணை ஐம்பால்களை உணர்த்தி வரும்.

எடுத்துக்காட்டு:

யான் வந்தேன் நான் படித்தேன்	} தன்மை ஒருமைப் பெயர்கள்
யாம் கண்டோம் நாம் உண்டோம்	} தன்மைப் பன்மைப் பெயர்கள்
நீ சென்ருய்	—முன்னிலை ஒருமைப்பெயர்
நீயிர் வந்தீர் நீவிர் கண்டீர் நீர் தந்தீர் எல்லீரும் சென்றீர்கள்	} முன்னிலைப் பன்மைப் பெயர்கள்
அவன் செய்தான் வளவன் நடந்தான்	} படர்க்கை ஆண்பால் பெயர்கள்
அவள் தந்தாள் கண்ணகி படித்தாள்	} படர்க்கைப் பெண்பால் பெயர்கள்
அவர் கூறினர் மாணவர்கள் கற்றனர்	} படர்க்கைப் பலர்பால் பெயர்கள்
அது உண்டது பசு மேய்ந்தது	} படர்க்கை ஒன்றன்பால் பெயர்கள்
அவை பறந்தன எருதுகள் உழுதன	} படர்க்கைப் பலவின் பால் பெயர்கள்

இலக்கணம்: *யான், நான், யாம், நாம் என்பன தன்மைப் பெயர்கள். எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ என்பன முன்னிலைப் பெயர்கள். இவையல்லாத பெயர்கள் யாவும் படர்க்கைப் பெயர்களாம்.*

நன்னூல்:

தன்மை யான்நான் யாம்நாம் முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ
அல்லன படர்க்கை எல்லாம் எனல்பொது.

(ஆ) ஐம்பாற் பெயர்கள்

1. ஆண்பாற் பெயர்

பொன்னன் ஆதிரையான்

இப்பெயர்ச் சொற்களைக் கவனியுங்கள். பொன்னன் என்பது 'பொன்' என்னும் பொருட் பெயர் அடியாகத்

தோன்றிய பெயர். ஆதிரையான் என்பது 'ஆதிரை' என்னும் காலப் பெயர் அடியாகத் தோன்றியது. அன், ஆன் என்பன விகுதிகளாக வந்துள்ளன.

இங்ஙனம் பொருட்பெயர் முதலான அறுவகைப் பெயர்கள், அ, இ, உ என்ற சுட்டுக்கள், எ, யா என்னும் வினாக்கள், பிற மற்று என்னும் சொற்கள் ஆகியவற்றின் அடியாகத் தோன்றிய **அன், ஆன்** என்னும் விகுதி பெற்ற பெயர்களே ஆண்பாற் பெயர்களாம். **மன், மான்** என்னும் விகுதிகள் வருதலும் உண்டு.

எடுத்துக்காட்டு :

தமன், ஒருவன், அவையத்தான், பொருளன்	—பொருள்
வெற்பன், ஊரன், சோழியன், வானத்தான்	—இடம்
மூவாட்டையான், வேனிலான், கார்த்திகையான், ஓணத்தான்	—காலம்
தோளன், மார்பன், கண்ணன், காதன்	—சினை
ஓதுவான், ஈவான், ஒற்றன், கணக்கன்	—தொழில்
சிறியன், செய்யன், நல்லன், புலவன்	—பண்பு
அவன், இவன், உவன்	—சுட்டு
எவன், யாவன்	—வினா
பிறன், மற்றையன்	—பிற, மற்று
வடமன், கோமான்	—மன், மான்

(குறிப்பு : இவை தவிர, நம்பி, ஆடூஉ, விடலை, கோ, வேள், குரிசில், தோன்றல் என்பன ஆண்பாற் சிறப்புப் பெயர்களாக வரும்.)

இலக்கணம் : பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில். சுட்டு, வினா, பிற, மற்று ஆகியவற்றின் அடியாகத்

தோன்றி அன், ஆன் என்னும் விகுதி பெற்று வரும் பெயர்கள் ஆண்பாற்பெயர்களாம்.

2. பெண்பாற் பெயர்

இனியள் ஆதிரையாள் பொன்னி

இப் பெயர்ச் சொற்களைக் கவனியுங்கள். இனியள் என்பது பண்பினடியாகப் பிறந்த பெண்பாற் பெயர். ஆதிரையாள் என்பது காலத்தின் அடியாகப் பிறந்த பெண் பாற்பெயர். பொன்னி பொருளடியாகப் பிறந்த பெண்பாற் பெயர். அள், ஆள், இ என்பன விகுதிகளாக வந்துள்ளன.

இங்ஙனம் பொருள் முதலாறு, சுட்டு, வினா, பிற, மற்று என்பவற்றின் அடியாகத் தோன்றி **அள், ஆள், இ** என்னும் விகுதிகளைப் பெற்று வரும் பெயர்ச் சொற்கள் **பெண்பாற் பெயர்களாம்.**

எடுத்துக்காட்டு :

பொன்னி, அவையத்தாள் இரேவதியாள் கண்ணி, நல்லள், தட்டாத்தி	பொருள் முதலாறு
அவள், இவள், உவள்	— சுட்டு
பிறள், மற்றையள்	— பிற, மற்று

(**குறிப்பு :** தோழி, செவிலி, மகடூஉ, நங்கை, தையல், இருளை, மாது என்பன பெண்பாற் சிறப்புப் பெயர்களாம்.)

இலக்கணம் : பொருள் முதலாறு, சுட்டு, வினா, பிற, மற்று என்பவற்றினடியாகத் தோன்றி அள், ஆள், இ என்னும் விகுதிகளைப் பெற்று வரும் பெயர்கள் பெண்பாற் பெயர்களாம்.

3. பலர்பாற் பெயர்

பெரியர் அவையத்தார்

இப்பெயர்ச் சொற்களைக் கவனியுங்கள். இவை பெருமை, அவை என்னும் பண்பு, இடம் ஆகியவற்றின்

அடியாகப் பிறந்த பலர்பாற் பெயர்கள். அர், ஆர் என்பன விகுதிகளாக வந்துள்ளன.

இங்ஙனம் முற்கூறிய பொருள் முதலாறு முதலியவற்றின் அடியாகத் தோன்றி **அர், ஆர்** என்னும் விகுதிகளைப் பெற்று வரும் பெயர்கள் பலர்பாற் பெயர்களாம். **இர், கள்** என்னும் விகுதியும் வருதல் உண்டு.

எடுத்துக்காட்டு :

பொருளர், மதுரையார், ஆதிரையர் தோளர், நல்லர், கணக்கர்		பொருள் முதல் ஆறு
அவர், இவர், உவர், எவர், யாவர்	—	சுட்டு, வினா
பிறர், மற்றையர்	—	பிற, மற்று
மகளிர், பெண்டிர்	—	இர்,
கோக்கள், தமர்கள், அரசர்கள், மறவர்கள்	—	கள்

(**குறிப்பு :** குருமார் என்பதுபோல் 'மார்' விகுதியும் பலர்பாலில் வரும்.)

இலக்கணம் : பொருள் முதல் ஆறு, சுட்டு, வினா, பிற, மற்று என்பவற்றின் அடியாகத் தோன்றி அர், ஆர், இர், கள் என்னும் விகுதி பெற்று வரும் பெயர்கள் பலர்பாற் பெயர்களாம்.

4. ஒன்றன்பாற் பெயர்

குழையது நிலத்தது

இப்பெயர்ச் சொற்கள் குழை, நிலம் என்னும் பொருள், இடம் என்பவற்றின் அடியாகப் பிறந்த ஒன்றன்பாற் பெயர்களாம். 'து' என்பது விகுதி.

இங்ஙனம் பொருள் முதலாறு, வினா, சுட்டு முதலியவற்றின் அடியாகத் தோன்றி **'து'** என்னும் விகுதி பெற்று வரும் பெயர்கள் ஒன்றன்பாற் பெயர்களாம்.

எடுத்துக்காட்டு :

குழையது, நிலத்தது, திருவாதிரையது } பொருள்
கோட்டது, பெரியது, ஆடலது } முதலாறு
அது, இது, உது, எது, யாது —சுட்டு, வினா
பிறிது, மற்றையது —பிற, மற்று

(குறிப்பு : அஃது, இஃது என ஆய்தம் பெற்று வரும் சுட்டுப் பெயர்களும், ஒன்று என்னும் எண்ணுப் பெயரும் ஒன்றன்பாற் பெயர்களாம்.)

இலக்கணம் : பொருள் முதலாறு, சுட்டு, வினா, பிற, மற்று என்பவற்றின் அடியாகத் தோன்றித் 'து' என்னும் விகுதி பெற்ற பெயர்களும், ஆய்தம் அணைந்த சுட்டுப் பெயர்களும், ஒன்று என்னும் எண்ணுப் பெயரும் ஒன்றன் பாற் பெயர்களாம்.

5. பலவின் பாற்பெயர்

நல்லன தீயவை

இச்சொற்களைக் கவனியுங்கள். இவை நன்மை தீமை என்னும் பண்படியாகப் பிறந்த பலவின் பாற்பெயர்களாம். **அ, வை** என்பன விகுதிகளாக வந்துள்ளன. **'கள்'** விகுதியும் வரும்.

எடுத்துக்காட்டு :

பசுக்கள், அகத்தன, மூலத்தன } பொருள்
கோட்டவை, கரியவை, உழைப்பவை } முதலாறு
அவை, இவை, உவை, எவை, யாவை—சுட்டு, வினா
பிற, மற்றையவை —பிற, மற்று.

(குறிப்பு : அவ், இவ் என்பனபோன்ற வகர ஈற்றுச் சுட்டுப் பெயர்களும், இரண்டு, மூன்று என்பனபோன்ற ஒன்றல்லாத எண்ணுப் பெயர்களும், உள்ள, இல்ல, பல்ல, சில்ல, உள, இல, பல, சில எனவரும் பெயர்களும் பலவின் பாற் பெயர்களாம்).

இலக்கணம்: பொருள் முதலாறு, வினா, சுட்டு, பிற, மற்று என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அ, வை, கள் என்னும் விகுதிகளைப் பெற்று வரும் பெயர்களும், 'வ்' என்னும் ஈற்றையுடைய சுட்டுப் பெயர்களும், ஒன்றல்லாத எண்ணுப் பெயர்களும் உள்ள, இல்ல, பல்ல, சில்ல, உள, இல, பல, சில என்னும் பெயர்களும் பலவின் பாற் பெயர்களாம்.

(இ) பால்பகா அஃறிணைப்பெயர்

மரம் வளர்ந்தது. மரம் வளர்ந்தன.

இவற்றைக் கவனியுங்கள். முதல் வாக்கியத்தில் மரம் என்னும் அஃறிணைப் பெயர் ஒன்றன் பாலாய் வளர்ந்தது என்னும் வினை கொண்டு முடிந்துள்ளது.

இரண்டாம் வாக்கியத்தில் வளர்ந்தன என்பது பயனிலை. அது பலவின்பாலை உணர்த்துவது. அதற்கு எழுவாயாய் நிற்பதால் மரம் என்பது பலவின் பாலாய் அமைந்துள்ளது.

இங்ஙனம் ஒன்றன்பாலுக்குரிய 'து' விகுதியையோ, பலவின் பாலுக்குரிய அ, வை, கள் விகுதிகளையோ பெற்று வராத அஃறிணைப் பெயர்கள் ஒன்றன்பாலுக்கும் பலவின் பாலுக்கும் பொதுவாக வரும். அத்தகைய பெயர்கள் **பால்பகா அஃறிணைப் பெயர்கள்** எனப்படும். இன்ன பால் எனப்பகுத்துச் சொல்ல முடியாத அஃறிணைப்பெயர்கள் என்பது அதன் பொருள். இத்தகைய பெயர்கள் முன்னும் பின்னும் வரும் சொற்களைக் கொண்டு இன்ன பால் எனத் துணியப்படும்.

எடுத்துக்காட்டு:

யானை வந்தது	யானை வந்தன
கண் சிவந்தது	கண் சிவந்தன

இலக்கணம்: அஃறிணை ஒன்றன் பாலையோ, பலவின் பாலையோ குறிக்கும் விகுதிகளைப் பெற்றுவராத பெயர்ச் சொற்கள் இருபாற்கும் பொதுவாய் வரும். அவை பால் பகா அஃறிணைப் பெயர்கள் எனப்படும்.

நன்னூல் :

பால்பகா அஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய.

இவை தவிர **வினையாலணையும் பெயர், ஆகு பெயர்** என வேறு இருவகைப் பெயர்களும் உள்ளன. அவற்றைப் பற்றி முன் வகுப்புக்களில் படித்துள்ளீர்கள். அவற்றை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள்:

(ஈ) வினையாலணையும் பெயர்

ஒருவினை முற்று வினையைக் குறிக்காமல் வினையைச் செய்த பொருளுக்குப் பெயராக வருமானால் அது வினையாலணையும் பெயர் எனப்படும்.

எடுத்துக்காட்டு:

உண்டேனை, உண்டேமை	—தன்மை
உண்டாயை, உண்டீரை	—முன்னிலை
உண்டானை, உண்டாளை உண்டாரை, உண்டதை உண்டவற்றை	படர்க்கை

இங்ஙனம் வினையாலணையும் பெயர் மூவிடங்களிலும் வரும்.

தொழிற்பெயர் தொழிலுக்குப் பெயராய் படர்க்கை இடத்தில் மட்டுமே வரும். வினையாலணையும் பெயர் தொழிலைச் செய்த பொருளுக்குப் பெயராய் மூவிடங்களிலும்வரும். தொழிற் பெயர் காலம் காட்டாது. வினையாலணையும் பெயர் காலம் காட்டும். இவை தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயர்க்கும் வேற்றுமையாம்.

(உ) ஆகுபெயர்

ஒன்றன் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொன்றற்குத் தொன்று தொட்டுப் பெயராக வழங்கிவருவது ஆகுபெயராம்.

பெயர்ச்சொல், பொருட் பெயர் முதலாக அறுவகைப் படும். அவ்வறுவகைப் பெயர்களும் ஆகுபெயர்களாக வரும். எனவே ஆகுபெயர் பொதுவாக ஆறுவகைப்படும். அவை தவிர எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் அளவைப் பெயர்கள், தானி, கருவி, காரியம், கருத்தா, சொல், உவமை ஆகியவற்றைக் குறிக்கும் பெயர்கள் முதலியனவும் ஆகுபெயர்களாக வரும். எனவே ஆகுபெயர்கள் பதினாறு வகைப்படும்.

எடுத்துக்காட்டு:

தாமரை முகம்—பொருளாகு பெயர்
உலகம் மகிழ்ந்தது—இடவாகு பெயர்
கார்த்திகை பூத்தது—காலவாகு பெயர்
வெற்றிலை நட்டான்—சினையாகு பெயர்
வெள்ளை உழுதது—பண்பாகு பெயர்
பொங்கல் உண்டாள்—தொழிலாகு பெயர்
ஒன்று வாங்கிவா—எண்ணலளவையாகு பெயர்
இரண்டு வீசைதா—எடுத்தலளவையாகு பெயர்
உண்பது நாழி—முகத்தலளவையாகு பெயர்
உடுப்பது நான்கு முழம்—நீட்டலளவையாகு பெயர்
கழல் பணிந்தான்—தானியாகு பெயர்
திருக்குறள் கற்றார்—கருவியாகு பெயர்
பைங்கூழ் வாடியது—காரிய ஆகுபெயர்
திருவள்ளுவர் கற்றான்—கருத்தா ஆகுபெயர்
இந்நூற்கு உரை எழுதினான்—சொல்லாகு பெயர்
காளைவந்தான்—உவமையாகு பெயர்.

3. ஆகுபெயர் அன்மொழித் தொகை வேறுபாடு

பூவை வந்தாள்

பொற்ருெடி வந்தாள்.

இத்தொடர்களைக் கவனியுங்கள். பூவை வந்தாள் என்பதில் பூவை என்பது வந்தாள் என்னும் குறிப்பினுல் பூவை என்னும் பறவையைக் குறிக்காமல் அப்பறவை போன்ற ஒரு பெண்ணைக் குறித்தது. உவமையின் பெயர் உவமேயமாகிய பெண்ணுக்கு ஆகி வந்தமையால் இஃது உவமையாகு பெயராகும்.

பொற்ருெடி வந்தாள் என்னும் தொடரில் பொற்ருெடி என்பது வந்தாள் என்னும் குறிப்பால் பொன்னுலான வளையலை அணிந்த பெண்ணைக் குறிக்கிறது. பொற்ருெடி என்னும் மூன்ரும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையை அடுத்து 'அணிந்தவள்' என்னும் வேருெரு சொல் மறைந்துவந்தமையால் இஃது அன்மொழித் தொகையாகும்.

பூவை என்பதும் தன்பொருளைக் குறிக்காமல் வேருெரு பொருளைக் குறிக்கிறது. பொற்ருெடி என்பதும் அங்ஙனமே தன் பொருளைக் குறிக்காமல் வேறு பொருளைக் குறிக்கிறது. இங்ஙனமாயின் அவற்றை வேறுபடுத்தி உணர்வது எங்ஙனம் எனின், ஆகுபெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் பின்வரும் வேறுபாடுகள் உள்ளன. அவற்றைக்கொண்டு அவற்றை வேறுபடுத்தி உணரலாம்.

ஆகுபெயர்: ஒன்றன் பெயர் அதனேடியையபுடைய மற்ருென்றனை உணர்த்தி ஒரு மொழியில் வரும்.

அன்மொழித் தொகை: இயைபு வேண்டாது இரண்டு சொற்கள் தொக்க தொகையாற்றலால் வேருெரு பொருளை உணர்த்தி இருமொழியில் வரும்.

நினைவிற்கொள்க :

வேறுபாடுகள்

ஆகுபெயர்	அன்மொழித் தொகை
1. ஒரு சொல்லாய் வரும்.	1. பல சொல்லாய் வரும்.
2. முதல் சினைபோன்ற சம்பந்தத்தால் வேறு பொருளை உணர்த்தும்.	2. சம்பந்தமில்லாமல் வேற்றுமைத் தொகை முதலிய தொகையாற்றலால் வேறுபொருளை உணர்த்தும்.
3. தொன்று தொட்டு வழங்கி வரும்.	3. தொன்று தொட்டு வர வேண்டும் என்னும் நியதி இல்லை.
4. பெரும்பாலும் நியதிப் பெயராய் வரும்.	4. நியதிப் பெயராய் வராது.

4. பொதுப் பெயர்கள்

எல்லாம்–தான்–தாம்

அவர் எல்லாம் கூறினர். அவை எல்லாம் மேய்ந்தன.
அவன்தான் வந்தான். அதுதான் கூவியது.
அவர்தாம் பாடினர். அவைதாம் உழுதன.

இத் தொடர்களைக் கவனியுங்கள். எல்லாம் என்பது ஒரு பெயர்ச்சொல். அஃது அவர் எல்லாம் கூறினர் என உயர்திணைப் பன்மையில் வந்ததுடன் அவை எல்லாம் மேய்ந்தன என அஃறிணைப் பன்மையிலும் வந்தது. எனவே எல்லாம் என்ற சொல் உயர்திணை, அஃறிணை ஆகிய இரு திணைகட்கும் பொதுவாய் வரும் என்பது விளங்குகின்றதன்றோ?

இங்ஙனமே தான் என்ற பெயர்ச்சொல் உயர்திணை ஒருமைக்கும் அஃறிணை ஒருமைக்கும் பொதுவாய் வந்தது. தாம் என்னும் பெயர்ச்சொல் உயர்திணைப் பன்மைக்கும் அஃறிணைப் பன்மைக்கும் வந்தது.

இப்பெயர்கள் இருதிணைக்கும் பொதுவாக வருவது மட்டுமன்றி, இவற்றுள் எல்லாம் என்னும் பெயர் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்கட்கும் பொதுவாயும் வரும்.

எடுத்துக்காட்டு :

1. யாம் எல்லாம் வந்தோம் — தன்மை
   நீங்கள் எல்லாம் வந்தீர்கள் — முன்னிலை
   அவர்கள் எல்லாம் உண்டனர்
   அவைகள் எல்லாம் மேய்ந்தன } படர்க்கை
2. அவன் தான் தந்தான்
   அவள் தான் கூறினாள் } உயர்திணை
   அது தான் உருண்டது — அஃறிணை
3. அவர்கள் தாம் பேசினர் — உயர்திணை
   அவைகள் தாம் பேசின — அஃறிணை

(**குறிப்பு :** எல்லாம் என்பது பலர்பாலுக்கும் பலவின் பாலுக்கும் பொதுவாய் வருதலாலும், தான் என்பது ஆண் பால், பெண்பால், ஒன்றன்பால்களுக்குப் பொதுவாய் வருதலாலும், தாம் என்பது பலர்பால் பலவின்பால்களுக்குப் பொதுவாய் வருதலாலும் இப்பெயர்கள் பாற் பொதுவாகவும் வரும் என அறிக.)

இலக்கணம்: எல்லாம், தாம், தான் என்ற பெயர்கள் உயர்திணை, அஃறிணை ஆகிய இருதிணைகட்கும் பொதுவாக வரும். அவற்றுள் எல்லாம் என்பது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்கட்கும் பொதுவாக வரும்.

நன்னூல் :

எல்லாம் தாம்தான் இன்னன பொதுப் பெயர்.

5. உருபு மயக்கம்

காலத்தினுல் செய்த நன்றி

இத்தொடருக்கு என்ன பொருள்? தக்க சமயத்தில் செய்த உதவி என்பது இதன் பொருள். இப்பொருள் தர வேண்டுமாயின் 'காலத்தில் செய்த நன்றி' என்று இத்தொடர் அமைந்திருத்தல் வேண்டும். இடப்பொருள் உணர்த்தும் 'இல்' என்னும் ஏழாம் வேற்றுமை உருபு இருக்க வேண்டிய இடத்தில் கருவிப்பொருள் உணர்த்தும் 'ஆல்' என்னும் மூன்றும் வேற்றுமை உருபு வந்துள்ளது.

இங்ஙனம் ஒரு வேற்றுமை உருபு நிற்றற்குரிய இடத்தில் வேறொரு வேற்றுமை உருபு மயங்கி வருவது **உருபு மயக்கம்** எனப்படும்.

எந்த வேற்றுமை உருபால் கூறினும் அந்த உருபுக்கு ஏற்பப் பொருள் கொள்ளாமல் பொருளுக்கு ஏற்ற முறையிலேயே வேற்றுமை உருபை மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டு :

1. இந்நகர்க்கே வாழ்கின்றேம். இந்நகரின்கண் வாழ்கின்றேம் என ஏழாம் வேற்றுமை உருபு நிற்க வேண்டிய இடத்தில் 'கு' என்னும் நான்கனுருபு மயங்கி வந்தது. இது நான்காம் வேற்றுமை உருபு மயக்கம்.

2. செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும் - தவ்வைக்குக் காட்டிவிடும் என 'கு' என்னும் நான்கன் உருபு நிற்றற்குரிய இடத்தில் 'ஐ' என்னும் இரண்டன் உருபு மயங்கி வந்தது. இது இரண்டாம் வேற்றுமை உருபு மயக்கம்.

இலக்கணம் : ஒரு வேற்றுமைக்குரிய பொருள் வேறு வேற்றுமை உருபால் கூறப்பட்டாலும் பொருளை நோக்கி அதற்கு ஏற்ப வேற்றுமை உருபை மாற்றியமைத்துக்

கொள்ள வேண்டும். அங்ஙனம் ஒரு வேற்றுமை உருபு இருக்க வேண்டிய இடத்தில் வேறு வேற்றுமை உருபு மயங்கி வந்திருப்பது உருபு மயக்கம் எனப்படும்.

நன்னூல் :

யாதன் உருபிற் கூறிற் றுயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.

வினாக்கள்

1. தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழிகளை எடுத்துக் காட்டுக்கள் தந்து விளக்குக.
2. பெயர்ச் சொல்லின் இலக்கணம் யாது?
3. இடுகுறி மரபு, இடுகுறியாக்கம், காரண மரபு, காரண ஆக்கம் – இவைகளை விளக்கி எடுத்துக் காட்டுக்கள் தருக.
4. பெயர்ச்சொல் பொதுவாக எத்தனை வகைப்படும்? எடுத்துக்காட்டுக்கள் தருக.
5. மூவிடப் பெயர்கள் யாவை?
6. ஐம்பாற் பெயர் விகுதிகள் யாவை? எடுத்துக் காட்டுக்கள் தருக.
7. ஆண்பால், பெண்பால், பலர்பால் பெயர்கள் எவ்வாறு அமையும்?
8. ஒன்றன்பால், பலவின்பால் பெயர்கள் எவ்வாறு வரும்?
9. ஆண்பால், பெண்பால் சிறப்புப் பெயர்கள் யாவை?
10. பால்பகா அஃறிணைப் பெயர் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தந்து விளக்குக.
11. வினையாலணையும் பெயரின் இலக்கணத்தை எடுத்துக்காட்டின் மூலம் விளக்குக.

12. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

13. ஆகுபெயரின் இலக்கணம் கூறி எடுத்துக் காட்டுக்கள் தருக.

14. ஆகுபெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

15. பொதுப் பெயர்கள் யாவை? அவை பொதுவாக வரும் முறையை எடுத்துக் காட்டுக்கள் தந்து விளக்குக.

16. உருபு மயக்கம் என்ருல் என்ன? எடுத்துக்காட்டின் மூலம் விளக்குக.

பயிற்சி 2

1. மண்ணுலகம், மாமரம், மலை, பொன், நிலத்தை உழுதான், எட்டு, எழுந்திருந்தான், நனிபேதை, மற்ருென்று, வாரா நின்ருன், கொட்டு—இவற்றில் உள்ள தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழிகளை எடுத்து எழுதுக.

2. பொன்னன், நல்லன், ஒற்றர், பெருமான், பசுக்கள், தீயவை, கோட்டது, வில்லி, கோமான், ஆசிரியன்மார், பெண்டிர், இல்லாள், ஊரான் — ஐம்பாற் பெயர்களில் இவை எவ்வகையைச் சார்ந்தன எனக் கூறி, விகுதிகளையும் குறிப்பிடுக.

3. பின்வரும் தொடர்களில் உள்ள வினையாலணையும் பெயர்களை எடுத்துக்காட்டிக் காரணம் கூறுக.

1. எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம்,
2. சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி.
3. பாடினவனுக்குப் பரிசு கிடைத்தது.
4. கற்க கசடறக் கற்பவை.
5. ஈன்ருளின் எண்ணக் கடவுளும் இல்.

4. பாவை, கார், நாடு, நிலம், கழல்—இவற்றை இயற் பெயராகவும் ஆகுபெயராகவும் சொந்த வாக்கியங்களிற் பயன்படுத்துக.

5. கீழ்க்கண்ட வாக்கியங்களில் பொருத்தமான பொதுப் பெயர்களை அமைத்து எழுதுக.

1. அவன்——கூறியதையே பன்முறை கூறுகிறான்.
2. யாம் —— விளையாடினோம்.
3. அவர்———எழுதினார்.
4. இராமன்———எடுத்ததை உரைத்தான்.
5. நீங்கள்————வென்றீர்கள்.
6. அது————ஓடிற்று.
7. அவை——மேய்ந்தன.

6. கீழே தரப்பட்டுள்ள தொடர்களில் உள்ள உருபு மயக்கங்களை விளக்கிக் காட்டுக.

1. நாகு வேயொடு நக்கு வீங்குதோள்.
2. கிழங்கு மணற்கு ஈன்ற முளை.
3. அரசனைத் தீங்கு செய்தான்.
4. நீ பெறுக கணவனோடு என்றாள்.

6. வினைச்சொல் (விரிவாக)

(அ) வினைச்சொல் இலக்கணம்

வளவன் பாடம் படித்தான்.
மாதவி மாலை தொடுக்கிறாள்.
பெற்றோர் நாளை வருவர்.

இவற்றுள் படித்தான் என்பது வளவன் செய்த படித்தலாகிய தொழிலையும் இறந்த காலத்தையும் உணர்த்துகிறது. தொடுக்கிறாள் என்பது மாதவி செய்கின்ற தொடுத்தலாகிய தொழிலையும் நிகழ்காலத்தையும் அறிவிக்கிறது. வருவர் என்பது பெற்றோர் செய்யப் போகும் வருதலாகிய தொழிலையும் எதிர்காலத்தையும் உணர்த்துகிறது. அவற்றோடு தொழில்களைச் செய்தவர் யார் (திணை, பால்) என்பதும் விளங்குகிறது.

இங்ஙனம் ஒன்றன் தொழில் நிகழ்ச்சியை உணர்த்திக் காலம் காட்டித் திணைபால் முதலியவற்றை அறிவித்து வரும் சொல்லே வினைச்சொல்லாகும். வினைச்சொல் வேற்றுமை ஏற்காது.

ஒருவினைச் சொல்லில் பகுதியால் செயலும், விகுதியால் திணைபால் எண் இடங்களும், இடை நிலையால் காலமும் தெரியும்.

எடுத்துக்காட்டு :

இராமன் உண்டான், உண்கிறான், உண்பான்.
கண்ணகி வந்தாள், வருகிறாள், வருவாள்.
சான்றோர் கூறினர், கூறுகின்றனர், கூறுவர்.

இங்ஙனமே ஏனைய திணைபால் முதலியவற்றிற்கும் எடுத்துக்காட்டுக்கள் காண்க.

இலக்கணம் : ஒன்றன் தொழில் நிகழ்ச்சியை அறிவித்துக் காலம் காட்டித் திணைபால் முதலியவற்றை உணர்த்தி வரும் சொல் வினைச்சொல் எனப்படும்.

(ஆ) தெரிநிலை குறிப்பு வினைகள்

வினைச்சொல் தெரிநிலை வினை, குறிப்பு வினை என இரு வகைப்படும். அவற்றைப் பற்றி முன் வகுப்புக்களில் படித்துள்ளீர்கள். அவற்றைச் சுருக்கமாக இங்கு நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

1. தெரிநிலை வினைகள்

செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படு பொருள் ஆகிய ஆறனையும் வெளிப்படையாக உணர்த்தி வரும் சொல் தெரிநிலை வினையாகும்.

எடுத்துக்காட்டு :

குயவன் குடம் வனைந்தான்.

வனைந்தான் :

செய்பவன்	— உயர்திணை, ஆண்பால்
கருவி	— மண், தண்டு சங்கரங்கள்
நிலம்	— தொழில் நிகழிடம்
செயல்	— வனைதல்
காலம்	— இறந்த காலம்
செயப்படு பொருள்	— குடம்

இங்ஙனம் செய்பவன் முதலான ஆறனையும் உணர்த்தி வரும் சொல்லே தெரிநிலை வினையாம்.

நடந்தான், வந்தான் என்பன போன்ற வினைகள் செயப்படு பொருளை உணர்த்தா. அவை **செயப்படு பொருள் குன்றிய வினை** எனப்படும். கண்டான், உண்டான் என்பன போலச் செயப்படு பொருள் உணர்த்தி வரும் வினைகள் **செயப்படு பொருள் குன்றா வினை** எனப் படும்.

நன்னூல் :

செய்பவன் கருவி நிலம்செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே.

2. குறிப்பு வினை

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களின் அடியாகத் தோன்றிச் செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படு பொருள் ஆகிய ஆறனுள் செய்பவனை மட்டும் வெளிப் படையாக உணர்த்தி ஏனையவற்றைக் குறிப்பாக உணர்த்தி வரும் வினைச் சொல் குறிப்பு வினையாம்.

எடுத்துக்காட்டு

வேலன் பண்டு பொன்னன்	— பொருள்
இராமன் வளமான ஊரன்	— இடம்
அவன் ஆதிரையான்	— காலம்

இவன் அழகிய கண்ணன் — சினை
அவர் அறிவில் பெரியர் — பண்பு
இவள் இனிய சொல்லள் — தொழில்

(குறிப்பு: பொன்னன் என்பது பொன் என்னும் பொருட் பெயரடியாகப் பிறந்துள்ளது. அன் விகுதி, உள்ளமையால் உயர்திணை, ஆண்பால் என்பது விளங்கு கிறது. இடைநிலை முதலிய உறுப்புக்கள் இல்லாமையால் காலம், தொழில் முதலியன தெரியவில்லை. பண்டு என்ற குறிப்பால் இறந்த காலமும், உடையனும் தொழிலும் விளங்கின. இங்ஙனமே பிறவும் குறிப்பால் காலமும் தொழிலும் உணர்த்தும்.)

நன்னூல்

பொருள்முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே.

(இ) வினைச் சொல்லின் வகைகள்

தெரிநிலையாயும் குறிப்பாயும் வரும் வினைச்சொற் கள் வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என மூவகைப்படும். அவற்றைப் பற்றியும் முன் வகுப்புக்களில் விளக்கமாகப் படித்துள்ளீர்கள். இங்குச் சுருக்கமாக நினைவு படுத்திக் கொள்க.

1. வினைமுற்று

தொழில், காலம் முதலியவற்றை வெளிப்படையா கவோ குறிப்பாகவோ உணர்த்தித் திணைபால் காட்டும் விகுதியுடன் முற்றுப் பெற்று நிற்கும் சொல் வினைமுற்றாகும். வினை முற்று பொருட் பெயர் முதலான அறுவகைப் பெயர் களில் ஒன்றனையே கொண்டு முடியும். வினை முற்றையோ, பெயரெச்ச வினையெச்சங்களையோ கொண்டு முடியாது.

தொழில் காலம் முதலியவற்றை வெளிப்படையாக உணர்த்திவரும் வினைமுற்று தெரிநிலை வினைமுற்றாகும்.

அவற்றைக் குறிப்பாக உணர்த்திவரும் வினைமுற்று குறிப்பு வினைமுற்றாகும்.

எடுத்துக்காட்டு

தெரிநிலை	குறிப்பு
பாடினார் புலவர்	பெரியர் புலவர்—பொருள்
விளைந்தது வயல்	வலியது நிலம் —இடம்
விடிந்தது பொழுது	இனியது வேனில்—காலம்
ஒடிந்தது கால்	பெரியது கண் —சினை
விளைந்தது நன்மை	உள்ளது நன்மை—பண்பு
ஒழிந்தது பிறவி	கொடியது பிறவி—தொழில்

தெரிநிலை, குறிப்பு வினைமுற்றுக்கள் அறுவகைப் பெயர்களையும் கொண்டு முடிந்தமை காண்க.

நன்னூல்

பொதுவியல் பாறையும் தோற்றிப் பொருட்பெயர்
முதலறு பெயரலது எற்பில முற்றே.

வினைமுற்றின் வகைகள்

வினைமுற்று இடவகையால் படர்க்கை வினைமுற்று, தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று என மூவகைப்படும். படர்க்கை வினைமுற்று ஆண்பால் முதலாக ஐந்து வகைப்படும். தன்மை, முன்னிலை வினைமுற்றுக்கள் ஒருமை, பன்மை என இரண்டு வகைப்படும். இவ்வொன்பது வகை வினைமுற்றுக்களையும் இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனக் காலவகையால் மும்மூன்றாகப் பகுக்கலாம். ஆகவே வினைமுற்று இருபத்தேழாகும்

(1) படர்க்கை ஆண்பால் வினைமுற்று

வளவன் கண்டனன்.
செழியன் தந்தான்.

இவற்றுள் கண்டனன், தந்தான் என்ற வினைமுற்றுக்கள் வளவன், செழியன் ஆகிய ஆண்பாலின் தொழிலை

உணர்த்துகின்றன. ஆதலால் இவை ஆண்பால் வினை முற்றுக்களாம். அன், ஆன் என்னும் விகுதிகளே ஆண் பாலை உணர்த்தின.

எடுத்துக்காட்டு

அவன் நடந்தனன், நடக்கின்றனன், நடப்பான் —அன்
அவன் நடந்தான், நடக்கிறான், நடப்பான் —ஆன்
அவன் குழையன், குழையான் —குறிப்பு

இலக்கணம்: அன், ஆன் என்னும் விகுதிகளைப் பெற்றுவரும் வினைச் சொற்கள் படர்க்கை ஆண்பால் வினை முற்றுக்களாம்.

நன்னூல்

அன் ஆன் இறுமொழி ஆண்பாற் படர்க்கை.

(2) படர்க்கைப் பெண்பால் வினைமுற்று

தலைவி பூப்பறித்தாள்.
தோழி மாலை தொடுத்தாள்.

இவற்றுள் பறித்தாள், தொடுத்தாள் என்பன தலைவி யின் தொழிலையும் தோழியின் தொழிலையும் உணர்த்து தலால் பெண்பால்வினைமுற்றுக்களாம். அள், ஆள் என்னும், விகுதிகளே பெண்பாலை உணர்த்தின.

எடுத்துக்காட்டு

அரசி படித்தனள், படிக்கின்றனள், படிப்பள்—அள்
அரசி படித்தாள், படிக்கிறாள், படிப்பாள் —ஆள்
அரசி குழையள், குழையாள் —குறிப்பு

இலக்கணம்: அள், ஆள் என்னும் விகுதிகளைப் பெற்று வரும் வினைச் சொற்கள் பெண்பால்வினை முற்றுக் களாம்.

நன்னூல்

அள் ஆள் இறுமொழி பெண்பால் படர்க்கை.

(3) படர்க்கைப் பலர்பால் வினைமுற்று

பெரியோர் வந்தனர். புலவர் கூறுப.
அவர் கூறினர். அவர் கொண்மார்.

இவற்றுள் வந்தனர், கூறினர், கூறுப, கொண்மார் என்பன பெரியோர் முதலிய பலர்பாலின் தொழில்களை உணர்த்துவதால் பலர்பால் வினைமுற்றுக்களாம். அர், ஆர், ப, மார் முதலிய விகுதிகள் பலர்பாலை உணர்த்தின.

எடுத்துக்காட்டு

அவர் செய்தனர், செய்கின்றனர், செய்வர்			—அர்
அவர் செய்தார், செய்கின்றார், செய்வார்			—ஆர்
அவர் என்ப	—	செய்ப	—ப
அவர் —	—	கொண்மார்	—மார்
அவர் குழையர், குழையார்			—குறிப்பு

(குறிப்பு : ப விகுதி இறந்த காலத்திலும் எதிர்காலத்திலும் மட்டுமே வரும். மார் விகுதி எதிர் காலத்தில் மட்டுமே வரும். இவ்விரு விகுதிகளும் குறிப்புமுற்றில் வாரா. மார்விகுதி பாடன்மார் **எமர்** எனப் பெயருடன் முடிவதன்றிக் கொண்மார் **வந்தார்** என வினையுடனும் முடியும்.)

இலக்கணம் : அர், ஆர், ப, மார் என்னும் விகுதிகளைப் பெற்று வரும் வினைச்சொற்கள் படர்க்கைப் பலர்பால் வினைமுற்றுக்களாம். அவற்றுள் 'மார்' என்னும் விகுதி பெயருடன் முடிவதன்றி வினையுடனும் முடியும்.

நன்னூல்

அர்ஆர் பவ்வூர் அகரம்மார் ஈற்ற
பல்லோர் படர்க்கை மார் வினையொடும் முடிமே.

(4) படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று

பசு மேய்ந்தது.
கோழி கூவிற்று.
அஃது அப்பொருட்டு.

இவற்றுள் மேய்ந்தது என்பது பசுவின் தொழிலையும், கூவிற்று என்பது கோழியின் தொழிலையும் உணர்த்துகின்றன. இவை படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்றுக்களாம். பொருட்டு என்பது பொருளையுடையது என ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்றும். து, று, டு என்னும் விகுதிகள் ஒன்றன்பாலை உணர்த்தின. 'டு' விகுதி குறிப்பு வினையில் மட்டுமே வரும்.

எடுத்துக்காட்டு

அது நடந்தது, நடக்கிறது, நடப்பது—து
அது போயிற்று — — —று
அது குழையது, குழையிற்று, முக்கட்டு—குறிப்பு

(குறிப்பு: 'று' விகுதி இறந்த காலத்தில் மட்டுமே வரும். முக்கட்டு என்பது மூன்று கண்களையுடையது எனக் குறிப்பு வினைமுற்றும்.)

இலக்கணம் து, று, டு என்னும் மூன்று குற்றியலுகரங்களை விகுதிகளாகப் பெற்றுவரும் வினைச்சொற்கள் படர்க்கை ஒன்றன் பால் வினைமுற்றுக்களாம். அவற்றுள் 'டு' என்னும் விகுதி குறிப்பு வினையில் மட்டுமே வரும்.

நன்னூல்

துறுடுக் குற்றிய லுகர ஈற்ற
ஒன்றன் படர்க்கை டுக்குறிப்பின் ஆகும்.

(5) படர்க்கைப் பலவின்பால் வினைமுற்று

பசுக்கள் மேய்ந்தன.
பசுக்கள் மேயா.

இவற்றுள் மேய்ந்தன என்பது பசுக்களின் தொழிலை உணர்த்துகிறது. மேயா என்பது பசுக்கள் தொழில் செய்யாமையை உணர்த்துகிறது. இவை படர்க்கைப் பலவின்பால் வினைமுற்றுக்களாம். அ, ஆ என்னும் விகுதிகள் பலவின்பாலை உணர்த்தின. 'ஆ' விகுதி எதிர்மறையில் மட்டுமே வரும்.

எடுத்துக்காட்டு

பறவைகள் பறந்தன, பறக்கின்றன, பறப்பன—அ
பறவைகள் பறவா —ஆ
பறவைகள் கரியன —குறிப்பு

(குறிப்பு : எதிர் மறை காலம் காட்டாது. 'ஆ' எதிர் மறையில் மட்டுமே வருமாதலால் அது குறிப்புவினையில் வராது.)

இலக்கணம் அ, ஆ என்னும் விகுதிகளைப் பெற்று வரும் வினைச் சொற்கள் படர்க்கைப் பலவின்பால் வினை முற்றுக்களாம். இவற்றுள் 'ஆ' என்னும் விகுதி எதிர் மறை யில் மட்டுமே வரும்.

நன்னூல்:

அஆ ஈற்ற பலவின் படர்க்கை
ஆவே எதிர்மறைக் கண்ண தாகும்.

(6) தன்மை ஒருமை வினைமுற்று

நான் செய்தனென். நான் செய்தேன்.

இவற்றுள் செய்தனென், செய்தேன் என்பன தன்மை இடத்தில் ஒருவர் செயலை உணர்த்துகின்றன. இவை தன்மை ஒருமை வினைமுற்றுக்களாம். என், ஏன் என்னும் விகுதிகள் தன்மை ஒருமையை உணர்த்துகின்றன. மற்றும் கு, டு, து, று, அல், அன் என்பனவும் தன்மை ஒருமை வினை முற்று விகுதிகளாக வரும்.

தன்மை ஒருமை வினைமுற்று உயர்திணை ஆண்பால், பெண்பால், அஃறிணை ஒன்றன்பால் ஆகிய மூன்று பால் கட்கும் பொதுவாய் வரும்.

எடுத்துக்காட்டு

நான்	—	—	உண்கு	— கு
நான்	உண்டு	—	—	— டு
நான்	வந்து	—	வருது	— து

நான் சென்று — சேறு — று
நான் — — செய்வல் — அல்
நான் உண்டனன், உண்கின்றனன்,
உண்பன் — அன்
நான் உண்டனென், உண்கின்றனென்,
உண்பென் — என்
நான் உண்டேன், உண்கின்றேன்,
உண்பேன் — ஏன்
நான் குழையன், குழையென்,
குழையேன்—குறிப்பு

(குறிப்பு: 'கு' விகுதி எதிர்காலத்திலும், 'டு' விகுதி இறந்த காலத்திலும், 'து', 'று' விகுதிகள் இறந்த காலத்திலும் எதிர்காலத்திலும் 'அல்' விகுதி எதிர் காலத்திலும் மட்டுமே வரும்.)

இலக்கணம்: கு, டு, து, று, அல், அன், என், ஏன் என்னும் விகுதிகளைப் பெற்று வரும் வினைச் சொற்கள் உயர்திணை ஆண்பால், பெண்பால், அஃறிணை ஒன்றன்பால் ஆகிய மூன்று பால்கட்கும் பொதுவாக வரும் தன்மை ஒருமை வினைமுற்றுக்களாம்.

நன்னூல்:

குடுதுறு என்னும் குன்றிய லுகரமோடு
அல்அன் என்ஏன் ஆகும் ஈற்ற
இருதிணை முக்கூற்று ஒருமைத் தன்மை.

(7) தன்மைப் பன்மை வினைமுற்று

நாம் உண்டனம்.
நாம் உண்டாம்.

இவற்றில் உண்டனம், உண்டாம் என்பன தன்மையிடத்தில் பலர் செயலை உணர்த்துகின்றன. ஆதலால் இவை தன்மைப் பன்மை வினைமுற்றுக்களாம். அம், ஆம் என்னும் விகுதிகள் தன்மைப் பன்மையை உணர்த்து

கின்றன. எம், ஏம், ஓம், கும், டும், தும், றும் என்பனவும் தன்மைப் பன்மை விகுதிகளாக வரும்.

இவ்விகுதிகள் தனித்தன்மைப் பன்மையில் வருவதோடு, அம், ஆம் என்பன தன்மையோடு முன்னிலையை உளப்படுத்தியும், எம், ஏம், ஓம் என்பன தன்மையோடு படர்க்கையை உளப்படுத்தியும், கும், டும், தும், றும் என்பன தன்மையோடு முன்னிலை, படர்க்கைகளை உளப்படுத்தியும் வரும். இங்ஙனம் வரும் வினைமுற்றுக்கள் **உளப் பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள்** எனப்படும்.

தன்மைப் பன்மை வினைமுற்று உயர்திணைப் பலர் பாலுக்கும் அஃறிணைப் பலவின் பாலுக்கும் பொதுவாய் வரும்.

எடுத்துக்காட்டு

யாம்	தந்தனம்,	தருகின்றனம்,	தருவம்—அம்
யாம்	தந்தாம்	தருகின்றாம்	தருவாம்—ஆம்
யாம்	செய்தனெம்	செய்கின்றனெம்	செய்வெம்—எம்
யாம்	செய்தேம்	செய்கின்றேம்	செய்வேம்—ஏம்
யாம்	செய்தோம்	செய்கின்றோம்	செய்வோம்—ஓம்
யாம்	—	—	உண்கும்—கும்
யாம்	உண்டும்	—	— —டும்
யாம்	வந்தும்	—	வருதும்—தும்
யாம்	சென்றும்	—	சேறும்—றும்

(குறிப்பு : 'கும்' விகுதி எதிர் காலத்திலும், 'டும்' விகுதி இறந்த காலத்திலும், 'தும்', 'றும்', விகுதிகள் இறந்த காலம் எதிர்காலங்களிலும் மட்டுமே வரும்.)

உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று

யானும் நீயும்தந்தனம், தந்தாம்—தன்மை, முன்னிலை.
யானும் அவனும் செய்தனெம், செய்தேம்,
செய்தோம்—தன்மை, படர்க்கை.
யானும் நீயும் அவனும் உண்கும், உண்டும், வந்தும்,
சேறும்—தன்மை, முன்னிலை, படர்க்கை.

(குறிப்பு: ஏனைய காலங்கட்கும் பொருத்தமாக அமைத்துக் காண்க.)

இலக்கணம்: அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும், றும் என்னும் விகுதிகளைப் பெறும் வினைச்சொற்கள் உயர்திணைப் பலர்பாலுக்கும், அஃறிணைப் பலவின் பாலுக்கும் பொதுவாய் வரும் தன்மைப்பன்மை வினைமுற்றுக்களாம். இவை தனித்தன்மைப் பன்மையில் வருவதன்றி அம், ஆம் என்பன தன்மையோடு முன்னிலையையும், எம், ஏம், ஓம் என்பன தன்மையோடு படர்க்கையையும், கும், டும், தும், றும் என்பன தன்மையோடு முன்னிலை, படர்க்கைகளையும் உளப்படுத்தி உளப்பாட்டுத் தன்மைப் பன்மைகளாகவும் வரும்.

நன்னூல்:

> அம்ஆம் என்பன முன்னிலை யாரையும்
> எம்ஏம் ஓம்இவை படர்க்கை யாரையும்
> உம் ஊர் கடதற இருபா லாரையும்
> தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை.

(8) முன்னிலை ஒருமை வினைமுற்று

நீ உண்டனை. நீ உண்டாய். நீ உண்டி.

இவற்றுள் உண்டனை, உண்டாய், உண்டி என்பன முன்னிலை இடத்தில் ஒருவர் செயலை உணர்த்துகின்றன. ஆதலால் இவை முன்னிலை ஒருமை வினைமுற்றுக்களாம். ஐ, ஆய், இ என்னும் விகுதிகள் முன்னிலை ஒருமையை உணர்த்துகின்றன.

உண், நட, வா என்பன போல ஏவற்பொருள் உணர்த்தி வரும் வினைப்பகுதிகளும் முன்னிலை ஒருமையில் ஏவல் வினைமுற்றுக்களாக வரும்.

முன்னிலை ஒருமை வினைமுற்று உயர்திணை ஆண்பால், பெண்பால், அஃறிணை ஒன்றன்பால் ஆகிய மூன்று பால்கட்கும் பொதுவாய் வரும்.

எடுத்துக்காட்டு

நீ வந்தனை, வருகின்றனை, வருவை—ஐ
நீ செய்தாய் செய்கின்றாய், செய்வாய்—ஆய்
நீ உண்டி, உண்ணுநின்றி, உண்ணுதி—இ
நீ காண், செல், நட, வா—ஏவல்
நீ குழையை, குழையாய், வில்லி—குறிப்பு

(குறிப்பு: ஏவற்பொருளில் வரும் வினைப்பகுதிகள் ஏவல் ஒருமை வினைமுற்று எனப்படும். அஃது எதிர்காலம் மட்டுமே உணர்த்தும். செய்யாய், செய்தி என ஆய், இ என்னும் விகுதிகளும் ஏவல் ஒருமை வினை முற்றில் வரும்.)

இலக்கணம்: ஐ, ஆய், இ என்னும் விகுதிகளைப் பெற்று வரும் வினைச்சொற்களும் ஏவற்பொருளில் வரும் வினைப்பகுதிகளும் உயர்திணை ஆண்பால், பெண்பால், அஃறிணை ஒன்றன்பால் ஆகிய மூன்றுபால்கட்கும் பொது வாய் வரும் முன்னிலை ஒருமை வினைமுற்றுக்களாம்.

நன்னூல்:

ஐ ஆய் இகர ஈற்ற மூன்றும்
ஏவலின் வருஉம் எல்லா ஈற்றவும்
முப்பால் ஒருமை முன்னிலை மொழியே.

9. முன்னிலைப் பன்மை வினைமுற்று

நீவிர் உண்டனிர். நீவிர் உண்டீர்.

இவற்றில் உண்டனிர், உண்டீர் என்பன முன்னிலை யிடத்தில் பலர் செயலை உணர்த்துகின்றன. ஆதலால் இவை முன்னிலைப்பன்மை வினைமுற்றுக்களாம். இர், ஈர் என்னும் விகுதிகளே முன்னிலைப் பன்மையை உணர்த்து கின்றன.

'மின்' என்னும் விகுதி முன்னிலைப் பன்மையில் ஏவற் பொருள் உணர்த்தி வரும். அஃது ஏவல் பன்மை வினை

முற்று எனப்படும். ஈர், உம், கள் என்னும் விகுதிகளும் ஏவற்பன்மை வினைமுற்றுக்களை உணர்த்தி வரும்.

முன்னிலைப் பன்மை வினைமுற்று உயர்திணைப் பலர் பால், அஃறிணைப் பலவின்பால் ஆகிய இருபால்கட்கும் பொதுவாய் வரும்.

எடுத்துக்காட்டு

நீவிர் வந்தனிர், வருகின்றனிர், வருவிர்—இர்
நீவிர் செய்தீர், செய்கின்றீர், செய்வீர்,—ஈர்
நீவிர் காண்மின், காணீர், காணும், காணுங்கள்-ஏவல்
நீவிர் குழையிர், குழையீர்—குறிப்பு

(**குறிப்பு :** ஈர், உம், கள் என்னும் விகுதிகள் ஏவற் பன்மையில் வருதல் புதிய வழக்கு.)

இர், ஈர், மின் விகுதிகள் முன்னிலை இடத்தோடு படர்க்கை இடம் சேர்ந்து வரும்போதும் வரும். அவை **உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்கள்** எனப்படும்.

எடுத்துக்காட்டு

நீயும் அவனும் சென்றனிர், சென்றீர், சென்மின்.

இலக்கணம் : இர், ஈர் என்னும் விகுதிகளைப்பெற்று வரும் வினைச்சொற்கள் உயர்திணைப் பலர்பாலுக்கும் அஃறிணைப் பலவின்பாலுக்கும் பொதுவாக வரும் முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்களாம். 'மின்' என்னும் விகுதி ஏவற் பன்மை வினைமுற்றில் வரும்.

நன்னூல்:

இர்ஈர் ஈற்ற இரண்டும் இருதிணைப்
பன்மை முன்னிலை மின்அவற் றேவல்.

(**குறிப்பு:** இவை தவிர வியங்கோள் வினை முற்று, செய்யுமென்னும் வாய்பாட்டு வினைமுற்று என வேறுசில வினைமுற்றுக்களும் உண்டு. அவை முறையே இருதிணை ஐம்பாலுக்

கும், பலர்பால் ஒழிந்த ஏனைய படர்க்கை நான்குபால்கட்கும் பொதுவாக வரும். அவற்றைப் பொது வினையில் காண்க.)

2. பெயரெச்சம்

தொடுத்த மாலை.

தொடுக்கின்ற மாலை.

தொடுக்கும் மாலை.

இத்தொடர்களில் தொடுத்த, தொடுக்கின்ற, தொடுக்கும் என்பன தொடுத்தலாகிய தொழிலையும், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களையும் உணர்த்துகின்றன. திணை, பால் காட்டும் விகுதி இவற்றில் இல்லாமையால் இவை செய்பவனை உணர்த்தாமல் எச்சமாய் நிற்கின்றன. இவை மாலை என்னும் பெயர்ச் சொல்லைக்கொண்டு முடிகின்றன.

இங்ஙனம் திணை, பால் காட்டும் விகுதி குறைந்து எச்சமாய்ப் பெயரைக் கொண்டு முடியும் வினை பெயரெச்சமாகும். பெயரெச்சம் கால வகையால் மூவகைப்படும். இறந்த காலப் பெயரெச்சம் 'செய்த' என்னும் வாய்பாட்டிலும், நிகழ்காலப் பெயரெச்சம், 'செய்கின்ற' என்னும் வாய்பாட்டிலும், எதிர்காலப் பெயரெச்சம், 'செய்யும்' என்னும் வாய்பாட்டிலும் வரும்.

பெயரெச்சம் செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் என்னும் ஆறனுள் ஒன்றைக் குறிக்கும் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியும்.

தொழிலையும் காலத்தையும் வெளிப்படையாக உணர்த்தி வரும் பெயரெச்சம் **தெரிநிலைப் பெயரெச்சம்** எனப்படும். அவற்றைக் குறிப்பாக உணர்த்தி வரும் பெயரெச்சம் **குறிப்புப் பெயரெச்சம்** எனப்படும்.

எடுத்துக்காட்டு

தெரிநிலை	குறிப்பு	
உண்ட மனிதன்	பெரிய மனிதன்	—செய்பவன்
உண்ட கலம்	பெரிய கலம்	—கருவி
உண்ட இடம்	பெரிய இடம்	—நிலம்
உண்ட ஊண்	பெரிய ஊண்	—தொழில்
உண்ட நாள்	பெரிய நாள்	—காலம்
உண்ட உணவு	பெரிய உணவு	—செயப்படு பொருள்

உண்ட மனிதன் —இறந்தகாலம் (செய்த)
உண்கின்ற மனிதன் —நிகழ்காலம் (செய்கின்ற)
உண்ணும் மனிதன் —எதிர்காலம் (செய்யும்)

இலக்கணம்: செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் வாய்பாடுகளினால் முறையே இறந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் எதிர்காலத்தையும் உணர்த்தித் திணைபால் காட்டும் விகுதி குறைந்து நிற்க, செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செயப்படு பொருள் ஆகியவற்றைக் குறிக் கும் அறுவகைப் பெயர்களில் ஒன்றைக்கொண்டு முடிவது பெயரெச்சமாம்.

நன்னூல்:

செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டில்
காலமும் செயலும் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே.

3. வினையெச்சம்

உண்டு வந்தான்.
உண்ண வருகிறான்.
உண்டால் வருவான்.

இத்தொடர்களில் உண்டு, உண்ண, உண்டால் என் பன உண்ணுதலாகிய தொழிலையும் முக்காலங்களையும்

உணர்த்துகின்றன. திணை, பால் காட்டும் விகுதி இவற்றில் இல்லாமையால் இவை செய்பவனை உணர்த்தாமல் எச்சமாய் நிற்கின்றன. இவை, வந்தான் முதலிய வினைமுற்றுக்களைக்கொண்டு முடிந்துள்ளன.

இங்ஙனம் திணை, பால் காட்டும் விகுதி குறைந்து வினையைக் கொண்டு முடியும் வினைச்சொல் வினையெச்சம் எனப்படும். வினையெச்சம் காலவகையால் மூவகைப்படும்.

செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென என்னும் வாய்பாடுகள் ஐந்தும் இறந்த காலத்தில் வரும். செய என்னும் வாய்பாடு ஒன்று மட்டும் நிகழ்காலத்தில் வரும். செயின், செய்யிய, செய்யியர் என்னும் வாய்பாடுகளும் வான், பான், பாக்கு என்னும் விகுதிகளும் எதிர்காலத்தில் வரும்.

தொழிலையும் காலத்தையும் வெளிப்படையாக உணர்த்தி வரும் வினையெச்சம் தெரிநிலை வினையெச்சமாம். அவற்றைக் குறிப்பாக உணர்த்தி வரும் வினையெச்சம் குறிப்பு வினையெச்சமாம்.

வினையெச்சம் வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்கள் ஆகியவற்றில் ஒன்றைக்கொண்டு முடியும்.

எடுத்துக்காட்டு

தெரிநிலை	குறிப்பு
படித்து முடித்தான்	மெல்ல வந்தான்—வினைமுற்று
படித்து முடித்த மாணவன்	மெல்ல வந்த மாணவன்—பெயரெச்சம்
படித்து முடித்துச்சென்றாள்	மெல்ல வந்து சென்றாள்—வினையெச்சம்
படித்து முடித்தல்	மெல்ல வருதல்—தொழிற்பெயர்

படித்து முடித்தவன் மெல்ல வந்தவன்—வினை
யாலணையும் பெயர்

இறந்தகாலம்

படித்து முடித்தான்—செய்து
உண்ணுபு செய்தான்—செய்பு
வாரா நின்றான்—செய்யா
காணாஉ மகிழ்ந்தான்—செய்யூ
உண்டெனச் சென்றான்—செய்தென

நிகழ்காலம்

காண வருகிறான்—செய

எதிர்காலம்

வரின் தருவேன்—செயின்
உண்ணிய வருவான்—செய்யிய
உண்ணியர் வருவான்—செய்யியர்
கூறுவான் புக்கான்—வான்
காண்பான் சென்றான்—பான்
செய்பாக்கு வந்தான்—பாக்கு

நிகழ்காலத்திற்குரிய செயவென் எச்சம் காரணப் பொருளில் வரும்போது இறந்த காலத்தை உணர்த்தும். உடனிகழ்ச்சிப் பொருளில் வரும்போது நிகழ்காலத்தை உணர்த்தும். காரியப் பொருளில் வரும்போது எதிர் காலத்தை உணர்த்தும்.

எடுத்துக்காட்டு

மழைபெய்ய நெல் விளைந்தது—இறந்த காலம்
கோழி கூவப் பொழுது விடிந்தது—நிகழ்காலம்
நெல்விளைய மழை பெய்தது—எதிர்காலம்

மழை பெய்ய என்பது மழை பெய்தமையால் என இறந்த காலத்தையும், கோழி கூவ என்பது கூவுகிற நேரத்தில் என நிகழ்காலத்தையும், நெல் விளைய என்பது நெல் விளைவதற்காக என எதிர்காலத்தையும் உணர்த்துதல் காண்க.

இங்குக் குறிப்பிட்ட வாய்பாட்டு வினையெச்சங்களே அன்றி இறந்த காலத்தில் இ, ய், உம் என்ற விகுதிகளையும், எதிர்காலத்தில் அல், கால், கு, கடை வழி, இடத்து என்ற விகுதிகளையும், குறிப்பு வினையெச்சத்தில் அ, றி, ஆல் முதலிய விகுதிகளையும் பெற்றுவரும் வினையெச்சங்களும் உள்ளன.

எடுத்துக்காட்டு

கூறிச்சென்றாள், போய்க் கண்டேன், காண்டலும் உவகை கொண்டான்—இறந்தகாலம்.

வந்தால் தருவான், காணுங்கால் ஈவான், படிப்பதற்குக் கொடுத்தேன், ஈதல் இயையாக்கடைசாதல் இனிது, செய்தவழி மகிழ்வேன், கண்டவிடத்துப் பேசுவேன்—எதிர்காலம்.

மெல்ல வந்தான், இன்றிச் செய்தான், அல்லாமல் கூறான்—குறிப்பு.

இலக்கணம்: *தொழிலையும் காலத்தையும் உணர்த்தித் திணை, பால் காட்டும் விகுதி பெறாமல் வினையைக் கொண்டு முடியும் எச்சவினை வினையெச்சமாகும்.*

வினையெச்சங்கள் செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் என்னும் வாய்பாடுகளையும், வான். பான், பாக்கு என்னும் விகுதிகளையும் பெற்றுவரும். அவற்றில் முதலில் உள்ள ஐந்தும் இறந்த காலத்தையும், இடையில் உள்ள 'செய' என்னும் வாய்பாடு ஒன்றுமட்டும் நிகழ்காலத்தையும் ஈற்றில் உள்ள ஆறும் எதிர்காலத்தையும் உணர்த்தும்.

நன்னூல்:

தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே.

செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தொன் றுறுமுக் காலமும் முறைதரும்.

(ஈ) உடன்பாடு-எதிர்மறைவினை

உண்டான்	உண்ணான்
அஞ்சிய	அஞ்சாத
படித்து	படியாது

இச்சொற்களைக் கவனியுங்கள். இவற்றில் உண்டான், உண்ணான் என்பன வினைமுற்றுக்கள். உண்டான் என்பது உண்ணுதலாகிய தொழில் நிகழ்ந்தமையைக் குறிக்கிறது. இங்ஙனம் தொழில் நிகழ்ந்ததையும், நிகழ்கிறதையும், நிகழப்போவதையும் உணர்த்தும் வினைச்சொல் உடன்பாட்டு வினை எனப்படும். இது வினைமுற்று ஆதலின் **உடன்பாட்டு வினைமுற்று** ஆகும்.

உண்ணான் என்பது தொழில் நிகழாமையை உணர்த்துகிறது. இங்ஙனம் தொழில் நிகழாமையை உணர்த்துவதும், உண்ணேன் என்பது போலத் தொழில் செய்ய மறுத்தலை உணர்த்துவதும் எதிர்மறை எனப்படும். எனவே உண்ணான் என்பது **எதிர்மறை வினைமுற்று** ஆகும்.

அஞ்சிய என்பது தொழில் நிகழ்வதை உணர்த்தும் பெயரெச்சமாதலின் **உடன்பாட்டுப் பெயரெச்சமாம்.** அஞ்சாத என்பது தொழில் நிகழாமையை உணர்த்தலின் **எதிர்மறைப் பெயரெச்சமாம்.**

படித்து என்பது தொழில் நிகழ்வதை உணர்த்தும் வினையெச்சமாதலின் **உடன்பாட்டு வினையெச்சமாம்.** படியாது என்பது தொழில் நிகழாமையைக் குறித்தலால் **எதிர்மறை வினையெச்சமாம்.**

எடுத்துக்காட்டு

உடன்பாடு	எதிர்மறை	
நடந்தேன்	நடவேன்	தன்மை
கண்டோம்	காணோம்	
உறங்கினாய்	உறங்காய்	முன்னிலை
வந்தீர்	வாரீர்	
உரைத்தான்	உரையான்	படர்க்கை
வரைந்தாள்	வரையாள்	
கூறினர்	கூறார்	
மேய்ந்தது	மேயாது	
ஓடின	ஓடா	
உண்ணுதி	உண்ணேல்	ஏவல்
எழுதுமின்	எழுதன்மின்	
செய்க	செய்யற்க—வியங்கோள்	
வழங்கிய	வழங்காத—பெயரெச்சம்	
கொடுத்து	கொடாது—வினையெச்சம்	
நல்லன்	அல்லன்—குறிப்புமுற்று	
உள்ள	இல்லாத—குறிப்புப் பெயரெச்சம்	
மெல்ல	இல்லாது—குறிப்பு வினையெச்சம்	

(குறிப்பு: எதிர்மறையில் தொழிலும் காலமும் தெரியாவிட்டாலும் அவை தொழிலையும் காலத்தையும் எதிர்மறுத்தலை உணர்த்தலின் அவையும் வினைச்சொற்களேயாம்.)

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்ச வினையெச்சங்கள்

ஓடியகுதிரை ஓடாத குதிரை ஓடாக் குதிரை
கண்டு சென்றாள் காணாது சென்றாள் காணாச் சென்றாள்

இச்சொற்களை நன்கு கவனியுங்கள். ஓடிய என்பது தொழில் நிகழ்ச்சியை அறிவிப்பதால் உடன்பாட்டுப் பெயரெச்சமாம். ஓடாத என்பது தொழில் நிகழாமையை உணர்த்தலின் எதிர்மறைப் பெயரெச்சமாகும். ஓடா என்பதும் தொழில் நிகழாமையை உணர்த்தலின் எதிர்மறைப் பெயரெச்சமே. 'ஓடாத' என்ற எதிர்மறைப் பெயரெச்சத்தின் ஈற்றெழுத்தாகிய 'த' கெட்டு ஓடா என நின்று எதிர்மறைப்பொருள் உணர்த்தி வருதலின் அஃது **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்** எனப்படும்.

கண்டு என்பது உடன்பாட்டு வினையெச்சம். காணது என்பது எதிர்மறை வினையெச்சம். காண என்பது ஈற்றெழுத்தாகிய 'து' கெட்டு எதிர்மறைப் பொருள் உணர்த்துதலின் அஃது **ஈறுகெட்ட எதிர் மறை வினையெச்சம்** எனப்படும்.

எடுத்துக்காட்டு

மேயாத பசு	மேயாப் பசு	பெயரெச்சம்
பேசாத நா	பேசா நா	
வராது நின்ருன்	வாரா நின்ருன்	வினையெச்சம்
பெய்யாது கெடுக்கும்	பெய்யாக் கெடுக்கும்	

(**குறிப்பு:** ஈறுகெட்ட எதிர் மறை வினையெச்சங்களாகிய வாரா, பெய்யா என்பன வந்து, பெய்து என உடன்பாட்டுப் பொருளில் வந்தால் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம் எனப்படும். ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சத்திற்கும் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சத்திற்கும் உள்ள இவ்வேறுபாட்டை உணர்க.)

இலக்கணம்: தொழில் நிகழ்ச்சியை உணர்த்திவரும் வினைச்சொல் உடன்பாட்டுவினை என்றும், தொழில் நிகழாமையை உணர்த்தும் வினை எதிர் மறை வினையென்றும் கூறப்பெறும்.

வினாக்கள்

1. வினைச்சொல்லின் இலக்கணம் யாது?

2. தெரிநிலை, குறிப்பு வினைகள் எவ்வாறு வரும்? எடுத்துக் காட்டுக்கள் தருக.

3. வினைமுற்றின் இலக்கணம் யாது?

4. வினைமுற்று மொத்தம் எத்தனை ? எவ்வாறு?

5. ஐம்பால் வினைமுற்றுக்களையும் அவற்றின் விகுதிகளையும் விளக்குக.

6. தன்மை, முன்னிலை வினைமுற்றுக்களின் விகுதிகளைக் கூறி எடுத்துக் காட்டுக்கள் தருக.

7. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று, உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்று இவற்றை எடுத்துக் காட்டுக்கள் தந்து விளக்குக.

8. ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று இவற்றை விளக்கி, இவற்றுக்குள்ள வேறுபாடுகளையும் கூறுக.

9. பெயரெச்ச, வினையெச்சங்களின் இலக்கணம் கூறுக.

10. தெரிநிலை, குறிப்புப் பெயரெச்சங்களையும் வினையெச்சங்களையும் விளக்குக.

11. வினையெச்ச வாய்பாடுகள் யாவை?

12. உடன்பாட்டு வினை, எதிர்மறை வினைகளை எடுத்துக் காட்டு தந்து விளக்குக.

13. ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம், ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம், செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்—இவற்றை விளக்கி எடுத்துக் காட்டுக்கள் தருக.

பயிற்சி 3

1\. கீழ்க்கண்ட வினைச்சொற்களில் உள்ள தெரிநிலை வினைகள் யாவை? குறிப்பு வினைகள் யாவை?

செய்ய, பைய, நன்று, உண்டான், எடுத்த, அன்றி, நல்ல, உற்று, மேய்வன, இல்லை, அரிது.

2\. பின்வருவன எவற்றினடியாகப் பிறந்த குறிப்பு வினை என எழுதுக.

நல்லன், நடையன், வேனிலான், தாமரையாள், மார்பன், இனியவர், அடியேன், நாடன்.

3\. அடியில் தரப்பட்ட வினைப் பகுதிகளைக் கொண்டு வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் ஆகியவைகளை அமைத்து எழுதுக.

கொள், செல், பருகு, வா, பெறு, கா, பொருவெறு, ஈ, தா, நாடு.

4\. கீழ்க்கண்ட வினைமுற்றுக்கள் எவ்வகையைச் சார்ந்தன எனக் கூறுக. அவற்றின் விகுதிகளையும் குறிப்பிடுக.

பறந்தன, கூறுப, வருவல், உண்பாய், செய்தனன், கூவிற்று, காண்பாம், உண்கும், சேறும், வருதி, வருக, செல், வம்மின், தொடுத்தாள், கற்றனர், தந்தீர்.

5\. பின்வரும் பெயரெச்ச வினையெச்சங்கள் எவ்வாய்பாட்டைச் சார்ந்தன எனக்கூறுக.

எழுதிய, காண்குபு, கூறி, தேடிய, காணிய, ஓடும், எழுத, கண்டு, உண்ணின், காண்பாள், செல்வான், உண்பாக்கு, வந்தால், கூறுங்கால்.

6\. கீழ்க்கண்ட உடன்பாட்டு வினைகளை எதிர்மறை வினைகளாக மாற்றி எழுதுக.

வந்தார், நிற்கும், ஓடுவாள், வருந்துகிறான், கொடுக்கும், அழிந்தன, முளைத்த, எண்ணுதிர், பாடி, நின்று, உண்க, கண்ட, எழுதுமின்.

7. பொதுவினைகள்

(அ) இருதிணைப் பொதுவினை

நான் வந்தேன்.
நீ சென்றாய்.

இத் தொடர்களைக் கவனியுங்கள். முதல் தொடரில் வந்தேன் என்பது தன்மை ஒருமை வினைமுற்றாகும். நான் வந்தேன் என்று உயர்திணையில் ஒருவனும் கூறலாம். அஃறிணையில் ஒன்றும் கூறலாம். ஆதலால் அவ்வினைமுற்று உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாய் வரும் என்பது விளங்குகிறது.

இங்ஙனமே சென்றாய் என்னும் முன்னிலை ஒருமை வினை முற்றும் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாய் வருகிறது. இத்தகைய வினைச்சொற்கள் **பொது வினைகள்** எனப்படும்,

தன்மை வினைமுற்றுக்கள், முன்னிலை வினை முற்றுக்கள், வியங்கோள் வினைமுற்றுக்கள், வேறு, இல்லை, உண்டு என்னும் குறிப்பு வினை முற்றுக்கள்,பெயரெச்ச வினையெச்சங்கள் ஆகியவை உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாக வரக் கூடிய வினைச்சொற்களாம்.

எடுத்துக்காட்டுக்கள் :

1. யான் உண்டேன் — உயர்திணை
   யான் மேய்ந்தேன் — அஃறிணை
   யாம் உண்டோம் — உயர்திணை
   யாம் மேய்ந்தோம் — அஃறிணை
   } தன்மை

2. நீ உண்டாய் — உயர்திணை
   நீ மேய்ந்தாய் — அஃறிணை
   நீங்கள் உண்டீர்கள் — உயர்திணை
   நீங்கள் மேய்ந்தீர்கள் — அஃறிணை
   } முன்னிலை

3.	படித்த மாணவன் — உயர்திணை படித்த பாடம் — அஃறிணை	}	பெயரெச்சம்
4.	வந்து சென்றான் — உயர்திணை வந்து சென்றது — அஃறிணை	}	வினையெச்சம்

[குறிப்பு: தன்மை முன்னிலை வினை முற்றுக்கள் இரு திணைக்கும் பொதுவாம் எனவே தன்மை, முன்னிலை ஒருமை வினைமுற்றுக்கள் உயர்திணை ஆண்பால், பெண்பால், அஃறிணை ஒன்றன்பால் ஆகியவற்றுக்குப் பொதுவாக வரும் எனவும், தன்மை, முன்னிலைப் பன்மை முற்றுக்கள் உயர்திணைப் பலர்பால், அஃறிணைப் பலவின்பால் ஆகிய வற்றுக்குப் பொதுவாக வரும் எனவும் அறிக.]

வியங்கோள் முதலியவற்றைப் பின்னர்க் காண்க.

இலக்கணம்: தன்மை, முன்னிலை வினைமுற்றுக் களும், வியங்கோள் வினை முற்றும், வேறு, இல்லை, உண்டு என்னும் குறிப்பு வினைமுற்றுக்களும், பெயரெச்ச வினையெச் சங்களும் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாக வரு தலின் இருதிணைப் பொது வினைகளாம்.

நன்னூல்:

தன்மை முன்னிலை வியங்கோள் வேறில்லை
உண்டீ ரெச்சம் இருதிணைப் பொதுவினை.

(அ) இருதிணை, ஐம்பால் மூவிடங்கட்குப் பொதுவாக வரும் வினைமுற்றுக்கள்

(i) வியங்கோள் வினைமுற்று

அவன் வாழ்க.	அது வாழ்க.
நான் வாழ்க.	நீ வாழ்க.

இவற்றைக் கவனியுங்கள். வாழ்க என்பது 'க' என் னும் விகுதி பெற்ற வியங்கோள் வினைமுற்றாகும். அது அவன் வாழ்க, அது வாழ்க என உயர்திணை அஃறிணைகட்

கும், நான் வாழ்க, நீ வாழ்க, அவன் வாழ்க எனத் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்கட்கும் பொதுவாய் வந்துள்ளது.

இங்ஙனமே அவன் வாழ்க, அவள் வாழ்க, அவர் வாழ்க, அது வாழ்க, அவை வாழ்க என ஐந்து பால்கட்கும் பொதுவாக வரும்.

எனவே க, இய, இயர் என்னும் விகுதி பெற்ற வியங்கோள் வினைமுற்றுக்கள் இருதிணை, ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாக வரும் என அறிக.

எடுத்துக்காட்டுக்கள் :

நான் உண்க, நாம் உண்க — தன்மை

நீ உண்க, நீவிர் உண்க — முன்னிலை

அவன் உண்க, அவள் உண்க
அவர் உண்க, அது உண்க,
அவை உண்க } படர்க்கை

அவன் உண்க, அது உண்க — இருதிணை

இலக்கணம் : க, இய, இயர் என்னும் விகுதி பெற்ற வியங்கோள் வினை முற்றுக்கள் இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்குப் பொதுவாக வரும்.

நன்னூல் :

கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலும் இடம்பால் எங்கு மென்ப.

(ii) வேறு, இல்லை, உண்டு என்னும் வினைமுற்றுக்கள்

நான் வேறு. நீ வேறு.

அவன் வேறு. அது வேறு.

இத்தொடர்களில் வினைமுற்றுக்கள் எவை? ஒவ்வொரு தொடரிலும் வேறு என்பது வினைமுற்றாக அமைந்துள்ளது.

அது தொழிலையும் காலத்தையும் வெளிப்படையாக உணர்த்தாமையால் குறிப்பு வினைமுற்றாகும்.

வேறு என்னும் வினைமுற்று நான் வேறு, நீ வேறு, அவன் வேறு என மூவிடங்கட்கும், அவன் வேறு, அது வேறு என இருதிணைகட்கும் அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு, அது வேறு, அவை வேறு என ஐம்பால்களுக்கும் பொதுவாய் வருகின்றது.

இங்ஙனமே இல்லை, உண்டு என்னும் குறிப்பு வினை முற்றுக்களும் இருதிணை, ஐம்பால் மூவிடங்களுக்குப் பொதுவாக வரும். எனவே வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்று குறிப்பு வினை முற்றுக்களும் பொது வினைகளாம்.

இலக்கணம் : வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்று குறிப்பு வினைமுற்றுக்களும் இருதிணை, ஐம்பால் மூவிடங்கட்குப் பொதுவாய் வரும்.

நன்னூல் :

வேறு இல்லை உண்டு ஐம்பால் மூவிடத்தன.

(iii) யார் என்னும் வினைமுற்று

அவன் யார்?
அவள் யார்?
அவர் யார்?

இத்தொடர்களில் யார் என்பது வினாப் பொருளைத் தரும் வினைச் சொல்லாகும். இது தொழிலையும் காலத்தையும் உணர்த்தாமையால் குறிப்பு வினை முற்றாகும். இக்குறிப்பு வினைமுற்று உயர்திணையில் ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய மூன்று பால்கட்கும் பொதுவாக வந்துள்ளது. ஆகவே இதுவும் பொது வினையாகும்.

(**குறிப்பு :** யார் என்னும் வினாவினைக் குறிப்பு முற்று உயர்திணைப் படர்க்கை முப்பால்கட்குப் பொதுவாக வரும்.

என்பதே விதி ஆயினும் நான் யார், நீ யார், நாம் யார், நீர் யார் எனத் தன்மை முன்னிலைகளிலும், 'என் உள்ளம் யார்?' என அஃறிணையிலும் வருதலும் வழக்கமாக உள்ளது. மற்றும் 'யார்' என்பது 'ஆர்' என மருவியும் வழங்குகிறது. 'நான் ஆர் என் உள்ளம் ஆர்' என வருதல் காண்க.)

இலக்கணம்: யார் என்னும் வினா வினைக் குறிப்பு முற்று உயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய மூன்று பால்கட்கும் பொதுவாய் வரும்.

நன்னூல் :

யார் என் வினாவினைக் குறிப்புஉயர் முப்பால்.

(iv) 'எவன்' என்னும் வினைமுற்று

அஃது எவன்? அவை எவன்?

இத்தொடர்களில் எவன் என்பது வினாப்பொருளைத் தரும் வினைச்சொல் ஆகும். இதுவும் தொழிலையும் காலத்தையும் வெளிப்படையாக உணர்த்தாமையால் குறிப்பு வினைமுற்றாகும். இஃது அஃறிணையில் ஒன்றன் பாலுக்கும் பலவின் பாலுக்கும் பொதுவாக வந்துள்ளமையால் இது பொதுவினையாகும்.

எடுத்துக்காட்டு

பசு எவன்? பசுக்கள் எவன்?

[குறிப்பு : 'எவன்' என்னும் இக்குறிப்பு முற்று 'என்' என்று திரிந்தும், பிறகு அது என்னை, என்ன, என்னே, என்னோ எனப் பலவாறு விகாரப்பட்டும் வருதல் உண்டு.]

(எ-டு) கற்றதனால் ஆய பயன் என்?
அதன் பொருள் என்னை ?
உன் கருத்து என்னே ?
அவள் எண்ணம் என்னோ ?

இலக்கணம்: எவன் என்னும் வினவினைக் குறிப்பு முற்று அஃறிணையில் ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய இருபால்கட்கும் பொதுவாய் வரும்.

நன்னூல் :

எவன்என் வினவினைக் குறிப்புஇழி இருபால்.

(V) செய்யும் என்னும் வினைமுற்று

அவன் உண்ணும். அவள் உண்ணும்.
அது உண்ணும். அவை உண்ணும்.

இத்தொடர்களைக் கவனியுங்கள். இவற்றில் உண்ணும் என்பது வினைமுற்று. இது 'செய்யும்' என்பது போல 'உம்' என்னும் விகுதி கொண்டு முடிந்திருத்தலின் செய்யும் என்னும் வாய்பாட்டு வினை முற்றாகும்.

இவ்வினைமுற்று உயர்திணை ஆண்பால், பெண்பால், அஃறிணை ஒன்றன்பால், பலவின்பால் ஆகியவற்றிற்குப் பொதுவாய் வந்துள்ளது. ஆதலின் இதுவும் பொதுவினையாம். செய்யும் என்னும் வினைமுற்று தன்மை, முன்னிலைகளிலும், படர்க்கைப் பலர்பாலிலும் வராது. ஏனைப் படர்க்கை ஆண், பெண், ஒன்று, பல என்னும் நான்கு பால்களுக்கும் பொதுவாய் வரும்.

இலக்கணம் : 'செய்யும்' என்பதுபோல 'உம்' என்னும் விகுதி பெற்று எதிர்காலம் உணர்த்திவரும் செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று படர்க்கைப் பலர்பால், தன்மை, முன்னிலைகளில் வராது. ஏனைய படர்க்கை ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய நான்கு பால்கட்கும் பொதுவாக வரும்.

நன்னூல் :

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே.

8. சினைவினை முதல்வினை

கண்ணன் விழுந்தான்.

கண்ணன் கால் ஒடிந்தது.

இத்தொடர்களைக் கவனியுங்கள். இவற்றுள் விழுந்தான் என்னும் வினைச்சொல் கண்ணன் தொழிலை உணர்த்துவதால் முதலின் வினையாம். ஒடிந்தது என்பது காலின் தொழிலை உணர்த்துவதால் சினையின் (உறுப்பின்) வினை ஆகும். (முதல்—முழுப்பொருள். சினை—அதன் ஒரு பாகம், உறுப்பு.)

கண்ணன் இடறி விழுந்தான்.

கண்ணன் கால் ஒடிந்து விழுந்தது.

கண்ணன் கால் ஒடிந்து விழுந்தான்.

இத்தொடர்களைக் கவனியுங்கள். இடறி என்பது கண்ணனாகிய முதற் பொருளின் தொழிலைக் குறிக்கும் வினையெச்சமாகும். அது விழுந்தான் என்னும் வினை முற்றைக் கொண்டு முடிகிறது. விழுந்தான் என்பதும் கண்ணனாகிய முதலின் வினையே. எனவே முதல் வினை வினையெச்சம், முதலின் வினையையே கொண்டு முடிந்தது.

இரண்டாம் வாக்கியத்தில் ஒடிந்து என்னும் வினையெச்சம் காலாகிய சினையின் வினை. அது விழுந்தது எனச் சினையின் வினையையே கொண்டு முடிந்தது.

மூன்றும் வாக்கியத்தில் ஒடிந்து என்பது காலாகிய சினையின் வினையாயினும் அது விழுந்தான் என முதலின் வினையைக் கொண்டு முடிந்துள்ளது.

முதலின்வினை, முதல்வினையைக் கொண்டு முடிதலும் சினையின் வினை, சினைவினையைக் கொண்டு முடிதலுமே விதியாம். சினைவினை விதிப்படி தன் வினையைக் கொண்டு

முடிவதன்றி, முதலின் வினையைக் கொண்டு முடிவதும் உண்டு என அறிக.

இலக்கணம் : முதல், சினை என்பவற்றின் தொழில்களைக் குறிக்கும் வினையெச்சங்கள் அவ்வவற்றின் வினைகளைக் கொண்டே முடியும். சினையின் தொழிலைக் குறிக்கும் வினையெச்சம் முதலின் தொழிலைக் குறிக்கும் வினையைக் கொண்டு முடிவதும் உண்டு.

நன்னூல் :

சினைவினை சினையொடும் முதலொடும் செறியும்.

9. காலம் காட்டும் உறுப்புக்கள்

(அ) காலம் காட்டும் இடைநிலைகள்

செங்குட்டுவன் பாடம் படித்தான்.
மாதவி மாலை தொடுக்கிறாள்.
மாணவர்கள் நாளை பேசுவர்.

இத் தொடர்களைக் கவனியுங்கள். இவற்றுள் படித்தான், தொடுக்கிறாள், பேசுவர் என்பன வினை முற்றுக்கள்.

படித்தான் என்பது தொழில் நிகழ்ந்து விட்டதை உணர்த்துகிறது. எனவே அஃது இறந்த கால வினை முற்றாகும். அச்சொல்லில் இறந்த காலம் உணர்த்தும் உறுப்பு யாது? படி + த் + த் + ஆன் என்பதில் 'த்' என்னும் இடைநிலையே இறந்த காலம் உணர்த்துகிறது. **த், ட், ற், இன்** என்னும் இடைநிலைகள் இங்ஙனம் இறந்தகாலம் உணர்த்தி வரும். ஆதலால் அவை **இறந்தகால இடைநிலைகள்** எனப்படும்.

தொடுக்கிறாள் என்பது தொழில் நிகழ்ந்து கொண்டிருப்பதை உணர்த்துகின்றமையால் நிகழ்கால வினைமுற்றாகும். தொடு+க்+**கிறு**+ஆள் என்பதில் 'கிறு' என்னும் இடைநிலையே நிகழ்காலம் உணர்த்துகிறது. **கிறு, கின்று, ஆநின்று** என்னும் இடைநிலைகள் நிகழ்காலம் உணர்த்தி வரும். ஆதலால் அவை **நிகழ்கால இடைநிலைகள்** எனப்படும்.

பேசுவர் என்பது எதிர்கால வினைமுற்றாகும். பேசு+**வ்**+அர் என்பதில் 'வ்' என்னும் இடைநிலையே எதிர்காலம் உணர்த்துகிறது. **ப், வ்** என்னும் இடைநிலைகள் எதிர்காலம் உணர்த்தி வரும். ஆதலால் அவை **எதிர்கால இடைநிலைகள்** எனப்படும்.

எடுத்துக்காட்டு :

செய்தான்	(செய்+த்+ஆன்)	இறந்த காலம்
உண்டாள்	(உண்+ட்+ஆள்)	
கற்றார்	(கல்+ற்+ஆர்)	
பாடினார்	(பாடு+இன்+ஆர்	
படிக்கிறான்	(படி+க்+கிறு+ஆன்)	நிகழ் காலம்
உணர்கின்றாள்	(உணர்+கின்று+ஆள்)	
செய்யாநின்றார்	(செய்+ஆநின்று+ஆர்)	
காண்பான்	(காண்+ப்+ஆன்)	எதிர் காலம்
எழுதுவார்	(எழுது+வ்+ஆர்)	

(**குறிப்பு :** 'இன்' என்னும் இடைநிலை, ஓடினான் (ஓடு+**இன்**+ஆன்) என முழுமையாக நின்றும், ஓடிய (ஓடு+**இ(ன்)**+ய்+அ) என 'ன்' கெட்டு நின்றும், போன (போ+(**இ**)ன்+அ) என 'இ' கெட்டு நின்றும் இறந்த காலம் உணர்த்தி வரும்.

நாடுகேன், செய்கேன் என '**க்**' என்னும் வேறு இடைநிலை எதிர்காலம் உணர்த்தியும் வரும். 'போயது' என '**ய்**' என்னும் இடைநிலை இறந்த காலம் உணர்த்தி வருவதும் என்மர் என'**ம்**' என்னும் இடைநிலையும், என்மனார் என

'மன்' என்னும் இடைநிலையும் எதிர் காலம் உணர்த்தி வருவதும், உண்ணாவிருந்தான், உண்ணா கிடந்தான் என **ஆவிருந்து, ஆகிடந்து** என்னும் இடைநிலைகள் நிகழ் காலம்உணர்த்தி வருவதும் உண்டு.)

இலக்கணம் : வினைச் சொற்களில் காலம் காட்டும் உறுப்பு இடைநிலையாகும். த், ட், ற், இன் என்னும் நான்கு இடைநிலைகள் இறந்த காலம் உணர்த்தும். கிறு, கின்று, ஆநின்று என்னும் மூன்று இடைநிலைகள் நிகழ்காலம் உணர்த்தும். ப், வ் என்னும் இரண்டு இடைநிலைகள் எதிர்காலம் உணர்த்தும்.

நன்னூல் :

> தடற வொற் றின்னே ஐம்பால் மூவிடத்து
> இறந்த காலம் தருந்தொழில் இடைநிலை.
>
> ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
> ஐம்பால் நிகழ்பொழு தறைவினை இடைநிலை.
>
> பவ்வு மூவிடத் தைம்பால் எதிர்பொழுது
> இசைவினை இடைநிலை யாமிவை சிலவில.

(ஆ) காலம் காட்டும் பகுதிகள்

புக்கான் தொட்டான் பெற்றான்

இவற்றைக் கவனியுங்கள். புக்கான் என்பது புகுந்தான் என இறந்த காலம் உணர்த்தும் வினை முற்றாகும். அது புகு+ஆன் என்னும் பகுதி விகுதிகளைப் பெற்றுள்ளது. காலம் காட்டும் இடைநிலை இச் சொல்லில் இல்லை. எனினும் புக்கான் என்பது இறந்த காலத்தை உணர்த்துகின்றதன்றோ? அதனைத் தெரிவிக்கும் உறுப்பு யாது?

'புகு' என்ற பகுதியே 'புக்கு' என ஒற்று இரட்டித்து இறந்த காலத்தை உணர்த்துகிறது.

இங்ஙனமே தொட்டான் என்பதில் தொடு என்னும் பகுதி தொட்டு என ஒற்று இரட்டித்து இறந்த காலம் உணர்த்துகிறது. பெற்ருன் என்பதில் பெறு என்னும் பகுதி பெற்று என ஒற்று இரட்டித்து இறந்த காலம் உணர்த்துகிறது.

இவ்வாறு கு, டு, று என முடியும் வினைப் பகுதிகள் சில ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டி வருதலும் உண்டு என அறிக.

இலக்கணம் : வினைச் சொற்களில் இடைநிலை காலம் காட்டுவதேயன்றிச் சில பகுதிகள் காலம் காட்டுவதும் உண்டு. கு, டு, று என முடியும் சில வினைப் பகுதிகள் ஒற்று இரட்டித்து இறந்த காலம் உணர்த்தி வரும்.

(இ) காலம் காட்டும் விகுதிகள்

நான் உண்டு. நாம் நடக்கும்.

இத் தொடர்களில் வினைச் சொற்களைக் கவனியுங்கள். நான் உண்டு என்பது நான் உண்டேன் எனப் பொருள் தரும் தன்மை ஒருமை வினைமுற்ருகும். 'உண்' என்பது பகுதி. 'டு' என்பது விகுதி. இவ் வினைமுற்று இறந்த காலத்தை உணர்த்துகிறது அன்ருே? இச்சொல்லில் காலம் காட்டும் இடைநிலை இல்லை. அங்ஙனமாயின் காலம் காட்டுவது எது? 'டு' என்னும் விகுதியே இறந்த காலத்தை உணர்த்துகிறது.

இங்ஙனமே நடக்கும் (நட+க்+கும்) என்னும் தன்மைப் பன்மை வினைமுற்றில் 'கும்' என்ற விகுதியே எதிர்காலத்தை உணர்த்துகிறது.

எனவே வினைச்சொல்லில் இடைநிலைகளே அல்லாமல் விகுதிகளும் காலம் காட்டும் என அறிக. பின்வரும்

எடுத்துக்காட்டுக்களில் விகுதிகள் காலம் காட்டி வருதலை அறிக.

எடுத்துக்காட்டுக்கள் :

1. நான் சென்று (நான் சென்றேன்)
   நாம் சென்றும் (நாம் சென்றோம்)
   நான் சேறு (நான் செல்வேன்)
   நாம் சேறும் (நாம் செல்வோம்)

இவ்வாறு று, றும் என்னும் தன்மை ஒருமை, பன்மை விகுதிகள் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் உணர்த்தி வரும்.

2. நான் வந்து (நான் வந்தேன்)
   நாம் வந்தும் (நாம் வந்தோம்)
   நான் வருது (நான் வருவேன்)
   நாம் வருதும் (நாம் வருவோம்)

இங்ஙனம் து, தும் என்னும் தன்மை ஒருமை, பன்மை விகுதிகள் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் அறிவிக்கும்.

3. நான் உண்டு (நான் உண்டேன்)
   நாம் உண்டும் (நாம் உண்டோம்)

இங்ஙனம் டு, டும் என்னும் தன்மை ஒருமை, பன்மை விகுதிகள் இறந்த காலத்தைக் காட்டும்.

4. நான் உண்கு (நான் உண்பேன்)
   நாம் உண்கும் (நாம் உண்போம்)

இங்ஙனம் கு, கும் என்ற தன்மை ஒருமை, பன்மை விகுதிகள் எதிர்காலத்தைக் காட்டும்.

5. நீவிர் கூறுமின், நீவிர் கூறுதிர்.
   நீவிர் கூறீர், நீவிர் கூறும்

இங்ஙனம் மின், இர், ஈர், உம் என்னும் ஏவற் பன்மை விகுதிகள் எதிர்காலத்தை உணர்த்தும்.

6. நான் வாழ்க, நீ வாழிய, அவன் வாழியர்

இங்ஙனம் க, இய, இயர் என்னும் வியங்கோள் விகுதிகள் எதிர்காலத்தை அறிவிக்கும்.

7. நீ சேறி (நீ செல்வாய்)
நீ கூறுதி (நீ கூறுவாய்)

இங்ஙனம் 'இ' என்னும் முன்னிலை ஒருமைவிகுதி எதிர் காலத்தை உணர்த்தும்.

8. அவர் உண்மார் (அவர் உண்பார்)
தொல்காப்பியர் கூறுப (தொல்காப்பியர் கூறினார்)
அவர் உண்ப (அவர் உண்பார்)

இங்ஙனம் 'மார்' என்னும் பலர்பால் விகுதி எதிர் காலத்தையும், 'ப' என்னும் பலர்பால் விகுதி இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் உணர்த்தும்.

9. ஆறு ஓடும் (ஆறு ஓடுகிறது)
மலை நிற்கும் (மலை நிற்கிறது)
அவன் உண்ணும் (அவன் உண்பான்)
அவள் கூறும் (அவள் கூறுவாள்)

இங்ஙனம் செய்யும் என்னும் வாய்பாட்டில் வரும் 'உம்' விகுதி நிகழ் காலத்தையும் எதிர்காலத்தையும் உணர்த்தும்.

10. அவை உண்ணா, பசுக்கள் மேயா.

உண்ணா, மேயா என்பன எதிர்மறைவினை முற்றுக்கள். அவை முன்பும் உண்ணா, இப்போதும் உண்ணா, இனியும் உண்ணா என முக்காலமும் உணர்த்தும். மேயா என்பதும் இவ்வாறே வரும். எனவே 'ஆ' என்ற எதிர்மறை விகுதி முக்காலமும் உணர்த்தும்.

(குறிப்பு: காண்டும் (காண்போம்) என 'டும்' என்ற விகுதி எதிர்காலம் உணர்த்தியும், வருதி (வருகின்றாய்) என 'இ' விகுதி நிகழ்காலம் உணர்த்தியும் வருவதும் உண்டு.)

இலக்கணம் : வினைச்சொற்களில் இடைநிலை காலம் காட்டுவதோடன்றி று, றும் என்னும் விகுதிகள் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும், து, தும் என்னும் விகுதிகள் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும், டு, டும் என்னும் விகுதிகள் இறந்த காலத்தையும், கு, கும் என்னும் விகுதிகள் எதிர்காலத்தையும், மின், இர், ஈர், உம், க, இய, இயர் இ என்னும் விகுதிகள் எதிர்காலத்தையும், 'ப' என்னும் விகுதி இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும், செய்யும் என்னும் வாய்பாட்டு 'உம்' விகுதி நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும், எதிர்மறை 'ஆ' விகுதி முக்காலங்களையும் உணர்த்திவரும். இவை காலம் காட்டும் விகுதிகளாம்.

நன்னூல் :

றவ்வோ டுகர உம்மைநிகழ் பல்லவும்,
தவ்வோ டிறப்பும் எதிர்வும், டவ்வொடு
கழிவும், கவ்வோ டெதிர்வும், மின்ஏவல்
வியங்கோள் இம்மார் எதிர்வும், பாந்தம்
செலவொடு வரவும், செய்யுநிகழ் பெதிர்வும்
எதிர்மறை மும்மையும் ஏற்கும் ஈங்கே.

வினாக்கள்

1. இருதிணைப் பொதுவினைகள் யாவை? எடுத்துக் காட்டுக்கள் தருக.
2. ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாக வரும் வினை முற்றுக்கள் யாவை? விளக்கி எடுத்துக்காட்டுக்கள் தருக.

3. வியங்கோள் வினைமுற்று, செய்யுமென்னும் வினை முற்று—இவை எவ்வாறு பொது வினைகளாம் விளக்குக.

4. சினைவினை, முதல்வினைகளை விளக்கி அவை எவ்வாறு முடியும் என்பதையும் குறிப்பிடுக.

5. காலம் காட்டும் இடைநிலைகள் யாவை? எடுத்துக் காட்டுக்கள் தருக.

6. பகுதி காலம் காட்டும் முறையை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

7. விகுதி காலம் காட்டுவதனைச் சில எடுத்துக் காட்டுக்களின் மூலம் புலப்படுத்துக.

பயிற்சி 4

1. கீழ்க் கண்ட வினைகள் பொது வினைகளாக வருதலை விளக்குக.

தருக, சென்றேன், கண்டாய், உண்ட, நடந்து வேறு, வந்தீர், நடந்தோம், உண்ணும்.

2. பின்வரும் வினைகளில் எவை சினைவினைகள்? எவை முதல் வினைகள்? வினையெச்சங்கள் எவ்வகை வினையைக் கொண்டு முடிந்தன?

(1) கந்தன் கால் ஒடிந்து விழுந்தான்.
(2) மரத்தின் கிளை முறிந்து சாய்ந்தது.
(3) வேலன் புத்தகத்தை எடுத்துப் படித்தான்.
(4) தாமரைப்பூ வாடி உதிர்ந்தது.

3. கீழே தரப்பட்டுள்ள வினைச்சொற்களில் உள்ள காலம் காட்டும் இடைநிலைகள் யாவை? அவை என்ன காலம் காட்டுகின்றன?

செய்வாம், எழுதினீர், உண்ட, கேட்டு, போன, தருகிறுள், காண்பான், வாராநின்றுன், பாடினுள், ஓடிய, கற்றுன், நடக்கின்றன.

4. கீழே தரப்பட்டுள்ள பகுதிகள் இடைநிலை புணராமல் எவ்வாறு காலம் காட்டும் என்பதை விளக்குக.

நகு, பகு, செறு, பெறு, தொடு, நடு, ஓடு, படு, விடு.

5. அடியில் தரப்பட்டுள்ள எடுத்துக்காட்டு ஒவ்வொன்றிலும் உள்ள காலம் காட்டும் விகுதியை எடுத்து எழுதுக. அவை ஒவ்வொன்றும் எக்காலம் காட்டுகிறது?

எடுத்தி, சொன்மார், வருதும், கேட்டும், ஆழ்க, காண்ப, ஓடா.

10. இடைச்சொல்

(அ) இடைச்சொல் இலக்கணம்

கபிலர் பாரியைப் புகழ்ந்து பாடினர்.

புலிபோலப் பாயும் வீரன்.

இத்தொடர்களைக் கவனியுங்கள். இவற்றுள் கபிலர் பாரியைப் புகழ்ந்து பாடினர் என்பதில் கபிலர், பாரி என்பன பெயர்ச் சொற்கள். புகழ்ந்து, பாடினர் என்பன வினைச் சொற்கள். பாரி+ஐ என்பதில் உள்ள 'ஐ' என்பது என்ன சொல்? அது பெயருமன்று; வினையுமன்று. பெயரை அடுத்து வந்து இரண்டாம் வேற்றுமைப்பொருள் உணர்த்தியமையால் **இடைச்சொல்** எனப்படும்.

புலிபோலப் பாயும் வீரன் என்பதில் 'போல' என்னும் சொல் பெயருமன்று; வினையுமன்று. பெயர்வினைகட்கு இடையில் வந்து ஒப்புமைப் பொருள் உணர்த்துவதால் அதுவும் இடைச்சொல் ஆகும்.

இங்ஙனம் பெயர் வினைகளைப்போலத் தனித்து வந்து பொருள் உணர்த்தாமல் அவற்றை அடுத்து இடையிலும் முன்னும் பின்னும் வந்து பொருள் உணர்த்தும் சொற்கள் இடைச் சொற்கள் எனப்படும்.

(1) வேற்றுமை உருபுகள், (2) வினைவிகுதிகள், (3) சாரியைகள், (4) உவம உருபுகள், (5) தமக்கெனப் பொருள் உடைய ஏ, ஓ, உம், கொல், மற்று என்பனபோன்ற சொற்கள், (6) இசை நிறைக்கும் பொருளில் வரும் சொற்கள், (7) அசை நிலையாக நிற்கும் சொற்கள், (8) குறிப்பால் பொருள் உணர்த்திவரும் சொற்கள், (9) அ, இ, உ என்பனபோன்ற சுட்டுப்பொருள் உணர்த்தும் சொற்கள், (10) எ, யா என்பனபோன்ற வினாப்பொருள் உணர்த்தும் சொற்கள் ஆகிய யாவும் இடைச்சொற்களாம்.

இவை தனித்து வராமல் பெயர் வினைகளை அடுத்து அவற்றினிடமாக வருதலாலும், பெயர் வினைகளும் ஆகாமல் அவற்றின் வேறும் ஆகாமல் இடை நிகர்த்தனவாய் இருத்தலாலும் இவை இடைச் சொற்கள் எனப்பட்டன.

எடுத்துக்காட்டு

1. முல்லைக்குத் தேரை வழங்கினான்-கு, ஐ
வேற்றுமை உருபுகள்
2. வளவன் வாகை சூடினான்–ஆன் வினைவிகுதி
3. மரத்தை வெட்டினான்–அத்து சாரியை
4. குயில்போலக் கூவினான்–போல உவம உருபு
5. செழியனே வென்றான்-ஏ தேற்றப்பொருள்
6. ஒஓ இவள் ஒருத்தி–ஒஓ இசை நிறை
7. இயம்புவன் எழுத்தே-ஏ அசைநிலை
8. பொருக்கென எழுந்தான்–பொருக்கென
விரைவுக் குறிப்பு
9. அச்சோலை, இவ்வீடு–அ, இ சுட்டு
10. எப்பொருள், யாங்ஙனம்–எ, யா வினா.

(குறிப்பு: மரத்தை என்பதில் 'அத்து' என்னும் சாரியையும் 'ஐ' என்னும் வேற்றுமை உருபும் இடைச்சொற்களாம். இங்ஙனம் பெயர்வினைகளை அடுத்து ஒன்றுக்கு மேற்பட்ட இடைச் சொற்கள் வருவதும் உண்டு.)

இலக்கணம்: வேற்றுமை உருபுகள், வினை உருபுகள், சாரியைகள், உவம உருபுகள், தத்தம் பொருள் உணர்த்துவன, இசை நிறைப்பன, அசைநிலைகள், குறிப்புப் பொருள் உணர்த்துவன என எட்டு வகைப்பட்டதாய்ப் பெயர் வினைகளைப் போலத் தனித்து வந்து பொருள் உணர்த்தாமல் அவற்றை அடுத்து முன்னும் பின்னும் ஒன்றும் பலவும் வந்து பொருள் உணர்த்தும் சொல் இடைச் சொல் எனப்படும்.

நன்னூல்:

வேற்றுமை வினைசாரியை ஒப்பு உருபுகள்
தத்தம் பொருள இசைநிறை அசைநிலை
குறிப்பென் எண் பகுதியின் தனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து
ஒன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்.

(ஆ) தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள்

இடைச் சொற்களுள் ஏ, உம், கொல் என்பனபோலத் தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்களும் உள்ளன. அவற்றுள் ஏ, ஓ, உம், தொல், மன், மற்று, என, என்று என்னும் இடைச்சொற்களைப்பற்றி முன் வகுப்புக்களில் படித்தீர்கள். மேலும் சில இடைச்சொற்களைப்பற்றி இவ்வகுப்பில் அறிந்து கொள்வீர்களாக.

(i) 'தில்' என்னும் இடைச்சொல்

அரிவையைப் பெறுகதில் லம்ம யானே

இத்தொடரில் தில் என்னும் இடைச்சொல் அரிவையை (பெண்ணை)ப் பெற வேண்டும் என்னும் விருப்பத்தை உணர்த்துகிறது.

இங்ஙனமே தில் என்னும் இடைச்சொல் விழைவு, காலம், ஒழியிசை ஆகிய பொருள்களை உணர்த்தி வரும்.

எடுத்துக்காட்டு

1. அரிவையைப் பெறுக தில்லம்ம யானே–விழைவு
2. பெற்றாங் கறிக தில்லம்ம யானே—பெற்ற காலத்தில் அறிக எனக் காலத்தை உணர்த்தலின் காலம்
3. வருகதில் லம்ம எஞ்சேரி சேர—வந்தால் இன்னது செய்வேன் என்னும் ஒழிந்த சொற்களை உணர்த்துதலால் ஒழியிசை

நன்னூல் :

விழைவே காலம் ஒழியிசை தில்லே

(ii) ஒடு, தெய்ய என்னும் இடைச்சொற்கள்

விதைக்குறு வட்டில் போதொடு பொதுள

இவ்வடி காலையில் விதையை எடுத்துச் சென்ற சிறிய கூடை மாலையில் முல்லையரும்புகள் நிறைய வந்தது எனப் பொருள் தருகின்றது. போது - முல்லையரும்புகள். ஒடு என்பது பொருள் இல்லாமல் பாட்டின் இசை நிறைக்க வந்தது. ஆதலால் அது இசை நிறைப் பொருளில் வந்த இடைச் சொல்லாகும்.

இங்ஙனமே '**தெய்ய**' என்னும் இடைச் சொல்லும் இசை நிறைப்பொருளில் வரும்.

எடுத்துக்காட்டு

சொல்லேன் தெய்ய நின்னொடும் பெயர்த்தே.

இது நின்னொடு மறுபடியும் கூறேன் எனப்பொருள் படும். தெய்ய என்பது பொருளின்றி இசை நிறைக்க வந்தது.

நன்னூல் :

ஒடுவும் தெய்யவும் இசை நிறை மொழியே.

(iii) அந்தில், ஆங்கு என்னும் இடைச்சொற்கள்

வருமே சேழியை அந்தில் கொழுநன் காணிய
ஆங்காங்கு ஆயினும் ஆக.

இவற்றில் வந்துள்ள அந்தில் ஆங்கு என்னும் இடைச் சொற்களைக் கவனியுங்கள். அவை அவ்விடம் என்ற பொருளைத் தருகின்றன. அவை அசை நிலைப் பொருளிலும் வரும்.

எடுத்துக்காட்டு

அந்திற் கழலினன் கச்சினன்—அந்தில்
என்பது பொருளின்றி நிற்றலின் அசைநிலை
ஆங்கு அத்திறன் அல்லயாம் கழற—ஆங்கு
என்பது பொருளின்றி நிற்றலின் அசைநிலை

நன்னூல் :

அந்தில்ஆங் கசைநிலை யிடப்பொரு ளவ்வே.

(iv) 'அம்ம' என்னும் இடைச்சொல்

அம்மவாழி தோழி!

இத்தொடரில் உள்ள 'அம்ம' என்ற சொல்லைக் கவனி' யுங்கள். அது தனக்கென ஒரு பொருள் இல்லாதது. ஆயினும் நான் ஒன்று சொல்வேன் கேள் என்னும் ஏவற் பொருள் தருகின்றது. அம்ம என்பது இடைச் சொல். அஃது உரையசை, கேண்மின் என்னும் பொருள்களில் வரும்.

எடுத்துக்காட்டு

அது மற்றம்ம-அம்ம என்பது தனக்கெனப் பொருள் இன்றிச் சொல்லுக்கு அழகாய் அசை நிலையாய் வருதலின் உரையசை.

அம்ம வாழி தோழி—கேண்மின் என்னும் பொருளில் வந்தது.

நன்னூல் :

அம்ம உரையசை கேண்மின் என்றாகும்.

(V) 'மா' என்னும் இடைச்சொல்

உப்பின்று புற்கை உண்கமா கொற்கை யோனே

இத்தொடர் கொற்கையோனே உப்பில்லாத கூழினை உண்க எனப்பொருள் தருகிறது. (புற்கை—கூழ்) மா என்பது இடைச்சொல். அது வியங்கோள் வினையை அடுத்து அசைநிலையாய் வந்துள்ளது.

இங்ஙனம் 'மா' என்னும் இடைச்சொல் வியங் கோளசை நிலையாக வருவதன்றி வேறுவினைகளை அடுத்தும் அசைநிலையாக வரும்.

எடுத்துக்காட்டு

மாயக் கடவுட் குயர்கமா வலனே-வியங்கோளை அடுத்து அசைநிலையாக வந்தது.

ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே—வேறுவினையை அடுத்து அசைநிலையாக வந்தது.

நன்னூல் :

மாவென் கிளவி வியங்கோள் அசைச்சொல்.

11. எல்லாவிடத்தும் வரும் அசைச்சொல்

கூறினேனரோ, கூறினீரரோ, கூறினனரோ
வந்தனென் மாதோ, வந்தனை மாதோ, வந்தனன் மாதோ

இத்தொடர்களில் உள்ள அரோ, மாது முதலிய சொற்கள் இடைச்சொற்களாம். இவை தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்கட்கும் உரியனவாய் அசை நிலை

யாய் வந்துள்ளன. இத்தகைய சொற்கள் எல்லாவிடத்தும் வரும் அசைச் சொற்கள் எனப்படும்.

இங்ஙனம் எல்லா இடத்தும் வரும் அசைச்சொற்களையும் அவற்றிற்குரிய எடுத்துக்காட்டுக்களையும் அறிந்து கொள்க.

எடுத்துக்காட்டு

யா—யா பன்னிருவர் மாணாக்கர்
கா—இவள் காண்டிகா
பிற—ஆயனையல்ல பிற
பிறக்கு—பிறக்கிதனுட் செல்லான் பெருந்தவப்பட்டான்
அரோ—நோதக விருங் குயிலாலு மரோ
போ—பிரியின் வாழாதென்போ
மாது—விளிந்தன்று மாதோ தெளிந்த வெங்கண்ணே
இகும்—காண்டிகு மல்லமோ கொண்க
சின்—தீங்காகியவால் என்றிசின்
குரை—அது பெறலருங் குரைத்தே
ஒரும்—அஞ்சுவ தோரும் அறனே.
போலும்—வடுவென்ற கண்ணாய் வருந்தினை போலும்
இருந்து—நனவென் றெழுந் திருந்தேன்
இட்டு—நெஞ்சம் பிளந்திட்டு
அன்று—சேவடி சேர்தும் அன்றே
ஆம்—பணியுமாம் என்றும் பெருமை.
தாம்—நீர் தாம் வந்தீர்
தான்—அவன் தான் எடுத்தான்
கின்று—வாழ்வான் ஆசைப்பட்டிருக்கின்றேன்
நின்று—துணையாய் நின்றான்

(குறிப்பு : ஆசைப்பட்டிருக்கிறேன் என்பது ஆசைப் பட்டேன் என இறந்த காலப் பொருளில் வந்தமையால் 'கிறு' என்பது நிகழ்கால இடைநிலையன்று, அசைநிலையாம்.

துணையாய் நின்றான் என்பதில் நின்றான் என்பது பொருள் தரவில்லை. துணையானான் என்பதே பொருள். ஆதலால் நின்று என்பது அசைநிலை.)

இலக்கணம் : யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும், சின், குரை, ஒரும், போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், தாம், தான், கின்று, நின்று ஆகிய இடைச் சொற்கள் இருபதும் எல்லாவிடத்தும் வரும் அசைச் சொற்களாம்.

நன்னூல் :

யாகா பிறபிறக்கு அரோபோ மாதுஇகும்
சின்குரை ஒரும் போலும் இருந்துஇட்டு
அன்றுஆம் தாம்தான் கின்றுநின்று அசைமொழி.

உரிச்சொல் (விரிவாக)

(அ) உரிச்சொல் இலக்கணம்

கடி மதில்

சால உழைத்தான்

இத் தொடர்களைக் கவனியுங்கள். இவற்றில் மதில் என்பது பெயர்ச் சொல். உழைத்தான் என்பது வினைச் சொல். கடி, சால என்பன என்ன சொற்கள்? அவை பெயரும் அல்ல; வினையும் அல்ல. கடி என்பது காவல் என்னும் பொருளை உடையதாய் மதில் என்னும் பெயர்ச் சொல்லை அடுத்து முன்னே வந்து மதிலின் சிறப்பை உணர்த்துகிறது.

அங்ஙனமே சால என்பது மிகுதி என்னும் பொருளை உடையதாய் உழைத்தான் என்னும் வினைச்சொல்லை அடுத்து முன்னே வந்து உழைப்பின் மிகுதியை உணர்த்துகிறது.

இங்ஙனம் பெயர் வினைகளைப் போலத் தனித்து வழங்காமல் அவற்றை அடுத்து அவற்றின் குணங்களை உணர்த்தி வரும் சொல் **உரிச்சொல்** எனப்படும்.

உரிச்சொற்கள் குணம், தொழில், இசை, குறிப்பு எனப் பல்வேறு வகைப்பட்ட பண்புகளையும் விளக்கும் இயல்பினவாய், ஒரு குணம் உணர்த்தும் பல சொற்களாயும் பல குணம் உணர்த்தும் ஒரு சொல்லாயும் வரும். பெயரை அடுத்து வரும் உரிச்சொல் **பெயர் உரிச் சொல்** எனப்படும். வினையை அடுத்து வரும் உரிச்சொல் **வினையுரிச் சொல்** எனப்படும்.

இவை செய்யுளுக்கே உரிமையுடையனவாய் வரும் சொற்களாதலினாலும், பெயர் வினைகளை அடுத்து அவற்றின் பண்பை உணர்த்தும் உரிமை பூண்ட சொற்களாதலினாலும் **உரிச்சொற்கள்** எனப்பெயர் பெற்றன.

எடுத்துக்காட்டு :

உறு பொருள்	—மிக்க பொருள்	பெயர்உரிச் சொற்கள்
நனி பேதை	—மிக்க பேதை	
கடி மலர்	—மணம் மிக்கமலர்	
கடி மிளகு	—காரமான மிளகு	

சாலப் பேசினான்	—மிகவும் பேசினான்	வினையுரிச் சொற்கள்
நனி தின்றான்	—மிகுதியாகத் தின்றான்	
கடி விடுதும்	—விரைவாக விடுதும்	

(**குறிப்பு :** உரிச்சொல் ஒரு குணம் உணர்த்தும் பல சொற்களாகவும், பல குணம் உணர்த்தும் ஒரு சொல்லாகவும் வரும். அவற்றைப் பின்னர்க் காண்க.)

இலக்கணம் : குணமும் தொழிலும் ஆகிய பல்வகைப் பண்புகளையும் உணர்த்தும் சொற்களாய்ப் பெயர் வினைகளை அடுத்து முன்வந்து பொருள் உணர்த்திச் செய்யுளுக்கே உரியனவாய் வழங்கும் சொற்கள் உரிச்சொற்கள் எனப்படும். அவை ஒரு குணம் உணர்த்தும் பல உரிச்

சொற்கள் எனவும், பல குணம் உணர்த்தும் ஓர் உரிச் சொல் எனவும் இருவகைப்படும்.

நன்னூல் :

பல்வகைப் பண்பும் பகர்பெயராகி
ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல்.

(ஆ) உரிச்சொற்களின் வகை

(1) ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்கள்

கழி பேருவகை சால மகிழ்ந்தான்

இத்தொடர்களில் **கழி**, சால என்பன உரிச்சொற்கள். **கழி** என்பது பேருவகை என்னும் பெயரை அடுத்து முன் வந்து, மிகப் பெரிய மகிழ்ச்சி எனப் பொருள் தருகிறது. சால என்பது மகிழ்ந்தான் என்னும் வினையை அடுத்து முன் வந்து, மிக மகிழ்ந்தான் என்று பொருள் தருகிறது. கழி, சால என்னும் உரிச்சொற்கள் இரண்டும் **மிகுதி** என்னும் ஒரே குணத்தை உணர்த்தி வந்துள்ளன.

இங்ஙனமே சால, உறு, தவ, நனி, கூர், கழி என்னும் உரிச்சொற்கள் மிகுதி என்னும் ஒரே குணத்தை உணர்த்தி வரும் சொற்களாதலின் அவை ஒரு குணம் உணர்த்தும் பல உரிச்சொற்கள் எனப்படும்.

எடுத்துக்காட்டு :

சாலக் கற்றான் நனி உவந்தான்
உறு புகழ் களி கூர் மனம்
தவச் சேய் நாட்டார் கழி பெருங் காதல்

இலக்கணம் : சால, உறு, தவ, நனி, கூர், கழி என்னும் ஆறும் மிகுதி என்னும் ஒரு குணம் உணர்த்தும் பல உரிச்சொற்களாம்.

நன்னூல் :

சால உறுதவ நனிகூர் கழி மிகல்

(2) பல குணம் உணர்த்தும் ஓர் உரிச்சொல்

கடி நகர் கடி நுனைப் பகழி

இத் தொடர்களில் கடி என்பது உரிச்சொல். கடிநகர் என்பதில் கடி என்பது காவல் என்னும் பொருளை உணர்த்துகிறது. கடிநுனைப் பகழி என்பதில் அது கூர்மை என்னும் பொருளை உணர்த்துகிறது. இவை மட்டும் அன்றிக் கடி என்னும் உரிச்சொல் விளக்கம், அச்சம் முதலியனவாக மற்றும் பல பொருள்களையும் தரும்.

இங்ஙனம் கடி என்னும் சொல் ஒன்றே பல குணங் களை உணர்த்தி வருதலின் அது பல குணம் உணர்த்தும் ஓர் உரிச்சொல் எனப்படும்.

எடுத்துக்காட்டு :

கடி அரண்	— காவல்	கடி காற்று	—மிகுதி
கடி வாள்	— கூர்மை	கடி மணம்	—புதுமை
கடி மலர்	— மணம்	கடி முரசு	—ஆர்த்தல்
கடி மார்பு	— விளக்கம்	கடி மது	—வரைவு
கடிப் பேய்	— அச்சம்	கடி வினை	—திருமணம்
கடி காவல்	— சிறப்பு	கடி மிளகு	—கரிப்பு
கடி விடுதும்	— விரைவு		

இலக்கணம் : கடி என்னும் உரிச்சொல் காவல், கூர்மை, மணம், விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல், வரைவு (விலக்குதல்) திருமணம், கரிப்பு என்னும் பல பொருள்களை உணர்த்தி வரும்.

நன்னூல் :

கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்கம் அச்சம் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்
வரைவே மன்றல் கரிப்பி னுகும்.

(இ) சில உரிச்சொற்கள்

(1) 'தட' என்னும் உரிச்சொல்

தடக்கை தட மார்பு

இத் தொடர்களில் 'தட' என்பது உரிச்சொல் ஆகும். பெரிய என்பது அதன் பொருள். இங்ஙனம் தட என்னும் உரிச்சொல் பெருமை என்னும் பொருள் தருவதோடு வளைவு என்னும் பொருளிலும் வரும்.

எடுத்துக்காட்டு :

தடங்கரை, தடந்தோள்—பெருமை
தட மருப்பு எருமை —வளைவு

(வளைந்த கொம்பினையுடைய எருமை என்பது பொருள்.)

(2) 'வை' என்னும் உரிச்சொல்

வை நுனைப் பகழி

இத் தொடரில் 'வை' என்பது உரிச்சொல். அது கூர்மை என்னும் பொருளில் வந்துள்ளது. கூர்மையான முனையை உடைய அம்பு என்பது இத் தொடரின் பொருளாம். எனவே வை என்னும் உரிச்சொல் கூர்மை என்னும் பொருளை உணர்த்தி வரும்.

(3) 'கெழு' என்னும் உரிச்சொல்

செங்கேழ் மென் கொடி

இத்தொடரில் கேழ் என்பது உரிச்சொல். கெழு என்னும் உரிச்சொல்லே கேழ் என நின்றது. செம்மை நிற முடைய மென்கொடி என்பது] இத்தொடரின் பொருள். கெழு என்னும் உரிச்சொல் நிறம் என்னும் பொருளை உணர்த்திவரும்.

எடுத்துக்காட்டு

மாக்கேழ் மடநல்லார்—மாந்தளிர் போன்ற நிற முடைய பெண்கள் என்பது பொருள்.

(4) 'மல்லல்' என்னும் உரிச்சொல்

மல்லல் மால்வரை

மல்லல் மாஞாலம்

இத்தொடர்களில் மல்லல் என்பது உரிச்சொல். வளம் பொருந்திய பெரிய உலகம், வளம் பொருந்திய பெரிய மலை என்பன இவற்றின் பொருள். மல்லல் என்னும் உரிச்சொல் வளம் என்ற பொருளை உணர்த்திவரும்.

(5) மழ, குழ என்னும் உரிச்சொற்கள்

மழகளிறு குழக்கன்று

இத்தொடர்களில் மழ, குழ என்பன உரிச்சொற்கள். இளமையான களிறு, இளமையான கன்று என்பன இத் தொடர்களின் பொருள்கள். எனவே மழ, குழ என்னும் உரிச்சொற்கள் இளமை என்னும் பொருளை உணர்த்தி வரும் என அறிக.

(6) நளி என்னும் உரிச்சொல்

நளிகடல் நளியிருள்

இத்தொடர்களில் நளி என்பது உரிச்சொல். பெரிய கடல், செறிந்த இருள் என்பன இத்தொடர்களின் பொருள்களாம். எனவே நளி என்னும் உரிச்சொல் பெருமை, செறிவு என்னும் பொருள்களை உணர்த்திவரும் என அறிக.

வினாக்கள்

1. இடைச் சொல்லின் இலக்கணம் யாது?
2. தில், அம்ம என்னும் இடைச் சொற்கள் எவ்வெப் பொருள்களை உணர்த்தி வரும்?
3. ஒடு, தெய்ய, அந்தில், ஆங்கு, மா என்னும் இடைச் சொற்களின் பொருள்கள் யாவை? எடுத்துக்காட்டுக்கள் தருக.

4. எல்லாவிடத்தும் வரும் சில அசைச் சொற்களைக் கூறி எடுத்துக்காட்டுக்கள் தருக.

5. உரிச் சொல்லின் இலக்கணம் யாது?

6. உரிச்சொல்லின் இருவகைகளை எடுத்துக்காட்டுக்கள் தந்து விளக்குக.

7. தட, வை, மல்லல், கெழு இவ்வுரிச்சொற்கள் எவ்வெப் பொருள்களில் வரும்?

பயிற்சி 5

1. கீழ்க்கண்ட தொடர்களில் உள்ள இடைச் சொற்களை எடுத்தெழுதி அவை எவ்வகையைச் சார்ந்தன என்பதைக் குறிப்பிடுக.

1. சாத்தன் வேலனையும் முருகனையும் அழைத்தான்.
2. அரசன் அவ்வீரனுக்குப் பரிசு வழங்கினன்.
3. இம்மனிதன் எவ்வூரினின்றும் வந்தான்.
4. மூத்தோர் சொற்களை மறுத்தலும் கூடுமோ?
5. விளிந்தன்று மாதோ
6. அஞ்சுவதோரு மறனே
7. அம்மவாழி தோழி
8. வருக தில்லம்ம

2. கீழே தரப்பட்டுள்ள தொடர்களில் உள்ள உரிச்சொற்களை எடுத்தெழுதுக. அவற்றின் பொருள்களையும் தருக.

1. நடந்து சால நொந்தீர்
2. கல்வியே உறுதுணையாகும்
3. கடிமணம் புரிந்து களிப் படைந்தீர்
4. நனிதின்ருல் நோயுறுவீர்
5. வை வாளில் தப்பிய மன்னன்
6. தடந்தோள் வாழி
7. மல்லற் பேரியாறு
8. நலங்கெழ் முறுவல்

III. பொது இலக்கணம்

1. வினா வகை

இப்பாடலுக்குப் பொருள் யாது?

அது பாம்போ கயிறோ?

இத்தொடர்கள் வினாப்பொருள் உணர்த்துகின்றமையால் வினாவாக்கியங்களாகும்.

'இப்பாடலுக்குப் பொருள் யாது?' என ஆசிரியர் மாணவனை நோக்கிக் கேட்கும் போது அவர் அப்பாடலின் பொருளை அறிந்து கொண்டே கேட்கிறார். ஆதலின் இவ் வினா **அறிவினா** எனப்படும்.

'இப் பாடலுக்குப் பொருள் யாது?' என மாணவன் ஆசிரியரைக் கேட்கும் போது அவன் அறியாமல் வினவுகிறான். ஆதலால் அஃது **அறியா வினா** எனப்படும்.

'அது பாம்போ கயிறோ?' என்ற வினா ஒன்றிலும் துணிவு கொள்ளாமல் ஐயுற்றுக் கேட்கும் வினாவாதலின் அஃது **ஐயவினா** எனப்படும்.

இங்ஙனம் அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொளல் வினா, கொடைவினா, ஏவல்வினா என வினா அறுவகைப் படும்.

எடுத்துக்காட்டு

1. ஆசிரியர் மாணவனை நோக்கி 'முல்லைக்குத் தேர் வழங்கியவன் யாவன்?' என வினவுதல் அறிவினா.

2. மாணவன் ஆசிரியரை நோக்கி 'மயிலுக்குப் போர்வை வழங்கியவன் யாவன்?' என வினவுதல் **அறியாவினா.**

3. அவ்வுருவம் குற்றியோ மகனோ?—ஒன்றிலும் துணிவு பிறவாது வினவப்படுதலின் ஐயவினா.

4. 'உப்பு உளதோ வணிகரே?'—இது வாங்கும் பொருட்டு வினவப்படுதலின் கொளல் வினா.

5. பணியாளனை நோக்கி 'உனக்கு ஆடை இல்லையா?' என வினவுதல் அவனுக்கு ஆடை கொடுக்கும் பொருட்டு வினவப்படுதலின் கொடை வினா.

6. 'கந்தா உண்டாயா?'—இது உண்ணுயின் உண்ணுமாறு ஏவும் பொருட்டு வினவப்படுதலின் ஏவல் வினா.

இலக்கணம்: அறிவினா, அறியாமைவினா, ஐயவினா, கொளல்வினா, கொடைவினா, ஏவல் வினா என வினா அறு வகைப்படும்.

நன்னூல்

அறிவு அறியாமை ஐயுறல் கொளல்கொடை
ஏவல் தரும்வினா ஆறும் இழுக்கார்.

2. விடை வகை

காஞ்சிக்குச் செல்லும் வழி எது?—இது
நீ நாளைக்கு இங்கு வருவாயோ?—வாரேன்

மேலே காணப்படும் வினாக்களையும் அவற்றிற்கு உரிய விடைகளையும் கவனியுங்கள்.

'காஞ்சிக்குச் செல்லும் வழி எது?' என்ற வினாவிற்கு 'இது' என்று சுட்டிக் காட்டி விடை கூறுதலின் அவ்விடை **'சுட்டுவிடை'** எனப்படும்.

'நீ நாளைக்கு இங்கு வருவாயோ?' என்ற வினாவிற்கு 'வாரேன்' என்று மறுத்து விடை கூறுதலின் அவ்விடை **'மறைவிடை'** எனப்படும்.

இங்ஙனம் சுட்டுவிடை, மறைவிடை, நேர்விடை, ஏவல் விடை, வினாவிடை, உற்றது உரைக்கும் விடை, உறு

வது கூறும் விடை, இனமொழி விடை என விடை எட்டு வகைப்படும்.)

எடுத்துக்காட்டு

1. 'கண்காட்சிச் சாலை எங்குள்ளது?' என்று வினவுவார்க்கு 'அங்குள்ளது' எனச் சுட்டிக் கூறுதல் சுட்டு விடை.

2. 'கந்தா நீ ஊருக்குச் செல்வாயோ?' என்று வினவினால் 'செல்லேன்' என மறுத்துக் கூறுதல் மறைவிடை.

3. 'பொன்னி! பூத்தொடுப்பாயா?' என்று வினவினால் 'தொடுப்பேன்' எனக் கூறுதல் நேர்விடை.

4. 'வள்ளி! நீ உண்டாயா?' என்ற வினாவிற்கு 'நீ உண்' என விடை கூறுதல் ஏவல் விடை.

5. 'மாதவி நீ இங்ஙனம் ஆடுவாயா?' என்ற வினாவிற்கு 'ஆட மாட்டேனா?' என விடை கூறுதல் வினாதல் விடை.

6. 'பொன்னா இன்று ஓடுவாயா?' என்ற வினாவிற்குக் 'கால் வலித்தது' என்று விடை கூறல் உற்றது உரைத்தல் விடை. (உற்றது உரைத்தல்—தனக்கு நேர்ந்ததைக் கூறல்.)

7. 'கண்ணா படக் காட்சிக்குச் செல்வாயா?' என்ற வினாவிற்குக் 'கண் வலிக்கும்' என விடை கூறுதல் உறுவது கூறல் விடை. (உறுவது கூறல்—தனக்கு நேரக்கூடியதை உரைத்தல்.)

8. 'பயறுளதா வணிகரே?' என்ற வினாவிற்குப் 'பருப்பு உள்ளது' என்று விடை கூறுதல் இனமொழி விடை. (அதற்கு இனமானவற்றைக் கூறுதல்.)

(குறிப்பு: இவ்விடை வகைகளுள் சுட்டு, எதிர்மறை, நேர் என்னும் மூவகை விடைகளே வினாவிற்கு ஏற்ற விடைகளாக உள்ளன. ஏனைய ஐந்தும் வினாவுக்கு ஏற்ற விடைகள் அல்லவாயினும் அவற்றாலும் வேறுவகையால் குறிப்

பாக விடை பெறப்படுதலின் அவையும் விடை வகைகளாகக் கொள்ளப்படும்.)

இலக்கணம்: சுட்டு, எதிர் மறை, நேர், ஏவல், வினுதல், உற்றது உரைத்தல் உறுவது கூறல், இனமொழி என விடைகள் எட்டு வகைப்படும். அவற்றுள் சுட்டு, எதிர் மறை, நேர் விடைகளாகிய மூன்றும் வினவுக்கு ஏற்ற விடைகளாம். ஏனைய ஐந்தும் குறிப்பால் விடைப் பொருள் உணர்த்துதலின் விடைகளாகக் கொள்ளப் படும்.

நன்னூல்

சுட்டு மறைநேர் ஏவல் வினுதல்
உற்ற துரைத்தல் உறுவது கூறல்
இனமொழி எனும் எண் இறையுள் இறுதி
நிலவிய ஐந்தும்அப் பொருண்மையின் நேர்ப

3. அடைமொழி

செந்தாமரை செஞ்ஞாயிறு

இத்தொடர்களைக் கவனியுங்கள். செந்தாமரை என்பதில் தாமரை என்பது பூவைக் குறிக்கும். செம்மை என்பது அதன் நிறத்தைக் குறிக்கும் சொல். இங்ஙனம் ஒன்றைச் சிறப்பிக்க வரும் சொல் அடைமொழி எனப்படும்.

தாமரையில் வெண்டாமரையும் உள்ளது. அதனை விலக்கிச் செந்தாமரையைக் குறிப்பதற்கே 'செம்மை' என்ற அடைமொழி தரப்பட்டது. இங்ஙனம் ஒன்றற்கு இனமான பிறவற்றை விலக்கிக் குறித்த பொருளை உணர்த்த வரும் அடைமொழி **இனமுள்ள அடைமொழி** எனப்படும்.

செஞ்ஞாயிறு என்ற தொடரிலும் 'செம்மை' என்ற சொல் ஞாயிற்றுக்கு அடைமொழியாக வந்துள்ளது. செஞ் ஞாயிற்றுக்கு இனமாகக் கரு ஞாயிறு என ஒன்று இல்லா

மையால் இவ்வடைமொழி இனத்தை விலக்க வந்த அடைமொழியன்று. ஞாயிற்றின் சிறப்பை விளக்குவதற்காகவே இவ்வடைமொழி வந்துள்ளது. இங்ஙனம் இனத்தை விலக்க வராமல் ஒரு பொருளைச் சிறப்பிக்க வரும் அடைமொழி **இனம் இல்லா அடைமொழி** எனப்படும்.

மேலே தரப்பட்டுள்ள இரு தொடர்களிலும் செம்மை என்னும் நிறப்பெயர் அடைமொழியாக வந்துள்ளது. இங்ஙனம் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களும் ஒன்றற்கு இனமுள்ள அடை மொழியாகவும், இனம் இல்லா அடைமொழியாகவும் வரும்.

எடுத்துக்காட்டு

இனம் உள்ள அடைமொழி		இனமில்லா அடைமொழி
1. பொருள்—நெய்க்குடம் (பாற்குடம்)	—	உப்பளம்
2. இடம்—மலைநெல் (வயல்நெல்)	—	தென் குமரி
3. காலம்—கார்த்திகைப் பிறை (தைப்பிறை)	—	வேனில் கோங்கம்
4. சினை—பழமரம் (பூமரம்)	—	இலைமரம்
5. பண்பு—வெண்பட்டு (செம்பட்டு)	—	வெண்டிங்கள்
6. தொழில்—ஊன்றுகோல் (ஊதுகோல்)	—	தோய் தயிர்

(குறிப்பு : அளம் என்பது உப்பு விளையும் இடத்தைக் குறிக்கும். அதற்கு இனமாக வேறொன்று விளையும் இடத்தை அளம் எனக் கூறுவது இல்லை. எனவே உப்பு என்ற அடைமொழி இனத்தை விலக்க வராமல் பொருளைச் சிறப்பிக்கவே வந்தது. ஆதலால் அஃது இனமில்லா அடைமொழியாகும். இங்ஙனமே வடகுமரி ஒன்றில்லாதிருந்தும்

தென்குமரி என்றும், மழைக்காலத்து மலரும் கோங்கம் என ஒன்றில்லாதிருந்தும் வேனில் கோங்கம் என்றும், இலை இல்லாத மரம் என ஒன்று இல்லாமல் இருந்தும் இலை மரம் என்றும், கருந்திங்கள் இல்லாதிருந்தும் வெண்டிங்கள் என்றும், தோயாத தயிர் இல்லாதிருந்தும் தோய்தயிர் என்றும் அடைமொழி கொடுத்துக் கூறப்பட்டவை யாவும் இனமில்லா அடைமொழிகளேயாம்.)

இலக்கணம்: பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களும் ஒன்றற்கு அடைமொழியாக வரும். அவ்வடைமொழி இனமுள்ள அடைமொழி, இனமில்லா அடைமொழி என இரு வகைப்படும். இவ்வடைமொழிகள் உலக வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இருவகை வழக்கிலும் வரும்.

4. பொருள் கோள்

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

இக்குறளின் பொருள் யாது?

நல்லோர் நட்புக்கள் பிறைச்சந்திரன் ஒவ்வொரு நாளும் வளர்வது போல வளரும் இயல்புடையன. அறிவிலார் நட்புக்கள் முழுநிலவு ஒவ்வொருநாளும் தேய்வது போல அழியும் இயல்பின என்பது இதன் பொருள்.

நீரவர் கேண்மை பிறைநிறை நீர எனவும், பேதையார் நட்பு மதிப்பின் நீர எனவும் கொண்டு கூட்டி இப்பாடலுக்குப் பொருள் கூறவேண்டும்.

இங்ஙனம் பாடலில் அமைந்த சொற்களைப் பொருள் பொருத்தமுற அமைத்துப் பொருள் கொள்வது **பொருள் கோள்** எனப்படும். **உரை நடைப்படுத்துதல்** (prose order) என்றும், **அந்வயம்** என்றும் அதனைக் கூறுவர்.

யாற்றுநீர்ப் பொருள்கோள், மொழி மாற்றுப்பொருள் கோள், நிரல்நிறைப் பொருள்கோள், பூட்டுவிற் பொருள் கோள், தாப்பிசைப் பொருள் கோள், அளைமறி பாப்புப் பொருள்கோள், கொண்டு கூட்டுப் பொருள்கோள், அடி மறிமாற்றுப் பொருள் கோள் எனப் பொருள்கோள் எட்டு வகைப்படும். அவற்றுள் சில வருமாறு:

(1) யாற்று நீர்ப் பொருள்கோள்

சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே.

இப்பாடலில் சொல் என்பது நெற்பயிர்களைக் குறிக் கிறது. அது முதலில் எழுவாயாய் நிற்க அதன் தொழிலா கிய கருவிருந்து, ஈன்று, நிறுவி என்னும் வினையெச்சங்கள் ஒன்றினை ஒன்று கொண்டு முடியுமாறு இடையே அமைத்து 'காய்த்த' என்னும் பயனிலையை ஈற்றில் தந்து முடிக்கப் பட்டுள்ளது. இவ்வாறு கூறுவதே யாற்றுநீர்ப் பொருள் கோளாம்.

அடிதோறும் பொருள் முடியும்படி சொற்கள் நேராக அமைந்து வருவது யாற்றுநீர்ப் பொருள்கோள் எனக் கூறுதலும் உண்டு.

எடுத்துக்காட்டு

அலைப்பான் பிறிதுயிரை யாக்கலும் குற்றம்;
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலும் குற்றம்;
சொலற்பால வல்லாத சொல்லுதலும் குற்றம்;
கொலைப்பாலும் குற்றமே யாம்.

இச்செய்யுளில் ஒவ்வோரடியும் பொருள் முடியுமாறு சொற்கள் ஒழுங்குபட அமைந்து நேரே பொருள் கொள்ளு மாறு வந்திருத்தல் காண்க.

இலக்கணம்: செய்யுளில் சொற்களை முன்னும் பின்னும் கொண்டு கூட்ட வேண்டாமல், ஆற்றெழுக்குப் போல முதலில் தொடங்கி ஈற்றில் பொருள் முடியுமாறு அமைந்து வருவது யாற்றுநீர்ப் பொருள்கோளாம்.

(2) மொழி மாற்றுப் பொருள்கோள்

எடுத்துக்காட்டு

சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.

இச்செய்யுளில் சுரை ஆழ என்றும், அம்மி மிதப்ப என்றும் பொருள் தொடர்பில்லாமல் அமைந்துள்ளன. யானைக்கு நீத்து, முயற்கு நிலை என்பனவும் பொருத்தமில்லாமல் உள்ளன. இங்ஙனம் கொண்டு பொருள் கூறினால் இச்செய்யுளுக்குப் பொருள் அமையாது. எனவே சுரை மிதப்ப அம்மி ஆழ எனவும், யானைக்கு நிலை முயற்குநீத்து எனவும் சொற்களை மாற்றி அமைத்துப்பொருள் கொள்ள வேண்டியிருத்தலின் இது மொழிமாற்றுப் பொருள் கோளாம்.

இலக்கணம்: இரண்டு பொருள்களும் அவை கொண்டு முடியும் இரண்டு பயனிலைகளுமாக அமையக் கூடிய சொற்களைப் பொருந்தாத வகையில் மாற்றியமைத்து ஓரடியுள் கூறுவது மொழி மாற்றுப் பொருள் கோளாம்.

(3) கொண்டு கூட்டுப் பொருள் கோள்

தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை உடைத்தன்ன மாமேனி
அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்.

இச் செய்யுளில் அமைந்த சொற்களை 'வங்கத்துச் சென்றார் வரின் அஞ்சனத்தன்ன பைங்கூந்தல் மாமேனி

தெங்கங்காய் போலத் திரண்டு உருண்ட வெண்கோழி முட்டை உடைத்தன்ன பசலை தணிவாம்' என முன்னும் பின்னும் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளுமாறு அமைந் திருத்தலால் இது கொண்டு கூட்டுப் பொருள்கோளாம்.

மொழி மாற்றுப் பொருள் கோளும் சொற்களை முன் னும் பின்னும் இயைத்துப் பொருள் கொள்வதே ஆயினும், அஃது ஓரடியில் உள்ள சொற்களை அவ்வடிக்குள்ளேயே மாற்றியமைத்துப் பொருள் கொள்வதாம். இது பல அடி களில் நின்ற சொற்களைப் பொருளுக்கு ஏற்றபடி முன்னும் பின்னும் கொண்டு கூட்டிப் பொருள் கொள்வதாம். இவை இவ் விரண்டிற்கும் உள்ள வேற்றுமையாம்.

இலக்கணம்: செய்யுளில் யாற்றுநீர்ப் பொருள் கோள் போல நேராகப் பொருள் கொள்ள இயலாதவாறு பல அடிகளிலும் அமைந்திருக்கும் சொற்களைப் பொருள் பொருத்தமுறத் தக்க இடங்களில் கொண்டு கூட்டிப் பொருள் கொள்வது கொண்டு கூட்டுப் பொருள் கோளாம்.

(4) தாப்பிசைப் பொருள்கோள்

உண்ணுமை யுள்ள துயிர்நிலை ஊன்உண்ண
அண்ணுத்தல் செய்யா தளறு.

இச் செய்யுளில் ஊன் என்று நடுவே நின்ற சொல் ஊன் உண்ணுமையுள்ளது உயிர்நிலை என முன்னும், ஊன் உண்ண அண்ணுத்தல் செய்யாது அளறு எனப் பின்னும் சென்று இயைந்து பொருள் தருகிறது. இவ்வாறு வருவது தாப்பிசைப் பொருள் கோளாம்.

இலக்கணம்: செய்யுளின் இடையில் அமைந்த ஒரு சொல் ஊசலின் கயிறு முன்னும் பின்னும் செல்வது போல முதலிலும் ஈற்றிலும் சென்று இயைந்து பொருள் தருமாறு அமைந்து வருவது தாப்பிசைப் பொருள் கோளாம். (தாம்பு + இசை = தாப்பிசை. தாம்பு—ஊசல் கயிறு. இசை— சொல்.)

5. உவம உருபுகள்

தாமரை புரையும் காமர் சேவடி

இத்தொடரில் தாமரை உவமை. சேவடி உவமேயம். 'புரையும்' என்பது உவம உருபு.

இங்ஙனமே போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர, அன்ன, இன்ன என்பனவும் உவம உருபுகளாக வரும்.

எடுத்துக்காட்டு:

போல : மயில்போல ஆடினள்
புரைய : மதி புரையும் திருமுகம்
ஒப்ப : கூற்றுவன் ஒப்பச் சினந்தான்
உறழ : கிளியுறழ் மொழியினள்
மான : அஞ்சனம் மாறும் கூந்தல்
கடுப்ப : கார் கடுக்கும் கையான்
இயைய : அமிழ்து இயையக் கூறினள்
ஏய்க்கும் : முத்து ஏய்க்கும் முறுவல்
நேர் : மின் நேர் மருங்குல்
நிகர : வேல் நிகர்த்த விழி
அன்ன : மாரியன்ன வண்கை
இன்ன : பால் இன்ன இன்சொல்

(**குறிப்பு**: மற்றும் பொருவ, அனைய, இனைய, ஏற்ப, மலைய, எதிர, சிவண என்பன போன்றனவும் உவம உருபுகளாக வரும். இவ்வுவம உருபுகள் யாவும் பெயரெச்ச, வினையெச்ச வாய்பாடுகளாக வரும். ஈற்றில் வினைமுற்றாகவும் நிற்கும்.)

இலக்கணம்: போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர, அன்ன, இன்ன என்பனவும் இவைபோல வருவன பிறவும் உவம உருபுகளாம்.

நன்னூல்:

போலப் புரைய ஒப்ப உறழ
மானக் கடுப்ப இயை ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே.

வினாக்கள்

1. வினா எத்தனை வகைப்படும்? ஒவ்வொன்றுக்கும் உதாரணம் தருக.
2. விடை எத்தனை வகைப்படும்? எடுத்துக்காட்டுக்கள் தந்து விளக்குக.
3. இனம் உள்ள அடைமொழி, இனமில்லா அடைமொழி ஆகியவற்றைத் தக்க எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்குக.
4. அறுவகைப் பெயரும் அடைமொழிகளாக வருவதற்கு எடுத்துக்காட்டுக்கள் தருக.
5. பொருள்கோள் என்பது யாது?
6. யாற்றுநீர், கொண்டு கூட்டு, தாப்பிசை, மொழிமாற்றுப் பொருள்கோள்களை எடுத்துக்காட்டுக்கள் தந்து விளக்குக.
7. உவம உருபுகள் யாவை? ஒவ்வொன்றுக்கும் எடுத்துக்காட்டு தருக.

பயிற்சி 5

பின் வரும் வினா, விடைகள் எவ்வகையைச் சார்ந்தன எனக் குறிப்பிடுக:-

(1) கம்பளம் உளதோ? (2) பாடம் படித்தாயா? (3) அண்ணா இடி எவ்வாறு உண்டாகிறது? (4) அது பாம்போ கயிறோ? (5) நீ கடைக்குச் செல்வாயோ?—செல்வேன், (6) இராமா பாடம் படிப்பாயா?-நீ படி, (7) பொன்னா! 'அப்பாட்டைக் கூறுவாயா?-கூறமாட்டேனா? (8) கண்ணா! அப்பெட்டியைத் தூக்குவாயா?—கை வலிக்கும்.

IV. புணர்ச்சி இலக்கணம்

1. பல, சில, என்பவற்றின் புணர்ச்சி

1. பல + பல = பலபல, பலப்பல, பற்பல
   சில + சில = சிலசில, சிலச்சில, சிற்சில

பல, சில என்னும் சொற்களுக்கு முன் வரு மொழியில் அச்சொற்களே வந்து புணரும் போது எவ்வாறு புணர் கின்றன என்று கவனியுங்கள்.

பல பல, சில சில என்பன இயல்பாகப் புணர்ந்துள்ளன. பலப் பல, சிலச் சில என்பன வருமொழிக்கேற்ற வல்லினம் மிக்குப் புணர்ந்துள்ளன. பற்பல, சிற்சில என்பன நிலை மொழி 'ல' வில் உள்ள அகரம் கெட 'ல்' 'ற்' ஆகத் திரிந்து புணர்ந்துள்ளன.

பல, சில என்பவை தம்முன் தாம் வரின் இம்மூன்று விதமாகப் புணரும் என அறிக.

2. பல + கலை = பலகலை, பல்கலை
   சில + வளை = சிலவளை, சில்வளை

இங்குப் பல, சில என்னும் சொற்களுக்கு முன் கலை, வளை என்னும் வேறு சொற்கள் வந்து புணர்கின்றன. அங் ஙனம் புணரும்போது பலகலை, சில வளை என இயல்பாக வும், பல் கலை, சில் வளை என 'ல' வில் உள்ள அகரம் கெட் டும் விகற்பமாய்ப் புணரும் என அறிக.

(விகற்பித்தல் : அகரம் நின்றும் நீங்கியும் புணர்தல்.)

எடுத்துக்காட்டு:

பல + படை = பல படை, பல் படை
சில + சாலை = சில சாலை, சில் சாலை

பல+மணி=பல மணி, பன் மணி
சில+நாள்=சில நாள், சின்னாள்
பல+யானை=பல யானை, பல் யானை
சில+வழி=சில வழி, சில்வழி.
பல+உலகு=பலவுலகு, பல்லுலகு
சில+அணி=சில வணி, சில்லணி

(பல, சில என்ற சொற்களுக்கு முன் வல்லினம், மெல்லினம், இடையினம், உயிர் எழுத்துக்கள் வந்து புணரும் போது அகரம் பெற்றும், பெருமலும் விகற்பமாய்ப் புணர்ந்தன.)

(குறிப்பு: பல+பல=பல்பல, சில+சில=சில்சில எனப் பல சில என்பவை தம்முன் தாம் வந்து புணரும் போது விதிப்படி அகரம் ஏக நின்ற லகர றகரமாகத் திரியாமல் புணர்தலும் உண்டு.

பல+பகல்=பற்பகல், சில+கலை=சிற்கலை எனப் பிற பெயர்கள் வந்து புணரும்போது விதிப்படி அகரம் விகற்பமாய்ப் புணராமல் அகரம் ஏக நின்ற லகரம் றகரமாகத் திரிந்து புணர்தலும் உண்டு.)

இலக்கணம்: பல, சில என்ற அகர ஈற்றுப் பெயர்ச் சொற்களுக்கு முன் அவ்வச் சொற்களே வந்து புணரும் போது இயல்பாயும், வருமொழி வல்லினம் மிகுந்தும், நிலைமொழி 'ல'வில் உள்ள 'அ' கெட, 'ல்' 'ற்' ஆகத் திரிந்தும் புணரும். பிற பெயர்கள் வந்து புணரும் போது பல, சில என்ற சொற்களில் உள்ள 'அ' கெட்டும், கெடாமலும் விகற்பமாய்ப் புணரும்.

நன்னூல்:

பலசில எனுமிவை தம்முன் தாம்வரின்
இயல்பும் மிகலும் அகரம் ஏக
லகரம் றகரம் ஆகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலும் உளபிற.

2. பூ என்னும் சொல்லின் புணர்ச்சி

பூ+கொடி=பூங்கொடி
பூ+சோலை=பூஞ்சோலை

பூ என்னும் சொல்லின் முன் கொடி, சோலை என்னும் சொற்கள் வந்து புணரும்போது எவ்வாறு புணர்கின்றன என்பதனை நோக்குங்கள். வருமொழியில் வரும் வல்லினத்திற்கு இனமான மெல்லினம் இடையில் மிக்குப் பூங்கொடி, பூஞ்சோலை எனப் புணர்ந்துள்ளன அல்லவா?

இங்ஙனம் பூ என்னும் பெயர்ச் சொல்லுக்கு முன் வருமொழியில் க, ச, த, ப என்னும் வல்லினம் வந்து புணரும் போது, வருமொழி முதலில் உள்ள வல்லின மெய்க்கு இனமான மெல்லினமெய் இடையில் தோன்றும் என அறிக.

எடுத்துக்காட்டு

பூ+குளம்—பூங்குளம்,
பூ+செடி—பூஞ்செடி
பூ+பொழில்—பூம்பொழில்,
பூ+தடம்—பூந்தடம்

(**குறிப்பு:** *இங்ஙனம் அன்றி 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்' என்ற பொது விதியின் படி பூக்குளம், பூச்செடி, பூப்பொழில், பூத்தடம் என வல்லினம் மிக்குப் புணர்தலும் உண்டு.*)

இலக்கணம்: பூ என்னும் பெயர்ச் சொல்லுக்கு முன் வருமொழி முதலில் வல்லினம் வந்து புணரும்போது பொது விதிப்படி வல்லினம் மிக்குப் புணர்தலே அன்றி, வருமொழி வல்லினத்திற்கு இனமான மெல்லினம் இடையில் மிகப் புணர்தலும் உண்டு.

நன்னூல்:

பூப்பெயர் முன்இன மென்மையும் தோன்றும்

3. 'தெங்கு' என்னும் சொல்லின் புணர்ச்சி

தெங்கு + காய் = தேங்காய்

தெங்கு என்னும் மரப் பெயர்ச் சொல் முன் காய் என்னும் சொல்வந்து புணரும்போது எவ்வாறு புணர்கிறது என்பதனைக் கவனியுங்கள்.

தெங்கு என்னும் சொல்லில் உள்ள 'தெ' என்னும் குறில் 'தே' என நீண்டு, ஈற்றில் உள்ள 'கு' என்னும் உயிர் மெய் கெட்டுத் தேங்காய் எனப் புணர்வதை அறிக.

எடுத்துக்காட்டு

1. தெங்கு + காய், 2. தேங்கு + காய்,
3. தேங் + காய் = தேங்காய்

(குறிப்பு: இங்ஙனம் அன்றி 'அம்' சாரியை பெற்றுத் தெங்கு + அம் + காய்—தெங்கங்காய் எனப் புணர்தலும் உண்டு.)

இலக்கணம் : தெங்கு என்னும் சொல்லின் முன் காய் என்னும் சொல் வந்து புணரும்போது தெங்கு என்னும் பெயரின் முதல் நீண்டு, ஈற்றுயிர் மெய்யாகிய 'கு' கெட்டுப் புணரும்.

நன்னூல் :

தெங்கு நீண்டு ஈற்றுயிர் மெய்கெடும் காய்வரின்.

4. மரப்பெயர்ச் சொற்களின் புணர்ச்சி

விள + காய் = விளங்காய்

மா + பழம் = மாம்பழம்

விள, மா என்பன மரத்தைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள். அவற்றின் முன் காய், பழம் என்னும் சொற்கள் வந்து புணரும்போது வருமொழி வல்லினத்திற்கு இன மான மெல்லினம் இடையில் மிகப் புணர்ந்துள்ளன.

விளங்காய், மாம்பழம் என்பன விளவினதுகாய், மாவினது பழம் என விரியும். எனவே அவை ஆறும் வேற்றுமைத் தொகைகளாம். வேற்றுமைப் புணர்ச்சியிலேயே இவ்வாறு மெல்லினம் தோன்றும்.

எடுத்துக்காட்டு

விள + பழம் = விளம்பழம்

கள + கனி = களங்கனி

மா + பிஞ்சு = மாம்பிஞ்சு

(குறிப்பு : இங்ஙனம் அன்றி 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்' என்ற பொது விதியின் படி ஆத்திப்பூ, வாழைப்பழம் என வல்லினம் மிக்குப் புணர்தலும் உண்டு.)

இலக்கணம் : மரப்பெயர்ச் சொற்களுக்குமுன் வல்லினம் வந்து புணரும்போது வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி வல்லினத்திற்கு இனமான மெல்லினம் வரப் புணரும். இங்ஙனம் அன்றிப் பொது விதிப்படி வல்லினம் மிக்குப் புணர்தலும் உண்டு.

நன்னூல் :

மரப்பெயர் முன்னர் இனமெல் லெழுத்து
வரப்பெறு னவுமுள வேற்றுமை வழியே.

5. 'தேன்' என்னும் சொல்லின் புணர்ச்சி

தேன் + கடிது = தேன்கடிது
தேன் + குழம்பு = தேக்குழம்பு, தேங்குழம்பு
தேன் + மொழி = தேன்மொழி, தேமொழி
தேன் + யாது = தேன்யாது

இவற்றைக் கவனியுங்கள். தேன் என்னும் னகர ஈற்றுச் சொல்லின் முன் வருமொழி முதலில் வல்லினம் மெல்

லினம், இடையினம் என்னும் மூவின மெய்களும் வந்து புணர்கின்றன.

(1) 'தேன்' என்னும் சொல்லின் முன் வல்லினம் வந்து புணரும்போது இயல்பாகப் புணரும். 'ன்' என்னும் ஈற்றுமெய் கெட்டு இடையே வருமொழி வல்லினம் மிகப் பெற்றும், வல்லினத்திற்கு இனமான மெல்லினம் மிகப் பெற்றும் புணரும்.

(2) மெல்லினம் வந்து புணரும்போது இயல்பாகப் புணர்வதுடன், 'ன்' என்னும் ஈற்று மெய் கெட்டும் புணரும்.

(3) இடையினம் வந்து புணரும்போது இயல்பாகவே புணரும்.

வேற்றுமை, அல்வழி ஆகிய இருவகைப் புணர்ச்சிகளிலும் இங்ஙனமே புணரும்.

எடுத்துக்காட்டு

அல்வழிப் புணர்ச்சி

தேன் + கடிது—தேன்கடிது (இயல்பு)
தேன் + குழம்பு—தேக்குழம்பு (வல்லினம் மிக்கது)
தேன் + குழம்பு—தேங் குழம்பு (மெல்லினம் மிக்கது)
தேன் + மாண்டது—தேன் மாண்டது (இயல்பு)
தேன் + மொழி—தே மொழி (ஈறு கெட்டது)
தேன் + யாது—தேன்யாது (இயல்பு)

வேற்றுமைப் புணர்ச்சி

தேன் + செம்மை = தேன் செம்மை (இயல்பு)
தேன் + குடம் = தேக்குடம் (வல்லினம் மிக்கது)
தேன் + குடம் = தேங்குடம் (மெல்லினம் மிக்கது)
தேன் + மாட்சி = தேன் மாட்சி (இயல்பு)
தேன் + மலர் = தே மலர் (ஈறுகெட்டது)
தேன் + யாப்பு = தேன் யாப்பு (இயல்பு)

இலக்கணம் : தேன் என்னும் சொல்லின் முன் மூவின மெய்களும் வந்து புணரும்போது அல்வழி, வேற்றுமை ஆகிய இருவகைப் புணர்ச்சிகளிலும் இயல்பாகவே புணரும். மெல்லினம் வந்து புணரும்போது தேன் என்னும் சொல்லின் ஈற்று மெய்கெட்டுப் புணர்தலும் உண்டு. வல்லினம் வந்து புணரும்போது ஈற்று மெய்கெட்டு வருமொழி வல்லினம் மிகுந்தும் அவ்வல்லினத்திற்கு இனமான மெல்லினம் மிகுந்தும் புணர்தலும் உண்டு.

நன்னூல் :

தேன்மொழி மெய்வரின் இயல்பும், மென்மை
மேவின் இறுதி அழிவும், வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமாம் இருவழி.

6. ணகர னகர ஈற்றுப் புணர்ச்சி

மண் + குடம் = மட்குடம்
பொன் + குடம் = பொற்குடம்

இவை மண்ணால் செய்யப்பட்ட குடம், பொன்னால் செய்யப்பட்ட குடம் என விரியும். மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைகளாம். எனவே இவை இரண்டும் வேற்றுமைப் புணர்ச்சியாம்.

மண், பொன் என்ற நிலைமொழிகளின் ஈற்றில் உள்ள ண், ன், என்னும் மெய்யெழுத்துக்கள் வருமொழி முதலில் 'க்' என்னும் வல்லினம் வந்து புணரும்போது 'ண்' 'ட்' ஆகவும், 'ன்' 'ற்' ஆகவும் திரிந்துள்ளன.

இங்ஙனம் வேற்றுமைப் புணர்ச்சியில் ணகர, னகர, ஈற்றுச் சொற்கள் வருமொழி முதலில் க், ச், த், ப் என்ற வல்லின எழுத்துக்கள் வந்து புணரும்போது முறையே டகர, றகரங்களாக மாறும் என அறிக.

ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008. 145963
TB P31 (11) N67

(2) கண் + மணி = கண்மணி
மண் + வண்டி = மண்வண்டி
பொன் + மாலை = பொன்மாலை
பொன் + வளை = பொன்வளை

இவையும் கண்ணில் உள்ள மணி, மண்ணையுடைய வண்டி, பொன்னால் செய்யப்பட்ட மாலை, பொன்னால் செய்யப்பட்ட வளை என விரிதலால் வேற்றுமைப் புணர்ச்சிகளாம்.

ண், ன் என்ற ஈற்றின் முன் மெல்லின, இடையின மெய்கள் வந்து புணர்கின்றன. அங்ஙனம் வந்து புணரும் போது எத்தகைய விகாரமும் அடையாமல் இயல்பாகவே புணர்ந்துள்ளன.

இங்ஙனம் வேற்றுமைப் புணர்ச்சியில் ணகர, னகர ஈற்றுச் சொற்கள் வருமொழி முதலில் மெல்லின, இடையின மெய்களைக் கொண்ட சொற்கள் வந்து புணரும்போது இயல்பாகப் புணரும்.

(3) கண் + பெரியது = கண் பெரியது
விண் + மகிழ்ந்தது = விண்மகிழ்ந்தது
வீண் + வேலை = வீண்வேலை
பொன் + சிறந்தது = பொன் சிறந்தது
நான் + மகிழ்ந்தேன் = நான் மகிழ்ந்தேன்
அவன் + வந்தான் = அவன் வந்தான்

இவை யாவும் வேற்றுமை உருபுகள் இடையில் மறைந்து நிற்கவோ, விரிந்து நிற்கவோ புணராமையால் அல்வழிப் புணர்ச்சிகளாம். ணகர, னகர ஈற்றுச் சொற்களுக்கு முன் மூவின மெய்களும் வந்து புணர்கின்றன. அவை இயல்பாகவே புணர்ந்துள்ளன.

இங்ஙனம் அல்வழிப் புணர்ச்சியில் ணகர, னகர ஈற்றுச் சொற்களுக்குமுன் மூவின மெய்களும் இயல்பாகப் புணரும் என அறிக.

இலக்கணம் : ணகர, னகர ஈற்று மொழிகள் வருமொழியில் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வந்து புணரும்போது நிலைமொழியீற்றில் உள்ள 'ண்' 'ட்' ஆகவும் 'ன்' 'ற்' ஆகவும் திரியும். ஏனைய மெல்லினமும் இடையினமும் வந்து புணரும் போது இயல்பாகும். அல்வழிப் புணர்ச்சியில் மூவின மெய்களும் வந்து புணரும்போது இயல்பாகவே புணரும்.

நன்னூல் :

> ணனவல்லினம்வரட் டறவும், பிறவரின்
> இயல்பு மாகும் வேற்றுமைக் கல்வழிக்கு
> அனைத்துமெய் வரினும் இயல்பா கும்மே.

(7) யகர, ரகர, ழகர ஈற்றுப் புணர்ச்சி

(1) வேய்+பெரியது=வேய் பெரியது
வேர்+திரண்டது=வேர் திரண்டது
யாழ்+சிறியது=யாழ் சிறியது.

இவை இடையில் வேற்றுமை உருபுகள் மறைந்து நிற்கவோ, விரிந்து நிற்கவோ புணராமையால் அல்வழிப் புணர்ச்சிகளாம்.

அல்வழிப் புணர்ச்சியில் யகர, ரகர, ழகர ஈற்றுச் சொற்களுக்கு முன் வல்லினம் வரும்போது இயல்பாகப் புணர்ந்துள்ளன.

(2) மெய்+கீர்த்தி=மெய்க்கீர்த்தி
கார்+பருவம்=கார்ப் பருவம்
யாழ்+கருவி=யாழ்க் கருவி

இவையும் மெய்யாகிய கீர்த்தி, காராகிய பருவம், யாழாகிய கருவி என விரிதலின் அல்வழிப் புணர்ச்சிகளேயாம். ஆனால் இவை வருமொழி வல்லினம் மிகுந்து நிற்கப் புணர்ந்துள்ளன. இங்ஙனம் ய, ர, ழ ஈற்றுச் சொற்கள் அல்வழியில் வல்லினம் மிகுந்து நிற்கப் புணர்தலும் உண்டு.

(3) நாய்+கால்=நாய்க்கால்
தேர்+தட்டு=தேர்த்தட்டு
ஊழ்+பயன்=ஊழ்ப்பயன்

இவை நாயினது கால், தேரினது தட்டு, ஊழினது பயன் என விரிதலின் ஆறும் வேற்றுமைத் தொகைகளாம். எனவே இவை வேற்றுமைப் புணர்ச்சிகளாம்.

வேற்றுமைப் புணர்ச்சியில் யகர, ரகர, ழகர ஈற்றுச் சொற்களுக்கு முன் வல்லினம் வந்து புணரும் போது மிகும் என அறிக.

(4) வேய்+குழல்=வேய்க்குழல், வேய்ங்குழல்
ஆர்+கோடு=ஆர்க்கோடு, ஆர்ங்கோடு
குமிழ்+கோடு=குமிழ்க்கோடு, குமிழ்ங்கோடு

இவையும் வேற்றுமைப் புணர்ச்சிகளே. வேயினுல் செய்யப்பட்ட குழல், ஆரினது கோடு, குமிழினது கோடு என விரியும். ஆனுல் இவை வல்லினம் இடையே மிகுந்து நிற்கப் புணர்வதுடன், வருமொழி வல்லினத்திற்கேற்ற மெல்லினம் மிகுந்து நிற்கவும் புணர்ந்துள்ளன. இங்ஙனம் இருவிதமாகவும் புணர்தல் **உறழ்ச்சி** எனப்படும்

இலக்கணம்: அல்வழிப் புணர்ச்சியில் யகர, ரகர, ழகர ஈற்றுச் சொற்களுக்கு முன் வருமொழில் க், ச், த், ப் என்னும் வல்லின மெய்யெழுத்துக்கள் வந்து புணரும் போது இயல்பாகவும், மிகுந்தும் புணரும். வேற்றுமைப் புணர்ச்சியில் மிகுந்தும், வல்லினத்திற்கு ஏற்ற மெல்லினம் உறழ்ந்தும் புணரும்.

நன்னூல் :

யரழ முன்னர்க் கசதப அல்வழி
இயல்பும் மிகலும் ஆகும்; வேற்றுமை
மிகலும் இனத்தோடும் உறழ்தலும் விதிமேல்.

8. லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி

(1) கல்+சிலை=கற்சிலை
முள்+செடி=முட்செடி

இவை கல்லால் செய்யப்பட்டசிலை, முள்ளையுடைய செடி என விரிதலின் வேற்றுமைத் தொகைகளாம். எனவே இவை வேற்றுமைப் புணர்ச்சிகளாம்.

லகர, ளகர ஈற்றுச் சொற்களுக்கு முன் வருமொழி முதலில் வல்லினம் வந்து புணர்கின்றன. அங்ஙனம் புணரும்போது முறையே 'ல்' 'ற்' ஆகவும், 'ள்' 'ட்' ஆகவும் திரிந்துள்ளன.

இங்ஙனம் லகர, ளகர ஈற்றுச் சொற்கள் வருமொழி வல்லினத்துடன் புணரும்போது வேற்றுமைப் புணர்ச்சியில் முறையே றகர டகரங்களாகத் திரியும் என அறிக.

(2) கால்+சிறியது=கால்சிறியது, காற்சிறியது
வாள்+படை=வாள்படை, வாட்படை

இவை இடையே வேற்றுமை உருபு மறைந்தோ விரிந்தோ நிற்கப் புணராமையால் அல்வழிப் புணர்ச்சிகளாம்.

அல்வழிப் புணர்ச்சியில் லகர ளகர ஈற்றுச் சொற்கள் இயல்பாயும், திரிந்தும் புணரும் என அறிக. இஃது உறழ்ச்சி எனப்படும்.

(3) கல்+மலை=கன்மலை
வாள்+மறவர்=வாண்மறவர்
பால்+மொழி=பான்மொழி
முள்+முறிந்தது=முண்முறிந்தது

இவற்றில் கன்மலை, வாண்மறவர் என்பன வேற்றுமைப்புணர்ச்சிகளாம். ஏனைய இரண்டும் அல்வழிப்புணர்ச்சிகளாம். லகர,ளகர ஈற்றுச் சொற்கள் வேற்றுமை, அல்வழி

ஆகிய இருவகைப் புணர்ச்சிகளிலும் வருமொழி முதலில் மெல்லினம் வந்து புணரும்போது 'ல்' 'ன்' ஆகவும், 'ள்' 'ண்' ஆகவும் திரியும் என அறிக.

(4) **கல்+யானை=கல்யானை**
தோள்+வலிமை=தோள்வலிமை
கல்+யாது=கல்யாது
முள்+வலிது=முள்வலிது

இவற்றுள் கல்யானை, தோள் வலிமை என்பன வேற்றுமைப் புணர்ச்சிகளாம். ஏனைய இரண்டும் அல்வழிப் புணர்ச்சிகளாம். லகர, ளகர ஈற்றுச்சொற்கள் இருவகைப் புணர்ச்சிகளிலும் வருமொழியில் இடையினம் வந்து புணரும்போது இயல்பாகப் புணரும் என அறிக.

இலக்கணம் : லகர ளகர ஈற்றுச் சொற்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வந்து புணரும்போது நிலைமொழி ஈற்றில் உள்ள 'ல்' 'ற்' ஆகவும், 'ள்' ட் ஆகவும் திரியும்; அல்வழியில் இயல்பாகவும் முற்கூறியவாறு திரிந்தும் புணரும். இருவகைப் புணர்ச்சிகளிலும் வருமொழியில் மெல்லினம் வந்து புணரும்போது 'ல்' 'ன்' ஆகவும், 'ள்' 'ண்' ஆகவும் திரியும்; இடையினம் வந்து புணரும்போது இயல்பாகப் புணரும்.

நன்னூல் :

லளவேற் றுமையில் றடவும் அல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரின் ; மெலி
மேவின் னணவும், இடைவரின் இயல்பும்
ஆகும் இருவழி யானும் என்ப.

9. செய்யுள் விகாரங்கள்

நிலைமொழியோடு வருமொழி புணரும்போது தோன்றல், திரிதல், கெடுதல் ஆகிய விகாரங்களைப் பெற்றுப் புணரும் என்பதை அறிவீர்கள். அங்ஙனம் புணர்வதற்

குரிய விதி முறைகள் உள்ளன. அந்த இலக்கண விதி முறைப்படி அல்லாமல் செய்யுளின் அடி, தொடை முதலிய நயம் கருதிச் செய்யுளியற்றும் ஆசிரியர்கள் சில சொற்களை விகாரப்படுத்தி ஆள்வது உண்டு. அவை **செய்யுள் விகாரங்கள்** எனப்படும்.

செய்யுள் விகாரங்கள் ஒன்பது வகைப்படும். அவை வருமாறு :

1. வலித்தல் விகாரம்

குறுத்தாட் பூதஞ் சுமந்த
அறக்கதி ராழியெம் அண்ணலைத் தொழினே.

இதனுள் 'குறுத்தாள்' என்ற தொடர் விதிப்படி குறுந்தாள் எனவே இருத்தல் வேண்டும். எதுகை நயத்திற்காக 'ங்' என்ற மெல்லினம் 'த்' என வல்லினமாகத் திரிந்தது.

இங்ஙனம் மெல்லினம் வல்லினமாகத் திரிந்து வருவது **வலித்தல் விகாரம்** எனப்படும்.

2. மெலித்தல் விகாரம்

தண்டை யினக்கிளி கடிவோள்
பண்டைய லல்லள் மானேக் கினளே.

இதனுள் தட்டை என்று இருக்க வேண்டிய சொல் எதுகை நயம் கருதித் தண்டை என அமைந்துள்ளது. (தட்டை-கிளியோட்டும் கருவி)

இங்ஙனம் வல்லினம் மெல்லினமாகத் திரிந்து வருவது **மெலித்தல் விகாரம்** எனப்படும்.

3. நீட்டல் விகாரம்

தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்
போத்தரூர் புல்லறிவி னூர்.

இதனுள் பொத்தரூர் என்று இருக்கவேண்டிய தொடர் எதுகை நயம் கருதிப் போத்தரூர் என நீண்டது.

இங்ஙனம் குறில் நெடிலாகத் திரிந்து வருவது **நீட்டல் விகாரம்** எனப்படும்.

4. குறுக்கல் விகாரம்

எருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்
திருத்தார்நன் றென்றேன் றியேன்.

இதனுள் தீயேன் என நிற்க வேண்டிய சொல் பாட்டின் தளையமைப்புக் கருதித் தியேன் எனக் குறுகி நின்றது.

இங்ஙனம் நெடில் குறிலாகத் திரிந்து வருவது குறுக்கல் விகாரம் எனப்படும்.

5. விரித்தல் விகாரம்

சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே.

இதனுள் விளையுமே என்று இருக்க வேண்டிய சொல் **விளையும்**மே என இடையே மெய்யெழுத்து வந்து விரிந்து நின்றது. அங்ஙனமன்றாயின் நெல்விளை**யுமே** என ஓரசையாய் நின்று பாட்டிலக்கணம் கெடுமாதலின் ஒற்று விரிந்து **விளையும்**மே என ஈரசையாய் ஒரு சீராய் அமைந்தது.

இங்ஙனம் மெய் இல்லாத இடத்தில் மெய்யை வருவித்துரைப்பது **விரித்தல் விகாரம்** எனப்படும்.

6. தொகுத்தல் விகாரம்

சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே.

இதனுள் சிறிய இலை என்று இருக்கவேண்டிய தொடர் செய்யுள் அமைதிக்காகச் சிறிய என்பதில் உள்ள 'ய' கெட்டுச் சிறியிலை என நின்றது. 'ய' கெட்டது **தொகுத்தல் விகாரம்** எனப்படும்.

7. முதற்குறை விகாரம்

மரையிதழ் புரையும் அஞ்செஞ் சீறடி

இவ்வடியில் தாமரை யிதழ் என்பது செய்யுளோசைக்காக முதல் எழுத்தாகிய 'தா' என்பது குறைந்து மரை யிதழ் என நின்று தாமரையை உணர்த்துகிறது. இது **முதல் குறை** விகாரம் எனப்படும்.

8. கடைக்குறை விகாரம்

வேதின வெரிநின் ஓதி முதுபோத்து

இவ்வடியில் ஓந்தி (ஓணான்) என்ற சொல் நடு வெழுத்துக் குறைந்து அப்பொருளை உணர்த்தி வருகிறது. இஃது **இடைக்குறை** விகாரம் எனப்படும்.

9. கடைக்குறை விகாரம்

நீல்உண் துகிலிகை கடுப்ப

இவ்வடியில் நீலம் என்ற நிறத்தின் பெயரைக் குறிக்கும் சொல்லின் கடையில் உள்ள 'அம்' குறைந்து நீல் என நின்றது. இது கடைக்குறை விகாரம் எனப்படும்.

இலக்கணம் : செய்யுளின் அடி, தொடை, ஓசை முதலிய அமைப்புக் கருதி வேண்டிய இடங்களில் சொற்கள் விகாரப்பட்டு வருவது உண்டு. அது செய்யுள் விகாரம் எனப்படும். செய்யுள் விகாரம் ஒன்பது வகைப்படும். அவை வலித்தல் விகாரம், மெலித்தல் விகாரம், நீட்டல் விகாரம், குறுக்கல் விகாரம், விரித்தல் விகாரம், தொகுத்தல் விகாரம், முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை என்பனவாம்.

நன்னூல் :

வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தலும் வரும்செய்யுள் வேண்டுழி
ஒருமொழி முவழிக் குறைதலும் அனைத்தே.

வினாக்கள்

1. பல, சில என்னும் பெயர்கள் தம்முன் தாம் வரும் போதும், பிற சொற்கள் வரும்போதும் புணரும் முறையை விளக்கிக் காட்டுக.

2. பூ என்னும் பெயர் வருமொழியில் வல்லினம் வர எங்ஙனம் புணரும்?

3. தேங்காய்–பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.

4. மரப்பெயர்ச் சொற்கள் வல்லினத்தோடு எவ்வாறு புணரும்?

5. தேன் என்னும் சொல்லின் முன் மூவின மெய்களும் புணரும் முறையை விளக்கிக் காட்டுக.

6. ணகர, னகர ஈற்றுச் சொற்களுக்குமுன் மூவின மெய்களும் வரும்போது எங்ஙனம் புணரும்? எடுத்துக் காட்டுக்கள் தருக.

7. ய், ர், ழ் என்னும் மெய்யெழுத்துக்களை ஈற்றில் கொண்ட சொற்களின் முன் க, ச, த, ப வந்தால் எவ்வாறு புணரும்? எடுத்துக் காட்டுக்கள் தருக.

8. லகர, ளகர ஈற்றுச் சொற்கள் வேற்றுமையிலும் அல்வழியிலும் வல்லினம், மெல்லினம் வரும்போது எவ் வாறு புணரும்? எடுத்துக்காட்டுக்கள் தருக.

9. செய்யுள் விகாரங்கள் யாவை? ஒவ்வொன்றுக்கும் ஓவ்வோர் எடுத்துக்காட்டு தருக.

பயிற்சி 6

1. பிரித்துக்காட்டிப் புணர்ச்சி விதி கூறுக:–

பல்லுலகு, பன்னாள், சில்வளை, பூங்குழல், களங்கனி, பாற்குடம், நென்மணி. பொருட்குற்றம், வேல்விழி, பொற்காப்பு, பொன்மொழி, தமிழ்த்தாய், நாய்க்கால்.

2. கீழ் வருவனவற்றைச் சேர்த்தெழுதி விதி கூறுக.—

சில+சில, பல+கலை, விள+பழம், தேன்+மலர், தேன்+குடம், கண்+மலர், வில்+பயிற்சி, வாள்+போர், நாள்+மலர், பால்+மொழி, ஆர்+கோடு, ஊழ்+பயன், தாள்+வலிமை, சொல்+வழி, விண்+பெரிது.

V. பொருள் இலக்கணம்

அறம், பொருள், இன்பம், வீடு என்பன மக்கள் அடைய வேண்டிய நான்கு உறுதிப் பொருள்களாம். இவற்றுள் அறம், பொருள், இன்பம் என்பன இம்மையில் எய்தக் கூடியன. வீடு மறுமைக்கு உரியது. மக்கள் இம்மையில் அடையக் கூடிய அறம் பொருள், இன்பம் என்பவற்றின் இயல்புகளை விளக்கிக் கூறுவதே பொருள் இலக்கணம் எனப்படும். அஃது அகப்பொருள் (அகத்திணை), புறப் பொருள் (புறத்திணை) என இருவகைப்படும்.

1. அகத்திணை (முதல், கரு)

ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் ஒன்றுபட்ட உள்ளத்தினராய் நடத்தும் இன்ப வாழ்வின் இயல்புகளை விளக்கிக் கூறுவது அகத்திணை எனப்படும்.

அகம்–உள். திணை–ஒழுக்கம். புறத்தார்க்கு இத் தன்மையது என எடுத்துக் கூற இயலாததாய்த் தம் உள்ளத்தாலேயே அனுபவிக்கப்படும் இன்ப ஒழுக்கம் ஆதலின் இஃது அகத்திணை எனப்பட்டது.

சுருங்கக் கூறின் அறம், பொருள், இன்பம் என்பவற்றில் இன்பத்தைப் பற்றிக் கூறுவது அகத்திணையாகும்.

அகத்திணை குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, மருதத் திணை, நெய்தல் திணை, பாலைத்திணை என ஐந்து வகை யாகப் பகுத்துக் கூறப்படும். அவற்றுடன் கைக்கிளைத் திணை, பெருந்திணை என்ற இரண்டும் கூட்டி ஏழு வகை யாகவும் வழங்குவர்.

குறிஞ்சித்திணை : ஒருவனும் ஒருத்தியும் அன்பினால் இயைந்து இன்ப வாழ்வு வாழ்வது குறிஞ்சித் திணையாம்.

முல்லைத் திணை : தலைவன் பிரிவைத் தலைவி ஆற்றியிருந்து வாழ்வது முல்லைத்திணையாம்.

மருதத்திணை : தலைவனும் தலைவியும் ஊடல் (பிணக்கம்) கொண்டு ஒழுகுவது மருதத்திணையாம்.

நெய்தல்திணை : தலைவனைப் பிரிந்த தலைவியும், தலைவியைப் பிரிந்த தலைவனும் பிரிவுத் துயரை ஆற்ற இயலாமல் துன்புற்று வாழ்தல் நெய்தல் திணையாம்.

பாலைத்திணை : தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதல் பாலைத்திணையாம்.

இவ்வைந்தும் ஒத்த அன்புடைய தலைவன் தலைவியர் மாட்டு நிகழும் ஒழுக்கங்களாதலின் இவையே சிறந்தனவாம். இவை **அன்பின் ஐந்திணை** எனப் புகழ்ந்து கூறப்படும்.

கைக்கிளைத்திணை : ஒரு தலைச் சார்பான அன்பு கைக்கிளை எனப்படும். அஃதாவது அன்பில்லாத தலைவியிடத்துத் தலைவன் மட்டும் அன்பு கொள்வதும், அன்பில்லாத தலைவனிடத்துத் தலைவி மட்டும் அன்பு கொள்வதும் கைக்கிளைத் திணையாகும்.

கை-சிறுமை, ஒருதலை; கிளை-உறவு. அன்பு

பெருந்திணை : இது பொருந்தாக் காமம் ஆகும். அஃதாவது வயது முதிர்ந்த ஆண் மகனோ, பெண் மகளோ தம்மினும் வயதிற் குறைந்தாரிடத்துக் கொள்ளும் அன்பாகும்.

இவ்விரண்டும் அன்பின் ஐந்திணை போலச் சிறந்தன அல்லவாகலின் அகப்புறத் திணைகள் எனப்படும்.

ஐந்திணைக்கு உரிய பொருள்கள்

மேற் கூறப்பட்ட ஐந்திணைகளும் முதற்பொருள், கருப் பொருள், உரிப் பொருள் என்ற மூன்று வகையால் கூறப் படும்.

(1) முதற் பொருள்

நிலமும் பொழுதும் முதற் பொருள் எனப்படும். நிலம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகைப் படும். பொழுது சிறு பொழுது பெரும்பொழுது என இரு வகைப்படும்.

நிலம்

1. **குறிஞ்சி :** மலையும் மலை சார்ந்த இடமுமாம்.
2. **முல்லை :** காடும் காடு சார்ந்த இடமுமாம்.
3. **மருதம் :** வயலும் வயல் சார்ந்த இடமுமாம்.
4. **நெய்தல் :** கடலும் கடல் சார்ந்த இடமுமாம்.
5. **பாலை :** மணல் செறிந்த பெருவெளியும் அதைச் சார்ந்த இடமுமாம்.

(**குறிப்பு :** பாலை என்பது தனி நிலம் அன்று. முல்லை யும் குறிஞ்சியுமே வெயிலின் கொடுமையால் தம்மியல்பில் திரிந்து மக்கள் போக்கு வரவுக்கு இயலாத மணற்காடான பாலையாக மாறும்.)

பெரும் பொழுது

இளவேனில், முது வேனில், கார், குளிர், முன்பனி, பின்பனி எனப் பெரும் பொழுது அறுவகைப்படும்.

1. **இளவேனில் :** சித்திரை, வைகாசி மாதங்கள்
2. **முதுவேனில் :** ஆனி, ஆடி மாதங்கள்
3. **கார் :** ஆவணி, புரட்டாசி மாதங்கள்
4. **குளிர் :** ஐப்பசி, கார்த்திகை மாதங்கள்

5. **முன் பனி :** மார்கழி, தை மாதங்கள்

6. **பின் பனி :** மாசி பங்குனி மாதங்கள்

சிறு பொழுது

காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை எனச் சிறு பொழுது அறுவகைப்படும்.

1. **காலை :** சூரியன் உதித்தது முதல் பத்து நாழிகை வரை—(6 மணி முதல் 10 மணி வரை) உள்ள நேரம்.

2. **நண்பகல் :** பகல் பத்து நாழிகை முதல் இருபது நாழிகை வரை (10 மணி முதல் 2 மணி வரை) உள்ள நேரம்.

3. **எற்பாடு :** பகல் இருபது நாழிகை முதல் முப்பது நாழிகை வரை (2 மணி முதல் 6 மணி வரை) உள்ள நேரம். (எல்-சூரியன், பாடு-மறையும் நேரம்.)

4. **மாலை :** சூரியன் மறைந்தது முதல் பத்து நாழிகை வரை (6 மணி முதல் 10 மணி வரை) உள்ள நேரம்.

5. **யாமம் :** இரவு பத்து நாழிகை முதல் இருபது நாழிகை வரை (10 மணி முதல் 2 மணி வரை) உள்ள நேரம். (நள்ளிரவு)

6. **வைகறை :** இரவு இருபது நாழிகை முதல் சூரியன் உதிக்கும் நேரம் வரை (2 மணி முதல் 6 மணி வரை) உள்ள நேரம். (விடியற்காலம்)

ஐந்து நிலங்களுக்கும் உரிய பொழுதுகள்

1. **குறிஞ்சி :** குளிர், முன்பனி என்ற பெரும் பொழுது களும், யாமம் என்ற சிறு பொழுதும் குறிஞ்சிக்கு உரியன.

2. **முல்லை :** கார் என்னும் பெரும்பொழுதும், மாலை என்னும் சிறுபொழுதும் முல்லைக்கு உரியன.

3. மருதம் : ஆறு பெரும் பொழுதுகளும் வைகறை என்னும் சிறுபொழுதும் மருதத்துக்கு உரியன.

4. நெய்தல் : ஆறு பெரும் பொழுதுகளும் எற்பாடு என்ற சிறுபொழுதும் நெய்தலுக்கு உரியன.

5. பாலை : இளவேனில், முதுவேனில், பின்பனி என்னும் பெரும் பொழுதுகளும், நண்பகல் என்னும் சிறுபொழுதும் பாலைக்கு உரியன.

(2) கருப்பொருள்

ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய இயங்குதிணையும் நிலைத்திணையுமாகிய பொருள்கள், கருப்பொருள்கள் எனப் படும்.

அவை தெய்வம், உயர்ந்த மக்கள் (தலைவன், தலைவியர்), தாழ்ந்த மக்கள் (ஏனைய ஆடவர், பெண்டிர்), பறவைகள், விலங்குகள், ஊர், நீர், பூக்கள், மரங்கள், உணவு, பறை, யாழ், பண், தொழில் எனப் பதினான்கு வகைப் படும். அவை வருமாறு :

குறிஞ்சித்திணை

1. தெய்வம் : முருகன்
2. உயர்ந்தோர் : பொருப்பன், வெற்பன், சிலம்பன், குறத்தி, கொடிச்சி
3. தாழ்ந்தோர் : குறவர், கானவர், குறத்தியர்
4. பறவைகள் : கிளி, மயில்
5. விலங்கு : புலி, கரடி, யானை, சிங்கம்
6. ஊர் : சிறுகுடி
7. நீர் : அருவிநீர், சுனை நீர்
8. பூ : வேங்கைப்பூ, குறிஞ்சிப்பூ, காந்தட்பூ
9. மரம் : சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில்

10. உணவு : மலைநெல், மூங்கிலரிசி, தினை
11. பறை : தொண்டகப் பறை
12. யாழ் : குறிஞ்சியாழ்
13. பண் : குறிஞ்சிப்பண்
14. தொழில் : வெறியாடல், மலைநெல் விதைத்தல், தினை காத்தல், தேனழித்தல், கிழங்கு அகழ்தல், அருவியாடல், சுனையாடல்.

முல்லைத்திணை

1. தெய்வம் : திருமால்
2. உயர்ந்தோர் : குறும்பொறைநாடன், தோன்றல், மனைவி, கிழத்தி
3. தாழ்ந்தோர் : இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர்
4. பறவை : காட்டுக் கோழி
5. விலங்கு : மான், முயல்
6. ஊர் : பாடி
7. நீர் : குறுஞ்சுனை நீர், கான்யாற்று நீர்
8. பூ : குல்லைப்பூ, முல்லைப்பூ, தோன்றிப்பூ, பிடவம்பூ
9. மரம் : கொன்றை, காயா, குருந்தம்
10. உணவு : வரகு, சாமை, முதிரை
11. பறை : ஏறு கோட்பறை
12. யாழ் : முல்லையாழ்
13. பண் : முல்லைப்பண் (சாதாரிப் பண்)
14. தொழில் : சாமை விதைத்தல், களைகட்டல், அரிதல், கடாவிடல், கொல்லேறு தழுவுதல், குரவைக் கூத்தாடுதல், கான்யாறு ஆடல், குழல் ஊதல், ஆடு மாடு மேய்த்தல்.

மருதத்திணை

1. தெய்வம் : இந்திரன்
2. உயர்ந்தோர் : ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி
3. தாழ்ந்தோர் : உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர்
4. பறவை : வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், பெருநாரை, கம்புள், குருகு, தாரா
5. விலங்கு : எருமை, நீர்நாய்
6. ஊர் : பேரூர், மூதூர்
7. நீர் : யாற்றுநீர், கிணற்றுநீர், குளத்துநீர்
8. பூ : தாமரைப்பூ, கழுநீர்ப்பூ, குவளைப்பூ
9. மரம் : காஞ்சி, வஞ்சி, மருதம்
10. உணவு : செந்நெல் அரிசி, வெண்ணெல் அரிசி
11. பறை : நெல்லரிகிணை, மணமுழவு
12. யாழ் : மருதயாழ்
13. பண் : மருதப்பண்
14. தொழில் : விழாச் செய்தல், வயல் களைகட்டல், நெல்லரிதல், கடாவிடுதல், குளத்தில் நீராடல், புது நீராடல்.

நெய்தல் திணை

1. தெய்வம் : வருணன்
2. உயர்ந்தோர் : சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுளைச்சி
3. தாழ்ந்தோர் : நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர்
4. பறவை : கடற்காகம்
5. விலங்கு : சுறுமீன்
6. ஊர் : பட்டினம், பாக்கம்
7. நீர் : உவர்நீர்க்கேணி, கவர்நீர்
8. பூ : நெய்தற்பூ, தாழம்பூ, முண்டகப்பூ, அடம்பம்பூ

9. மரம் : கண்டல், புன்னை, ஞாழல்
10. உணவு : மீனும் உப்பும் விற்றபொருள்
11. பறை : மீன்கோட்பறை, நாவாய்ப்பறை, பம்மை
12. யாழ் : விளரியாழ்
13. பண் : செவ்வழிப்பண்
14. தொழில் : மீன் பிடித்தல், உப்பு விளைத்தல், அவற்றை விற்றல், மீன் உலர்த்தல், பறவை யோட்டுதல், கடலாடல்.

பாலைத் திணை

1. தெய்வம் : துர்க்கை (கொற்றவை)
2. உயர்ந்தோர் : விடலை, காளை, மீளி, எயிற்றி
3. தாழ்ந்தோர் : எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர்
4. பறவை : புறு, பருந்து, எருவை, கழுகு
5. விலங்கு : செந்நாய்
6. ஊர் : குறும்பு
7. நீர் : நீரில்லாக் குழி, நீரில்லாக் கிணறு
8. பூ : குராஅம்பூ, மராஅம்பூ
9. மரம் : உழிஞை, பாலை, ஓமை, இருப்பை
10. உணவு : வழியில் பறித்த பொருள், ஊர்களில் கொள்ளையிட்ட பொருள்
11. பறை : துடி
12. யாழ் : பாலையாழ்
13. பண் : பஞ்சுரம்
14. தொழில் : போர் செய்தல், பகற் கொள்ளையிடுதல்

புறத்திணை

ஒத்த அன்புடையார் தாமே அன்றி எல்லாராலும் அனுபவித்து உணரக்கூடியதாய், புறத்தார்க்கும் எடுத்துக் கூறக்கூடியதாய், அறம் பொருள் என்பவற்றைப்பற்றி நிகழும் ஒழுக்கம் புறத்திணையாகும். (புறம் - வெளி)

புறத்திணை : (1) வெட்சித் திணை (2) கரந்தைத்திணை (3) வஞ்சித் திணை (4) காஞ்சித் திணை (5) நொச்சித் திணை (6) உழிஞைத் திணை (7) தும்பைத் திணை (8) வாகைத் திணை (9) பாடாண் திணை (10) பொதுவியல் திணை (11) கைக்கிளைத் திணை (12) பெருந்திணை எனப் பன்னிரண்டு வகைப்படும்.

1. வெட்சித் திணை : பகைவருடைய பசுக்கூட்டங்களைக் கவர்தல். இவ்வீரர்கள் வெட்சிப் பூவை யணிதல் மரபு.

2. கரந்தைத் திணை : பகைவர் கவர்ந்த பசுக் கூட்டங்களை மீட்டல். இவ்வீரர்கள் கரந்தைப் பூவை யணிதல் மரபு.

3. வஞ்சித் திணை : பகைவர் நாட்டின்மேல் படை எடுத்துச் செல்லுதல். இவ்வீரர்கள் வஞ்சிப்பூவை அணிதல் வழக்கம்.

4. காஞ்சித் திணை : படையெடுத்து வந்த பகைவர் தம் நாட்டினுள் புகாதவாறு எதிர்சென்று தடுத்தல். இவ் வீரர்கள் காஞ்சிப்பூவை அணிதல் வழக்கம்.

5. நொச்சித் திணை : பகைவர் தம் நாட்டினுள் நுழையாதவாறு மதிலைக் காத்தல். இவ்வீரர்கள் நொச்சிப் பூவைச் சூடுதல் வழக்கம்.

6. உழிஞைத் திணை : பகைவருடைய நாட்டு மதிலை வளைத்துக் கொண்டு போர்புரிதல். இவ்வீரர்கள் உழிஞைப் பூச்சூடுதல் மரபு.

7. தும்பைத் திணை : இருதிறத்து வீரரும் பரந்த போர்க்களத்தில் எதிர் எதிர்நின்று போர்புரிதல். இரு திறத்து வீரரும் தும்பைப் பூச்சூடுதல் மரபு.

8. வாகைத் திணை : பகைவரை வென்றவர் வெற்றி விழாக் கொண்டாடுதல் வழக்கம்.

9. பாடாண் திணை : ஒருவனுடைய புகழ், ஈகை, ஆற்றல், தண்ணளி முதலியவற்றைப் புகழ்ந்து பாடுதலாம்.

பாடு + ஆண் + திணை—பாடாண் திணை. பாடப்படும் ஆண் மகனது ஒழுக்கம் என்பது பொருள்.

10. பொதுவியல் திணை : மேற்கூறிய புறத்திணை களுக்கெல்லாம் பொதுவான செய்திகளைக் கூறுவது.

11. கைக்கிளைத் திணை : ஒருதலைக்காமம். ஆண், பெண் ஆகியவர்களில் ஒருவரிடத்தில் மட்டும் தோன்றும் அன்பு.

12. பெருந்திணை : பொருந்தாக் காமம். ஒத்த தலைவனும் தலைவியும் அல்லாதாரிடத்து உண்டாகும் அன்பு.

வினுக்கள்

1. அகத்திணை என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?

2. முதற் பொருள்கள் யாவை?

3. ஐவகை நிலங்களுக்கும் உரிய நிலங்களையும் பொழுதுகளையும் கூறுக.

4. பெரும்பொழுது, சிறுபொழுது-இவற்றை விளக்குக.

5. கருப்பொருள் எத்தனை வகைப்படும்? அவை எவை?

6. மருதத் திணைக்குரிய கருப்பொருளை எழுதுக.

7. முல்லைக்கு உரிய தெய்வம், பாலைக்குரிய மரம், மருதத்திற்குரிய விலங்கு, குறிஞ்சிக்கு உரிய பறவை, நெய்த லுக்கு உரிய தொழில் ஆகியவை யாவை?

8. ஐவகை நிலங்களுக்கும் உரிய தலைமக்கள் யார்?

9. புறத்திணை என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?

10. வெட்சி, வஞ்சி, உழிஞை—இவற்றை விளக்கி, இவற்றின் மறுதலைத் திணைகளையும் குறிப்பிடுக.

11. வாகை, பாடாண் - இவற்றின் இலக்கணத்தை விளக்குக.

பயிற்சி 7

ஐவகைத் திணைகளுக்குரிய முதற்பொருள், கருப் பொருள், உரிப்பொருள்களை ஓர் அட்டவணையில் தனித் தனியே பொருத்தி எழுதுக.

VI. யாப்பு இலக்கணம்

யாப்பு என்பது செய்யுள். எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் செய்யுள் உறுப்புக்களின் இலக்கணங்களை முன் வகுப்பில் கற்றீர்கள். அவ்வுறுப்புக்கள் அமையவரும் செய்யுள் இலக்கணங்கள் சிலவற்றை இங்கு அறிந்துகொள்வீர்களாக.

செய்யுள் எனினும் பா எனினும் ஒன்றே. பா என்பதற்குப் பரந்துசெல்லும் ஓசை என்பது பொருள். சேய்மையில் உள்ள ஒருவன் எழுத்தும் சொல்லும் பொருளும் உணர்ந்து கொள்ள முடியாமல் பாடல் ஓதும் போதும் ஓசையைக் கொண்டு அஃது இன்ன பாட்டு என்பதனை அறிந்துகொள்ளக் கூடியவகையில் தத்தமக்கென ஓர் ஒழுங்குபட்ட ஓசையமைப்புடைய செய்யுள் 'பா' எனப்படும்.

தமிழ் மொழியில் அமைந்த பாக்கள் நான்கு வகைப்படும். அவை **வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா** என்பனவாம். அவற்றுள் வெண்பா, ஆசிரியப்பாவின் இலக்கணங்களை அறிந்து கொள்ளுங்கள்.

1. வெண்பா

குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்
புன்றலையப் பூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய் என்னுள்ளத் துறை.

இச் செய்யுளில் ஒவ்வோரடியிலும் நான்கு சீர்கள் அமைந்துள்ளன. ஈற்றடியில் மூன்று சீர்கள் உள்ளன.

இயற்சீர் எனப்படும் ஈரசைச் சீர்களும் மூவசைச்சீர்களில் வெண்சீர் எனப்படும் காய்ச்சீர்களும் பயின்று வந்துள்ளன.

இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் அமைந்துள்ளன.

ஈற்றுச்சீர் மட்டும் நேர் நிரையசைகளாகிய ஓரசைச் சீர்களாக உள்ளன.

இங்ஙனம் அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று, ஈற்றடி மட்டும் முச்சீராய் அமைய, இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் பிறழாமல், ஒரு விகற்பமாயேனும் பல விகற்பமாயேனும் வருவதே வெண்பா எனப்படும். வெண்பாவில் ஈரசைச்சீர்களும், மூவசைச்சீர்களில் காய்ச்சீரும் மட்டுமே பயின்று வரும். வெண்பாவின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளில் ஒன்றினால் முடிவுபெற்று நிற்கும். இரண்டடிக்குக் குறையாமலும் பன்னிரண்டடிக்கு மிகாமலும் செப்பலோசை யுடையதாய் வரும். இவையே வெண்பாவின் பொது இலக்கணமாம்.

(குறிப்பு: வெண்பாவின் ஈற்றுச்சீர் ஓரசைச்சீர்களாகிய நேரசையால் முடிந்திருப்பின் **'நாள்'** என்ற வாய்பாட்டால் முடிந்ததாம். நிரையசையால் முடிந்திருப்பின் **'மலர்'** என்னும் வாய்பாட்டால் முடிந்ததாம். நேர் நேர் என்ற இரண்டசைகள் பெற்று உகர ஈருக முடியின் அவற்றை நேர்பு அசை என ஓரசையாகக் கொள்ளவேண்டும். அதற்குக் **'காசு'** என்பது வாய்பாடு. நிரை நேர் என்ற இரண்டசைகள் பெற்று உகர ஈருக முடியின் அவற்றை நிரைபு அசை என ஓரசையாகக் கொள்ளவேண்டும். அதற்குப் **'பிறப்பு'** என்பது வாய்பாடாகும்.)

வெண்பா ஐந்து வகைப்படும். அவை குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என்பனவாம்.

(1) குறள் வெண்பா

அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

இச்செய்யுளைக் கவனியுங்கள். இஃது இரண்டடிகளால் அமைந்துள்ளது. வெண்பாவிற்குக் கூறப்பட்ட பொது இலக்கணங்கள் அமைந்துள்ளன. இரண்டடிகளும் ஓரெதுகையாய் ஈற்றுச்சீர் நிரைபு அசையாய்ப் பிறப்பு என்னும் வாய்பாட்டால் முடிந்துள்ளது.

இங்ஙனம் வெண்பாவுக்குரிய இலக்கணங்கள்யாவும் அமைய இரண்டடிகளால் வரும் வெண்பா **குறள் வெண்பா** எனப்படும். (குறள்-குறுகிய அடிகளாலானது.)

(2) நேரிசை வெண்பா

தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறாஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமேல் நின்று.

இச்செய்யுளைக் கவனியுங்கள். இது வெண்பாவுக்குரிய இலக்கணங்கள் யாவும் அமைய நான்கடிகளில் வந்துள்ளது. முதல் இரண்டடிகளும் ஓர் எதுகையாகவும் பின் இரண்டடிகளும் மற்றோர் எதுகையாகவும் அமைந்துள்ளன. இரண்டாம் அடியில் நான்காம் சீர் முதல் இரண்டடிகளோடு ஒத்த எதுகையுடைய தனிச் சொல்லாய் அமைந்துள்ளது.

இங்ஙனம் நான்கடிகளில் இரண்டாம் அடியில் முதல் இரண்டடிகளுக்குரிய எதுகை யமைந்த தனிச் சொல் பெற்று ஒரு விகற்பமாயேனும் இரு விகற்பமாயேனும் வருவது **நேரிசை வெண்பா** எனப்படும்.

அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரம் கொண்டு— தெரியிற்
கரிய வரைநிலையார் காய்ந்தாலென் செய்வார்
பெரிய வரைவயிரம் கொண்டு.

இது நான்கடிகளும் ஓரெதுகையாய் வந்த ஒருவிகற்ப நேரிசை வெண்பாவாகும்.

இலக்கணம்: வெண்பாவுக்குரிய பொது இலக்கணங்கள் யாவும் அமைய நான்கடியாய், இரண்டாமடியின் இறுதியில் (நான்காம் சீர்) முதல் இரண்டடிகளோடொத்த எதுகையுடைய தனிச்சொல் பெற்று ஒரு விகற்பமாயேனும் முன் இரண்டடிகள் ஒரு விகற்பமாயும், பின் இரண்டடிகள் வேறு விகற்பமாயேனும் வருவது நேரிசைவெண்பா.

(3) இன்னிசை வெண்பா

துகடீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்.

இச்செய்யுளைக் கவனியுங்கள். இது நான்கடிகளில் வெண்பாவுக்குரிய இலக்கணம் யாவும் அமைய வந்துள்ளது. நான்கடிகளும் ஒரெதுகையாய் அமைந்துள்ளன. எனினும் இரண்டாமடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று வரவில்லை. இங்ஙனம் நான்கடியில் நேரிசை வெண்பாவின் இலக்கணத்திற்கு மாருக வருவன யாவும் இன்னிசை வெண்பாக்கள் எனப்படும்.

அவை நான்கடியாய்த் தனிச்சொல் இன்றி ஒரு விகற்பமாயும், நான்கடியாய்த் தனிச்சொல் இன்றிப் பல விகற்பமாயும், இரண்டாமடியின் நான்காம் சீர் தனிச்சொல்லாய் மூன்று விகற்பமாயும், மூன்ருமடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று இரு விகற்பமாயும், பல விகற்பமாயும், மற்றும் பலவகையாகவும் வரும்.

எடுத்துக்காட்டு:

ஒண்கதிர் வாண்மதியம் சேர்தலால் ஓங்கிய
அங்கண் விசும்பின் முயலும் தொழப்படூஉம்
குன்றிய சீர்மைய ராயினும் சீர்பெறுவர்
குன்றன்னர் கேண்மை கொளின்.

தனிச்சொல் இன்றிப் பல எதுகையான் வந்த இன்னிசை வெண்பா.

அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்ருேரும் ஒப்பர்மன்—திங்கள்
மறுவாற்றும் சான்ருேரஃ தாற்ருர் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்.

இரண்டா மடியில் தனிச்சொல் பெற்று மூன்று விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா.

மற்றையவற்றிற்கும் இவ்வாறே எடுத்துக்காட்டுக்கள் காண்க.

இலக்கணம்: வெண்பாவிற்குரிய பொது இலக்கணம் யாவும் அமைய நான்கடியாய் இரண்டாமடியில் தனிச் சொல் இன்றி ஒரு விகற்பமாயும், இரு விகற்பமாயும், பல விகற்பமாயும், மற்றும் நேரிசை வெண்பாவின் இலக்கணத்திற்கு மாருக வருவனவும் ஆகிய யாவும் இன்னிசை வெண்பா எனப்படும்.

2. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி ேனுரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

இச்செய்யுளைக் கவனியுங்கள். இச்செய்யுளில் ஒவ்வோரடியும் நான்கு சீர்களைப் பெற்றுவந்துள்ளன.

பெரும்பாலும் ஈரசைச் சீர்களும், சிறுபான்மை பிற சீர்களும் வந்துள்ளன.

பெரும்பாலும் நேரொன்ருசிரியத்தளையும் சிறுபான்மை பிறதளைகளும் வந்துள்ளன.

இவ்வாறு பாடப் படுவதே ஆசிரியப்பா ஆகும். அது குறைந்தது மூன்றடிகளை உடையதாக இருக்கும். மேல் எல்லை பாடுவோன் கருத்துக்கு ஏற்ப எத்தனை அடிகள் வேண்டுமாஞலும் இருக்கலாம். ஆசிரியப்பா அகவலோசையுடையதாய் வரும்.

ஆசிரியப்பா நேரிசை ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா என நான்கு வகைப்படும்.

இலக்கணம் : (எல்லா அடிகளும் நாற்சீர் கொண்ட அளவடிகளாய் அமைய, இயற்சீரும் சிறுபான்மை பிறசீர்களும் பயின்றுவர, நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத் தளைகளும் சிறுபான்மை பிறதளைகளும் விரவிவர, மூன்றடி முதல் பாடுவோன் கருத்து முடியும் வரை பாடக் கூடியவாறு அடிவரையறை யுடையதாய்ப் பாடப்படுவது ஆசிரியப்பா ஆகும்.)

3. அலகிடுதல்

(சீர்பிரித்து வாய்பாடுகூறி, தளை, மோனை, எதுகைகளை எடுத்து எழுதல்.)

செய்யுளுக்கு உறுப்பாக அமைந்த சீர், தளை, மோனை, எதுகைகளைப்பற்றியெல்லாம் முன் வகுப்புக்களில் படித்துள்ளீர்கள். இங்கு ஒரு செய்யுளைச் சீர் பிரித்து அலகிட்டுத் தளை, மோனை எதுகைகளை எடுத்து எழுதுவது எவ்வாறு என்று காண்போம்.

(அ) சீர் பிரித்தல்

செல்வத்துட்செல்வம்செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள்எல்லாம்தலை.

இஃது ஒரு குறள் வெண்பா. குறள் வெண்பா இரண்டடிகளாய் முதலடி நாற்சீரும் இரண்டாமடி முச்சீரும் பெற்றுவரும். இயற்சீரும் காய்ச்சீரும் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் பயின்றுவரும். இவ்விலக்கணங்களை மனத்தில் கொண்டு இப்பாட்டைச் சீர்பிரித்தல் வேண்டும்.

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

இங்ஙனம் பிரித்து அமைத்தால் குறள்வெண்பா இலக்கணம் முழுவதும் பொருத்தமாய் அமைந்திருத்தல் காண்க. இவ்வாறு ஒவ்வொரு பாடலையும் அதன் இலக்கணத்திற்கு ஏற்பச் சீர்பிரித்து எழுதத் தெரியவேண்டும்.

(ஆ) அலகிட்டு வாய்பாடும் தளையும் கூறல்

மேற்செய்யுளில் செல்வத்துள் என்ற முதற்சீர் செல்வத்துள் (நேர் நேர் நேர்) என மூன்றசைகள் சேர்ந்த சீராகும். தேமாங்காய் என்பது அதற்குரிய வாய்பாடு என்பதை அறிவீர்கள். இங்ஙனம் ஒவ்வொரு சீரையும் அசைபிரித்து வாய்பாடு கூறலே அலகிட்டு வாய்பாடு கூறலாம்.

முதற்சீரின் ஈற்றசையும் வரும்சீரின் முதலசையும் சேரும் சேர்க்கை தளை எனப்படும். 'செல்வத்துள்' என்பது காய்ச்சீர். வரும் சீரின் முதலசை நேரசையாம். எனவே காய்முன் நேர் வருகிறது. அது வெண்சீர் வெண்டளை எனப்படும்.

இங்ஙனம் நின்ற சீரின் ஈற்றசையோடு வரும்சீரின் முதலசை சேரும் சேர்க்கை முறையைக் கவனித்து இன்ன தளை எனக்கூறுவதே தளைகூறலாம்.

எடுத்துக்காட்டு :

1	2	3	4
தேமாங்காய்	தேமா	புளிமாங்காய்	தேமாங்காய்
நேர் நேர் நேர்	நேர் நேர்	நிரை நேர் நேர்	நேர்நேர்நேர்
செல்வத்துள்	செல்வம்	செவிச்செல்வம்	அச்செல்வம்

செல்வத்துள்	எல்லாம்	தலை.
நேர் நேர் நேர்	நேர் நேர்	நிரை
தேமாங்காய்	தேமா	மலர்
5	6	7

1-2 காய் முன் நேர் —வெண்சீர் வெண்டளை
2-3 மா முன் நிரை —இயற்சீர் வெண்டளை
3-4 காய் முன் நேர் —வெண்சீர் வெண்டளை
4-5 காய் முன் நேர் —வெண்சீர் வெண்டளை
5-6 காய் முன் நேர் —வெண்சீர் வெண்டளை
6-7 மாமுன் நிரை —இயற்சீர்வெண்டளை

(இ) மோனை எதுகை கூறல்

முதல் எழுத்து ஒன்றிவருவது மோனை, முதல் எழுத்து அளவொத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது **எதுகை** என்ற இலக்கணத்தை அறிவீர்கள்.

இவ்விலக்கணப்படி மேற்கூறிய செய்யுளில் மோனை எதுகைகள் அமைந்துள்ள முறையைக் காண்க.

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

1. முதலடியில் 1, 2, 3 சீர்களில் 'செ' என்னும் முதல் எழுத்து ஒன்றிவந்துள்ளமையால் இது **கூழைமோனை** என்னும் **சீர்மோனை**.

2. முதல் அடியிலும் இரண்டாம் அடியிலும் 'செ' என்னும் முதல் எழுத்து ஒன்றிவந்தமையால் இஃது **அடிமோனை**

3. முதலடியில் 1, 2, சீர்களில் முதல் எழுத்து அளவொத்திருக்க இரண்டாம் எழுத்தாகிய 'ல்' ஒன்றி வந்தமையால் **இணை எதுகை** என்னும் **சீர் எதுகை.**

4. இரண்டாம் அடியில் 1, 2 சீர்களில் முதல் எழுத்து அளவொத்திருக்க இரண்டாம் எழுத்து 'ல்' ஒன்றி வந்தமையால் இதுவும் **இணை எதுகை** என்னும் **சீர் எதுகை**யாம்.

5. முதலடியிலும் இரண்டாமடியிலும் முதல் எழுத்து அளவொத்திருக்க இரண்டாம் எழுத்து 'ல்' ஒன்றி வந்தமையால் இஃது **அடி எதுகை.**

இங்ஙனம் ஒருபாடலை நன்கு கவனித்து அதில் அமைந்த மோனை எதுகைகளை எடுத்துக்காட்டவேண்டும்.

நினைவிற்கொள்க

ஓரசைச் சீர்கள்

நேர்	—நாள்
நிரை	—மலர்
நேர்பு	—காசு
நிரைபு	—பிறப்பு

ஈரசைச் சீர்கள்

நேர் நேர்	—தேமா	மாச்சீர்
நிரை நேர்	—புளிமா	
நேர் நிரை	—கூவிளம்	விளச்சீர்
நிரை நிரை	—கருவிளம்	

மூவசைச் சீர்கள்

நேர் நேர் நேர்	—தேமாங்காய்	காய்ச்சீர்
நிரை நேர் நேர்	—புளிமாங்காய்	
நேர் நிரை நேர்	—கூவிளங்காய்	
நிரை நிரை நேர்	—கருவிளங்காய்	
நேர் நேர் நிரை	—தேமாங்கனி	கனிச்சீர்
நிரை நேர் நிரை	—புளிமாங்கனி	
நேர் நிரை நிரை	—கூவிளங்கனி	
நிரை நிரை நிரை	—கருவிளங்கனி	

தளை :

1. மா முன் நேர் —நேரொன்றாசிரியத்தளை
2. விள முன் நிரை —நிரையொன்றாசிரியத்தளை
3. மாமுன் நிரை, விள முன் நேர் — இயற்சீர் வெண்டளை
4. காய் முன் நேர் —வெண்சீர் வெண்டளை
5. காய் முன் நிரை —கலித்தளை
6. கனி முன் நிரை —ஒன்றிய வஞ்சித்தளை
7. கனி முன் நேர் —ஒன்றாத வஞ்சித்தளை

மோனை எதுகை வகைகள்

1, 2–சீர்கள் இணை, *1–3 சீர்கள்* பொழிப்பு, *1, 2, 3 சீர்கள்* கூழை, *1, 4 சீர்கள்* ஒரூஉ, *1, 3, 4 சீர்கள்* மேற்கதுவாய், *1, 2, 4 சீர்கள்* கீழ்க்கதுவாய், *1, 2, 3, 4 சீர்கள்* முற்று.

வினாக்கள்

1. வெண்பாவின் இலக்கணத்தை விளக்குக.

2. வெண்பாவின் வகைகள் யாவை?

3. குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இலக்கணம் கூறுக.

4. நேரிசை வெண்பாவிற்கும் இன்னிசை வெண்பாவிற்கும் வேறுபாடு யாது?

5. ஆசிரியப்பாவின் இலக்கணம் யாது?

6. பின்வரும் செய்யுளை அலகிட்டு வாய்பாடு கூறுக.

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங் கொலிநீர் ஞாலத் திருளகற்றும்-ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

VII. அணி இலக்கணம்

செய்யுளுக்கு அழகு தரும் அணிகளிற் சிலவற்றைச் சென்ற வகுப்புக்களில் கற்றீர்கள். இங்கு மேலும் சில அணிகளை அறிந்து கொள்வீர்களாக.

1. வேற்றுப்பொருள் வைப்பணி

புலவர் தாம் கூறக் கருதிய பொருளை நிலைநாட்டுதற்கு உலகம் அறிந்த வேறொரு பொருளை எடுத்துக்காட்டி வற் புறுத்திக் கூறுவது வேற்றுப்பொருள் வைப்பணியாம். அங்ஙனம் கூறும்போது பொதுப் பொருளால் சிறப்புப் பொருளையும் சிறப்புப் பொருளால் பொதுப் பொருளையும் வற்புறுத்திக் கூறுதல் மரபாகும்.

எடுத்துக்காட்டு 1

புறந்தந் திருளிரியப் பொன்னேமி உய்த்துச்
சிறந்த ஒளிவளர்க்கும் தேரோன்—மறைந்தான்
புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார்?

இச்செய்யுளில் 'புவனத்தே தோன்றி இறவாது வாழ் கின்றார் யார்?' என்ற பொதுப் பொருளால் சூரியன் மறைந் தான் என்ற சிறப்புப் பொருள் வற்புறுத்தப் படுதலின் இது வேற்றுப் பொருள் வைப்பணியாம்.

எடுத்துக்காட்டு 2

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரை முடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் ; குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.

இச்செய்யுளில் கரிகாலன் வரலாறாகிய சிறப்புப்பொருளால் 'குலவித்தை கல்லாமல் பாகம்படும்' என்ற பொதுப் பொருள் வற்புறுத்தப்படுதலின் இதுவும் வேற்றுப்பொருள் வைப்பணியாம்.

2. வேற்றுமை அணி

முதலில் இருபொருளுக்கு ஒப்புமை தோன்றக் கூறிப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமையணியாம்.

எடுத்துக்காட்டு

அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன்—திங்கள்
மறுவாற்றும் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்.

திங்கள் ஒளியைப் பரப்பி இருளை நீக்குகின்றது. சான்றோர் அறிவைப் பரப்பி அறியாமை இருளை நீக்குகின்றனர். இவ்வகையில் திங்களும் சான்றோரும் ஒப்பர் என ஒப்புமை கூறிப் பின்னர்த் திங்கள் மறு ஆற்றும்; சான்றோர் அஃதாற்றார் என வேறுபடுத்தித் திங்களினும் சான்றோர் உயர்ந்தவர் என்பது தோன்றக் கூறப்பட்டமையால் இச்செய்யுள் வேற்றுமையணியாம்.

3. இரட்டுற மொழிதலணி (சிலேடையணி)

ஒரு சொற்றொடர் இருபொருள் தருமாறு கூறுவது இரட்டுறமொழிதல் அல்லது சிலேடையணி எனப்படும். அது செம்மொழிச்சிலேடை, பிரிமொழிச்சிலேடை என இருவகைப்படும்.

எடுத்துக்காட்டு 1

வாரிக் களத்தடிக்கும் வந்துபின்பு கோட்டைபுகும்
போரிற் சிறந்து பொலிவாகும்—சீருற்ற

செக்கோல மேனித் திருமலைராயன் வரையில்
வைக்கோலும் மால்யானை யாம்.

இச்செய்யுள் வைக்கோலுக்கும் யானைக்கும் சிலேடை. வாரிக்களத்தடிக்கும் என்பது முதல் பொலிவாகும் என்பது வரையுள்ள சொற்கள் வைக்கோலுக்கும் யானைக்கும் பொருத்தமாக இருபொருள் தருகின்றன. வைக்கோல் நெற்களத்தில் வாரியடிக்கப்படும்; வந்த பிறகு நெற்கோட்டையைச் சூழ்ந்திருக்கும்; வைக்கோற்போரிற் சிறந்து விளங்கும். யானை பகைவரைப் போர்க்களத்தில் வாரியடிக்கும்; பிறகு கோட்டைக்குள் வந்து சேரும்; போர்க்களத்தில் மற்றைப் படைகளைக் காட்டிலும் மேம்பட்டு விளங்கும். இங்ஙனம் இருபொருள் தரும்போதும் சொற்கள் திரியாமல் ஒரு தன்மையாக நின்றே பொருள் தருவது செம்மொழிச் சிலேடையாம்.

எடுத்துக்காட்டு 2

ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்
காவலரைச் சூழும் கலைசையே-மேவும்
அரிவையம் பாகத்தான் அரணெருமுன் றெய்தோன்
அரிவையம் பாகத்தான் அகம்.

இச்செய்யுளில் 'காவலரைச் சூழும்' என்ற தொடர் சிலேடையாகும். அது பாவலர் காவலரைச் சூழும் எனவும் வண்டினம் கா அலரைச் சூழும் எனவும் இருவகையாகப் பிரிந்து பாவலர் அரசர்களைப் பரிசுக்காகச் சூழ்ந்திருக்கும் கலைசை எனவும், வண்டினம் சோலைகளில் உள்ள மலர்களைத் தேனுக்காக மொய்த்துக் கொண்டிருக்கும் கலைசை எனவும் இரு பொருள் தருகின்றது.

இங்ஙனம் ஒரு தொடர் இருவகையாகப் பிரிக்கப்பட்டு இரு பொருள்படக் கூறுவது பிரிமொழிச் சிலேடையாம்.

4. மடக்கணி

ஒருமுறை வந்த சொற்களோ, சொற்றொடர்களோ, அடியோ மீண்டுவந்து வேறுபொருள் தருவது மடக்கணி யாம்.

எடுத்துக்காட்டு

அரிவையம் பாகத்தான் அரணெருமுன் றெய்தோன்
அரிவையம் பாகத்தான் அகம்.

'அரிவையம்பாகத்தான்' என்ற தொடர் இருமுறை மடங்கிவரத் தொடுத்தமையால் இது மடக்கணியாகும். முதலடியில் உள்ள அரிவையம்பாகத்தான் என்பது அரி வை அம்பு ஆக தான் எனப்பிரிந்து 'திருமாலை கூர்மை யான அம்பாகக் கொண்டு' எனப் பொருள் தருகின்றது. இரண்டாம் அடியில் உள்ள அரிவையம்பாகத்தான் என் பது அரிவை அம் பாகத்தான் எனப்பிரிந்து உமாதேவியை அழகிய இடப் பாகத்தில் கொண்டவன் எனப் பொருள் தருகின்றது. ஒரே தொடர் இருமுறை வந்தாலும் இரு வேறு பொருள் தருதல் காண்க.

சிலேடை ஒரே தொடர் இருபொருள் தரும். மடக்கு ஒரு தொடர் இருமுறை வந்து வெவ்வேறு பொருள் தரும். இவ்வேற்றுமையை அறிந்துகொள்க.

5. வஞ்சப் புகழ்ச்சியணி

ஒன்றனைப் புகழ்வதுபோலக் கூறிக் குறிப்பாகப் பழிப் பதும், பழிப்பதுபோலக் கூறிக் குறிப்பாகப் புகழ்வதும் வஞ்சப் புகழ்ச்சியாம்.

எடுத்துக்காட்டு 1

தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

இச்செய்யுளில் கீழ் மக்களைத் தேவர் எனப் புகழ்வது போலக்கூறி, அவர்கள் மனம்போனவாறு நடக்கும் இயல் புடையவர் எனக்குறிப்பாகப் பழித்துரைத்தமையால் புகழ் வதுபோலப் பழித்த வஞ்சப் புகழ்ச்சியாம்.

எடுத்துக்காட்டு 2

பாரி பாரி என்று பலவேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே.

இச்செய்யுளில் பாரியை இகழ்வதுபோலக் கூறிக் குறிப்பாக அவன் மாரியைப்போல வரையாது வழங்கும் வள்ளல் எனப் புகழ்ந்தமையால் இது பழிப்பதுபோலப் புகழ்ந்த வஞ்சப் புகழ்ச்சியாம்.

6. சொற்பொருள் பின்வரு நிலையணி

செய்யுளில் முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பலவிடங்களில் திரும்ப வருமாறு கூறுவது சொற்பொருள் பின்வரும் நிலையணியாம்.

எடுத்துக்காட்டு

வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.

இச்செய்யுளில் 'நாள்' என்னும் பொருளில் முன்னர் வந்த 'வைகல்' என்னும் சொல் அதே பொருளில் பின்னர்ப் பல இடங்களில் வந்தமையால் இது சொற்பொருள் பின் வரு நிலையணியாம்.

வினுக்கள்

1. வேற்றுப் பொருள் வைப்பணியின் இலக்கணம் யாது? அதன் இருவகைகளையும் விளக்கி எடுத்துக் காட்டுக்கள் தருக.

2. வேற்றுமையணியை ஓர் எடுத்துக் காட்டால் விளக்குக.

3. செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை இவற்றிற்கு எடுத்துக் காட்டுக்கள் தருக.

4. மடக்கணி என்ருல் என்ன? எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

5. வஞ்சப் புகழ்ச்சியணியின் இருவகைகளையும் விளக்கி எடுத்துக்காட்டுக்கள் தருக.

6. சொற்பொருள் பின்வரும் நிலையணியை ஓர் எடுத்துக் காட்டால் விளக்குக.

7. பின்வரும் செய்யுட் பகுதிகளில் அமைந்த அணிகளைப் புலப்படுத்துக:—

(1) தீயினுற் சுட்டபுண் உள்ளாறும் ஆருதே
நாவினுற் சுட்ட வடு.

(2) ஐய மணிக்கல மென்பணியே
அன்பணியக் கொள்வ தென்பணியே.

(3) உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

(4) வானரம் மழைதனில் நனையத் தூக்கணம்
தானெரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக் குரைத்திடில் இடர தாகுமே.

(5) நாவலர்தம் புத்திரரும் நண்ணும் பிரமரமும்
காவியங்களாயும் கலைசையே.

மொழிப் பயிற்சி

1. வாக்கியம்—பலவகைகள்

நாம் நம் உள்ளத்து உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் பிறர்க்கு எடுத்துரைக்கும் போது அக்கருத்துக்களை விளக்கக் கூடிய பல சொற்களைத் தொடர்ச்சியாக அமைத்துக் கூறுகின்றோம்; அவ்வாறே எழுதுகின்றோம். இங்ஙனம் பொருள் தொடர்புறச் சொற்களை அமைத்துக் கூறுவது **சொற்றொடர்** அல்லது **வாக்கியம்** எனப்படும்.

வாக்கியங்கள் அமைப்பு முறையையும் உணர்த்தும் பொருளையும் கருதிப் பல வகைகளாகக் கூறப்படும். அவற்றைப்பற்றி விரிவாக முன் வகுப்புக்களில் படித்துள்ளீர்கள். அவற்றை இங்கு நினைவுபடுத்திக் கொள்வீர்களாக.

1. தனிநிலை வாக்கியம்

பாரி புலவர்களைப் போற்றினான்—இங்ஙனம் ஓர் எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டு முடிவது தனிநிலை வாக்கியமாம்.

2. தொடர்நிலை வாக்கியம்

கபிலர் பாரியைக் கண்டார்; புகழ்ந்து பாடினார்; பரிசு பெற்றார்—இங்ஙனம் ஓர் எழுவாய் பல பயனிலைகளைப் பெற்றுவரும் வக்கியம் தொடர்நிலை வாக்கியமாகும்.

நம்பி வருகின்றான்; நங்கையும் உடன் வருகின்றாள்.

கற்றவர் கற்றவரையே விரும்புவர்; கல்லாதவர் மூடரையே விரும்புவர்.

இங்ஙனம் தனித்தனி எழுவாய் பயனிலைகளைப் பெற்ற தனிவாக்கியங்களாக இருப்பினும் கருத்தால் ஒரே வாக்கியமாகத் தொடர்ந்து முடியும் வாக்கியங்களும் தொடர் வாக்கியம் எனப்படும்.

3. கலவை வாக்கியம்

நேற்றிரவு பெருமழை பெய்தமையால் ஆற்றில் வெள்ளம் புரண்டோடியது—இதில் ஆற்றில் வெள்ளம் புரண்டோடியது என்பது முக்கியமான வாக்கியம். அது முதல் வாக்கியம் எனப்படும். நேற்றிரவு பெருமழை பெய்தமையால் என்பது துணைவாக்கியம். அது சார்பு வாக்கியம்

எனப்படும். இங்ஙனம் ஒரு முதல் வாக்கியம் ஒன்றும் பலவு மான சார்பு வாக்கியங்களைப் பெற்று ஒரே வாக்கியமாய் வருவது கலவை வாக்கியமாகும்.

4. செய்தி வாக்கியம்

திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்—இங்ங னம் குறிப்பிட்ட ஒரு செய்தியை அறிவிக்கும் வாக்கியம் செய்தி வாக்கியமாம்.

5. வினா வாக்கியம்

தமிழின் சுவையைப் போற்றாதார் யார்?—இங்ங னம் வினாப்பொருளை உணர்த்திவரும் வாக்கியம் வினா வாக்கியமாம்.

6. கட்டளை வாக்கியம்

கண்ணா! பாடத்தைப் படிப்பாயாக—இங்ஙனம் கட் டளைப் பொருள் உணர்த்தும் வாக்கியம் கட்டளை வாக்கிய மாம்.

7. உணர்ச்சி வாக்கியம்

ஆ! காலைக் கதிரவன் கடலில் தோன்றும் காட்சி எவ்வளவு அழகாயுள்ளது—இங்ஙனம் வியப்பு, மகிழ்ச்சி, இரக்கம், அச்சம் போன்ற உணர்ச்சிகளைப் புலப்படுத்தும் வாக்கியம் உணர்ச்சி வாக்கியமாம்.

8. உடன்பாட்டு வாக்கியம்

வளவன் பாடம் படித்தான் – இங்ஙனம் ஒரு தொழில் நிகழ்ச்சியை அறிவிக்கும் வாக்கியம் உடன்பாட்டு வாக்கியமாம்.

9. எதிர்மறை வாக்கியம்

வளவன் பாடம் படியான்—இங்ஙனம் தொழில் நிக ழாமையை உணர்த்தும் வாக்கியம் எதிர்மறை வாக்கியமாம்.

10. செய்வினை வாக்கியம்

கபிலர் பாரியைப் புகழ்ந்து பாடினார்—இங்ஙனம் கருத்தா செய்யும் தொழிலை உணர்த்தும் வாக்கியம் செய் வினை வாக்கியமாம்.

11. செயப்பாட்டு வினை வாக்கியம்

பாரி கபிலரால் புகழ்ந்து பாடப்பட்டான்-இங்ஙனம் செய்வினை வாக்கியத்தில் செயப்படு பொருளாக உள்ளது

எழுவாயாக வரும் வாக்கியம் செயப்பாட்டு வினை வாக்கியமாம்.

12. நேர் கூற்று வாக்கியம்

பொய்கையார், செங்கணானை நோக்கி "நான் வேண்டுவன பொருளும் பொன்னும் போகமும் அல்ல; உன் அருளை வேண்டுகிறேன்." என்று உரைத்தார்.— இங்ஙனம் ஒருவர் கூறிய மொழிகளை அவர் வாய்மொழியாகவே எடுத்துக் கூறுவது நேர் கூற்று வாக்கியமாம். நேர் கூற்றை மேற்கோள் குறிக்குள் அமைத்தல் வேண்டும்.

13. அயற்கூற்று வாக்கியம்

அடுத்தநாள் காலையில் வலையில் முதலிற் பிடிக்கும் மீனை அவர்களுக்குத் தருவதாக வலைஞன் கூறினான்—இங்ஙனம் ஒருவர் வாய்மொழியைப் பிறர் கூற்றாகக் கூறுதல் அயற்கூற்று வாக்கியமாம்.

2. வாக்கிய அமைப்பு

எழுவாய்—பயனிலை—செயப்படுபொருள்—எச்சங்கள் நிற்கும் முறை

கபிலர் பாரியை வாழ்த்தினர்.

மாதவி மாலை கட்டினாள்.

இவ்வாக்கியங்களைக் கவனியுங்கள். இவற்றில் கபிலர், மாதவி என்பன எழுவாய்கள். வாழ்த்தினர், கட்டினாள் என்பன பயனிலைகள். பாரியை, மாலை என்பன செயப்படு பொருள்கள்.

இவ்வாறு எழுவாய் முதலிலும், பயனிலை ஈற்றிலும், செயப்படுபொருள் இடையிலும் அமைய வருவதே வாக்கிய முறையாகும்.

வாக்கியத்தில் எழுவாய் முதலில் நிற்றலும், பயனிலை ஈற்றில் நிற்றலுமே மரபு எனினும் விரைவு, வெகுளி, அச்சம், மகிழ்ச்சி போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்த நேரும்போது பயனிலைக்கு முதன்மை தந்து அதனை வாக்கியத்தின் முதலிலும், இடையிலும் அமைத்துக் கூறுவதும் உண்டு.

(எ-டு) சிங்கம் போலப் **பாய்ந்தான்** நெடுஞ்செழியன்.

கண்டனன் அநுமன் சீதையை.

(பயனிலை வாக்கியத்தின் இடையிலும் முதலிலும் வந்தமை காண்க.)

ஒரு வாக்கியத்தின் முதலிலும் இடையிலும் ஈற்றிலும் பயனிலை நிற்பதைப் போலவே செயப்படு பொருளும் மூவிடங்களிலும் வரும்.

(எ-டு) **திருக்குறளைத்** திருவள்ளுவர் இயற்றினார்—செயப்படுபொருள் முதலில் வந்தது.

திருவள்ளுவர் **திருக்குறளை** இயற்றினார்—செயப்படுபொருள் இடையில் வந்தது.

திருவள்ளுவர் இயற்றினார் **திருக்குறளை**—செயப்படுபொருள் ஈற்றில் வந்தது.

இனி, வாக்கியங்களில் பெயரெச்ச வினையெச்சங்கள் நிற்கும் முறையை அறிக.

படித்த மாணவன் ஒழுக்கத்தை விரும்புவான்.

திரு. வி. க. **அழகிய** தமிழ்நடையை உருவாக்கினார்.

இவ்வாக்கியங்களைக் கவனியுங்கள். முதல் வாக்கியத்தில் 'படித்த' என்னும் பெயரெச்சம் மாணவன் என்னும் எழுவாய்க்கு அடைமொழியாய் முன் நின்றது.

இரண்டாம் வாக்கியத்தில் 'அழகிய' என்னும் பெயரெச்சம் தமிழ்நடை என்னும் செயப்படு பொருளுக்கு அடைமொழியாய் முன் நின்றது.

இங்ஙனம் பெயரெச்சம் வாக்கியங்களில் எழுவாய்க்கு அடைமொழியாகவும், செயப்படுபொருளுக்கு அடைமொழியாகவும் நிற்கும். பெயரெச்சம் பெயரைக் கொண்டு முடியும். வாக்கியத்தில் எழுவாயும், செயப்படுபொருளும் பெயர்ச் சொற்களாதலால் அவற்றுக்குமுன் நிற்கும் என அறிக.

பாரி இரவலர்க்கு **ஈந்து** மகிழ்ந்தான்.

பேகன் மயிலுக்குப் போர்வை **வழங்கி** மகிழ்ந்த ஈகைச் செயலைப் புலவர்கள் போற்றினர்.

நான் தங்களைக் **காண** விரும்பி வந்தேன்.

இவ்வாக்கியங்களைக் கவனியுங்கள். முதல் வாக்கியத்தில் 'ஈந்து' என்னும் வினையெச்சம் மகிழ்ந்தான் என்னும் பயனிலைக்கு அடைமொழியாய் முன் நின்றது.

இரண்டாம் வாக்கியத்தில் 'வழங்கி' என்னும் வினையெச்சம் 'ஈகைச்செயல்' என்னும் செயப்படு பொருளின்

அடைமொழியாகிய மகிழ்ந்த என்ற பெயரெச்சத்துக்கு முன் நின்றது.

மூன்ரும் வாக்கியத்தில் 'காண' என்னும் வினையெச்சம் வந்தேன் என்னும் பயனிலைக்கு அடை மொழியாகிய விரும்பி என்னும் வினையெச்சத்திற்கு முன் நின்றது.

இங்ஙனம் வினையெச்சம் பயனிலையாகிய வினை முற்றுக்கு முன்னும், பெயரெச்ச வினையெச்சங்களுக்கு முன்னும் நிற்கும். வினையெச்சம் வினையைக்கொண்டு முடியும். ஆதலால் வினை முற்று, பெயரெச்சம், வினையெச்சம் வினையாலணையும் பெயர், தொழிற்பெயர் ஆகியவற்றின் முன் நிற்கும் என அறிக.

பயிற்சி

பின்வரும் வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள், பெயரெச்சம், வினையெச்சம் ஆகியவை நின்ற முறையைப் புலப்படுத்துக :

(1) இரவலர் பலர் அப்புரவலனை நாடிச்சென்று தம் வறுமை நீங்கப்பெற்று இன்ப வாழ்வு வாழ்ந்தனர்.

(2) குமணனின் பெருமையைக் கேள்வியுற்ருர் பெருஞ் சித்திரனர்; அவனைக் காணவிரும்பிக் காடும் மலையும் கடந்து சென்ருர்.

(3) நீதிக்கு ஒரு கலங்கரை விளக்கமாய்த் திகழ்ந்தான் மனுச்சோழன்.

(4) பாண்டியன் முன்வந்து நின்ருள் கண்ணகி. துயரமே உருவாய் நின்ற கண்ணகியைக் கண்ட மன்னன் அஞ்சி நடுங்கினன்.

(5) கணவனுக்குற்ற பழியைப் போக்க ஒப்பற்ற வீரச் செயல் புரிந்தாள் கண்ணகி. அவள் பெண்குலத்தின் பொன் விளக்காகச் சிறந்து விளங்கினுள்.

3. ஒரே கருத்தைப் பல உருவ வாக்கியங்களில் வெளியிடுதல்

(1) கல்வி கற்பதற்கு இளமைப்பருவமே ஏற்றது.

சுவரை வைத்துக்கொண்டே சித்திரம் எழுதவேண்டும்.

இவை குறிப்பிட்ட செய்தியைத் தெரிவித்தலால் செய்தி வாக்கியங்களாம்.

கல்வி கற்பதற்கு இளமைப்பருவமே ஏற்றதன்றோ?
சுவரை வைத்துக்கொண்டன்றோ சித்திரம் எழுத
வேண்டும்?

இவை வினாப்பொருள் உணர்த்தி வருதலின் வினா வாக்கியங்களாம். இவையும் மேற்கூறிய கருத்துக்களையே விளக்குகின்றன.

இங்ஙனம் ஒரே கருத்தைப் பலவேறு உருவ வாக்கியங்களில் வெளியிடலாம். பின்வரும் எடுத்துக்காட்டுக்களைக் கவனியுங்கள் :

1. காலைக்கதிரவன் கடலில் தோன்றும் காட்சி மிக்க அழகானது. (செய்தி வாக்கியம்)
2. காலைக் கதிரவன் கடலில் தோன்றும் காட்சி அழகானதன்றோ? (வினா வாக்கியம்)
3. காலைக் கதிரவன் கடலில் தோன்றும் காட்சி எவ்வளவு அழகானது! (உணர்ச்சி வாக்கியம்)
4. காலைக் கதிரவன் கடலில் தோன்றும் காட்சியின் அழகைக் காண்பாயாக. (கட்டளை வாக்கியம்)

இங்ஙனம் ஒரே கருத்து செய்தி வாக்கியமாகவும், வினா வாக்கியமாகவும், உணர்ச்சி வாக்கியமாகவும் கட்டளை வாக்கியமாகவும் அமைய வெளியிடலாம்.

(2) இராசராசன் தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டினான்.
திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.

இவை இராசராசன், திருவள்ளுவர் ஆகியவர் செய்த தொழில்களை உணர்த்தும் வாக்கியங்கள். இவை செய்வினை வாக்கியங்களாம்.

தஞ்சைப் பெரிய கோவில் இராசராசனால் கட்டப்பட்டது.
திருவள்ளுவரால் திருக்குறள் இயற்றப்பட்டது.

இவை செயப்பாட்டு வினை வாக்கியங்களாம். செய்வினை வாக்கியங்களில் செயப்படு பொருள்களாக நின்ற கோவில், திருக்குறள் என்பன இவ் வாக்கியங்களில் எழுவாயாய் நிற்றல் அறிக.

இங்ஙனம் ஒரே கருத்தைச் செய்வினை வாக்கியத்தாலும் செயப்பாட்டு வினை வாக்கியத்தாலும் வெளியிடலாம்.

(3) ஒருவரிடம் குணம் காணும்போது குணம்மட்டுமே புலப்படுகிறது.

இல்லாளுடைய உடன்பாட்டைப் பெற்றே கணவன் அறம் செய்யவேண்டும்.

இவை தொழில் நிகழ்ச்சியை உணர்த்துகின்றமையால் உடன்பாட்டு வாக்கியங்களாம். இப்பொருள் மாறுமல் இவற்றை எதிர் மறை வாக்கியங்களாலும் வெளியிடலாம்.

ஒருவரிடம் குணம் காணும்போது குற்றம் புலப்படுவதில்லை.

இல்லாளுடைய உடன்பாட்டைப் பெருமல் கணவன் அறம்செய்ய இயலாது.

இவை தொழில் நிகழாமையை உணர்த்துதலின் எதிர் மறை வாக்கியங்களாம். எனினும் மேற்கூறிய கருத்து மாருமை காண்க.

இங்ஙனம் ஒரே கருத்தை உடன்பாட்டு வாக்கியத்தாலும் எதிர்மறை வாக்கியத்தாலும் வெளியிடலாம்.

குமணன் பெருஞ்சித்திரனரின் வறுமை நிலையை உணர்ந்து உள்ளம் உருகினன்.

குமணன் பெருஞ்சித்திரனரின் வறுமை நிலையை உணர்ந்தான் ; உள்ளம் உருகினன்.

குமணன் பெருஞ்சித்திரனரின் வறுமை நிலையை உணர்ந்தமையால் உள்ளம் உருகினன்.

இவ்வாக்கியங்களைக் கவனியுங்கள். முதல் வாக்கியம் குமணன் என்னும் எழுவாய், உருகினன் என்னும் ஒரு பயனிலையைக்கொண்டு முடிந்தமையால் தனி நிலை வாக்கியமாம்.

இரண்டாம் வாக்கியம் குமணன் என்னும் எழுவாய் உணர்ந்தான், உருகினன் என்னும் இரண்டு பயனிலைகளைக்கொண்டு முடிந்தமையால் தொடர் நிலைவாக்கியமாம்.

மூன்ரும் வாக்கியத்தில் குமணன் உள்ள உருகினன் என்னும் முதல் வாக்கியம் பெருஞ்சித்திரனரின் வறுமை நிலையை உணர்ந்தமையால் என்னும் சார்பு வாக்கியத்தைப்பெற்று வந்தமையால் அது கலவை வாக்கியமாம்.

இங்ஙனம் ஒரே கருத்தைத் தனிநிலை, தொடர்நிலை, கலவை வாக்கியங்களால் வெளியிடலாம்.

(5) சீதை அநுமனிடம், "நான் இன்னும் ஒரு திங்கள் இங்கு இருப்பேன்; அதற்குள் இராமபிரான் இங்கு வாராராயின் உயிர் துறப்பேன்" என்று கூறினாள்.

சீதை அநுமனிடம் தான் இன்னும் ஒரு திங்கள் அங்கு இருப்பதாகவும், அதற்குள் இராம பிரான் அங்கு வாராராயின் உயிர்துறப்பதாகவும் கூறினாள்.

இவற்றில் முதல் வாக்கியம் சீதை கூறியதை அவள் வாய்மொழியாகவே எடுத்துக் கூறுவதால் நேர் கூற்று வாக்கியமாம்.

இரண்டாம் வாக்கியம் சீதையின் கூற்றை மற்றொருவர் கூறுவதாக அமைந்தமையால் அயற்கூற்று வாக்கியமாம்.

இங்ஙனம் ஒரே கருத்தை நேர் கூற்று வாக்கியமாக வும் அயற்கூற்று வாக்கியமாகவும் கூறலாம்.

(6) சாத்தனர், 'கண்ணகியின் வரலாற்றை நான் அறிவேன்,' என்று கூறினர்.

'கண்ணகியின் வரலாற்றை நான் அறிவேன்,' என்று சாத்தனர் கூறினர்.

'கண்ணகியின் வரலாற்றை அறிவேன் நான்' என்று கூறினர் சாத்தனர்.

சாத்தனர் கூறினர் 'அறிவேன் நான் கண்ணகியின் வரலாற்றை' என்று.

இவ்வாறு ஒரே கருத்தை எழுவாய் பயனிலை செயப் படு பொருள்கள் பல வகையாக மாறி நிற்குமாறு வாக்கி யங்களில் அமைத்து வெளியிடலாம்.

பயிற்சி

பின் வரும் வாக்கியங்களை அடைப்புக் குறிகளில் தரப் பட்டவாறு பல்வகை உருவங்களில் அமைத்துக் காட்டுக.

1. காந்தியடிகளின் மறைவினல் உலகம் மிகவும் வருந்தி அழுதது (வின வாக்கியம், உணர்ச்சி வாக் கியம்)
2. இசையில் ஈடுபடாத உயிர்கள் இல்லை (வின, உடன்பாடு)
3. அடுத்து முயன்றல் ஆகாதது உண்டோ? (செய்தி)
4. நீ கூறியபடி நாளை வருவாயா? (கட்டளை)

5. தஞ்சைப் பெரிய கோயிலின் கோபுரம் எவ்வளவு உயரமாக இருக்கிறது? (செய்தி, வினு)
6. இளங்கோவடிகள் கண்ணகி வரலாற்றைக் கேட்டு அதை ஒரு காவியமாகப் பாடினுர்.(தொடர், கலவை)
7. கண்ணகி தன் கணவன் இறந்ததை அறிந்தாள்; கதறி அழுதாள். (தனிநிலை, கலவை)
8. தாமரை மலர்ந்து மணம் வீசியமையால் வண்டுகள் தேன் உண்ண வந்தன. (தொடர்நிலை)
9. தன் மக்களின் இழி செயலை அறிந்தமையால் கோப் பெருஞ் சோழன் சினம் மிகக் கொண்டான். (தனி நிலை, தொடர்நிலை)
10. "அப்பா! நான் அறியாமல் குற்றம் செய்து விட்டேன். அதனைத் தாங்கள் மன்னித்தருள்வீர் களாக," என்று மைந்தன் வேண்டினுன். (அயற் கூற்று)
11. திருக்குறளைக் கற்றுத் தாம் வாழ்வில் உயர்ந்ததாக என் தந்தையார் கூறினுர். (நேர் கூற்று)
12. வேத வனம் தனக்கு உரிமையாயிருந்த நிலத்தைப் புலவர்க்குப் பரிசாக வழங்கினுன். (செயப்பாட்டு வினை)
13. வள்ளுவர் வாக்கு என்றும் பொய்க்காது. (உடன் பாடு)

4. பத்தியமைப்பு

கட்டுரை, கதை, கடிதம் முதலியவைகளைப் பல பத்தி களாகப் பகுத்து எழுதுவதால் படிப்பவர்க்குப் பொருள் தெளிவாக விளங்கும்; அழகாகவும் இருக்கும். குறிப்பிட்ட ஒரு கருத்தை விளக்கக்கூடிய வாக்கியங்களின் தொகுப்பே **பத்தி** (Paragraph) எனப்படும். பல கருத்துக்கள் அடங் கிய செய்தியை எடுத்து எழுதும் போது ஒவ்வொரு கருத் தையும் தனித்தனியே கூறுபடுத்தித் தனித்தனி பத்தியாக அமைத்து எழுதல் வேண்டும். யாவற்றையும் சேர்த்து ஒரே பத்தியாக எழுதினுல் படிப்பவர்க்குப் பொருள் தெளிவாக விளங்காது.

பத்தி என்பது எத்தனை வாக்கியங்களைக் கொண்டதா கவும் இருக்கலாம். ஒரே வாக்கியமாகவும் இருக்கலாம். ஒரு பத்தியில் கூறப்படும் வாக்கியங்கள் கருத்துக்

கோவைப்பட ஒன்றையடுத்து ஒன்ருக அமைக்கப்பட வேண்டும்.

பத்திகள் யாவும் ஒரே அளவாக அமையாமல் சிறியன வும் பெரியனவுமாக அமைவதே படிப்பவர் சிந்தையைக் கவரும். பத்திப் பிரிவு விளக்கமாகத் தெரியுமாறு முதல் வரியை உள்ளடக்கி எழுதுதலும், முன் பத்திக்கும் பின் பத்திக்கும் இடையே இடம் விட்டு எழுதுதலும் இன்றி யமையாதன. ஒவ்வொரு பத்தியிலும் கூறப்பட்ட கருத்துக் களை விளக்கக் கூடிய கவர்ச்சிகரமான சொற்ருெடர்களை அப்பத்திகளின் தலைப்புக்களாகத் தேர்ந்து அமைப்பது படிப்பவர் மனத்தைக் கவரும்.

பத்தி பிரிக்கும் முறையைக் கீழே காண்க.

பத்திபிரியா முன் :

சோழ நாட்டின் ஒப்புயர்வற்ற தலைநகரமாய் விளங் கிய காவிரிப்பூம்பட்டினத்தில் கற்பரசி ஆதிரை வாழ்ந்து வந்தாள். ஆதிரை நாளில் பிறந்தமையால் அவள் ஆதிரை என்றே பெயர் பெற்ருள். அழகின் திருவுருவ மாய், அறிவுக்கு உறைவிடமாய், நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் பெண்ணுக்குரிய பெருங்குணங்கள் யாவும் ஒருங்குடையவளாய்த் திகழ்ந்தாள் ஆதிரை. அவள் கணவன் சாதுவன் என்பவனுவன், அவன் புகார் நகரில் வாழ்ந்த பெரு வணிகன். கொள்வதும் நிறை கொளாது, கொடுப்பதும் குறை கொடாமல் நடுவு நின்று வாணிகம் செய்து பெரும்பொருள் தொகுத்துச் சாதுவன் இன்பமாய் வாழ்ந்து வந்தான். சாதுவனும் ஆதிரையும் ஆற்றிய இல்லற வாழ்வு பலரும் புகழும் நல்லற வாழ் வாய் விளங்கியது, அறவோர்க்களித்தல், அந்தணரோம் பல், துறவோரைப் போற்றுதல், விருந்துபசரித்தல் ஆகிய இல்லறக் கடமைகளை ஆற்றி அவர்கள் இருதலைப் புள் ளின் ஓருயிர் போல ஒன்றுபட்ட உள்ளம் உடையவர் களாய் அன்பு வாழ்வு வாழ்ந்து வந்தனர்.

பல வாக்கியங்களால் அமைந்த இச்செய்தியில் மூன்று கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. அவை 1. ஆதிரையின் இயல்பு. 2. சாதுவன் இயல்பு, 3. அவர்கள் இல்லற வாழ் வின் சிறப்பு என்பன. எனவே இதனை மூன்று பத்திகளா கப் பிரித்துக் கொள்ளலாம்.

பத்தி பிரித்தபின் :

ஆதிரை நல்லாள்

சோழநாட்டின் ஒப்புயர்வற்ற தலைநகரமாய் விளங்கிய காவிரிப் பூம்பட்டினத்தில் கற்பரசி ஆதிரை வாழ்ந்து வந்தாள். ஆதிரை நாளில் பிறந்தமையால் அவள் ஆதிரை என்றே பெயர் பெற்ருள். அழகின் திருவுருவமாய், அறிவுக்கு உறைவிடமாய், நாணம், மடம், அச்சம் பயிர்ப்பு, என்னும் பெண்ணுக்குரிய பெருங்குணங்கள் யாவும் ஒருங்குடையவளாய்த் திகழ்ந்தாள் ஆதிரை.

சாதுவன் பெருமை

அவள் கணவன் சாதுவன் என்பவனுவன். அவன் புகார் நகரில் வாழ்ந்த பெரு வணிகன். கொள்வதும் நிறைகொளாது, கொடுப்பதும் குறை கொடாமல் நடுவு நின்று வாணிகம் செய்து பெரும்பொருள் தொகுத்துச் சாதுவன் இன்பமாய் வாழ்ந்து வந்தான்.

கருத்தொருமித்த காதல் வாழ்வு

சாதுவனும் ஆதிரையும் ஆற்றிய இல்லற வாழ்வு பலரும் புகழும் நல்லற வாழ்வாய் விளங்கியது. அறவோர்க்களித்தல், அந்தணரோம்பல், துறவோரைப் போற்றுதல், விருந்துபசரித்தல் ஆகிய இல்லறக் கடமைகளை ஆற்றி அவர்கள் இருதலைப் புள்ளின் ஒருயிர் போல ஒன்றுபட்ட உள்ளம் உடையவர்களாய் அன்பு வாழ்வு வாழ்ந்து வந்தனர்.

இங்ஙனம் பத்திகளாகப் பிரித்தபின் கூறப்பட்ட செய்தி எவ்வளவு விளக்கமாகத் தெரிகிறது என்பதனைக் கவனியுங்கள். ஆகவே கட்டுரை முதலியன எழுதும்போது படிப்பவர்க்கு மலைப்பின்றித் தெளிவாக விளங்கும்படி பல பத்திகளாகப் பிரித்துக் கருத்துக் கோவைப்பட அப்பத்திகளை ஒன்றன்பின் ஒன்ருக அமைத்து எழுதப் பழகுவீர்களாக.

5. நடை

நாம் கூறக் கருதும் கருத்துக்களைக் கேட்பவரோ, படிப்பவரோ தெளிவாகப் புரிந்துகொள்ளக் கூடியவகையில் தக்க சொற்களையும், சொற்ருெடர்களையும் அமைத்து இலக்கண அமைதி கெடாமல் கூறவேண்டும். இங்ஙனம் நம் கருத்துப் பிறர் உள்ளத்தில் சென்று சேருமாறு எழுதும்

முறையை அல்லது பேசும் முறையைத்தான் **நடை**யென்று கூறுவர்.

செய்யுள் நடை, உரை நடை என அஃது இருவகைப் படும். கூறக்கருதும் கருத்துக்களைச் செய்யுளாக அமைத் துக்கூறுவது செய்யுள் நடையாம். அது கற்றவர்க்கே விளங்கும்.

மக்கள் அனைவரும் உணர்ந்து கொள்ளக் கூடியதாய் அமைந்தது உரை நடையே. மக்கள் இயல்பாகப் பேசும் முறையில் அமைந்த நடையே உரை நடையாம்.

கற்பவர், கேட்பவர் மனத்தைக் கவரக்கூடிய வகை யில் உரை நடையைப் பல வகைகளில் கையாளலாம். பண்டு முதல் இன்றுவரை ஆளப்பட்டு வரும் உரை நடை களின் போக்கையும் மரபையும் ஆராய்ந்து பார்த்தால் உரை நடையின் வகைகளை **ஆற்றொழுக்கு நடை**, செந்தமிழ் நடை, கொடுந்தமிழ் நடை, தனித்தமிழ் நடை, கொச்சை நடை, செய்யுள் நடை, இலக்கிய நடை, அடுக்குமொழி நடை, தருக்க நடை, தெளிவு நடை, மணிப்பவள நடை, கலப்பு நடை எனப் பலவாறு பகுத்துக் கூறலாம்.

1. ஆற்றொழுக்கு நடை

இற்றைக்குச் சற்றேறக்குறைய நானூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர்ச் சோழவளநாட்டின்கண் ஆமி லந்துறை என்னும் ஊரிலே, செங்குந்தர் மரபிலே இரு வர் தோன்றினர். இவ்விருவரும் ஒருவரை ஒருவர் எவ் வாற்றானும் ஒத்திருந்தமையானும், ஒருங்குசேர்ந்து செய் யுள்பாடி வந்தமையானும் இரட்டையர் என வழங்கப் பட்டனர். இவர் தம்முள் ஒருவர் முடவர்; மற்றவர் குருடர். முன்னை வினைப்பயனாலே கால் முடம்பட்டாரே னும் அறிவான் முடம் பட்டிலர் முடவர்; முகக்கண் ஒழிந்தும் அகக்கண் விளங்கப் பெற்றார் குருடர். இவ் விருவருக்கும் முதுசூரியன் என்றும், இளஞ்சூரியன் என் றும் முறையே பெயர் வழங்கலாயின.

—மணி. திருநாவுக்கரசர்

கருத்துக்களை வருத்தமின்றி விளக்கும் சொற்றொடர் களால் தட்டுத்தடங்கலின்றி, ஆற்றொழுக்குப்போல எழு தப்பட்ட இந்நடை, **ஆற்றொழுக்கு நடை** எனப்படும். இது மாணவர் விரும்பி மேற்கொள்ளத்தக்க நல்ல நடை யாம்.

2. செந்தமிழ் நடை

நமது நாட்டில் பலதிற ஆராய்ச்சிகள் நிகழ்ந்த வண்ணமிருக்கின்றன. அவற்றுள் ஒன்று, எம்மொழியில் கல்வி பயிலவேண்டும் என்பது. தாய் மொழியில் கல்வி பெறுவது இயற்கை. தாய்மொழிப் புலமை நிரம்பப் பெற்ற பின்னை வேறு பலமொழிகளைப் பயிலலாம்; ஆராயலாம். முதல் முதல் தாய்மொழி வாயிலாகவே கல்வி பயிலுதல் வேண்டும். 'தாய்நாடு' என்னும் பெயர் தாய்மொழியைக் கொண்டே பிறப்பது. அத்தாயை வஞ்சிப்பது பாவம் அன்றோ?

—திரு. வி. க.

இங்ஙனம் யாவருக்கும் பொருள் விளங்கும் எளிய இனிய சொற்களைப் பயன்படுத்திப் பிறமொழிச் சொற்கள் கலவாமல் பிழையின்றி எழுதுவது **செந்தமிழ் நடையாம்.** இது மாணவர்கள் பின்பற்றுதற்குரிய சிறந்த நடையாகும்.

3. கொடுந்தமிழ் நடை

தள்ளை கேணியில் வெள்ளம் முகக்கச் சென்றாள். அச்சன் பெற்றம் மேய்த்துவரக் கிழார்ப்புறம் சென்றான்.

தள்ளை-தாய். கேணி-கிணறு. வெள்ளம்-நீர். அச்சன்-தந்தை. பெற்றம்-பசு. கிழார்-தோட்டம். இவை திசைச் சொற்கள். இங்ஙனம் திசைச்சொற்கள் பயில எழுதும் நடை **கொடுந்தமிழ் நடையாம்.**

4. தனித்தமிழ் நடை

ஒரு திங்கள் இரண்டு திங்களிற் கிழிந்துபோகும் சீமைத் துணிகளை வாங்க விரும்புகிறோமா? பன்னிரண்டு பதினைந்து திங்கள் கிழியாமல் அழுத்தமாயிருக்கும் நாட்டுப் புடவைகளை வாங்க விரும்புகிறோமா? விலை சிறிது மிகுதியாய் இருந்தாலும் அழுத்தமாய் நீடித்திருக்கும் ஆடைகளையல்லவோ வாங்க ஆவல் கொள்கிறோம். சிறிது கைதவறினாலும் கீழ் விழுந்து நொறுங்கிப்போகும் மட்பாண்டங்களைப் புழங்க விரும்புகிறோமா? கீழே தவறி விழுந்தாலும் உடையாமல் வலுவாய் உள்ள செப்புக் கலங்கள், பித்தளைக் கலங்களைக் கையாள விரும்புகின்றோமா? விலை ஏறி இருந்தாலும் நீண்டநாள் பயன்படும் செப்புக்கலங்கள் பித்தளைக் கலங்களையல்லவோ பொருள் கொடுத்து வாங்க விழைகின்றோம்.

—மறைமலையடிகளார்

பேச்சு வழக்கில் நாம் பயன்படுத்தும் பல பிறமொழிச் சொற்களுக்குரிய தனித்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தித் தூய தமிழில் எழுதப்பட்டுள்ளது இந்நடை. இது **தனித் தமிழ்நடை** எனப்படும். இங்ஙனம் பிறமொழிச் சொற்கள் கலவாமல் எழுதும் தனித்தமிழ் நடையே யாவரும் பின்பற்றத்தக்கதாகும்.

5. கொச்சை நடை

நாளன்னைக்கு எம்மவ கண்ணாலம் நடக்கப்போறது. அன்னைக்கு நீங்கள்ளாம் கட்டாயமா வந்து ஆசீர்வதிக்கனும்.

இவை பேச்சு வழக்கில் பயன்படுத்தும் சிதைந்த கொச்சைச் சொற்கள் பயின்ற வாக்கியங்களாம். இங்ஙனம் கொச்சை மொழிகளைக் கொண்டு எழுதுவது **கொச்சை நடையாம்.** இது வெறுக்கத் தக்கதாகும்.

6. செய்யுள் நடை

மரகத விளிம்படுத்த மாணிக்கச் சுனை மருங்கினதோர் மரகதவல்லி மண்டபத்துப் போது வேய்ந்த பூநாறு கொழுநிழற்கீழ்க் கடிக்குருக்கத்திக் கொடி பிடித்து... வண்டுந்தேனும் யாழ்முரல, வரிக்குயிலும் கிளியும் பாடத், தண்டாது தவிசுபடப் போர்த்ததோர் பளிக்குப் பாறை மணித்தலத்துமிசை நீல ஆலவட்டம் விரித்தாற்போலத் தன் கோலக் கலாவம் கொளவிரித்து, முளையிள ஞாயிற்று இள வெயில் எறிப்ப ஓர் இள மயில் ஆடுவது நோக்கி நின்றாள்.

—இறையனார் களவியல் உரை

இஃது உரைநடையே எனினும் செய்யுள்போலவே அமைந்துள்ளது. இங்ஙனம் அமையும் நடை **செய்யுள் நடை** எனப்படும். இது கற்றறிந்த பெரும்புலவர்க்கே புலனாகும். ஆதலால் மாணவர்க்கு இஃது உரியதன்று.

7. இலக்கிய நடை

பசியும் பகையும் இன்றி, வசியும் வளனும் பெருகிய அம்மலையின் மீது அமைந்த அரண்மனையில் கருணையின் வடிவமாக வீற்றிருந்தான் பாரி. அற்றார்க்கும் அலந்தார்க்கும் அவன் உற்ற துணைவன். பசிப்பிணி என்னும் பாவியின் பெரும் பகைவன். கங்குகரையற்ற அவ்

வள்ளலின் கருணை மன்னுயிர் முதலாகப் புல்லுயிர் ஈருக உள்ள அனைத்துயிரையும் ஆதரிப்பதாயிற்று.

—டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை

இங்ஙனம் செய்யுளில் பயின்ற சொற்களையும் தொடர்களையும் அமைத்து எதுகை மோனை நயம்பட எழுதுவது **இலக்கிய நடை** எனப்படும். இத்தகைய நடையில் எழுதும் திறன் பெற மாணவர்கள் பெரிதும் முயலுதல் நல்லது.

8. அடுக்குமொழி நடை

தமிழகமே ஒரு பூங்காவாகத் திகழ்ந்த நாட்களை ஏடுகளிற் காண்கிறோம். இடநெருக்கடி, தொழில் நெருக்கடி மக்கட் பெருக்கம், வறுமை ஆதிக்கம் அற்ற நாட்களுக்கு அழைக்கிறேன். காண—எண்ணிப் பார்த்திட. எழிலார் பொழில் நிரம்பிய இந்நாடு இனிய மணம் பரப்பி வந்த நாட்கள்! அருவிகளின் அரவணைப்பிலே பொழில்கள் வளம் பெற்ற நாட்கள்! அன்னமும் மயிலும் அழகு நடை பயிலக் கண்டு ஆரணங்குகள் கன்னத்தில் கை வைத்து வியந்த நாட்கள்! வானம்பாடியின் இசை கேட்டுஇன்புற நேரமும் நினைப்பும் கொண்ட நிலையில் மக்கள் இருந்த நாட்கள்! உழவும் தொழிலும் வாழ்க்கைக்குப் போதுமான வளம் அளித்து வறியர் என்பார் இங்கு இலர் என்ற நிலை இருந்த நாட்கள்! தமிழகம் தமிழகமாக இருந்த நாட்கள்! அந்த நாட்களில் தமிழகமே ஒரு பூங்கா!

—அறிஞர் அண்ணாத்துரை

இங்ஙனம் ஒரு கருத்தைப் பல்வேறு அடைமொழித் தொடர்களால் அடுக்கிக் கூறிப் படிப்பவர் நெஞ்சில் பசுமரத்தாணி போலப் பதியவைக்கும் நடை **அடுக்குமொழி நடை** எனப்படும். சொல்லழகை மட்டும் கருதிப் பொருளற்ற மொழிகளை அடுக்கிக் கூறுவது பயன்தராது. கற்போர் கருத்தைக் கவரக் கூடிய பொருள் பொதிந்த சொற்கள், தொடர்களை அடுக்கி எழுதப் பழக வேண்டும். இந்நடை எழுத்துக்கு மட்டுமன்றி மேடைப் பேச்சுக்கும் பயன் படக் கூடியது ஆதலால் மாணவர்கள் இந்நடைகைவரப் பயிலுதல் பெருநன்மை பயக்கும்.

9. தருக்க நடை

படக்காட்சியினால் காண்பவர் கண்கள் கெடுவதோடு அவர்கள் சிந்தையும் கெடக்கூடிய நிலை இன்று

இருப்பதால் படக்காட்சி வெறுத்து ஒதுக்கத் தக்க தொன்றன்றோ எனின், அன்று. 'நெல்லுக்கும் உமியுண்டு நீர்க்கு நுரையுண்டு; புல்லிதழ் பூவிற்கும் உண்டு' ஆதலால் அக்குற்றங்களை எண்ணி அவற்றை வெறுத்து ஒதுக்குகின்றோமா? அவற்றால் விளையும் நன்மையின் சிறப்புக் கருதி விரும்பிப் போற்றுகின்றோம் அன்றோ? அங்ஙனமே படக்காட்சியினால் விளையும் சிறிதளவு தீமையைக் கருதி மக்கள் வாழ்வுக்குப் பெரும்பயன் விளைக்கக் கூடிய அந்த உயர்ந்த சாதனத்தைக் கைவிடலாகாது; விரும்பிப் போற்ற வேண்டும்.

இங்ஙனம் ஒரு பொருள் பற்றி இருவர் வாதிடுவது போல் தடை விடைகள் அமைய எழுதும் நடை **தருக்க நடை** எனப்படும். இந்நடை கற்பவர் உணர்வைத் தூண்டிக் கற்பதில் ஆர்வம் கொள்ளச் செய்யும் ஆதலால் மிகவும் வேண்டத் தக்கதாம்.

10. தெளிவு நடை

கணவர்பால் தமக்கு ஏதாவது மனவருத்தம் உள்ள காலத்திலும் விருந்தினர் வந்தால் அதனை மறந்து உபசாரம் செய்தல் பெண்கள் வழக்கம். கணவர் வீட்டிற்கு வருகையில் தம் மனைவியர் கோபமாக இருத்தலை அறிந்தால் அது நீங்குதற்காக விருந்தினரை உடனழைத்து வருவர். அப்போது அவர்களுடைய கோபம் நீங்கும். இதனை 'விருந்து கண்டொளித்த ஊடல்' என்று புலவர் கூறுவர்.

—டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்

இங்ஙனம் கருத்தைத் தெளிவாகக் கூறுவதையே முதன்மையாகக் கொண்டு பாமரரும் உணர்ந்து கொள்ளக் கூடியவகையில் எளிய சொற்களால் பிழையின்றி எழுதப்படும் நடை **தெளிவுநடை** எனப்படும். இந்நடை மாணவர்க்கு மிகவும் ஏற்றதாகும்.

11. மணிப்பவள நடை

நிகழும் வெகுதானிய வருஷம் வைகாசி மாஸம் 20ஆம் தேதி குருவாரம் உதயாதி $7\frac{1}{2}$ நாழிகைக்கு மேல் 10 நாழிகைக்குள்ளாக ஸிம்ஹ லக்கினத்தில் நடைபெறும் என் ஜேஷ்ட புத்திரன் சிரஞ்சீவி வாஸுதேவனின் விவாகசுப முகூர்த்தத்திற்குத் தாங்கள் குடும்பசமேதராய் வந்திருந்து வதூவரர்களை ஆசீர்வதிக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம் வடமொழிச் சொற்களும் தமிழ்ச் சொற்களும் கலந்துவர எழுதுவது **மணிப்பவளநடை** எனப்படும். இது வேண்டத் தக்கதன்று.

12. கலப்பு நடை

மார்னிங்கில் ஆபீஸ் டைமில் பஸ்ஸில் கூட்டம் அதிகமாக இருக்கும். அதனால் ஈவினிங் வருகிறேன் என்று கண்ணன் சொன்னான். வந்தால் அலமாரியைத் திறந்து இந்த சிபாரிசு லெட்டரை எடுத்து அவனிடம் கொடு.

இதில் பிறமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்து வந்திருப்பதால் இது **கலப்பு நடை** எனப்படும். மாணவர்கள் இவ்வாறு பேசுதலையும் எழுதுதலையும் தவிர்த்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பன்னிரண்டு வகையான நடைகளில் ஏழுவகை நடைகள் மாணவர்கள் கொள்ளத் தக்கனவாம். மாணவர்கள் நல்ல நடையில் பேசவும் எழுதவும் பயிற்சி பெற சிறந்த அறிஞர்களின் நூல்களைப் பயிலவேண்டும். அங்ஙனம் பலகாலும் பயில்வதன் வாயிலாகத் தாங்களும் அழகிய இனிய நடையில் எழுதும் திறம் கைவரப் பெறலாம். 'நடையும் நடைப் பழக்கம்' என்று ஔவையார் கூறியது இந்த எழுத்து நடைக்கும் பொருந்தும்.

6. வழூஉச் சொற்களும் திருத்தமும்

பேச்சு வழக்கில் பலசொற்கள் பிழைப்பட்டனவாகவும், உருச்சிதைந்து மருவினவாகவும் பேசப்படுகின்றன. மாணவர்கள் அவற்றைக் கேட்டுப் பழகிய காரணத்தால் அவற்றில் உள்ள பிழைகளை உணர இயலாதவர்களாய் அப்பிழைபட்ட சொற்களைத் தம் எழுத்திலும் அமைத்து எழுதுகின்றனர். அது தவறு. வழூஉச் சொற்களை அமைத்து எழுதுவது இழிநடையாகும். ஆதலால் வழுவற்ற சொற்களைப் பயன்படுத்தி எழுத மாணவர்கள் இளமையிலேயே பழக வேண்டும்.

வழக்கத்தில் தவறாக வழங்கும் வழூஉச் சொற்களுக்குரிய திருத்தமான சொற்கள் சிலவற்றை முன் வகுப்புக்களில் அறிந்துள்ளீர்கள். இங்கு மேலும் சிலவற்றை அறிந்து கொள்வீர்களாக.

வழூஉச்சொற்கள்	திருத்தம்
அடமழை	அடைமழை
அடமானம்	அடைமானம்
அண்ணுக்கயிறு	அரைஞாண்கயிறு
அருவாமணை	அரிவாள் மணை
அழும்பு	அழிம்பு
இத்துப்போதல்	இற்றுப் போதல்
இரும்பல்	இருமல்
உடம்படிக்கை	உடன்படிக்கை
ஊர்சுத்து	உகிர்ச் சுற்று
எடக்கு	இடக்கு
எழவு	இழவு
எளக்காரம்	இளக்காரம்
கடுவு	கடுகு
கத்திரிக்கோல்	கத்தரிக்கோல்
கிடா	கடா
குதுவை	கொதுவை
குடக்கூலி	குடிக்கூலி
குத்துயிர்	குற்றுயிர்
சங்கலி	சங்கிலி
சந்தணம்	சந்தனம்
சாய்ங்காலம்	சாயுங்காலம்
சீக்காய்	சிகைக்காய்
சுவற்றை	சுவரை
தவக்களை	தவளை
தாவலை, தேவலை	தாழ்வில்லை
திருவாணி	திருகாணி
தீவட்டி	தீவர்த்தி
துகை	தொகை
துலைந்தது	தொலைந்தது
துறவுகோல்	திறவுகோல்
நெலவரம்	நிலவரம்
நேத்து	நேற்று
நோம்பு	நோன்பு
பதட்டம்	பதற்றம்
பயிறு	பயறு
புடவை	புடைவை
புழக்கடை	புழைக்கடை
போறும்	போதும்
மனது	மனம்
மானம்	வானம்

முடுக்கு	மிடுக்கு
முழிந்தான்	உமிழ்ந்தான்
மெரித்தல்	மிதித்தல்
வடவம்	வடகம்
வலது	வலம்
வைக்கால்	வைக்கோல்
விசிரி	விசிறி
விரை	விதை
வென்னீர்	வெந்நீர்
வேக்குரு	வேர்க்குரு
வேணும்	வேண்டும்

7. விலக்குதற்குரிய இழிவழக்குகள்

வழூஉச் சொற்களைப் போலவே பல இழிவழக்கான கொச்சைச் சொற்களும், சொற்றொடர்களும் மக்கள் பேச்சு வழக்கில் காணப்படுகின்றன. அவற்றை அறிந்து நம் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்தாமல் விலக்குதல் வேண்டும். பிழையற்ற உயர்ந்த வழக்காறுடைய சொற்களையும் தொடர்களையுமே நம் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்த வேண்டும். விலக்குதற்குரிய இழி வழக்குகள் சிலவற்றைக் காண்போம்.

இழி வழக்கு	திருத்தமான வழக்கு
கண்ணாலம்பண்ணிகிட்டான்	கலியாணம் செய்து கொண்டான்
அலசிவிட்டான்	ஆராய்ந்து கூறினான்
ரொம்ப அளக்காதே	நிரம்பப் பேசாதே
குத்துயிரும் கொலையுயிரும்	குற்றுயிரும் குலையுயிரும்
மொழுகடி சேர்வை	மகிழடி சேவை
பொம்மனாட்டி	பெண் பிள்ளை
பொண்டாட்டி	பெண்டாட்டி
வவுத்து வலி	வயிற்று வலி
அடிச்சுட்டான்	அடித்து விட்டான்
அப்படியாக் கொத்த	அப்படியாதற் கொத்த
ஆப்பிட்டுக்கிட்டது	அகப்பட்டுக் கொண்டது
இசித்துக்கினு	இழுத்துக் கொண்டு
இக்குது, கீது	இருக்கிறது
இருக்கச்சே	இருக்கச் செய்தே
ஏதாச்சியும் கொடு	ஏதேனும் கொடு

சித்தே பொறு	சற்றே பொறு
வெக்கமில்லே	வெட்கமில்லை
வந்துக்கிட்டே	வந்து கொண்டே
பொளுது வெடிஞ்சுது	பொழுது விடிந்தது
குளுப்பாட்டினான்	குளிப்பாட்டினான்
வாயைப் பயம்	வாழைப்பழம்
அவுத்துட்டான்	அவிழ்த்துவிட்டான்
தரித்திரம் புடிச்சவன்	தரித்திரம் பிடித்தவன்
பசங்கள்	பையன்கள்
பொம்பளை	பெண் பிள்ளை
ஆம்பளை	ஆண் பிள்ளை
எசபிசகா	இசை பிசாக
மாட்டிக்கிட்டான்	அகப்பட்டுக் கொண்டான்
கேட்டு வாசல்	தலைவாயில்
திருவிஷா	திருவிழா
திர்நாள்	திருநாள்

இவை போல நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் வாழும் பாமர மக்கள் தங்கள் பேச்சில் ஏராளமான கொச்சை மொழிகளைப் பயன்படுத்துகிறார்கள். அத்தகைய சொற்களையும் தொடர்களையும் எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் பயன்படுத்தாமல் விலக்க வேண்டும். நல்ல பண்பட்ட சொற்களையும் தொடர்களையுமே ஆளவேண்டும்.

8. நிறுத்தற்குறிப் பயிற்சிகள்

நாம் பேசும்போதும் படிக்கும் போதும் பொருள் விளங்குவதற்காக உரிய இடங்களில் நிறுத்திப் பேசுகிறோம்; படிக்கிறோம். அங்ஙனமே எழுதும்போதும் நம் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் படிப்பவர் நன்கு புரிந்து கொள்ளுமாறு எழுத வேண்டும். அதற்கு எங்கெங்கு எவ்வளவு நேரம் நிறுத்திப் படிக்க வேண்டும் என்பதனை உணர்த்துவதற்குச் சில அடையாளங்களைப் பயன்படுத்துகிறோம். அவையே நிறுத்தற்குறிகள் எனப்படும்.

நிறுத்தற்குறிகள் காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, முற்றுப் புள்ளி, வினாக்குறி, உணர்ச்சிக்குறி, மேற்கோள் குறி, இடைப் பிறவைப்புக் குறி எனப் பல வகைப்படும். அவற்றைப் பற்றி முன் வகுப்புக்களில் விளக்கமாகப்

படித்தீர்கள். இங்கு மேலும் சில குறியீடுகளை அறிந்து கொள்வோம்.

பிறைக் குறி

( ) இவ்வடையாளம் பிறைக்குறி (Brackets) எனப் படும். சொல் அல்லது தொடருக்கு முன்னும் பின்னும் இக் குறி இடப்படும்.

1. வேற்று மொழிச்சொல் ஒன்றை மொழி பெயர்த் துச்சொல்லும் போது பொருள் விளக்கம் கருதி அவ் வேற்று மொழிச் சொல்லைப் பிறைக் குறிக்குள் அமைத்துக் காட்ட லாம்.

(எ - டு) விஞ்ஞானம் விளைத்த அற்புதங்களில் தொலைக் காட்சி (Television) என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

2. வாக்கியத்தின் இடையே வரும் அருஞ்சொல்லின் பொருளை விளக்கும்போது இக்குறியிடப் பெறும்.

(எ - டு) நம் முன்னோர் கடவுளைக் கந்தழியாக (பற்றுக் கோடற்ற பொருளாக) வழிபட்டனர்.

3. ஒரு சொல்லின் பொருளைத் தெளிவு படுத்தும் போதும் இக்குறி இடப் பெறும்.

(எ - டு) குற்றியலுகரம் (அஃதாவது ஓசை குறைந்த உகரம்) மொழியின் ஈற்றிலேயே வரும்.

4. சிறு பிரிவெண்களை எண்ணிக் குறிக்கும் போது எண்களுக்கு இரு புறமும் பிறைக் குறிகள் இடப்பெறும்.

(எ - டு) சொற்கள் நான்கு வகைப்படும். அவை (*1*) பெயர்ச் சொல், (*2*) வினைச்சொல், (*3*) இடைச் சொல், (*4*) உரிச்சொல் என்பனவாம்.

5. உரையில் சொல் வருவிக்கும் போது வருவிக்கும் சொல் அல்லது தொடரின் முன்னும் பின்னும் இக்குறி யிடப் பெறும்.

(எ - டு) கனியிருப்ப – (ஔவையுண்ட நெல்லிக்கனி போல் அமிழ்த மயமான) கனிகள் இருக்க.

கீற்றுக்குறி (Dash)

(—) இவ்வடையாளம் கீற்றுக்குறி எனப்படும். அது ஆளப்படும் இடங்கள் வருமாறு:-

1. சொல்லுக்குப் பொருள் கூறும்போது இக்குறி இடப்பெறும்.

(எ - டு) மல்லல்—வளப்பம்

2. சொல் அல்லது தொடருக்கு இலக்கணம் கூறும் போது இக்குறி இடப்பெறும்.

(எ - டு) பாடினவன்—வினையாலணையும் பெயர்.
சுடுசோறு—வினைத்தொகை

3. தேர்வில் விடை எழுதுமாறு கேட்கும்போது இக் குறி இடப்பெறும்.

(எ - டு) கயம், மதுகரம், வேழம்—பொருள் கூறுக.

4. ஒரு செய்தியைக் கூறிக்கொண்டு வரும்போது இடையில் தன் கருத்தை உரைக்க நேர்ந்தால் அதற்குமுன் இக்குறியிடப் பெறும்.

(எ - டு) பாரி முல்லைக் கொடிக்குத் தன் தேரையே ஈந்தான்—என்னே அவன் ஈகை!

5. வெவ்வேருகக் கூறப்பட்ட பொருளைத் தொகுத் துக் கூறும்போது இக்குறி இடப்பெறும்.

(எ - டு) தொழிலாளர், வணிகர், உழவர், அரசியல் அலு வலர்—எல்லாரும் வந்தனர்.

6. ஒரு சொல்லின் இடையில் சில எழுத்துக்களை விடுத்துச் சுருக்கமாகக் குறிக்கும்போதும், ஒரு தொடரில் சில சொற்களை விடுத்துச் சுருக்கமாகக் குறிக்கும்போதும் இக்குறி இடப்பெறும்.

(எ - டு) எடுத்துக்காட்டு என்பதை (எ-டு) எனவும், உதாரணம் என்பதை (உ-ம்) எனவும், 4 மணி முதல் 5 மணி வரை என்பதை 4 மணி-5 மணி எனவும் குறித்தல்.

வரலாற்றுக் குறி

(:-) இக்குறி வரலாற்றுக்குறி எனப்படும். வரலாறு உரைக்கும்போதும், பொருள்களை வகுத்துக் கூறும் போதும், செய்தி அறிவிக்கும் போதும் தேர்வு வினவிலும் இக்குறி இடப்பெறும்.

(எ - டு) 1. இளங்கோவின் வரலாறு:-
2. தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை யாவன:-

3. அன்பு மிக்க மைந்தனுக்கு அன்னை எழுதுவது:-
4. பின்வரும் தலைப்புக்களில் ஒன்று பற்றிக் கட்டுரை வரைக:-

பயிற்சி

பின்வரும் பகுதிகளைப் படித்து உரிய இடங்களில் பொருத்தமான நிறுத்தற் குறிகளை அமைத்து எழுதுக:-

1. கல்வி கொடை தறுகண் இசைமை என்னும் நான்கும் பற்றிப் பெருமிதம் தோன்றும் எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார்.
2. பொய்கையார் உரையைக்கேட்ட செங்கணன் ஆ சேரமன்னர் தங்கள் மாணவரா தமிழறிந்த அவரைச் சிறைப்படுத்தியது தமிழையே சிறைப்படுத்தியதாகுமே வாருங்கள் இப்போதே அவரைச் சிறைவிடுத்து மன்னிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன் என்று கூறிப் புலவருடன் குடவாயிற் கோட்டம் சென்றான்.
3. கற்பாவது யாது தன் அன்புக்கணவன் கற்பித்த வழியில் ஒழுகுவதே கற்பாகும் கற்பெனப்படுவது சொல்திறம்பாமை என்பது ஔவையார் அமுத மொழி.
4. உலகில் தோன்றியவர்கள் அனைவரும் ஓர் உன்னதமான இலட்சியத்தோடு உயரிய குறிக்கோளோடு வாழவேண்டும்.
5. மக்கள் உணர்ந்து கடைப்பிடிக்கவேண்டிய உறுதிப் பொருள்கள் நான்கு அவையாவன அறம்பொருள் இன்பம் வீடு என்பன இவற்றுள் வீடு என்பது மனத்தால் உணர முடியாதது வாயால் சொல்ல முடியாதது ஆதலின் வள்ளுவர் அதனை விடுத்து ஏனைய மூன்றைப்பற்றி அஃதாவது அறம்பொருள் இன்பம் மட்டுமே தம்நூலில் எடுத்துரைத்துள்ளார் அதனாலேயே திருக்குறளுக்கு முப்பால் என ஒரு பெயர் வழங்குகிறது.

9. மரபு

யானைப் பாகன்
காகம் கரைகிறது.

இத் தொடர்களைக் கவனியுங்கள். யானை மேய்ப்பவனைப் பாகன் என்றே நம் முன்னோர்கள் வழங்கினர்.

நாமும் அம்முறைபற்றி அவனைப் பாகன் என்றே வழங்கி வருகின்றோம். நம் முன்னோர்கள் எப்பொருளை எச் சொல்லால் வழங்கினரோ அவ்வாறே நாமும் அதனை வழங்குவது மரபு எனப்படும். இடையனும் மேய்க்கும் தொழில் புரிகின்றான். ஆதலால் யானை மேய்ப்பவனை இடையன் எனக் கூறுதல் கூடாது. அது மரபு வழூவாம்.

அங்ஙனமே காகம் கரைகிறது என்று வழங்குவதே மரபாகும். காகம் கத்துகிறது என்பது மரபு வழூவாகும்.

இங்ஙனம் நம் முன்னோர்கள் வழங்கிய மரபைக் கடைப்பிடித்து நாமும் பேசவும் எழுதவும் வேண்டும். அம் மரபு கெடப்பேசினால் மொழிநலம் கெடுவதுடன் சில சமயங்களில் நம் கருத்து மற்றவர்க்கு விளங்காமலும் போகும். ஆதலால் இன்றியமையாத சில மரபுச் சொற்களை இங்கு அறிந்துகொள்வீர்களாக.

எடுத்துக்காட்டு

மரபு வழு	திருத்தம்
ஆட்டுப்பாகன்	ஆட்டிடையன்
ஆட்டுக்கன்று	ஆட்டுக்குட்டி
யானைக்குட்டி	யானைக் கன்று
பறவைக்குட்டி	பறவைக்குஞ்சு
கீரிக்குட்டி	கீரிப் பிள்ளை
மான்குஞ்சு	மான்கன்று
தென்னங்கன்று	தென்னம் பிள்ளை
வாழைப்பிள்ளை	வாழைக்கன்று
சிங்கக்கன்று	சிங்கக்குருளை
மாந்தோட்டம்	மாந்தோப்பு
பூந்தோப்பு	பூந்தோட்டம்
வேலந்தோப்பு	வேலங்காடு
நாய்கத்துகிறது	நாய் குரைக்கிறது
புலி கத்துகிறது	புலி உறுமுகிறது
யானை கர்ச்சிக்கிறது	யானை பிளிறுகிறது.
குதிரை கத்துகிறது	குதிரை கனைக்கிறது
கழுதை கனைக்கிறது	கழுதை கத்துகிறது
மயில் கூவுகிறது	மயில் அகவுகிறது
குயில் கத்துகிறது	குயில் கூவுகிறது
கிளி கத்துகிறது	கிளி கொஞ்சுகிறது
பூக்கிள்ளினாள்	பூப் பறித்தாள்
வெற்றிலை பறித்தாள்	வெற்றிலை கிள்ளினாள்

பழம் உண்	பழம் தின்
சோறு சாப்பிடு	சோறு உண்
பால் சாப்பிடு	பால் பருகு
பாட்டுச் சொல்	பாட்டுப்பாடு
வேல் எய்தான்	வேல் எறிந்தான்
அம்பு எறிந்தான்	அம்பு எய்தான்
பனை இலை	பனை ஓலை
மா ஓலை	மா இலை
பனம் பிஞ்சு	பனங்குரும்பை
வாழைக் குரும்பை	வாழைப் பிஞ்சு
ஆட்டுச் சாணம்	ஆட்டுப் பிழுக்கை
மாட்டுப் பிழுக்கை	மாட்டுச் சாணம்

10. உவமைகளும் பழமொழிகளும் வைத்து எழுதல்

1. தாயுமானவர் **தாமரை இலை நீர்போல** இல்லற வாழ்க்கையில் பற்றின்றி வாழ்ந்து வந்தார்.

2. **இளங்கன்று பயமறியாது** என்பதற்கு ஏற்ப நெடுஞ்செழியன் தனியனாய்த் தன்னை எதிர்த்த எழுவருடன் போர்புரிந்தான்.

இவ்வாக்கியங்களைக் கவனியுங்கள். முதல் வாக்கியத்தில் தாயுமானவரின் பற்றற்ற தன்மையை விளக்கத் 'தாமரை இலைநீர்போல' என்ற உவமை ஆளப்பட்டுள்ளது.

இரண்டாம் வாக்கியத்தில் நெடுஞ்செழியன் இளமையிலேயே பெருவீரனாக விளங்கினான் என்பதை விளக்க 'இளங்கன்று பயமறியாது' என்ற பழமொழி எடுத்தாளப் பட்டுள்ளது.

இங்ஙனம் பொருத்தமான உவமைகளையும் பழமொழிகளையும் அமைத்துப் பேசுவதாலும் எழுதுவதாலும் சொல்லக்கருதிய கருத்து மற்றவர்க்கு நன்றாக விளங்குவதுடன் நடையழகும் ஏற்படும்.

முன் வகுப்புக்களில் சில உவமைகளையும் பழமொழிகளையும் அமைத்து எழுதும் முறையை அறிந்தீர்கள். இங்கு மேலும் சிலவற்றை அறிந்துகொள்வீர்களாக :

உவமைகளைவைத்து எழுதல் :

1. இராமனும் இலக்குவனும் விசுவாமித்திரருடைய வேள்வியைக் கண்ணை இமை காப்பதுபோலக் காத்தனர்.
2. சேற்றிலே முளைத்த செந்தாமரைபோலக் கற்பரசியாகிய மாதவி இழிந்த கணிகையர் குலத்தில் பிறந்தாள்.
3. கோவலன் மறைவால் கண்ணகி கொழு கொம்பற்ற கொடிபோல வாடி வருந்தினள்.
4. காந்தியடிகளின் பெருமை குன்றிலிட்ட விளக்குப் போல உலகெங்கும் பரவியுள்ளது.
5. சிறையிருந்த சீதை மழைமுகம் காணாப் பயிர்போல இராமனை எதிர்பார்த்து ஏங்கிக்கிடந்தாள்.

பழமொழிகளைவைத்து எழுதுதல்

1. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு ஆகுமா? என்பதுபோல வாழ்க்கைக்குப் பயன்படாத கல்வியால் என்ன பயன்?
2. இஞ்சி லாபம் மஞ்சளில் என்பதுபோல உணவு நெருக்கடியைப் பயன்படுத்திக் கொள்ளை இலாபம் அடித்த தனக்கோடி அப்பணத்தையெல்லாம் குதிரைப் பந்தயத்தில் இழந்துவிட்டான்.
3. தருமி கொண்டு சென்ற பாட்டில் நக்கீரர் குற்றம் கூறிப் பரிசு வழங்குவதைத் தடுத்துவிட்டமையால் அவன் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் ஏமாற்றமடைந்தான்.
4. படித்தவர்கள் இல்லாத ஊரில் அரைகுறைப் படிப்பாளிக்கும் பெருமை அதிகம். ஆலை இல்லாத ஊருக்கு இருப்பைப்பூ சர்க்கரை யன்றோ?
5. தன் சபையில் தன்னைப் பழித்துப்பேசிய அநுமனைக் கொல்லமுயன்ற இராவணனுக்கு 'எய்தவனிருக்க அம்பை நோவானேன்?' என்று வீடணன் அறிவுரை கூறினன்.

பயிற்சி

பின்வரும் உவமைகளையும் பழமொழிகளையும் பொருள் விளங்க நும் சொந்த வாக்கியங்களில் பயன்படுத்தி எழுதுக :—

உவமைகள்

1. அத்திபூத்தாற்போல
2. ஆலைவாய்க் கரும்புபோல
3. இலவுகாத்த கிளிபோல
4. இலைமறை காய்போல
5. உடும்புப் பிடிபோல
6. ஊமைகண்ட கனாப்போல
7. எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியதுபோல
8. எறும்புப் புற்றில் பாம்பு குடிபுகுந்ததுபோல
9. கண்ணில்லான் பெற்று இழந்தாற்போல
10. கலப்பாலில் துளி நஞ்சுபோல
11. கனியிருக்கக் காயை விரும்புவதுபோல
12. காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்ததுபோல
13. கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோல
14. குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டதுபோல
15. கொல்லன் தெருவில் ஊசி விற்பதுபோல
16. பழம் நழுவிப் பாலிற் விழுந்தாற்போல
17. மடைதிறந்த வெள்ளம்போல
18. முழுப்பூசனிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல
19. நெருப்பிலிட்ட புழுப்போல
20. விழலுக்கிறைத்த நீர்போல

பழமொழிகள்

1. அழுதபிள்ளை பால்குடிக்கும்
2. ஆக்கப்பொறுத்தவன் ஆறப் பொறானா?
3. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
4. இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியுமா?
5. உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
6. ஊர்வாயை மூட உலைமூடி இல்லை
7. ஏழை பேச்சு அம்பலம் ஏறாது
8. கனவில் கண்ட பணம் செலவிற்கு உதவுமா?
9. காலைச்சுற்றின பாம்பு கடியாமல் விடாது
10. குரைக்கிற நாய் வேட்டைக்கு உதவுமா?
11. சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்
12. சுண்டைக்காய் காற்பணம் சுமைக்கூலி முக்காற்பணம்
13. தலையிருக்க வால் ஆடுமா?
14. தான்பிடித்த முயலுக்கு மூன்றே கால்
15. திக்கற்றவருக்குத் தெய்வமே துணை
16. நத்தையின் வயிற்றிலும் முத்துப்பிறக்கும்
17. நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு

18. பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்
19. பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்
20. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

11. உவமை உருவக மாற்றம்

பவளம் போன்ற வாய்

வாயாகிய பவளம்

இத்தொடர்களைக் கவனியுங்கள். பவளம் போன்ற வாய் என்பதில் வாய்க்குப் பவளம் ஒப்புமையாகக் கூறப்பட்டுள்ளது. இங்ஙனம் ஒரு பொருளோடு மற்றொரு பொருளுக்கு உள்ள ஒப்புமை தோன்றக்கூறுவது **உவமை** எனப்படும். இத்தொடரில் பவளம் உவமை; வாய் உவமேயம்; போன்ற என்பது இரண்டுக்கும் உள்ள ஒப்புமையைக் காட்டும் சொல்.

வாயாகிய பவளம் என்ற தொடரில் வாய் என உவமேயமும், பவளம் என உவமானமும் இருந்தாலும் அவை வெவ்வேறு பொருள் எனத் தோன்றாமல் வாயே பவளம், பவளமே வாய் என இரண்டும் ஒன்றே எனத் தோன்றுமாறு கூறப்பட்டுள்ளன. இங்ஙனம் உவமானம் வேறு, உவமேயம் வேறு எனத் தோன்றாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்ற உவமானத்தின் தன்மையை உவமேயத்தில் ஏற்றிக் கூறுவது **உருவகம்** எனப்படும்.

உவமையில் உவமானம் முன்னும் உவமேயம் பின்னும் வரும். உருவகத்தில் உவமேயம் முன்னும் உவமை பின்னும் வரும். சிறுபான்மை வேறுவகை யாகவும் அமையலாம்.

உவமையை உருவகமாக மாற்றல்

உவமை	உருவகம்
தாமரை போன்ற முகம்	முகமாகிய தாமரை
வேல் போன்ற விழி	விழியாகிய வேல்
தேன் போன்ற மொழி	மொழியாகிய தேன்
மலர்க்கண்	கண் மலர்
மதிமுகம்	முக மதி
பவளவாய்	வாய்ப் பவளம்

உருவகத்தை உவமையாக மாற்றல்

உருவகம்	உவமை
நூல்களாகிய கடல்	கடல் போன்ற நூல்கள்
உவகையாகிய தேன்	தேன் போன்ற உவகை
கையாகிய காந்தள்	காந்தள் போன்ற கை
அடி மலர்	மலரடி
புருவச்சிலை	சிலைப்புருவம்
குழற்கார்	கார்க்குழல்

வேறுவகை மாற்றம்

மக்களுக்குக் கல்வி கண் போன்றது — உவமை
மக்களுக்குக் கல்வியே கண் —உருவகம்
பெண்களுக்குக் கற்பே உயிர் —உருவகம்
பெண்களுக்குக் கற்பு உயிர்போன்றது — உவமை

இவ்வாறு உவமையை உருவகமாகவும் உருவகத்தை உவமையாகவும் மாற்றியமைக்கலாம்.

பயிற்சி

பின்வரும் உவமைகளை உருவகங்களாகவும், உருவகங்களை உவமைகளாகவும் மாற்றுக :

1. மதிவதனம்
2. கரகமலம்
3. திரைக்கரம்
4. வேய்த்தோள்
5. கமலக்கண்
6. குழற்காடு
7. துடியிடை
8. வரைப்புயம்
9. பால்மொழி
10. பிறவிக்கடல்
11. முகமதி
12. கைத்தளிர்
13. சிலைநுதல்
14. கயற்கண்

12. வல்லெழுத்து மிகும் இடங்களும் மிகா இடங்களும்

மாணவர்கள் எழுதும்போது வல்லினம் மிகும் இடங்களையும் மிகா இடங்களையும் அறிந்து எழுதவேண்டும். இன்றேல் இலக்கணப் பிழையாவதுடன், சில சமயங்களில் பொருளும் தவறாகும். முன் வகுப்புக்களில் வல்லினம் மிகும் இடங்கள், மிகா இடங்கள் எவை என விளக்கமாக

அறிந்துள்ளீர்கள். அவற்றை இங்குச் சுருக்கமாக நினைவு படுத்திக்கொள்ளுங்கள்.

வலிமிகும் இடங்கள் :

1. இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை விரிகள், 2. ஆறு, ஏழாம் வேற்றுமைத் தொகைகள், 3. இரண்டு, மூன்று, ஐந்து, ஆறு, ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைகள், 4. பண்புத்தொகை, இரு பெயரொட்டுப் பண்புத்தொகை, உவமைத்தொகைகள், 5. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்ச வினையெச்சங்கள், 6. அ, இ, ய் என்னும் ஈற்றையுடைய வினையெச்சங்கள், 7. வன்றொடர்க்குற்றியலுகரங்கள், 8. அ, இ, உ, எ என்ற சுட்டு வினாக்கள், 9. அந்த, இந்த, எந்த, அப்படி, இப்படி, எப்படி என்ற சொற்கள், 10. உயிரீற்று நிலைமொழிகள் ஆகியவற்றின் முன் வல்லினம் மிகும் என முன்னர்ப் படித்தீர்கள்.

இவை தவிர வல்லினம் மிகும் இடங்களில் மேலும் சிலவற்றை இங்குத் தெரிந்து கொள்வீர்களாக.

1. தீ+பற்றியது—தீப்பற்றியது
பூ+பறித்தாள்—பூப்பறித்தாள்
ஈ+கால்—ஈக்கால்
மீ+கூற்று—மீக்கூற்று

இங்ஙனம் வரும் ஓரெழுத் தொரு மொழிகளின் முன் வல்லினம் மிகும்.

2. இனி+காண்போம்—இனிக் காண்போம்
தனி+தொழில்—தனித்தொழில்
மற்றை+செல்வம்—மற்றைச்செல்வம்
மற்று+பற்று—மற்றுப்பற்று

இங்ஙனம் இனி, தனி, மற்றை, மற்று என்னும் சொற்களின் முன் வல்லினம் மிகும்.

3. அன்றை+தினம்—அன்றைத்தினம்
இன்றை+செய்தி—இன்றைச்செய்தி
அற்றை+திங்கள்—அற்றைத்திங்கள்
இற்றை+கூலி—இற்றைக்கூலி
பண்டை+காலம்—பண்டைக்காலம்

இங்ஙனம் அன்று, இன்று, பண்டு என்னும் குற்றிய லுகரச்சொற்கள் 'ஐ' காரச் சாரியை பெற்று வரும்போது அவற்றின் முன் வல்லினம் மிகும்.

4. மரத்து+கிளை—மரத்துக்கிளை
பதிற்று+பத்து—பதிற்றுப்பத்து

இங்ஙனம் அத்து, இற்று என்னும் சாரியைபெற்ற சொற்களுக்கு முன் வல்லினம் மிகும்.

5. நாடு+பற்று—நாட்டுப்பற்று
ஆறு+பாய்ச்சல்—ஆற்றுப்பாய்ச்சல்
தவிடு+பானை—தவிட்டுப்பானை
வயிறு+பசி—வயிற்றுப்பசி

இங்ஙனம் டு, று என்னும் ஈற்றையுடைய நெடில் தொடர், உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கள் ஒற்று இரட் டித்துப் புணரும்போது அவற்றின்முன் வல்லினம் மிகும்.

6. நஞ்சு+பை—நச்சுப்பை
இரும்பு+தூண்—இருப்புத்தூண்

இங்ஙனம் மென்றொடர்க் குற்றியலுகரச் சொற்கள் வருமொழியோடு புணரும்போது, நச்சு, இருப்பு என வன் றொடர்க் குற்றியலுகரங்களாய் மாறும். அவற்றின் முன் வல்லினம் மிகும்.

7. தாய்+குலம்—தாய்க்குலம்
பயிர்+தொழில்—பயிர்த்தொழில்
தமிழ்+தாய்—தமிழ்த்தாய்

இங்ஙனம் வினைத்தொகையல்லாத பிறதொகைகளில் ய், ர், ழ், என்னும் ஈற்றையுடைய சொற்களுக்கு முன் வல்லினம் மிகும். (தோய் தயிர், இமிழ்கடல், தீர்பொருள் என வினைத்தொகையில் மிகாது.)

வலிமிகா இடங்கள்

1. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிர்ந்த ஏனைப் பெயரெச்சங்கள், 2. 'படி' என்று முடியும் வினை யெச்சங்கள், 3. எழுவாய், விளித்தொடர்கள், 4. மூன்று, ஐந்து, ஆறும் வேற்றுமை விரிகள், 5. இரண்டாம் வேற்று மைத்தொகை, வினைத்தொகை, உம்மைத்தொகைகள் 6. வன்றொடர்க்குற்றியலுகரம் தவிர்த்த ஏனைய குற்றியலுக ரங்கள், 7. வியங்கோள், ஏவல் வினைமுற்றுக்கள்,

8. அது, இது, எது என்னும் சுட்டு வினைப் பெயர்கள், 9. ஆ, ஏ, ஓ என்னும் இடைச்சொற்கள், ஆ, யா என்னும் ஈற்று வினைக்கள் ஆகிய இவற்றின் முன் வல்லினம் மிகாது என முன் படித்துள்ளீர்கள்.

இவை தவிர வல்லினம் மிகாத இடங்களில் மேலும் சிலவற்றை இங்குத் தெரிந்துகொள்வீர்களாக.

1. பல+கலைகள்—பலகலைகள்
சில+செயல்கள்—சில செயல்கள்

இங்ஙனம் பல, சில என்னும் சொற்களுக்கு முன் வல்லினம் மிகாது.

2. இரண்டு+பொருள்—இரண்டு பொருள்
மூன்று+பணம்—மூன்று பணம்

இங்ஙனம் எட்டு, பத்து என்பன அல்லாத எண்ணுப் பெயர்களுக்குமுன் வல்லினம் மிகாது.

3. நம்பி+பெரியன்—நம்பி பெரியன்
நங்கை+சிறந்தவள்—நங்கை சிறந்தவள்
அரசர்+சென்றார்—அரசர் சென்றார்

இங்ஙனம் உயர்திணைப் பெயர்களின்முன் வல்லினம் இயல்பாகப் புணரும்.

4. தின்றனை+சாத்தா—தின்றனை சாத்தா
உண்டாய்+கொற்றா—உண்டாய் கொற்றா
வந்தனிர்+சான்றீர்—வந்தனிர் சான்றீர்
நட+கொற்றா—நடகொற்றா

இங்ஙனம் முன்னிலை வினை, ஏவல் வினைகளின் முன் வல்லினம் இயல்பாகப் புணரும்.

5. ஆ+சென்றது—ஆ சென்றது
மா+பெரியது—மா பெரியது

இங்ஙனம் ஆ, மா என்னும் ஓரெழுத்து ஒருமொழிகளின் முன் அல்வழிப் புணர்ச்சியில் வல்லினம் இயல்பாகப் புணரும்.

6. நாளன்று+போகி—நாளன்று போகி
உப்பின்று+புற்கை—உப்பின்று புற்கை

இங்ஙனம் அன்றி, இன்றி என்னும் வினை யெச்சங்கள் செய்யுளில் அன்று, இன்று என வரும்போது அவற்றின் முன் வல்லினம் இயல்பாம்.

7. வேய்+பெரிது—வேய் பெரிது
வேர்+சிறிது—வேர் சிறிது
தமிழ்+சிறந்தது—தமிழ் சிறந்தது

இங்ஙனம் ய், ர், ழ் என்னும் எழுத்துக்களை ஈற்றில் கொண்ட சொற்கள் எழுவாய்த் தொடராயின் அவற்றின் முன் வல்லினம் இயல்பாம்.

பயிற்சி

1. வல்லினம் மிகும் இடங்கள் சில கூறி எடுத்துக் காட்டுக்கள் தருக.

2. பின் வருவனவற்றைச் சேர்த்து எழுதிக் காரணம் கூறுக.

பாட்டு+பாடினன், மல்லிகை+தோட்டம், முரடு+காளை, சோறு+திரள், மார்கழி+திங்கள், தமிழ்+பாட்டு, மற்றை+தொழில், உண்ண+சென்றான், தேடி+பார்த்தான், தயிர்+பானை, காணு+காட்சி, இப்படி+செய்தான்.

3. வல்லினம் மிகா இடங்கள் சில கூறி எடுத்துக் காட்டுக்கள் தருக.

4. பின் வருவனவற்றைச் சேர்த்து எழுதிக் காரணம் கூறுக.

செய்த+செயல், படிக்கும்படி+கூறினர், கிளி+பேசியது, பந்து+தந்தான், நாடு+பெரிது, வாழ்க+கண்ணன், இராமனு+சென்றான், எது+சிறந்தது, இது+பெரியது, நான்கு+தோட்டம், பல+தொழில், அவர்+சென்றார், படி+கந்தா.

13. இடம் விட்டு எழுதுதலும் சேர்த்து எழுதுதலும்

தலைவிதிவசம்—இதனைத் தலை விதிவசம் என இடம் விட்டு எழுதினால் தலையெழுத்தின்படி என்று பொருள் தருகின்றது. தலைவி திவசம் என இடம் விட்டு எழுதிவிட்டால் மனைவியின் திவசம் என்றாய் விடுகிறது.

மாசம்பத்துவரும்—இதனை மாசம் பத்து வரும் என இடம்விட்டெழுதினால் மாதம் பத்து ரூபா வரும் எனப் பொருள் தரும். மா சம்பத்து வரும் என இடம் விட்டு எழுதினால் பெரிய செல்வம் வரும் என்றாய் விடுகிறது.

வாரும் இரும் படியும்—இத்தொடர் வாருங்கள் அமருங்கள் படியுங்கள் எனப் பொருள் தருகிறது. இதனை வாரும் இரும்படியும் என முன்னர் இடம் விட்டும் பின்னர்ச் சேர்த்தும் எழுதிவிட்டால் வாருங்கள் இரும்பை அடியுங்கள் என்று பொருள்பட்டுவிடும்.

நீவாராமாமாராவாநீ—இங்குச் சொற்கள் இடம் விடாமல் சேர்த்து எழுதப்பட்டுள்ளன. அதனால் இத்தொடரைப் படிக்கவே முடியவில்லை; பொருளும் விளங்கவில்லை. இதனை நீவா ராமா மாரா வாநீ எனப் பொருள் விளங்க இடம் விட்டு எழுதினால் இராமா நீ வருவாயாக, மன்மதனைப் போன்றவனே நீ வருவாயாக எனப் பொருள் நன்கு விளங்குகிறது. எளிமையாகப் படிக்கவும் முடிகிறது.

அவன் அறிவில் லாதவன்—இங்ஙனம் பிரித்தெழுதினால் அறிவில் சூரியன் எனப் பொருள் பட்டுக் கருதிய பொருளை விளக்கவில்லை. அறிவில்லாதவன் எனச் சேர்த்தெழுதினாலேயே அறிவற்றவன் எனப்பொருள் விளங்குகிறது.

இவற்றிலிருந்து எழுதும்போதே நம் கருத்து எதுவோ அதை விளக்கக் கூடிய வகையில் எங்கு இடம் விடவேண்டுமோ அங்கு இடம் விட்டும், எங்குச் சேர்த்து எழுத வேண்டுமோ அங்குச் சேர்த்தும் எழுத வேண்டும். அப்போதுதான் நம் கருத்தைப் படிப்பவர் எளிதாக அறிந்து கொள்ள முடியும். மனம் போன போக்கில் சேர்க்கக் கூடாத இடங்களில் சேர்த்தும், சேர்த்து எழுதவேண்டிய இடங்களில் இடம் விட்டும் எழுதினால் படிப்பவர்க்கு ஐயமும் குழப்பமுமே விளையும்.

கூறப்படும் கருத்து படிப்பவர்க்குத் தெளிவாக உள்ளத்தமைவதற்கு வாக்கியங்களைச் சொல்லுக்குச் சொல் இடம் விட்டு எழுதுவதோடு, பொருள் நோக்கிச் சொற்களைத் தொகுதியாகச் சேர்த்து எழுத வேண்டிய இடங்களில் சேர்த்தும் எழுத வேண்டும். இதற்காகவே எழுதும் போது நிறுத்தக் குறிகளையும் பயன்படுத்துகிறோம்.

கீழ்க்காணும் பகுதியைப் படித்துப் பாருங்கள்:

நம்தாய் மொழி யாகிய தமிழின்ன காலத்திற் றோன் றிய தென்று வரை யறுக்க முடியாதவத் துணைப் பழமை வாய்ந்த தாகும். ஏறக் குறைய இரண் டாயிர மாண்டு

களின்முற் பட்ட சங்கவிலக்கியங் களையும் அவற்றினு முந்திய தாகிய தொல் காப்பியத் தையும் வைத்து நோக்கு மிடத்துப்பல் லாயிர மாண்டுகளின் முன்பே தமிழ் உயரிய நிலையையடைந் துள்ளமை புலனாகின்றது.

இப்பகுதி பொருளின் போக்கை யொட்டி எங்கெங்கு இடம் விட்டு எழுதவேண்டுமோ அங்கு இடம் விடாமலும் எங்கெங்கு சேர்த்து எழுதவேண்டுமோ அங்குச் சேர்த்து எழுதாமலும் எழுதப்பட்டுள்ளமையால் படிப்பவர்க்குத் தெளிவாகப் பொருள் விளங்கவில்லை. இப்பகுதியைப் பின் வருமாறு எழுதினால் பொருள் நன்கு விளங்குதல் காண்க.

நம் தாய் மொழியாகிய தமிழ் இன்ன காலத்தில் தோன்றியது என்று வரையறுக்க முடியாத அத்துணைப் பழமை வாய்ந்ததாகும். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளின் மேற்பட்ட சங்க இலக்கியங்களையும், அவற்றினும் முந்தியதாகிய தொல்காப்பியத்தையும் வைத்து நேக்குமிடத்துப் பல்லாயிரம் ஆண்டுகளின் முன்பே தமிழ் உயரிய நிலையை அடைந்துள்ளமை புலனாகின்றது.

இங்ஙனம் பொருள் நோக்கி இடம் விட்டு எழுத வேண்டிய இடங்களில் இடம் விட்டும் சேர்த்து எழுத வேண்டிய இடங்களில் சேர்த்தும் எழுதினால்தான் பொருள் நன்கு விளங்கும்.

14. சொற்களை இடம்விட்டு எழுதுதலும் சேர்த்து எழுதுதலும்

சொற்றொடர்களை உரிய இடங்களில் இடம் விட்டும் சேர்த்தும் எழுதுவதுபோலச் சொற்களையும் கவனித்து எழுத வேண்டும்.

பலகை—இது உட்காரப் பயன்படும் மணையைக் குறிக்கும். இதனைப் பல கை என இடம்விட்டு எழுதினால் பல கைகள் என்று பொருள் பட்டுவிடும்.

பொய்கை—இது குளம் எனப் பொருள் தரும் சொல். இதனைப் பொய் கை என இடம் விட்டு எழுதினால் பொய்யான கை எனப் பொருள் தந்து விடும்.

பழங்கள்—இது கனிகளைக் குறிக்கும். பழங் கள் என இடம்விட்டு எழுதினால் பழமையான மது என்று பொருள் தந்துவிடும்.

பரிவால்—இது அன்பால் எனப் பொருள் தரும். இதனைப் பரி வால் என இடம் விட்டு எழுதினால் குதிரையின் வால் என்றாகி விடும்.

அந்தமான்—இது ஒரு தீவைக்குறிக்கும். அந்த மான் என இடம் விட்டு எழுதினால் தொலைவில் உள்ள மானைக் குறிப்பதாய்விடும்.

ஆகவே நாம் கருதிய பொருளைத் தெளிவாக விளக்கும் வகையில் ஒழுங்காக இடம் விட்டும் சேர்த்தும் எழுதினால் தான் படிப்பவர்க்கு நம் கருத்து நன்கு விளங்கும். சேர்த்து எழுத வேண்டிய சொல்லுக் கிடையில் இடம் விட்டு எழுதினால் அது சொற்றொடராய் நம் கருத்தை விளக்காமல் படிப்பவர்க்குக் குழப்பத்தை விளைவிக்கும். ஆதலால் சொற்களை எழுதும்போது கவனமாக எழுதவேண்டும்.

கட்டுரைப் பயிற்சி

மாணவர்களுடைய மொழித்திறமையை வெளிப்படுத்துவது அவர்கள் எழுதும் கட்டுரையே யாகும். இனிய எளிய அழகிய நடையில் கருத்து வளம் செறிந்த கட்டுரைகளை மாணவர்கள் எழுதிப் பழக வேண்டும். அதற்கு வகுப்பில் படிக்கும் பாடங்களோடு நூல் நிலையங்களில் உள்ள சிறந்த ஆசிரியர்கள் எழுதிய பலவகை நூல்களையும், நாளிதழ், வார இதழ், மாத இதழ்களையும் படித்துப் பொது அறிவை வளர்த்துக் கொள்ளுதல் இன்றியமையாததாம். சிறந்த கட்டுரைகளையும் நூல்களையும் படிப்பதனல் கட்டுரை வன்மை இயல்பாகவே கைவரப் பெறும்.

கட்டுரை எழுதும்போது கவனிக்க வேண்டிய செய்திகளைப் பற்றி விளக்கமாக முன் வகுப்புக்களில் படித்துள்ளீர்கள். அம்முறைகளை எல்லாம் நினைவுபடுத்திக் கொள்வீர்களாக. இவ்வகுப்புக்கென அரசியலார் வகுத்த பாடத்திட்டத்தை யொட்டி ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு மாதிரி தரப்பட்டுள்ளது. இக் கட்டுரைகளையெல்லாம் ஊன்றிக் கவனித்துக் கற்று இவைபோல வேறு கட்டுரைகள் எழுதிப் பழகுதல் மாணவர்கட்கு நன்மை பயக்கும்.

1. செய்தித்தாள்களுக்குச் செய்திப் பத்திகள் எழுதி அனுப்புதல்

இன்றை மக்கள் வாழ்வில் செய்தித்தாள்கள் முக்கியமாக உள்ளன. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் செய்தித்தாள்கள் வாயிலாக மக்கள் உடனுக்குடன் அறிந்து பயன் பெறுகின்றனர். பள்ளிகளில் நடைபெறும் விழாக்கள், சிறப்பு நிகழ்ச்சிகள் போன்றவற்றைத் தக்க முறையில் செய்திப் பத்திகளாக எழுதி நாளிதழ்களுக்கு அனுப்பிவைத்தால், அவற்றில் கலந்துகொள்ள இயலாதவர்களும் அவற்றை உணர்ந்து இன்புறுவர். ஆகவே மாணவர்கள் செய்தித் தாள்களுக்

குச் செய்திகளை எழுதி அனுப்பும் முறையை அறிந்து கொள்ளுதல் நலம் பயக்கும்.

1. நாளிதழ்களுக்கு எழுதி அனுப்பும் செய்திகள் சுருக்கமாகவும், தெளிவாகவும், படிப்பவர் மனத்தைக் கவரக் கூடிய வகையிலும் இருத்தல் வேண்டும்.
2. பொருத்தமான தலைப்புக்களிட்டு எழுதல் கற்பவர் மனத்தைக் கவரும்.
3. நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளாயின் நடைபெற்ற இடம், நாள், காலம், கலந்துகொண்டவர் பெயர் முதலியவற்றை விளக்கமாக எழுதி அனுப்ப வேண்டும்.
4. செய்திகளை அனுப்பும் போது அவற்றை வெளியிடுமாறு வேண்டி ஆசிரியர்க்குத் தனியாக ஒரு வேண்டுகோள் எழுதியனுப்புதல் நல்லது.

செய்திப் பத்தி—மாதிரி 1

மாணவர் கழக ஆண்டு விழா

சென்னை .... உயர்பள்ளி மாணவர் கழக ஆண்டு விழா 29-3-67 புதன் கிழமையன்று சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் மு. வரதராசனர் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

தலைமையாசிரியர் தலைவருக்கும் மற்றவர்க்கும் நல்வரவு கூறினர். மாணவர் கழகச் செயலாளர் மாணவர் கழகம் இந்த ஆண்டு ஆற்றிய அரும்பணிகளைக் குறிக்கும் ஆண்டறிக்கையைப் படித்தார். பின்னர் இந்த ஆண்டு நடைபெற்ற பல்வேறு வகைப் போட்டிகளிலும் பரிசு பெற்ற மாணவர்களுக்குத் தலைவர் பரிசுகள் வழங்கிப் பாராட்டினர்.

மாணவர் கழகம் ஆற்றி வரும் அருந்தொண்டுகளைப் பாராட்டி வாழ்த்திய டாக்டர் மு. வ. அவர்கள், மாணவர்கள் தாய்மொழிப் பற்றுடையவர்களாய்த் தமிழ் நூல்களைக் கற்க வேண்டுவதன் இன்றியமையாமையை வற்புறுத்தினர். எழுத்திலும் பேச்சிலும், செயல் திறனிலும், மாணவர்கள் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். இன்றைய அரும்பே நாளைய மலர் ஆதலால் எதிர்காலக் குடி

மக்களாக இருக்கும் மாணவர்கள் அதற்கேற்ற தகுதிகளை மாணவப் பருவத்திலேயே உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

மாணவர் கழகச் செயலாளர் நன்றி கூற நாட்டு வாழ்த்துடன் விழா இனிது முடிந்தது.

மாதிரி 2

விழா நிகழ்ச்சியை முன்பே நாளிதழுக்கு எழுதி அனுப்புதல்

மாணவர் கழக ஆண்டு விழா

சென்னை .... உயர்பள்ளி மாணவர் கழக ஆண்டு விழா 29-3-67 புதன் கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமை வகித்துக் கழகம் நிகழ்த்திய போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்கட்குப் பரிசுகள் வழங்கி நல்வாழ்த்துக் கூறுவார். அன்பர்கள் திரளாக வந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

பயிற்சி

இவைபோல உங்கள் பள்ளியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், வேறு பொது நிகழ்ச்சிகள் குறித்து நாளிதழ்களுக்குச் செய்திகள் எழுதிப் பழகுக.

2. வருணனைக் கட்டுரை

[மலை, ஆறு, கடல் போன்ற இயற்கைக் காட்சிகளையும் செயற்கைக் காட்சிகளையும் வருணித்து எழுதல்.]

மாதிரி

நீலகிரி

தமிழகம் இயற்கை வளம் செறிந்த நாடாகும். கண்களுக்கு இனிமை வழங்கும் பச்சைப் பசேல் என்ற வயல்களும், பூத்துக் குலுங்கும் மலர்ச் சோலைகளும், தோப்புகளும், தோட்டங்களும், அவற்றினிடையே தவழ்ந்தும் நெளிந்தும் ஓடும் சிற்றாறுகளும் பேராறுகளும், வானுற உயர்ந்து வளங்கொழிக்கும் மலைகளும் கொண்டது இந்நாடு. கவின் மிகுந்த இத் தமிழகத்தில் இயற்கை அன்னை களி

நடம் புரிகின்ருள். அந்த இயற்கை அழகை முழுமை யாகச் சுவைக்கக் கூடிய இடங்களில் நீலகிரி முதன்மை யானதாகும்.

நீலகிரி என்பதற்கு நீலமலை என்பது பொருள். இம் மலையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை எங்கு நோக்கினும் வானுற வளர்ந்த பலவகை மரங்களும் செடி கொடிகளுமே நிறைந்துள்ளன. அதனல் இம்மலை பசும் பட்டாடை போர்த்துக் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. இங்ஙனம் கண்களுக்கும் கருத்துக்கும் பசுமையை வழங்கிக் குளிர் விக்கும் இம்மலையை நீலகிரி என்று வழங்கியது பொருத்த மானதேயாகும்.

இம்மலை கடல் மட்டத்திற்குச் சுமார் இரண்டாயிரம் மீட்டர் உயரத்தில் உள்ளது. இதனலேயே வேனிற்காலத் தில் இவ்விடம் மிக்க குளிர்ச்சியாக இருக்கின்றது. அதனல் மிகப் பழங்காலத்திலிருந்தே மக்கள் இம்மலையை வேனிற் கால இன்ப வாழ்க்கைக்குரிய இடமாகப் பயன்படுத்தி வந் துள்ளனர். **செங்குட்டுவன்** என்ற சேரப் பெருமன்னன் வடநாட்டின் மீது படையெடுத்துச் சென்ற சமயத்தில் இம் மலையில் சில நாட்கள் தங்கி இன்புற்ருன் என்று சிலப்பதி காரம் கூறுகிறது. இம்மலையில் பற்பல இடங்களில் சிற்றூர் களும் பேரூர்களும் பல ஏற்பட்டுள்ளன. அவற்றுள் **உதக மண்டலம், குன்னூர்** முதலியவை குறிப்பிடத் தக்கன.

நீலகிரியில் உயரமான மலைப்பகுதிகளும் ஆழமான பள்ளத்தாக்குகளும் அங்கங்கே அமைந்துள்ளன. மலைச் சரிவுகளில் காப்பி, தேயிலை, உருளைக் கிழங்குத் தோட்டங் கள் கண்ணுக்கெட்டிய வரை காட்சியளிக்கும். இங்குள்ள பலாமரங்களில் பலாப்பழங்கள் கொத்துக் கொத்தாகக் குலுங்கும் காட்சி நம்மூர்களில் மாம்பழங்கள் பழுத்துத் தொங்குவதை நினைவூட்டும். தேக்கு, கருங்காலி, தேவதாரு, யூகலிப்டஸ் போன்ற மிகப்பெரிய மரங்கள் இம்மலையில் நெருங்கி வளர்ந்துள்ளன. பல நிறமான மலர்களும் இம் மலையைப் போர்த்திருத்தல் போல மலர்ந்து விளங்கும். அக் காட்சியைக் காண்பவர் இது மலர்க் குன்ருே என மயங்கி நிற்பர்.

மலையடிவாரத்தில் **மேட்டுப்பாளையம்** என்னும் ஊர் உள்ளது. அங்கிருந்து மலையின் மீது ஏறுவதற்கு மிகச்

சிறந்த சாலை அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலை மலைச்சரிவில் வளைந்து வளைந்து செல்கிறது. அக்காட்சி தூரத்திலிருந்து காண்பவர்க்கு மலைமீது ஏறுவதற்குப் படிகள் அமைத்திருப்பது போலத் தோன்றும். சில இடங்களில் சாலை நேரே சென்று திடீரென்று முழுவதும் வளைந்து திரும்புகிறது. இவ்விடங்கள் மேலிருந்து காண்பவர்க்கு மிக்க வியப்பூட்டும். இச் சாலைகளின் வழியே பேருந்து வண்டிகளில் பயணம் செய்தால் வழி முழுதும் இயற்கை வழங்கும் இன்பக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தவாறே செல்லலாம்.

உதகமண்டலத்திற்குச் செல்லும் புகைவண்டிப்பாதையும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். இப்பாதையின் ஒரு பக்கம் வானத்தை அளாவும் உயரமான மலைகளாகவும், மற்றொரு பக்கத்தில் கிடுகிடு பாதாளமாகவும் இருக்கும். மலைச்சரிவுகளின் ஓரமாக அமைக்கப்பட்ட இப்பாதையின் வழியே செல்லும்போது அச்சம் கலந்த வியப்புணர்வு நம்மை ஆட்கொள்ளும்.

நீலகிரியில் அமைந்த ஊர்களில் உதகமண்டலம் மிகவும் அழகானதாகும். இது தென்னிந்திய வேனிற்கால வாசத்தலங்களில் சிறந்ததாகும். இவ்வூரைச்சுற்றிலும் பல சிகரங்கள் உள்ளன. அவற்றுள் ‘தொட்டபெட்டா’ என்ற சிகரம் மிக உயர்ந்ததாகும்.

உதக மண்டலத்தில் உள்ள வனப்பு மிகுந்த தோட்டம் காண்பவர் உள்ளத்தைக் கவர்வதாகும். அடுக்கடுக்காக அமைந்த அந்தத் தோட்டம் இயற்கை அன்னை கொலுவீற்றிருக்கும் இடமாகத் திகழ்கிறது.

உதகமண்டலத்தை விடச் சிறந்த ஊர் குன்னூர். குன்றூர் என்ற பெயரே குன்னூர் என வழங்குகிறது. இவ்வூரின் தெருக்களும் வீடுகளும் மலைச்சரிவில் அடுக்கடுக்காக அமைந்துள்ளன. தூரத்திலிருந்து பார்ப்பதற்கு வீடுகளே குன்றாக அமைந்து விளங்குவதுபோல் தோன்றும். இரவில் மின் விளக்கொளியில் இவ்வூரைக் காண்பவர் ‘தேவலோகமோ இஃது’ என்று வியந்து நிற்பர். குன்னூரின் அருகில் உள்ள கோத்தகிரி, வெலிங்டன், கேத்தி போன்ற ஊர்களும் கண்டு களிக்கத்தக்கனவாம்.

நீலகிரி இயற்கைவளம் நிறைந்த இடமாக விளங்குவதோடு எண்ணற்ற மலைபடுபொருள்களைத் தமிழகத்துக்கு வாரி வழங்குகின்றது. அவற்றுள் நீலகிரித் தைலமும் தேனும் குறிப்பிடத்தக்கன. தமிழகத்திற்கு வேண்டிய மின் சக்தியின் பெரும்பகுதி நீலகிரியில் உள்ள பைகாரா, குந்தா போன்ற இடங்களிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. இத்தகைய இயற்கை அழகு மிக்க நீலகிரியைக் கண்டு மகிழ்வது வாழ்விலோர் திருநாளாகும் என்பதில் ஐயமும் உண்டோ?

பயிற்சி

பின்வரும் பொருள்களைப் பற்றிக் கட்டுரை எழுதிப் பழகுக:

1. மாமல்லபுரம்
2. கடற்கரைக்காட்சி
3. குற்றால அருவி

3. விளக்கக் கட்டுரை

[ஒரு பொருளைத் தக்க சான்றுகளுடன் விளக்கி எழுதுதல் விளக்கக் கட்டுரையாம். செய்யுள், பழமொழி போன்றவைகளை விளக்கி எழுதுதலும் இக்கட்டுரையாம்.]

மாதிரி:

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே, நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே' என்பது மகாகவி பாரதியார் வாய்மொழி. 'ஒற்றுமையே வெற்றிதரும்' என்பது ஆன்றோர் அநுபவமொழி. அத்தகைய ஒற்றுமையின் உயர்வைச் சுருக்கமாக அறிவோம்.

ஒரு குடும்பத்தில் உடன் பிறந்தவர்கள் பலர் இருக்கலாம். அவர்கள் உணவு, உடை, பழக்க வழக்கங்களில் வேறுபட்ட கருத்துடையவர்களாக இருந்தாலும், குடும்பத்தின் நன்மைக்கான செயல்களில் ஒன்றுபட்ட மனமுடையவர்களாக இருந்தால்தான் அக்குடும்பத்தின் பெருமை சிறந்து விளங்கும்.

ஒரு முதியவர் இறக்குந்தறுவாயில் தம் மைந்தர்களை அழைத்து விறகுக் கட்டையே மொத்தமாகக் கொடுத்து முறிக்கச்சொல்ல அவர்கள் முறிக்க இயலாமல் துன்புற்றதும், பின்னர்த் தனித்தனி விறகாகக் கொடுத்து முறிக்கச் சொல்ல அவர்கள் எளிதில் முறித்ததும், அதைக்கொண்டு அவர் "நீங்கள் ஒற்றுமையாக இருந்தால் பகைவர்களால் உங்களுக்குத் தீங்கு நேராது; ஒற்றுமை குன்றினுல் அவர்கள் உங்களை எளிதில் வென்றுவிடுவர்" என ஒற்றுமை உபதேசம் செய்ததுமாகிய கதை ஒற்றுமையின் உயர்வை விளக்கக்கூடியது அன்றோ?

சித்திரக் கிரீவன் என்னும் புருவரசு வேடன் கட்டிய வலையில் தன் இனத்தோடு அகப்பட்டுக் கொண்ட போது, 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதை எடுத்துக் கூறித் தன் இனத்தோடு வலையைத் தூக்கிக்கொண்டு ஒற்றுமையாகப் பறந்துசென்று உயிர் பிழைத்த கதை பஞ்ச தந்திரத்தில் உள்ளது. அது கதையாக இருந்த போதிலும் உயரிய கருத்தைப் போதிக்கும் பாடமாகத் திகழ்கிறது.

உலகப் பொது நூலாகிய பொது மறையை அருளிய வள்ளுவர் பெருமானும் ஒற்றுமையின் உயர்வை ஓர் உவமையின்மூலம் அழகாக விளக்கியுள்ளார். மயிலிறகு மிகவும் நொய்மையானது ஆயினும் அதனையே மிகப் பலவாகச் சேர்த்துக் கட்டாகக் கட்டி அக்கட்டுக்களை மிகுதியாக வண்டியில் ஏற்றினுல் வண்டியின் அச்சும் முறிந்துவிடும் என்று கூறுகிறுர் வள்ளுவர்.

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்,"

என்பது குறள். இதன் மூலம் பலமற்றவராயினும் பலர் ஒருங்கு சேர்ந்தால் மிக்க பலமுடையவனையும் எளிதில் வென்று விடுவர் என்ற கருத்தை-ஒற்றுமையே உயரிய பலம் என்ற செய்தியை-அவர் விளக்கியுள்ளார்.

ஒற்றுமை ஒரு குடும்பத்திற்கு மட்டுமன்றி, ஒரு நாட்டிற்கும் இன்றியமையாததாம். நம் பாரதநாடு ஒற்றுமை குன்றியிருந்த காரணத்தால்தான் அந்நியர்க்கு அடிமைப் பட்டு அல்லல் உழக்க நேர்ந்தது. நம் நாட்டுத் தந்தை

காந்தியடிகளார் நம்மிடையே உள்ள ஒற்றுமைக் குறைவே நம் விடுதலைக்குத் தடையாக உள்ளது என்பதனை உணர்ந்து, 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என முழங்கி நம் நாட்டு மக்களிடையே ஒற்றுமையை வளர்க்க அரும் பாடு பட்டார். அதன் பயனாகவே கத்தியின்றி, இரத்த மின்றி அகிம்சைப் போரின் மூலமாகவே நம் நாடு விடுதலை பெற்றது. மிகப் பெரிய பிரிட்டிஷ் சாம்ராச்யத்தின் பிடி யையே தளர்த்தியது எனின் ஒற்றுமையின் ஆற்றலை உரைக்கவும் வேண்டுமோ?

இவ்வளவு ஏன்? நமக்கு நண்பர்களைப் போல நடித்து எதிர்பாராத வகையில் நம் நாட்டின் மீது போர் துவக்கிய சீனர்களை வெருண்டோடச் செய்தது எது? ஒற்றுமை யன்றோ? நாட்டு மக்கள் அனைவரும் வீறிட்டெழுந்து ஒன்றுபட்டு முழங்கிய முழக்கத்தைக் கேட்டவுடனே சீனப் படை புறங்காட்டி ஓடிய செய்தியை நாமறிவோமன்றோ?

இத்தகைய மாபெரும் ஆற்றல் வாய்ந்த ஒற்றுமையின் உயர்வை—இன்றியமையாமையை உணர்ந்தே இன்று ஐக் கிய நாடுகள் கழகம் உலகிடையே ஒற்றுமையை வளர்க்க அரும்பாடுபட்டு வருகின்றது. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதே அதன் தலையாய குறிக்கோள். உலக நாடுகளிடையே காணப்படும் குழப்பம், பூசல் முதலியவற் றைத் தீர்க்க ஒற்றுமையே உற்ற கருவி என அக் கழகம் எடுத்துக்கூறி வருகிறது. எத்தனையோ பெரிய போர்களை ஐ.நா.வின் இந்த ஒற்றுமை உபதேசம் தடுத்துக் காத்திருக் கிறது; காத்து வருகிறது. ஐ.நா.வின் கூற்றுக்கு உலக நாடுகள் அனைத்தும் செவிசாய்த்து ஒன்றுபட்டு வாழத் தொடங்கினல் இவ்வுலகமே சுவர்க்கமாக மாறிவிடும் என் பதில் ஐயமும் உண்டோ?

வீட்டிலும் நாட்டிலும் உலகத்திலும் ஒற்றுமை வளர் வதற்கு ஒருவரோடு ஒருவர் விட்டுக்கொடுக்கும் மனப் பான்மை உடையவர்களாயிருத்தல் வேண்டும். 'தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்னும் பிடிவாதமான போக்கே ஒற்றுமைக் குலைவை ஏற்படுத்திப் பேரழிவுக்குக் காரணமாக இருக்கின்றது. இதனை உணர்ந்து ஒவ்வொரு வரும் விட்டுக் கொடுக்கும் மனம் உடையவராய், நடந்து கொண்டால் எங்கும், எதிலும் ஒற்றுமை நிலவும். அத்

தகைய ஒற்றுமையால் வீடும் வாழும்; நாடும் வாழும். உலகமும் சிறக்கும் என்பதில் ஐயம் இல்லை.

பயிற்சி

பின்வரும் தலைப்புக்களைப் பற்றிக் கட்டுரை எழுதிப் பழகுக.

1. மாரியல்லது காரியம் இல்லை
2. இளமையில் கல்
3. வாய்மையே வெல்லும்

4. கருதியல் கட்டுரை

[ஒரு கருத்தைத் தக்க எடுத்துக் காட்டுக்களுடன் விளக்கிப் பிறரைச் சிந்திக்கத் தூண்டும் வகையில் அமையும் கட்டுரைகள்.]

மாதிரி :

உழைப்பும் உயர்வும்

உலகில் வாழ்வோர் அனைவரும் புகழ்பெற்று வாழவே விரும்புகின்றனர். புகழடைய விரும்பாதவர் இவ்வுலகில் இலர். கல்வி, செல்வம், ஈகை, வீரம், உழைப்பு எனப் புகழை அடைவதற்குரிய வழிகள் பல உள்ளன. அவற்றுள் மிகச் சிறந்தது உழைப்பே யாகும். உழைப்பே உயர்வளிக்கும். ஒருவன் பெறக்கூடிய எல்லா நன்மைகளுக்கும் உழைப்பே அடிப்படையாகும்.

உழைப்பாவது யாது? மேற்கொண்ட நற்செயலில் வெற்றிகாணும் வரையில், எத்தகைய இடையூறுகள் ஏற்பட்டாலும் உள்ளம் தளராமல் ஓயாது பாடுபடுவதே உழைப்பாகும். உழைப்பின் சிறப்பைப் போற்றாத பெரியோர்கள் இலர். 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?' என்று முற்றத்துறந்த பட்டினத்தடிகள் கூறியுள்ளார். 'முடியாது என்பது சோம்பேறிகளின் வார்த்தை' என நெப்போலியன் புகன்றுள்ளான். 'தன்னம்பிக்கையோடு முயற்சி செய்தால் வாழ்வில் வெற்றி பெறலாம்' என்று ஜேம்ஸ் ஆலன் என்ற பெரியார் எடுத்துக் காட்டியுள்ளார்.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்,"

என்பது தெய்வப் புலவர் திருவாக்கு. உழைப்பினுல் விதியையே வெல்லலாம் என்ருல் அதனுல் பெறக் கூடாதது வேறு ஒன்று உண்டோ ?

உழைப்பு என்ற சிறந்த பண்பு தன்னம்பிக்கை, விடா முயற்சி, நுண்ணறிவு, அஞ்சாமை என்பவற்றின் அடிப்படையில் பிறக்கிறது. ஒரு செயலே மேற்கொள்வோன் அச் செயலேத் தன்னுல் செய்ய இயலும் என்ற தன்னம்பிக்கையும், அச்செயல் வெற்றிபெற உழைக்கும் உள்ளக் கிளர்ச்சியும் உடையவனுய் இருத்தல் வேண்டும். ஏற்ற காலமறிந்து தக்க இடமறிந்து செய்யும் நுண்ணறிவும் அவனுக்கு வேண்டும். காலமறிந்து இடமறிந்து செயலாற்ற வல்லவன் இவ்வுலகையே பெற விரும்பினுலும் அது கைகூடும் என்று வள்ளுவர் உறுதியாகக் கூறியுள்ளார்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக அஞ்சாமை என்ற அருங்குணம் மிகவும் இன்றியமையாததாம். ஒருவன் மேற்கொண்ட செயல்களில் எண்ணற்ற இடையூறுகள் ஏற்படலாம்; தோல்வி வந்தடையலாம், அவற்றிற்கெல்லாம் கலங்காத மன வலிமை வேண்டும். 'தோல்வியே வெற்றிப் பாதையின் முதற் படி' என்ற உண்மையை உணர்ந்து மெய் வருத்தம் பாராமல், பசி நோக்காமல், கண்ணுறங்காமல், கருமமே கண்ணுக இருந்து மேலும் மேலும் முயல்வதே வெற்றிக்கு வழியாகும். தோல்வி கண்டு அஞ்சுபவன் உழைப்பின் பயனே அடையமாட்டான். அஞ்சாமையோடு அடுத்தடுத்து முயல்பவனே வெற்றி பெறுவான்.

இராபர்ட் புரூஸ் என்ற மன்னர் ஆறுமுறை தம் பகைவருடன் போர் புரிந்து தோல்வியுற்ருர். பகைவர்க்கு அஞ்சி ஒரு மலேக் குகையில் மறைந்திருந்த போது குகை வாயிலில் ஒரு சிலந்தி கூடுகட்டும் முயற்சியில் ஆறுதடவை தோல்வியுற்று ஏழாவது முறையில் வெற்றி பெற்றதைக் கண்டார். அச் சிலந்தியின் விடா முயற்சியைக் கண்ட அம் மன்னர் தாமும் ஊக்கம் கொண்டு படை திரட்டி ஏழாவது முறையாகப் பகைவருடன் போர்புரிந்து பெருவெற்றி பெற்ருர். அவர் தம் விடா முயற்சியாலும் உழைப்பாலுமன்ருே இழந்த நாட்டையும் ஆட்சியையும் திரும்பப்பெற்று அழியாப் புகழடைந்தார்.

உலகத்திலேயே பெருஞ் செல்வர் என்று போற்றப் பட்ட **இராக்பெல்லர்** என்னும் அமெரிக்க நாட்டுக் கோடீசுவரர் ஒருவரிடம் சிறிய பணியாளராக இருந்து தம் ஓயா உழைப்பால் மண்ணெண்ணெயைக் கண்டறிந்தே மாபெரும் செல்வரானார். பத்திரிகை விற்கும் சிறுவனாக வாழ்வைத் தொடங்கிய **எடிசன்** தம் இடைவிடா உழைப்பினாலேயே எண்ணற்ற விஞ்ஞானப் புதுமைகளைக் கண்டு உலகப் புகழ்பெற்றார். மரங்களை வெட்டி வாழ்க்கை நடத்திவந்த **ஆப்ரஹாம் லிங்கன்** தம் பேருழைப்பினாலேயே அமெரிக்க நாட்டின் ஒப்பற்ற தலைவராக விளங்கும் பேறு பெற்றார். ஒரு கிராமக் கணக்கரிடம் ஒரு ரூபா ஊதியத்தில் பணியாற்றிய **சர் தி. முத்துசாமி ஐயர்** தம் உழைப்பாலேயே கல்விகற்று உயர்நிலையுற்று, சென்னை உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக விளங்கி அழியாப் புகழ் பெற்றார்.

இங்ஙனம் உழைப்பால் உயர்வடைந்த உத்தமர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்து நல்லுணர்வு பெறுதல் இளைஞர்கள் கடமையாகும். இளைஞர்கள் இளமையிலேயே வாழ்வில் கடைப்பிடிக்கக் கூடிய ஒரு குறிக்கோளை வகுத்துக்கொண்டு அதனை அடையப் பாடுபட வேண்டும். குறிக்கோள் இல்லாது உழைப்பது இலக்கில்லாது அம்பெய்வது போன்றதாகும். ஆதலால் 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்பதற்கு ஏற்ப உயர்ந்த குறிக்கோளை வகுத்துக்கொண்டு அதை அடைய உழைத்தால் இளைஞர்கள் பேரும் புகழும் பெற்றுப் பெருவாழ்வு வாழலாம்.

பயிற்சி

பின்வரும் தலைப்புக்கள் பற்றிக் கட்டுரைகள் எழுதிப் பழகுக.

1. சொல்லும் செயலும்
2. ஒழுக்கத்தின் உயர்வு
3. தாய்மொழிமூலம் கல்வி
4. மாணவரும் அரசியலும்

5. எடுத்தியம்பும் கட்டுரை

[தாம் கண்ட நிகழ்ச்சிகளை எடுத்துச் சுவை படக் கூறும் கட்டுரை எடுத்து இயம்பும் கட்டுரை யாம். மழை, வெள்ளம், புயல் இவற்றால் நேர்ந்த நிகழ்ச்சிகளையும்,தாம் பார்த்த திருவிழா, இன்பக் காட்சிகள் முதலியவற்றையும், வரலாற்றுச் சம்ப வங்களையும் எடுத்து எழுதுவது இக்கட்டுரை யாம்.]

மாதிரி :

விடுதலைநாள் விழா

நாம் இன்று உரிமை பெற்ற திருநாட்டின் மக்களாகத் தலைநிமிர்ந்து வாழ்கின்றோம்; இன்பப் பண் பாடுகின்றோம். இந்நிலைக்கு நாம் கொடுத்த விலை சிறிதன்று. நம் நாட்டுத் தந்தை காந்தியடிகளார் தலைமை யில் எண்ணற்றவர்கள் செய்த ஒப்பற்ற தியாகத்தின் பயனா கவே 1947 ஆகஸ்டு 15 ஆம் நாள் நம் நாடு விடுதலை பெற்றது. நம்மைப் பிணித்திருந்த அடிமைத்தளை அகன்றது. அந்நாள் நம் நாட்டு வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்க நன்னாளாகும். அதனால் அந்நாளை நாம் ஆண்டுதோறும் சீரும் சிறப்புமாகக் கொண்டாடி வருகின் றோம். இந்த ஆண்டு எங்கள் பள்ளியில் நடைபெற்ற விடுதலைநாள் விழாவின் சிறப்பை இங்குச் சுருக்கமாகக் கூறுகின்றேன்.

1967 ஆகஸ்டு 15 ஆம் நாள் புதன் கிழமை காலைக் கதிரவன் தன் பொன்னிறக் கிரணங்களை வீசிப்புறப் பட்டான். தெருக்கள் யாவும் கண்ணைக் கவரும் வண்ணம் அலங்கரிக்கப்பட்டிருந்தன. காணும் இடங்களெங்கும் நம் நாட்டுக்கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது. ‘ஆடுவோமே பள்ளு பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடுவோமே’ என்ற பாரதியின் பாடல் இசைத்தட்டுக்கள் மூலம் ஒலி பரப்பப்பட்டுச் செந் தேனாய்க் காதில் விழுந்து கொண்டிருந்தது. சின்னஞ்சிறு குழந்தைகளும், சிறுவர் சிறுமியர்களும் கண்ணைக் கவரும் வண்ண வண்ண உடைகளை உடுத்திக் கொண்டு நாட்டுக் கொடி மார்பில் இலங்க மலர்ந்த முகத்துடன் அணியணி யாய்த்தம் பள்ளிகளை நோக்கிச்சென்று கொண்டிருந்தனர்.

நானும் அவர்களில் ஒருவனாக என் தாய்ச்சாலையை நோக்கிச் சென்றேன்.

எங்கள் பள்ளி மிகவும் அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. நாட்டு விடுதலைக்கு உழைத்த நல்லவர்களின் உருவப் படங்கள் அலங்காரமாக மாட்டப்பட்டிருந்தன. அவற்றுள் நடுநாயகமாக நம் நாட்டுத் தந்தை காந்தியடிகளின் திருவுருவப் படம் மோகனப் புன்னகையுடன் காட்சியளித்தது. அதற்குப் பக்கத்தில் மறைந்த நம் பாரத முதல்வர் பண்டித நேருவின் படம் கம்பீரமாகத் திகழ்ந்தது. எங்கும் மூவண்ணக் கொடிகள் பளபளத்தன.

பள்ளி விளையாட்டரங்கில் கொடியேற்று விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சாரணர் குழுவைச் சார்ந்த மாணவர்களும், தேசீயப் படையைச் சார்ந்த மாணவர்களும், பள்ளித்தொண்டர் படையினரும் தங்கள் தங்கள் சீருடைகளில் வந்திருந்தனர். மாணவர்கள் அனைவரும் வகுப்பு வாரியாக அணிவகுத்து நின்றனர். அவர்களைச் சூழச் சாரணப் படையினரும், தேசீயப் படையினரும் தொண்டர் படையினரும் தங்களுக்கே உரிய மிடுக்குடன் கம்பீரமாக அணிவகுத்து நின்றனர். ஆசிரியர்கள் மலர்ந்த முகத்துடன் தூய வெண்ணிற உடையில் எங்களைச் சூழ்ந்து நின்றனர். அவ்வணிவகுப்பு கண்கொள்ளாக் காட்சியாய் விளங்கியது.

எங்கள் அன்பழைப்புக்கு இணங்கிக் கொடியேற்று விழாவில் கலந்து கொள்வதற்காக எங்கள் கல்வித் துறை ஆய்வாளர் அவர்கள் வந்திருந்தார். அவருக்கு நாங்கள் மகத்தான வரவேற்பு அளித்தோம். அவர் எங்கள் மரியாதையை மலர்ந்த முகத்துடன் ஏற்றுக் கொண்டார். பின்னர் எங்கள் தலைமையாசிரியர் அவரைக் கொடியேற்று விழா நடைபெறும் இடத்திற்கு அழைத்து வந்தார்.

சாரணர் குழு அணித் தலைவனாகிய திருமாவளவன் என்னும் மாணவன் தலைவருக்கு நல்வரவு கூறி, கொடியேற்று விழாவை நடத்திக் கொடுக்குமாறு வேண்டிக் கொண்டான். தலைவர் அவர்கள் மாணவருடைய மகிழ்ச்சி ஆரவாரத்துக்கிடையே நம் தாய் நாட்டின் கொடியை வானளாவப் பறக்க விட்டார். காலை இளஞ்சூரியனின் கதிரொளியில் காற்றில் அசைந்தாடிய அக்கொடி கண்ணுக்கு

விருந்தளித்தது. பள்ளி இசைக் குழுவைச் சார்ந்த மாண வர்கள் கூட்டாகக் கொடி வணக்கப் பாடலைப் பாடி வணக்கம் செய்தனர். அப்போது அனைவரும் அமைதி யுடன் நிமிர்ந்து நின்று தலை தாழ்த்தி நம் தாய் நாட்டின் கொடிக்கு மரியாதை செலுத்தினர்.

பின்னர்த் தலைவர் அவர்கள் விடுதலை விழாவின் சிறப் பினை விளக்கி அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அதில் அவர் விடுதலைபெற நம் தலைவர்கள் செய்த ஒப்பற்ற தியாகங்களை எல்லாம் உணர்ச்சியுடன் எடுத்துக் கூறினர்; அத்தகைய தியாகிகளின் நினைவைப் போற்றி இன்று அஞ்சலி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார். மற்றும் நம்நாடு அந்நியராட்சியில் சிக்கி அல்லற்பட்டதற்கு ஒற்றுமைக் குறைவே காரணம் என்றும், அண்ணல் காந்தி யடிகளின் தலைமையில் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று பட்டுப் போராடியதாலேயே நம் நாடு விடுதலை பெற்றது என்றும் குறிப்பிட்டு, அவ்வொற்றுமையை நாம் என்றும் போற்ற வேண்டும்; நம்மிடையே உள்ள சாதிமத வேற் றுமைகள், குறுகிய மாநிலப் பித்து முதலியவற் றைக் கைவிட்டு நாமனைவரும் பாரதத் தாயின் குழந்தை கள் என்ற ஒற்றுமை உணர்ச்சியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினர்.

இறுதியில் எங்கள் பள்ளித் தலைமையாசிரியர் அவர் கள் தலைவருக்கு நன்றி கூற, நாட்டு வணக்கத்துடன் விழா இனிது முடிவுற்றது. விழாவில் கலந்து கொண்ட அனை வர்க்கும் இனிப்பு வழங்கப்பட்டது. இவ்விழாவில் கலந்து கொண்ட நான் என் புனிதக் கடமைகளில் ஒன்றை நிறை வேற்றிய தூயவுணர்வுடன் வீடு திரும்பினேன். வாழ்க சுதந்திரம்! வாழ்க பாரதம்!

பயிற்சி

பின்வரும் தலைப்புக்களைப் பற்றிக் கட்டுரை எழுதிப் பழகுக.

1. நான் கண்ட ஒரு திருவிழா
2. கடற்கரையில் ஒரு நாள்
3. புயலின் கொடுமை
4. தமிழர் திருநாள்

6. வாழ்க்கைக் குறிப்புக் கட்டுரை

[ஒருவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தி எழுதும் கட்டுரை வாழ்க்கைக் குறிப்புக் கட்டுரையாகும்.]

மாதிரி :

தமிழ்ப் பெரியார் திரு. வி. க.

தமிழன்னையின் நன்மக்களாகத் தோன்றியவர்களுள் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் குறிப்பிடத்தக்கவராவார். அவர் இந்த நூற்றுண்டில் இணையில்லாத பெரும்புலவராகத் திகழ்ந்தவர். நம் நாடு விடுதலை பெற உழைத்த வீரர்களில் அவர் குறிப்பிடத்தக்கவர். தமிழும் தமிழ் நாடும் தமிழினமும் முன்னேற அவர் ஆற்றியுள்ள தொண்டுகள் அளவிடற்கரியன.

தமிழ்ப் பெரியார் செங்கற்பட்டு மாவட்டத்தில் துள்ளம் என்னும் சிற்றூரில் வாழ்ந்த **விருத்தாசல முதலியார்**க்கும் **சின்னம்மை**யார்க்கும் ஆருவது மகனுக *26-8-1883* இல் பிறந்தார். இவர் தமையனுர் திரு. வி. உலகநாத முதலியார். இவருடைய முன்னேர்கள் திருவாரூரைச் சேர்ந்தவர். அதனுலேயே இவர் பெயர் திரு. வி. க. எனச் சுருக்கமாக வழங்கலாயிற்று.

திரு. வி. க. அவர்கள் இளமையில் சென்னையில் உள்ள ஆரம்பப்பள்ளியொன்றில் கல்வி பயின்ருர். விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பதற்கு ஏற்ப இளமையிலேயே அவர் அறிவும் அஞ்சாமையும் உடையவராக விளங்கினுர்; ஆரம்பக்கல்விக்குப் பிறகு சென்னை வெசிலி கல்லூரி உயர்பள்ளியில் சேர்ந்து கல்வி பயின்று வந்தார்; வகுப்பில் அவரே முதன் மாணவராகத் திகழ்ந்தார்; படிப்பில் மட்டுமன்றி விளையாட்டிலும் வல்லவராய் விளங்கினுர்.

அவர் வெசிலி கல்லூரியில் கல்வி பயின்றபோது அங்கு யாழ்ப்பாணம் **கதிரைவேற் பிள்ளை** என்னும் பெரும் புலவர் தமிழாசிரியராகப் பணியாற்றி வந்தார். அவருடைய புலமையால் கவரப்பட்ட திரு. வி. க. அவர்கள் அவரிடம் தனியாகத் தமிழ் பயின்று பெரும்புலமை பெற்ருர். ஒரு சமயம் அவர் பொருட்டு ஒரு வழக்கில் சாட்சி

சொல்ல நேர்ந்தமையால் திரு. வி. க. அவர்கள் தம் பள்ளிப் படிப்பையே துறக்க நேரிட்டது. ஆசிரியர்க்காகத் தம் எதிர்கால வாழ்வையே தியாகம் செய்த அவருடைய அருங் குணம் பாராட்டத் தக்கதன்றோ?

பள்ளிப்படிப்பு முடிந்தவுடன் திரு. வி. க. அவர்கள் பல இடங்களில் தொழில் புரிந்தார். உரிமை வாழ்வில் நாட்டமுடைய அவர்க்கு அவை மனநிறைவு தரவில்லை. அதனால் அவர் ஆசிரியர் தொழிலை விரும்பி ஏற்றார். நாளடைவில் வெசிலி கல்லூரியிலேயே தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பு அவர்க்குக் கிடைத்தது. அவர் ஓராண்டுக்காலம் மாணவர் விரும்பும் நல்லாசிரியராகப் பணியாற்றிப் பெரும் புகழ்பெற்றார்.

அக்காலத்தில் நாட்டில் உரிமைக் கிளர்ச்சி வீறிட்டெழுந்தது. அதனால் உரிமை வாழ்வில் நாட்டமுடைய திரு. வி. க. அவர்கள் தம் பதவியைத் துச்சமெனத் துறந்து உரிமைப்போரில் ஈடுபட்டார். '**தேசபக்தன்**' என்னும் நாளிதழைத் தொடங்கி நடத்தினர்; தமிழ் நாட்டில் மூலை முடுக்குகளில் எல்லாம் சென்று உரிமை முழக்கம் செய்தார். அவருடைய பேச்சும் எழுத்தும் மக்கள் மனத்தில் உரிமைக் கனலை மூண்டெரியச் செய்தன. அதனால் அவர்க்கு ஏற்பட்ட துன்பங்கள் பல. தேசபக்தனுக்கு ஏற்பட்ட இடையூறுகள் அளவற்றன. அவர் தேசபக்தனை விட்டு விலகும் நிலையும் ஏற்பட்டது. அவர் பிறகு 'நவசக்தி' என்னும் வார இதழைத் தொடங்கித் தொண்டு செய்து வந்தார்.

நாட்டின் நரம்புகளாக விளங்குபவர் தொழிலாளர்களே என அறிந்த திரு. வி. க. அவர்கள் தொழிலாளர் முன்னேறப் பெருந்தொண்டு செய்தார். சென்னையில் தொழிலாளர் சங்கத்தை முதன் முதலில் தொடங்கியவர் அவரேயாவர். அதன் மூலம் தொழிலாளர்கள் அடைந்த நன்மைகள் பலவாம். பெண்கள் முன்னேற்றத்தில் பெரிதும் அக்கறைகொண்ட நம் பெரியார், அவர்கள் வாழ்வு சிறக்கவும் அரும்பணியாற்றினர்; பெண் கல்வியை வற்புறுத்தினர். வாழ்வில் பெண்களுக்குச் சம உரிமையளிக்க வேண்டும் என்று மேடைதோறும் முழங்கினர். '**பெண்ணின் பெருமை**' என்னும் அற்புதமான நூலை எழுதிப் பெண் குலத்தின் பெருமையை விளக்கினர்.

நம் பெரியார் பெண்ணின் பெருமையை உணர்ந்து தொண்டாற்றக் காரணமாக இருந்தவர் அவருடைய மனைவியார் **கமலாம்பிகையாரே** யாவர். *13-9-1912* இல் அவருடைய இருபத்தொன்பதாம் வயதில் அவருக்குத் திருமணம் நடந்தது. திருமணம் செய்துகொண்ட ஆறும் ஆண்டிலேயே அம்மையார் இவ்வுலக வாழ்வை நீத்தார். அதனால் பெருந்துன்பம் அடைந்த நம் பெரியார் இறுதிவரை மறுமணம் செய்துகொள்ளாமலேயே வாழ்ந்தார். அவருடைய பேரன்பை என்னென்று புகழ்வது !

திரு. வி. க. அவர்கள் தமிழ் மொழிக்குச் செய்துள்ள தொண்டுகள் அளவற்றனவாகும். அவர் உரை நடையாகவும், செய்யுளாகவும் பல அரிய தமிழ் நூல்களை எழுதித் தமிழை வளர்த்தார். செந்தமிழ் நடையில் அழகான முறையில் தமிழ் உரை நடை நூல்களை எழுதிக்காட்டியவர் திரு. வி. க. அவர்களே யாவர். அதனால் அவர் 'தமிழ் உரை நடையின் தந்தை' என்று போற்றப்படுகின்றார். அவர் எழுதிய முருகன் அல்லது அழகு, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, உள்ளொளி, முருகன் அருள்வேட்டல், திருமால் அருள் வேட்டல், பொதுமை வேட்டல் போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கன.

இங்ஙனம் பல துறைகளிலும் சிறந்த பேரறிஞராய்-தமிழன்னையின் தலைமகனாய், இளைஞர்கட்கு எடுத்துக் காட்டாய் விளங்கிய தமிழ்ப் பெரியார் அவர்கள் *18-9-53* அன்று இவ்வுலக வாழ்வை நீத்தார். அவர் மறைந்தாலும் அவர் காட்டிய நெறிகள்-இயற்றிய நூல்கள் நமக்கு நல் வாழ்வளிப்பனவாக உள்ளன. அவற்றைப் போற்றி அவர் நெறி நின்று நாட்டுக்கும் மொழிக்கும் உழைப்பதே நம் கடனாகும்.

பயிற்சி

பின்வரும் தலைப்புக்கள்பற்றிக் கட்டுரை எழுதிப் பழகுக.

1. உலகப் பெரியார் காந்தி
2. சேரன் செங்குட்டுவன்
3. மறைமலை யடிகளார்
4. இரவீந்திரநாத தாகூர்

7. சமுதாய இயல் கட்டுரை

[சமுதாய நலம் குறித்த பொருள்களைப்பற்றிய கட்டுரைகள்.]

மாதிரி :

தீண்டாமை ஒழிப்பு

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பரந்த மனப்பான்மையுடையவர்கள் தமிழர்கள். பிறப்பினால் உயர்வு தாழ்வு கருதாது அறிவினால், ஒழுக்கச் சிறப்பால் செய்யும், தொழில்களால் ஒருவரை மதித்துப் பாராட்டி வந்தவர்கள் தமிழர்கள். அத்தகைய தமிழர்கள் வாழ்வில் அவர்களுடைய பண்புக்கு ஒவ்வாத சாதி, மத வேறுபாடு கருதும் தீய பழக்கம் எவ்வாறோ வந்து புகுந்துவிட்டது. அதன் பயனாய்ச் சமூக வாழ்வில் எத்தனையோ கேடுகள் நுழைந்துவிட்டன. அக்கேடுகளில் எல்லாம் தலையாயது—நாகரிக சமுதாயம் வெறுக்கத்தக்கது — தீண்டாமை என்னும் கொடுமையாகும்.

கெட்ட பொருளைத் தொடக்கூடாது; குப்பை, கூளம், நாற்றமடிக்கும் பொருள்களைத் தொடக்கூடாது. அங்குத் தீண்டாமையைக் கையாளத்தான் வேண்டும். ஆனால் நம்மைப்போல இந்த மண்ணில் பிறந்த மக்களை, ஆறறிவு படைத்த மனிதர்களை, பரம்பரை பரம்பரையாக நம்முடன் சேர்ந்து வாழ்ந்துவரும் மக்களை, இந்த நாட்டின் எழிலுக்கும் வளத்துக்கும் காரணமாய் உழைத்துவரும் மக்களைத் தீண்டத்தகாதவர்களாய் ஒதுக்கி வைத்திருப்பது அறிவுடைமையாகுமோ? அது கொடுமையிலும் கொடுமையன்றோ?

தீண்டாமைக் கொடுமையால் நம் நாட்டில் விளைந்த கேடுகளை எண்ணிப் பார்க்கவே நெஞ்சம் நடுங்குகிறது. நாய்களும் பன்றிகளும் கூடத் தங்கு தடையின்றி நுழையும் தெருக்களில் தீண்டத்தகாதவர்கள் நுழையக்கூடாது. எருமை மாடுகள் கூட நீந்தித்திளைக்கும் நீர் நிலைகளில் தீண்டத் தகாதவர்கள் நீராடக்கூடாது. பொது மன்றங்களில், கல்வி நிலையங்களில், உணவுச்சாலைகளில், மருத்துவ விடுதிகளில், ஆலயங்களில் தீண்டாதவர்களுக்கு இடம் இல்லை. இடம் இருந்தாலும் அஃது ஒதுக்குப் புறத்

தில் அமைந்த தனியிடமாகவே இருக்கும். இத்தகைய கொடுமைகளைச் சகியாமையாலோ, அன்றி அறியாமையினாலோ அவர்கள் சிறு தவறு புரிந்து விட்டாலோ அவர்கள் பட்டபாடு சொல்லுந்தரத்ததன்று. மரத்தில் கட்டித் தோலுரிக்கப்பட்டவர் பலர்; அடித்து நொறுக்கப்பட்டவர் பலர்; வாழும் குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டு அல்லல் உழந்தவர்கள் பலர்; உயிரையும் உடைமைகளையும் இழந்தவர்கள் பலர்; ஊரைவிட்டே ஓடியவர்கள் பலர்.

இத்தகைய கொடுமைகளுக்கு அஞ்சியே அவர்கள் ஊருக்கு ஒதுக்குப் புறங்களிலே சேரிகளை அமைத்துக் கொண்டு அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். கல்வியறிவற்றவர்களாய், உலகத்தை உணராதவர்களாய், நாகரிகமற்ற பாமரர்களாய் நலிகின்றனர். அவர்கள் வாழும் சேரிகளில் சுத்தம் இல்லை, சுகாதாரம் இல்லை. அதனால் கொள்ளை நோய்கட்குக் குறைவில்லை. இங்ஙனம் பாருக்குள்ளே உயர்ந்த பாரதநாட்டில் பஞ்சைகளாய்-தீண்டத்தகாதவர்களாய் வாழ்வோர் தொகை சிறிதன்று. எட்டுக்கோடிக்கும் மேற்பட்டவர் இந்த இழி நிலையில் உழல்கின்றனர். நம் தமிழகத்திலும் அவர்கள் தொகை மிகுதியாகவே உள்ளது.

பிறருடைய உழைப்பை உறிஞ்சித் தாம் சுகமாக வாழ வேண்டும் என்ற சூது மதியினரால் நம் சமுதாயத்தில் புகுத்தப்பட்ட இந்தத் தீய பழக்கத்தின் விளைவை உணர்ந்தார் நம் நாட்டுத் தந்தை காந்தியடிகள். நம் நாடு அந்நிய ஆட்சியிலிருந்து உரிமை பெறுவதினும், தீண்டாமைக் கொடுமைக்கு ஆளானோர் நம்மிடம் இருந்து விடுதலைபெறுவது மிகவும் இன்றியமையாதது என அவர் கருதினார்; அதனால் தீண்டாமைக் கொடுமையை ஒழிக்க அரும்பாடுபட்டார்; தீண்டாமை ஒழிப்பைக் காங்கிரஸ் இயக்கத்தின் முக்கியமான கொள்கைகளில் ஒன்றாக வகுத்தார்; அரிசன முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தார். அவருடைய அரிய முயற்சியின் பயனாக ஆதித்திராவிட மக்களின் வாழ்வு இன்று ஓரளவு உயர்ந்துள்ளது.

நம் நாடு உரிமை பெற்றபின் நம் அரசாங்கம் அரிசனங்களை முன்னேற்றப் பலதுறைகளிலும் பாடுபட்டு வருகின்றது. அமைச்சரவையில் அதற்கெனவே ஒருபிரிவு உள்ளது.

ஓர் அமைச்சர் பொறுப்பேற்று உழைத்து வருகிறுர். அம் மக்கள் கல்வியறிவு பெற்றுச் சிறக்கவும், பல தொழில் புரிந்து முன்னேறவும், சமூகத்தில் மற்றவர்களுக்கு ஒப்பாக உயரவும், நாகரிக நல்வாழ்வு பெற்று ஓங்கவும் அரசாங்கம் அவர்கட்குப் பற்பல சலுகைகள் தந்து, உதவிகள் புரிந்து ஓயாது உழைத்து வருகிறது. ஆலய நுழைவு இன்று சட்ட மூலம் அநுமதிக்கப்பட்டுள்ளது. பொதுவிடங்களிலும், கல்விச் சாலைகளிலும், உணவுவிடுதிகளிலும், மருத்துவ நிலையங்களிலும் தீண்டாமைக் கொடுமை சட்டமூலம் தடுக் கப்பட்டுள்ளது.

சட்டங்களால் மட்டும் தீண்டாமைக் கொடுமையை அறவே ஒழித்துவிட முடியாது. மக்கள் மனமாற்றம்தான் அத்தீய பழக்கத்தை அறவே களைய வல்லது. ஆதலால் தீண்டத்தகாதவர்களும் நம்போல் மனிதர்களே; அவர் களுக்கும் நம்மைப்போல் உள்ளமும் உணர்ச்சிகளும் உள் ளன; அவர்களை வெறுத்து ஒதுக்கியது எவ்வளவு கொடிய தீமை என்பவற்றையெல்லாம் மக்கள் உணருமாறு செய்ய வேண்டும். அரிசன முன்னேற்றம் என்ற பெயரால் சேரி களைச் சீர்திருத்துவதால் மட்டும் பயன் ஏற்பட்டுவிடாது. அவர்களை வெறுத்து ஒதுக்கும் மக்களின் மனத்தைத் திருத் தும் முயற்சியிலேயே சமூக சீர்திருத்த வாதிகள் ஈடுபட வேண்டும்.

எனவே அத்தகைய தூய பணியில் ஈடுபட்டு நம் நாட் டைப்பற்றி அலைத்துக் குலைத்துவரும் இத்தீண்டாமைக் கொடுமையை ஒழிக்க முன்வருவோமாக! சாதி மத பேத மற்ற வளமார்ந்த பாரத சமுதாயத்தைப் படைக்கப் பாடு படுவோமாக!

பயிற்சி

பின்வரும் தலைப்புக்களைப்பற்றிக் கட்டுரை எழுதிப் பழகுக.

1. பெண்ணுரிமை
2. சமூக சீர்திருத்தம்
3. மதுவிலக்கு
4. மூடநம்பிக்கைகள்

8. பொருளியல் கட்டுரை

[பொருளாதார சம்பந்தமான பொருள்களைப் பற்றிய கட்டுரைகள்.]

மாதிரி :

கூட்டுறவும் பொருளாதாரமும்

'பொருள் இலார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பது வள்ளுவர் வாய் மொழி. இவ்வுண்மை தனிப்பட்ட ஒருவர்க்கு மட்டுமன்றி ஒரு நாட்டுக்கும் பொருந்தும். எந்த நாடு பொருளாதாரத்துறையில் சிறந்து விளங்குகிறதோ அந்த நாடே உலகில் வல்லரசாய், ஏனைய நாடுகள் போற்றத்தக்க மாண்புடையதாய்ச் சிறந்து விளங்கும். ஒரு நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்தும் சாதனங்களுள் கூட்டுறவு முறை தலை சிறந்ததாகும்.

பலர் ஒருங்குகூடி முதற் பொருளிட்டு, அம் மூலதனத்தைக் கொண்டு ஒரு பெரிய தொழிலையோ, வாணிகத்தையோ நடத்துவதே கூட்டுறவு முறையாகும். இதனால் பெரிய மூலதனம் தேவைப்படும் தொழில்களை எளிதில் நடத்தவும், பல்லாயிரக் கணக்கான மக்கட்கு வேலை வாய்ப்பளிக்கவும் வழி ஏற்படுகிறது. தொழில்கள் பெருகுவதால் நாட்டின் உற்பத்தி பெருகுகிறது; ஏற்றுமதி வளர்கிறது; வாணிபம் சிறக்கிறது. அதன்மூலம் நாட்டின் பொருளாதார நிலை உயர்கிறது. சுவீடன், டென்மார்க் போன்ற மேலை நாடுகள் கூட்டுறவு முறையின் மூலமே இன்று பொருளாதாரத்தில் சிறந்து விளங்குகின்றன. கூட்டுறவு முறையினால் விளையும் நன்மைகளை உணர்ந்தே நம் அரசாங்கம் அதற்கு நிறைந்த ஆதரவும் உதவியும் அளித்துவருகிறது.

கூட்டுறவுமுறை தோன்ற மூலகாரணமாக இருந்தவர் **ரெய்பீஸன்** என்னும் மேலைநாட்டவரே யாவார். கூட்டுறவு முறையில் தொழிலோ, வாணிகமோ நடத்தப் புகுவோர் முதலில் ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அமைக்க வேண்டும். அச்சங்கத்தில் சேரும் ஒவ்வொருவரும் அதற்கென வரையறுக்கப்பட்ட பங்குத் தொகையைச் செலுத்த வேண்டும். பின்னர் உறுப்பினர்கள் அனைவரும் கூடி அறிவும் அநுபவமும் மிக்க சிலரை அச்சங்கத்தை நடத்தும் இயக்குநர்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதன் பின்னர்

முறைப்படி அச் சங்கம் அரசாங்கக் கூட்டுறவுத் துறையில் பதிவு செய்யப்படும். அங்ஙனம் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கட்கு அரசாங்கம் போதிய பொருளுதவி செய்கிறது. அம் மூலதனத்தைக் கொண்டு தொழிலோ, வாணிகமோ செய்யலாம். கிடைக்கும் வருவாயில் செலவு போக எஞ்சிய தொகையை அவரவர் செலுத்திய பங்கு கட்கு ஏற்பப் பிரித்து வழங்குவர்.

இங்ஙனம் கூட்டுறவு முறையில் சேர்ந்து தொழில் புரி வதனுல் பெரிய தொழிலை நடத்துவதற்குப் பெரும் பொருள் கள் மூலதனமாக வேண்டுமே என்று ஏங்க வேண்டு வதில்லை. 'பல துளி பெரு வெள்ளம்' என்பது போலப் பலர் சேர்ந்து முதலீடு செய்வதால் வேண்டிய மூலதனம் எளிதில் கிடைக்கிறது. அதைக்கொண்டு மிகப் பெரிய தொழிலையும் எளிதில் நடத்தலாம். தனியொருவர் ஒரு பெரிய தொழிலையோ வாணிகத்தையோ நடத்தப் புகுவது ஒரு பெரிய கற்பாறையைத் தாமே சுமப்பது போன்ற கடினமான செயலாகும். அதனுல் வீண் அலைச்சலும் மனக் கவலையும் உடற் சோர்வும் உள்ளத் தளர்வும் ஏற்படும். எதிர்பாராத வகையில் தொழில் முடங்கினலோ, வாணிகத் தில் இழப்பு ஏற்பட்டாலோ தம் முதற் பொருளை எல்லாம் இழந்து அவர் அல்லல் உழக்க நேரும். கூட்டுறவு முறை யில் அதனைச் செய்வது பலர் கூடிப் பாறையைச் சுமப்பது போன்ற எளிய செயலாகும். இழப்பு ஏற்பட்டால் அதனைப் பலரும் பகிர்ந்துகொள்வதனுல் ஒவ்வொருவர்க் கும் ஏற்படும் பொருள் இழப்பு மிகக் குறைவாகவே இருக்கும்.

மேலும் தனியார் முறையால் ஒரு சிலரே தொழில் செய்து உயர முடியும். செல்வர்கள் மேலும் செல்வர்களா வதற்கே அது வழி செய்யும். அவர்கள் அதிக வருவாயே நோக்கமாக இருப்பர். அதனுல் கொள்ளை இலாபமும் கள்ளச் சந்தையும் பெருகும். பொருள்களில் தரக் குறை வும் ஏற்படும். கூட்டுறவு முறையினுல் இத் தீமைகள் ஒழி யும். நல்ல பொருள்கள் மக்களுக்குக் கிடைக்கும். தொழி லில் நாணயமும் நம்பிக்கையும் பெருகும்.

கூட்டுறவு முறைமூலம் நாட்டில் பெரிய தொழில்களே அன்றிப் பல சிறிய கைத் தொழில்களும் வளர வாய்ப்பு

உள்ளது. வேலையில்லாமல் அல்லலுறும் தொழிலாளர்கள் பலர் ஒருங்கு சேர்ந்து கூட்டுறவு முறைமூலம் ஒரு தொழிலைத் தொடங்கி நடத்தலாம். அதனால் அவர்கள் வேலையும் கூலியும் பெறுவதோடு, வருவாயில் பங்கும் பெற்றுத் தம் பொருளாதார நிலையைப் படிப்படியே உயர்த்திக்கொள்ள முடியும். நம் தமிழகத்தில் கூட்டுறவு நெசவுச் சங்கங்கள் இம்முறையில் நடைபெறுவது குறிப்பிடத் தக்கதாகும். நெசவுக்குப் பயன்படும் நூல் முதலியவற்றை ஆலைகளில் இருந்து இச்சங்கங்கள் நேரே வரவழைத்துக் குறைந்த விலையில் நெசவாளர்க்கு வழங்குகின்றன. நெய்த ஆடைகளைச் சங்கங்களே விற்க ஏற்பாடு செய்வதால் நெசவாளர்கள் துன்பப்பட வேண்டிய அவசியம் இல்லை. இச்சங்கத்தில் சேர்ந்த நெசவாளர்கள் வேலையும் கூலியும் பெற்றுத் தம் வாழ்வை இன்பமாகக் கழிக்கின்றனர்.

இங்ஙனமே ஒவ்வொரு தொழிலையும் கூட்டுறவு முறையில் நடத்துவதால் பெருநன்மை விளையும். நம் நாட்டில் வாழ்பவர்களிற் பெரும்பாலோர் உழவைத் தொழிலாகக் கொண்டவர்கள். இன்று உழவர்கள் படும்பாடு சொல்லும் தரத்தன்று. சிறிய நிலச் சொந்தக்காரர்களான உழவர்கள் விதை, எரு முதலியன வாங்கவும் பணமின்றிக் கடன்பட்டுக் கலங்குகின்றனர். அவர்கள் கூட்டுறவு விவசாயப் பண்ணைகள் அமைத்து உழவுத் தொழில் புரிந்தால் பெருநன்மை அடையலாம். இங்ஙனம் பல தொழில்களையும் கூட்டுறவு முறையில் நடத்துவதால் நாட்டில் தொழில் வளம் பெருகும். வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும். மக்கள் உழைப்புதான் ஒரு நாட்டின் பொருளாதாரச் செழிப்பிற்கு அடிப்படை. அவ்வுழைப்பைப் பெருக்கி நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்தக் கூட்டுறவு முறை பெரிதும் உதவுகிறது.

தொழிலும் வாணிகமும் மட்டுமே அல்லாமல் பொருள்களை வாங்கிப் பயன்படுத்தும் மக்களும் கூட்டுறவுப் பண்டசாலைகள் அமைத்து நன்மை யடையலாம். பொருள்கள் உற்பத்தியாகும் இடங்களிலிருந்து வாங்குவோர் கைக்கு வந்து சேர்வதற்குள் பல கைமாறி வர வேண்டியிருத்தலின் அப்பொருள்களின் விலை மிகவும் கூடிவிடுகிறது. கூட்டுறவுப் பண்டசாலைகள் மூலம் உற்பத்தியாகும் இடங்களி

லிருந்தே பொருள்களை மொத்தமாக வருவித்தலால்குறைந்த விலையில் நல்ல பொருள்களை மக்கள் பெற்றுப் பயனடைய முடியும்.

இங்ஙனம் பற்பல துறைகளிலும் கூட்டுறவு முறை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பேருதவி புரியக் கூடியதாம். பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதோடு கூட்டுறவு முறையால் மற்றொரு பெரிய நன்மையும் ஏற்படு கிறது. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற உண் மையை உணரச் செய்வதன்மூலம் மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சி வளரக் கூட்டுறவு முறை பேருதவிபுரிந்து வரு கிறது. ஆதலால் நம் நாட்டில் கூட்டுறவு முறை மேலும் செழித்து வளரப் பாடுபடுவது நம் தலையாய கடமையாம்.

பயிற்சி

பின்வரும் தலைப்புக்களைப் பற்றிக் கட்டுரை எழுதிப் பழகுக.

1. கைத்தொழில் வளர்ச்சியும் பொருளாதாரமும்
2. சிறு சேமிப்பு
3. கூட்டுறவு வங்கிகள்
4. வேளாண்மையும் பொருளாதாரமும்

9. கல்வியியல் கட்டுரை

[கல்வி சம்பந்தமான செய்திகளைப் பற்றிய கட்டுரைகள்]

மாதிரி:

நூல்நிலையம்

கல்வி மக்களுக்குக் கண்போன்றது. கல்வியில்லாத வர்கள் புறக்கண்ணிருந்தும் அகக்கண் விளங்கப் பெறாமை யால் வாழ்க்கையில் துன்புறுவர். அறிவுடையவர்களே எல்லாம் உடையவராவர். அவ்வறிவை விளங்கச் செய்வது கல்வியே. கல்வியையே 'கேடில் விழுச்செல்வம்' என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். அத்தகைய அழிவற்ற செல்வ மாகிய கல்வியை வளர்ப்பதற்குரிய சாதனங்களில் நூல் நிலையம் மிகவும் சிறந்ததாகும்.

நூல்களை நிலையாகக் கொண்டுள்ள இடமே நூல் நிலையமாகும். நூல்நிலையத்தில் மக்களின் பலதுறை அறி

வையும் வளர்க்கக்கூடிய ஞான நூல்கள், இலக்கியங்கள், ஆராய்ச்சி நூல்கள், விஞ்ஞானம், பொருளாதாரம், வரலாறு, நில இயல், உயிரியல், மருத்துவம், முதலிய நூல்கள், மத சம்பந்தமான புராணங்கள், காவியங்கள், பக்தி நூல்கள் ஆகிய எல்லாவகை நூல்களும் ஒழுங்குபடுத்தி வரிசை வரிசையாகப் பேழைகளில் வைக்கப் பட்டிருக்கும். நூல் நிலையங்களுக்குச் செல்வோர் அமைதியாக இருந்து படிப் பதற்கேற்ற வசதிகள் செய்யப்பட்டிருக்கும். உறுப்பினர் கள் நூல்களை இல்லத்திற்கு எடுத்துச் சென்று படிக்கவும் வசதியுண்டு. நூல்நிலையங்களில் புத்தகங்களை அகரவரி சைப் படுத்தி அடுக்கிவைத்திருப்பர். அப்பட்டியலின் உதவியால் உடனே நமக்கு வேண்டிய நூல்களை நூலகர் எடுத்துத் தருவர்.

நூல்நிலையங்களில் பலவகை உண்டு. பள்ளிநூல் நிலையம் மாணவர்கட்குப் பெரும் பயன் அளிக்கிறது. ஊராட்சி, நகராட்சி நிலையங்களின் சார்பில் சிற்றூர்களிலும் பேரூர்களிலும் நூல்நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை போன்ற பெரு நகரங்களில் வட்டத்துக்கொரு நூல்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள பல்கலைக் கழக நூல்நிலையமும், கன்னிமாரா நூல்நிலைய மும் குறிப்பிடத்தக்க பெருநூல் நிலையங்களாம். இவை தவிர ஆராய்ச்சித் துறையில் பயிலும் மாணவர்கட்கும், மருத்துவம், பொறியியல் போன்ற தொழில்துறையில் பயி லும் மாணவர்கட்கும் பயன்படக் கூடிய வகையில் அயல்நாட்டு அரசாங்கங்கள் அமைத்துள்ள நூல் நிலையங் கள் சிலவும் சென்னையில் உள்ளன. இவை யாவும் இருந்த இடத்திலிருந்தே தம்மை நாடிவருவோர்க்கு அறிவுச் செல் வத்தை வரையாது வழங்குதலால் **அசையா நூல் நிலை யங்கள்** எனப்படும்.

இவை தவிர **அசையும் நூல் நிலையங்கள்** எனவும் ஒருவகை நூல்நிலையம் உண்டு. நூல்நிலையம் அமைக்க முடியாத சிற்றூர்களில் வாழும் மக்களுக்குப் பயன்படக் கூடிய வகையில் வாரந்தோறும் பேருந்து வண்டிகளில் நூல்களை எடுத்துச் சென்று அவர்கட்கு வழங்கிப் படிக்கச் செய்யும் நடமாடும் நூல்நிலையங்கள் அவ்வகையைச் சார்ந் தன. இத்தகைய நூல்நிலையங்களால் கிராமப் புற மக்கள் அடையும் நன்மைகள் மிகப் பலவாம். கிராம மக்கள் பயிர்த்

தொழில் முறையில் புதிய விஞ்ஞான முறைகளைப் பின்பற்றவும், ஓய்வு நாட்களில் பல்வேறு குடிசைத் தொழில்களைப் பெருக்கி வருவாய் தேடவும், கூட்டுறவு முறையில் தொழில் செய்து நம்நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்தவும் பயன்படக் கூடிய நூல்களை நூல்நிலையங்கள் வாயிலாக வழங்கிப் படிக்கச் செய்வதன் மூலம் அவர்கள் வாழ்வை உயர்த்தலாம். இவ்வகையில் நடமாடும் நூல் நிலையங்கள் பேருதவி புரிகின்றன.

உயர்கல்வி கற்கின்ற மாணவர்கள் பலவகைப்பட்ட நூல்களைப் பயில வேண்டியுள்ளது. அந்நூல்கள் மிக்க விலையுள்ளனவாயிருப்பதோடு சில சமயங்களில் கிடைத்தற்கரியனவாகவும் உள்ளன. ஏழை மாணவர்கள் அவற்றை வாங்கிப் படிப்பது இயலாத செயலாகும். அவர்கட்கெல்லாம் நூல்நிலையங்களே உற்ற நண்பர்களாக விளங்குகின்றன. பள்ளியில் பயிலும் மாணவர்கள் பள்ளிப் பாடங்களுடன் பலதுறைகளிலும் அறிவை வளர்த்துக் கொள்ளல் இன்றியமையாததாகும். பள்ளி நூல் நிலையங்கள் அவர்கள் அறிவுப்பசியைப் போக்கும் கருவூலங்களாகத் திகழ்கின்றன.

மனக்கவலையை மாற்றும் மாண்புறு இடம் நூல்நிலையமே ஆகும். "என் கிழப் பருவத்திலும் நான் தனித்திருக்கும் காலங்களிலும் நூல்களே எனக்கு இன்பம் அளிக்கின்றன. அவை எனது வாழ்க்கையாகிய பயணத்தில் எனக்கு நன்மை செய்யும் கட்டுச் சோறாகப் பயன்படுகின்றன" என்று **மாண்டெய்ன்** என்னும் பெரியார் கூறியுள்ளார். நம் நாட்டிலும் இன்று புகழ் பெற்று விளங்கும் அறிஞர்கள் பலரும் நூல் நிலையங்களைத் தக்கவகைகளில் பயன்படுத்தி வாழ்வில் உயர்ந்தவர்களேயாவர்.

ஆதலால் மாணவர்கள் இளமையிலேயே நூல்நிலையங்களைத் தக்க வகையில் பயன் படுத்தி அறிவை வளர்த்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடவேண்டும். பள்ளி நூல் நிலையங்களிற் சென்று பயில்வதோடு மாணவர்கள் தம் சொந்தத்தில் சிறுகச் சிறுக நூல்களை வாங்கித் தனியானதோர் நூல்நிலையத்தை அமைத்துக் கொள்வது மிகவும் நலம் பயக்கும். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது போல நூல் நிலையம் இல்லாத

ஊரிலும் குடியிருத்தலாகாது என்னும் நிலை உருவாக வேண்டும். பட்டி தொட்டிகளெங்கும் நூல்நிலையங்கள் ஏற் படுத்த முயல வேண்டும். இங்ஙனம் எல்லாம் செய்தால் நம் நாடு கல்வியில் சிறந்து உலகப் புகழ் பெறும் என்பது உறுதியாகும்.

பயிற்சி

பின்வரும் தலைப்புக்களைப் பற்றிக் கட்டுரை எழுதிப் பழகுக.

1. பெண்கல்வி
2. வாசக சாலை
3. தாய்மொழி மூலம் கல்வி
4. கல்விப் படக்காட்சி

10. பிறர் சொற்பொழிவுகளைக் கேட்டுக் குறிப்பெடுத்தல்

[அறிஞர்கள் பலர் சொற்பொழிவுகளைக் கேட்டுத் தம் அறிவை வளர்த்துக் கொள்வது மாணவர்க்கு நலம் பயக்கும். பிறர் சொற்பொழி வுகளைக் கேட்கும்போது இன்றியமையாத கருத் துக்களைக் குறித்து வைத்துக் கொண்டால் பின்னர் அவற்றை வைத்துக் கொண்டு அவர் சொற்பொழிவை முழுமையாக எழுதிக்கொள்ள லாம்.]

மாதிரி :

தமிழர் வீரம்

1. வீரத்துக்கு விளைநிலமாகத் திகழ்ந்தது தமிழகம். போர் எனில் தோள் பூரிக்கும் வீரர்கள் பண்டு இருந்தமை. அதனாலேயே தமிழகம் அக்காலத்தில் அந்நியர்க்கு அடிமைப்படாமல் இருந்தமை.
2. தமிழ் வீரர்களின் மாண்பினைச் சங்க இலக்கியங்கள் சிறப்பாகப் புறநானூறு எடுத்துரைத்தல்.
3. "கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை"
விழிந்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஒட்டன்றோ வன்க ணவர்க்கு"

என்ற குறள்கள் தமிழர் வீரத்தை விளக்கல்.

4. தமிழர் வீரத்தை ஒருகலையாகவே வளர்த்திருந்தமை. தொல்காப்பியப் புறத்திணை இயல் பழந்தமிழர் போர் முறைகளை விளக்கல்.

5. தமக்குச் சமமானவருடனேயே போர்புரிவர் தமிழ் வீரர். போர், சமம் என்ற சொற்கள் அதனை விளக்கல்.

6. மறத்துறையிலும் அறநெறி தவறாதவர்கள். அடி பிறக்கிட்டோர், ஆயுதமிழந்தோர் மீது போர் புரியாமை. பறையறைந்து தெரிவித்துப் போர்த்தொடங்கல், "ஆவும் ஆனியற்......ஆறத்தாறு நுவலும் பூட்கை மறத்திறன்" எனப் புறநானூறு கூறல்.

7. பகைவர்க்கும் இரங்கிக் கண்ணோட்டத்துடன் உதவுதல்.

"பேராண்மை என்ப தறுகணொன் றுற்றக் கால்
ஊராண்மை மற்றதன் எஃகு"

என்று குறள் கூறுதல்.

8. தமிழர் வீரத்துக்கு வீரத் தாயரே காரணம். அவர்கள் பாலுடன் வீரத்தையும் ஊட்டிவளர்த்தமை. அவர்களுடைய வீரவுள்ளத்தைப் புறநானூற்றுப் பாடல்கள் விளக்கல். "கெடுக சிந்தை கடிதிவள் துணிவே" என்ற ஒக்கூர் மாசாத்தியார் பாடல். "ஈன்று புறந் தருதல்"......என்ற பொன் முடியார் பாடல். மார்பில் புண்பட்டு இறந்த மைந்தனைக் கண்டு ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்த வீரத்தாயின் செயல்.

9. தமிழ் வீரத்துக்கு விளக்காய் அமைந்தவர்கள் கரிகாலன், பாண்டியன் நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன். அவர்களுடைய ஒப்பற்ற வீரச் செயல்கள் தமிழர் வீரத்தின் மாண்பை விளக்குதல்.

11. பிறர் வானொலிப்பேச்சைக் கேட்டுக் குறிப்பெடுத்தல்.

[அறிஞர்கள் பலர் வானொலியில் பல பொருள்பற்றி அடிக்கடி சொற்பொழிவுகள் நிகழ்த்துகின்றனர். அவற்றைக் கேட்டுக் குறிப்பெடுத்துப் பின்னர் அக்குறிப்புக்களைக்கொண்டு அவற்றை விளக்கி எழுதி வைத்துக்கொள்ளுதல்

நலம் பயக்கும். இங்குக் காந்தியடிகளின் பிறந்த நாள் விழாவின்போது அறிஞர் அண்ணா அவர்கள் வானொலியில் ஆற்றிய சொற்பொழிவினைக் கேட்டு எடுத்த குறிப்புக்கள் மாதிரியாகத் தரப் பட்டுள்ளன.]

காந்தியடிகள் பிறந்தநாள் விழா

(அறிஞர் அண்ணா அவர்களின் வானொலிப்பேச்சு)

குறிப்புக்கள்

1. காந்தியடிகளின் பிறந்தநாள் விழாவில் பலர் பல வாறு தம் அன்பைக் காணிக்கையாக்கல்.
2. காந்தியடிகள் தனி மனிதரல்லர். அவர் காலத்தின் சின்னம். ஓர் எழுச்சியின் அடையாளம். ஒரு மறுமலர்ச்சியின் உருவம்.
3. அவர் அரசியல் துறையில் மட்டும் வெற்றிபெற்றவரல்லர். எல்லாத் துறைகளிலும் தம் முத்திரையைப் பொறித்தவர்.
4. மகான்களின் விழாக்களைக் கொண்டாடுவதுடன் நில்லாமல் அவர்கள் காட்டிய நெறியில் நடக்கவேண்டும். அதற்கே விழாக்கள் பயன்படவேண்டும். மாலையின் மாண்பு மணத்தில்; விளக்கின் பயன் ஒளியில்; விழாவின் பயன் செயலில்.
5. காந்தியடிகளின் பிறந்தநாள் விழா அவர் புகழ்பாடுவதாக மட்டும் அமையாமல் அவர் காண விரும்பிய சமுதாயத்தை, இலட்சியத்தை, தூய்மையை நினைவிலே கொண்டு பணியாற்றத் தூண்டுவதாக இருத்தல்வேண்டும்.
6. காந்தியடிகள் புரிந்த அற்புதம்-ஊமைகளைப் பேசவைத்தார்; படை பல வந்தாலும் அஞ்சாதீர் என்றார்; சிட்டுக் குருவிகட்கு வல்லூறை எதிர்க்கும் ஆற்றலைத் தந்தார்.
7. பதினாறும் நூற்றாண்டில் இந்தியாவின் நிலை. ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியா பெற்றிருந்த இழி நிலை-காந்தியடிகள் காங்கிரசில் புகுந்த பின் இந்தியாவின் நிலை-காந்தியடிகளின் புகழொளி மூலம் உலகம் இந்தியாவைக் கண்டது.

8. காந்தியடிகள் இராணுவத்தையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலை இலட்சக் கணக்கானவர்க்கு ஊட்டினர்.
9. சுயராச்சியம் பெறுவது மட்டுமே அடிகளின் நோக்கம் இல்லை. நாட்டுமக்கள் எந்நிலையடைய வேண்டுமோ அந்நிலையை அடைவதற்கு அடிமை வாழ்வு தடையாக இருந்தமையால் அதனை அகற்றப் பாடுபட்டார்.
10. அடிமை வாழ்வு அகன்ற பின் நாட்டின் நிலை, ஏற்றத் தாழ்வு, ஏழ்மை, வேலையில்லாத் திண்டாட்டம் முதலிய கேடுகள் நீங்காமை. அவர் நினைத்த கேடுகளற்ற தூயநாட்டை உருவாக்கவேண்டும் என்ற உறுதி பெற்றிடவேண்டும்.
11. காந்தியடிகள் மறையவில்லை; நம்முடன் கலந்துவிட்டார். அவருடைய எண்ணங்களைச் செயலாக்கும் முயற்சியில் ஈடுபட இந்நாள் நமக்கு வழிகாட்ட வேண்டும்.

12. அக்குறிப்புக்களை விரித்து எழுதல்

காந்தியடிகளின் பிறந்த நாள்

இன்று உலக உத்தமர் காந்தியடிகளின் பிறந்த நாள். நாடெங்கும் இந்நாள் நன்னாளாகக் கொண்டாடப்படுகிறது. அவரவர்க்கு விருப்பமான முறையில் தம் அன்பினை அவர்க்குக் காணிக்கை யாக்குகின்றனர். அவர் தூயவர், விடுதலை வீரர், வேதாந்தி, சமதர்மவாதி, ஏழை பங்காளர் எனப் பாராட்டுபவர் பலர் உள்ளனர். அவர்கள் காந்தியடிகளை முழுமையாக உணர்ந்தவர்களா என்பது சிந்திக்க வேண்டிய செய்தியாகவே உள்ளது. காரணம் காந்தியடிகள் தனி மனிதர் என்ற முறையிலே மட்டும் கவனிக்கப்பட வேண்டியவர் அல்லர். அவர் காலத்தின் சின்னம்! ஓர் எழுச்சியின் அடையாளம்! ஒரு மறுமலர்ச்சியின் உருவம்!

அரசியல் கண்ணோட்டத்துடன் மட்டும் கவனித்தால் அவருடைய அறப்போர் முறையை வியந்து பாராட்டுவதுடன் நிற்கலாம். ஆனல் அவர் அரசியல் துறையில் மட்டுமல்லாமல் எல்லாத் துறைகளிலும் தம் முத்திரையைப் பொறித்துச் சென்றவராவர். எல்லாத் துறையினரும் காந்தியடிகள் எமக்காகவே வாழ்ந்தார், தொண்டு புரிந்-

தார் என்று சொந்தம் பாராட்டக்கூடிய வகையில் அவர் வாழ்வும் தொண்டும் அமைந்திருந்தன.

மகான்கள், மாவீரர்கள் ஆகியவர்களின் பிறந்த நாட்களைக் கொண்டாடுவதிலும், அவர் புகழ்பாடுவதிலும் வல்லவர்கள் நாம். ஆனால் அவர்கள் காட்டிய நெறிகளில் நடக்கிறோமா என்றால் "இல்லை" என்ற பதிலையே ஏக்கத்துடன் பெற முடிகிறது. அங்ஙனம் அன்றி இன்று நடந்திடும் திருநாளின் மாண்பு நாளையும் மறுநாளும் பிற நாட்களிலும் நமது எண்ணத்திலும் செயலிலும் ஒளிவிட வேண்டும். மாலையின் மாண்பு மணத்தில்! விளக்கின் பயன் ஒளியில்! அதுபோல விழாக்களின் பயன் நமது செயலில் இழைந்திடும் மாண்பிலேயே இருக்கிறது.

எனவே, காந்தியடிகளின் பிறந்த நாள் நாமெல்லாரும் நற்கருத்தும் சீரிய செயலும் பெற்றிடுவதற்கான வாய்ப்பாக அமைதல் வேண்டும். அவரை மகானென்றும் வழிபாட்டுக்குரியவர் என்றும் கொண்டாடி, அவர் மகிமையை அற்புதத்தை மட்டும் பேசுவது போதும் என்று இருந்திடாமல், அவர் காணவிரும்பிய சமுதாயம், அவர் எடுத்துக் காட்டிய இலட்சியம், அவர் விளக்கிச் சென்ற தூய்மை ஆகியவற்றினை நினைவிலே கொண்டு அதற்கான முறையிலே பணியாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காந்தியடிகள் ஆகாயத் தாமரையைப் பறித்துக் காட்டும் அற்புதத்தைப் புரிந்தாரில்லை. ஆனால் ஊமைகளாய் இருந்தவர்களைப் பேசவைத்தார்; உரிமை முழக்கமிடச்செய்தார். படை பல வந்திடினும், தடை பல நேரிடினும் அஞ்சாதீர் என்றுரைத்தார். சிட்டுக் குருவிகளுக்கு வல்லூறை எதிர்த்திடும் ஆற்றல் ஏற்படச் செய்தார். நம்மால் என்ன ஆகும் என்ற ஏக்கத்தை விரட்டினார்; 'நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்' என்ற உறுதி எழச் செய்தார். போர் முகாம் அமைத்து அன்று; எளிய குடில் அமைத்து. ஆத்திரம் ஊட்டியன்று; அன்பினை ஊட்டி. அந்த அரையாடை மனிதர் இங்ஙனம் கோடானு கோடி மக்களுக்கு மானமுள்ள வாழ்வு பெற்றுத் தந்ததைவிட அற்புதம் வேறு என்ன இருக்கமுடியும்? 'இவரா இந்தியாவின் தலைவர்' என்று எள்ளி நகையாடியவர்கள் அந்த அற்புதம் நடைபெற்ற பிறகு 'இவரன்றோ தலைவர்' என்று புகழ்ந்தனர்.

‘இந்தியா என்றோர் நாடுண்டு ; அங்கு ஏலம் கிராம்பு பெறுவதுண்டு ; பொன்னும் பொருளும் மிக உண்டு ; போக்கறியாதார் நிரம்ப உண்டு’ என்ற அளவில்தான் பதினாரும் நூற்றாண்டில் நம் நாட்டைப்பற்றி உலகம் அறிந்திருந்தது. பிறகு படிப்படியாக இந்தியா ஆங்கிலேயரின் பிடியில் சிக்கிவிட்டது. அப்போது ‘இந்தியா என்றோர் நாடுண்டு, அஃது ஆங்கிலேயர்க்கு நல்ல வேட்டைக்காடு’ என்று உலகம் இழித்தும் பழித்தும் பேசிக்கொண்டது. விடிவெள்ளி தோன்றுவதுபோலத் திலகர் காலத்தில் விடுதலைக்கு முயற்சி செய்யப்பட்டது என்ற போதிலும் காந்தியடிகள் காங்கிரசுக்குள் புகுந்த பிறகே “இந்தியா என்றோர் நாடுண்டு ; அங்கு விழிப்பும் எழுச்சியும் மிக உண்டு” என்று உலகம் அறிந்துகொள்ள முடிந்தது. காந்தியடிகளின் புகழொளி மூலமே உலகம் இந்தியாவைக் கண்டு வந்தது. தன்னலமற்ற போராட்ட மனோபாவத்தைக் காந்தியடிகளால்தான் உண்டாக்க முடிந்தது. அவருடைய உருவமோ, உடலமைப்போ, பேச்சோ, நடவடிக்கையோ இராணுவ மனப்பான்மையைத் தரக்கூடியவனவாகவில்லை. ஆனால் அவரால் இராணுவங்களையும் எதிர்த்து நிற்கக் கூடிய வீரவுணர்ச்சியை இலட்சக் கணக்கானவர்களிடத்தில் உண்டாக்க முடிந்தது.

சுயராச்சியம் பெற்றளித்துவிட்டால் போதும் என்று அவர் கருதவில்லை. சுயராச்சியம் ஓர் இலட்சியத்தை அடைவதற்குரிய வாய்ப்பு என்றே அவர் கருதினார். ‘ஒரு நாட்டுக் காதையிலே பொன் ஏடு அது ! ஆனால் கடைசி ஏடு அன்று !’ என்பதை வலியுறுத்தினார். நாடும் மக்களும் எந்த நிலைபெற வேண்டுமோ அந்த நிலையைப் பெற அடிமைத்தனம் தடையாக இருக்கிறது. ஆகவே எந்த விலை கொடுத்தேனும் அதனை அகற்றியாக வேண்டும் என்றே அவர் கூறினார்.

அடிமைத்தளை அகற்றப்பட்டது. ஆனால் அவர் எந்த நிலையில் நாடும் மக்களும் இருந்திட வேண்டும் என்று கருதினாரோ அந்த நிலையை ஏற்படுத்திவிட்டோமா ? இல்லை என்றே கூற வேண்டியுள்ளது. ஒரு புறம் செல்வம் ! அதனைச் சூழ வறுமை ! ஒருபுறம் பளபளப்பான பட்டினங்கள் ! கோடியிலே வறுமை நெளியும் சேரிப்புறங்கள் ! ஒருபுறம் தொழிற்கூடம் ! மற்றொருபுறம் வேலையில்லா

தோர் கூட்டம்! ஒருபுறம் அறநெறி நிலையங்கள்! பிறிதோர் புறம் சுரண்டல்காரர்கள்! சூது மதியினர்! இவற்றைக் காணவா காந்தியடிகள் காலமெல்லாம் உழைத்தார்? இந்தக் கேடுகளற்ற ஒரு தூய நாட்டையே அவர் காணவிரும்பினர். அவர் விருப்பத்தை நிறைவேற்றியாக வேண்டும் என்ற உறுதியைப் பெற்றிட இந்நாள் உணர்ச்சி அளித்திட வேண்டும்.

காந்தி அடிகள் மறையவில்லை. நம் முன் இருக்கிருர்; நம்முடன் கலந்துவிட்டார் என்று எண்ணுதல் வேண்டும். அவருடைய எண்ணங்கள் மடிந்திடவில்லை. அவைகளை நம்முடைய இலட்சியமாகக் கொண்டுள்ளோம் என்ற உறுதி பிறந்திட வேண்டும். அவருடைய நாட்களில் அவர் குரல் கேட்டு அந்நிய அரசு வெருண்டோடிற்று. ஆனல் ஓட்டப்பட வேண்டியவை இன்னும் பல இருக்கின்றன. பொய்மையும் கயமையும், கல்லாமையும் இல்லாமையும், சாதிப்பித்தும் வகுப்புமாற்சரியமும் வெருண்டோட வேண்டும். அதற்குத் தேவைப்படும் தூய்மையும் வாய்மையும் அஞ்சாமையும் பணியாற்றும் தன்மையும் நம் ஒவ்வொருவர்க்கும் இன்று பிறந்திட வேண்டும். அதற்கு இந்நாள் பயன்பட வேண்டும்.

பயிற்சி

இங்ஙனம் பிறர் சொற்பொழிவுகளையும் வானெலிப் பேச்சுக்களையும் குறிப்புக்கள் எடுத்தும், விரித்து எழுதியும் பழகுக.

13. கொடுத்த தலைப்புக்கள் பற்றிக் கட்டுரை எழுதல்

மாதிரி :

காலத்தின் அருமை

'பொன்னினும் சிறந்ததோர் பொருள் அருங்காலமே' என்பது காலத்தின் அருமையை உணர்ந்த பெரியோர்கள் கூறிய நன்மொழியாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை ஒருவன் அடைவதற்கும் காலமே பெரிதும் துணையாக இருக்கிறது. ஆதலால் அத்தகைய காலத்தின் அருமையை உணர்ந்து அதனைத் தக்க

வகையில் பயன்படுத்தி உயர்நிலையுறுவதே மனித வாழ்வின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

"மொழிந்த சொல்லும் விடுத்த அம்பும் கழிந்த காலமும் திரும்ப வாரா" என்று பெரியோர் கூறுவர். கடந்து போன காலத்தை மீண்டும் பெறல் இயலாது. அது விலை கொடுத்தும் வாங்க முடியாத பொருளாகும்.

"நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்"

என்று ஒவ்வொரு நாள் கழிவும் நம் வாழ்நாளின் ஒரு கூறு கழிவதாகும் எனச் சுட்டிக் காட்டினர் திருவள்ளுவர். அதனாலேயே அறிஞர்கள் சிறிது காலம் வீணாகக் கழிந்தாலும் மனம் மிக வருந்துகின்றனர். சாதாரண மனிதர்களோ காலத்தின் அருமையை உணர்வதுமில்லை; காலம் வீணாவதற்கு வருந்துவதுமில்லை.

நமக்குக் கிடைத்திருக்கும் வாழ்நாள் குறைவானதாகும். அக்குறைந்த நாளிலும் பாதியை உறக்கத்தில் கழித்துவிடுகிறோம். எஞ்சியுள்ள நாட்களில் அறிவில்லாத குழந்தைப் பருவமும் தடுமாற்றமுடைய முதுமைப் பருவமும் போக விஞ்சிய நாட்கள் மிகக் குறைவே. அக்குறைந்த காலமாவது நமக்குச் சிதையாமல் கிடைக்கிறதா? அதில் நோய் நொடிகளால் ஒரு பகுதியை இழந்துவிடுகிறோம். இவையெல்லாம் போக நமக்குக் கிடைக்கும் காலம் மிகவும் அற்பமானதன்றோ? அச்சிறிய காலத்தையாவது நாம் தக்க வழியில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுவது எவ்வளவு இன்றியமையாதது என்பதனைச் சிந்தியுங்கள்.

ஒவ்வொருவரும் தாங்கள் செய்ய வேண்டிய அன்றாடக் கடமைகளைச் சிந்தித்து அவற்றைக் குறித்த காலங்களில் ஒழுங்காகச் செய்ய வேண்டும். காலமறிந்து இடமறிந்து ஒரு செயலைச் செய்தால் அது வெற்றி பெறுவது உறுதி. சோம்பலால் காலத்தின் அருமை உணராமல் அதனைக் கைநழுவ விட்டால் மேற்கொண்ட செயலில் வெற்றி பெறுவது அருமையாம்.

இளம்பருவ மாணவர்கள் ஒவ்வொரு நாளும் தங்கள் கடமைகளைச் சோம்பலில்லாமல் செய்யப் பழக வேண்டும். இளமையே கல்வி கற்பதற்கு ஏற்ற பருவமாகும். அத்தகைய இளம் பருவத்தை வீணாகச் செல

விடுபவர் பிற்காலத்தில் பெருந்துன்பப் படுவர். காலத்தின் அருமையை உணர்ந்து கடனாற்றும் நல்ல பழக்கத்தை மேற்கொள்வதற்கும் இளம் பருவமே ஏற்றதாகும். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பது பழமொழியன்றோ? எனவே மாணவர்கள் நாள்தோறும் தாங்கள் செய்ய வேண்டுவனவற்றைக் குறித்து வைத்துக்கொண்டு குறித்த நேரத்தில் செய்யப் பழக வேண்டும். அதனால் காலம் வீணாவதைத் தடுப்பதோடு வாழ்க்கை நிகழ்ச்சிகள் யாவும் ஒழுங்காக நடைபெறும்.

பொருளீட்ட வேண்டிய காளைப் பருவத்தில் பாடுபட்டுழைத்துப் பொருளை ஈட்ட வேண்டும். இரவுக்கு வேண்டியதைப் பகலிலும் முதுமைக்கு வேண்டியதை இளமையிலும் தேடிக்கொள்பவனே அறிவுடையவனாவான். மழைக் காலத்திற்கு வேண்டிய உணவினை வெயிற் காலத்திலேயே தேடி வைத்துக்கொள்ளும் எறும்புகளின் வாழ்விலிருந்தாவது நாம் இந்த உண்மையை உணர்தல் வேண்டும்.

நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் நமக்கும் பிறர்க்கும் நன்மை தரக்கூடியதாய் இருத்தல் வேண்டும். 'ஒன்றே செய்யினும் நன்றே செய்க; நன்றே செய்யினும் இன்றே செய்க' என்பது ஆன்றோர் வாக்கு. பிறகு பார்த்துக் கொள்வோம் என்று காலத்தை வீணாக்கக் கூடாது. 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்ற பழமொழிக்கு ஏற்ப நமக்கு எவ்வெப்பொழுது சமயம் வாய்க்கிறதோ அவ்வப்போதே அந்த நற்செயலைச் செய்து முடித்தல் வேண்டும்.

நாம் ஓய்வு நேரத்தையும் வீணாக்காமல் பயன்படுத்த முயலவேண்டும். மேல்நாட்டில் வாழ்ந்த மருத்துவர் ஒருவர் நோயாளியைப் பார்ப்பதற்கு ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டிற்கு உந்து வண்டியில் செல்லும் இடை நேரத்தில் சிறிது சிறிதாக ஒரு நூலை எழுதி வெளியிட்டாராம். அவர் காலத்தின் அருமையை உணர்ந்து போற்றியதை என்னென்பது! நம் நாட்டிலும் எத்தனையோ அறிஞர்கள் காலத்தின் அருமையை உணர்ந்து அதனைத் தக்கவகையில் பயன்படுத்திப் பெருஞ் சிறப்படைந்துள்ளனர்.

ஆதலால் மாணவர்கள் தங்கள் அன்றாடக் கடமைகளைச் சிந்தித்து ஒவ்வொரு செயலையும் செய்வதற்குரிய

கால அட்டவணை வகுத்து அக்காலம் தவறாமல் அக்கடமைகளைச் செய்யப் பழகவேண்டும். ஓய்வு நேரங்களையும் பாழாக்காமல் பயனுடைய வகையில் செலவழித்தல் வேண்டும். ஓய்வு நேரங்களில் நல்ல நூல்களைப்படித்தல், வாழ்க்கைக்குப் பயன் தரக்கூடிய ஏதாவதொரு தொழிலைப் பயிலுதல், இசை, நாடகங்களில் ஈடுபடுதல், பேசிப் பழகுதல் போன்ற துறைகளில் ஈடுபட்டால் மிக்க நன்மையடையலாம்.

காலம் கடவாது கடனாற்றும் காட்சியை இயற்கையினிடத்திலேயே நாம் காணலாம். வெங்கதிர் இரவியும் தண் கதிர் மதியமும் தத்தம் கடமைகளைக் காலம் தவறாமல் செய்யவில்லையா? மரம் செடி கொடிகள் தத்தமக்குரிய காலங்களில் தளிர்த்துப் பூத்துக் காய்த்துப் பழுக்கவில்லையா? எறும்பு முதல் யானை ஈறாக உள்ள உயிர் வகைகள் யாவும் காலத்திற்கேற்ற செயல்களைச் செய்து நலனடையவில்லையா? எனவே பகுத்தறிவு பெற்ற நாமும் காலத்தின் அருமையை உணர்ந்து அதனைத் தக்க வகையில் செலவிட்டுப் பேரும் புகழும் பெறுவோமாக.

பயிற்சி

பின்வரும் பொருள்களைப்பற்றிக் கட்டுரை எழுதிப் பழகுக :

1. உழவுத்தொழில், 2. செய்தித்தாள், 3. குடியாட்சியின் பெருமை, 4. மாணவரும் பொதுநலத் தொண்டும்.

14. கொடுக்கப்பட்ட மேற்கோள் நூல்களிலிருந்து கட்டுரைப் பொருள் திரட்டல்

தமிழின் பெருமை

[நூல்கள்: கம்பராமாயணம், பாரதியார் பாடல், பாரதிதாசன் கவிதைகள், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், நல்வழி, திருப்புகழ், சிலப்பதிகாரம், கால்டுவெல் ஒப்பிலக்கணம், மனோன்மணீயம், திருவிளையாடல், தமிழ் விடு தூது.]

குறிப்புக்கள் :

1. தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை என்பது பொருள். வண்டு தமிழ்ப் பாட்டிசைக்கும் தாமரையே என்பதில் 'தமிழ்' என்ற சொல் இனிமை என்ற பொருள் தருதல்.
2. தமிழுக்கு அமுதென்று பேர்—பாரதிதாசன்.
3. முத்தமிழ்: இயல், இசை, நாடகம். 'சங்கத் தமிழ் மூன்றும் தா'-ஔவையார் நல்வழியில் குறிப்பிடல்.
4. முத்தமிழடைவினை முற்படுகிரிதனில் முற்பட எழுதிய முதல்வோனே-அருணகிரி நாதர் திருப்புகழில் குறித்தல்.
5. இசைத்தமிழ் நாடகத்தமிழ் நூல்கள் பல இருந்தமை சிலப்பதிகாரத்தால் விளங்குதல். சிலப்பதிகாரம் முத் தமிழ்க் காப்பியம் எனப் போற்றப்படுதல்.
6. தமிழின் பெருமை : சொல்வளம் மிக்கமொழி. 'வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி வாழியவே'-எனப் பாரதியார் குறிப்பிடல்.
7. தமிழை உயர்தனிச் செம்மொழி என்று மொழி நூலறி ஞர்கள் பாராட்டுதல்-சூரியநாராயண சாஸ்திரியார் தமிழ் வரலாறு என்னும் நூலில் விளக்குதல்.
8. கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு ஆகிய மொழி களுக்குத் தமிழே தாய்மொழி என்று கால்டுவெல் பாதிரியார் ஒப்பிலக்கணத்தில் கூறுதல்.
9. "கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும், உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்று பலவா யிடினும், ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன் சீரிளமைத் திறம் வியந்தே செயல் மறந்து, வாழ்த்துதுமே."—என்று மனோன்மணீய ஆசிரியர் பாராட்டல்.
10. கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப் பசுந்தமிழ்—திருவிளை யாடல்.
11. இருந்தமிழே உன்னாலிருந்தேன்—வானோர் விருந் தமிழ்த மென்றாலும் வேண்டேன்—தமிழ் விடு தூது.

15. பொருள் வகையாலும் நடை வகையாலும் சிறந்த கடிதங்கள் எழுதுதல்

[கடிதம் எழுதுவது ஒப்பற்ற ஒரு கலையாகும். நடைவகையாலும் பொருள் வகையாலும் சிறந்த கடிதங்கள் உயர்ந்த இலக்கியங்களாகப் போற்றப்படும் பெருமை உடையனவாம்.]

மாதிரி :

நண்பனுக்குக் கடிதம்

113 A, சூளை நெடுஞ்சாலை,
சென்னை—7,
29—10—67

அன்புமிக்க நண்பா!

சால வணக்கம்; நலம். உன் நலமறிய ஆவலாக உள்ளேன்.

உன் அன்புக்கடிதம் கிடைக்கப்பெற்றுப் பெருமகிழ்ச்சி அடைந்தேன்; நன்றி. நான் சமூகநல இயக்கத்தில் சேர்ந்து தொண்டாற்றுவது பற்றியும், அவ்வியக்கத்தின் நடைமுறை பற்றியும் விளக்கி எழுதுமாறு கேட்டிருந்தாய். உன்னுடைய ஆவலைப் பாராட்டுகின்றேன்.

எங்கள் பள்ளியில் 'மாணவர் சமூகநல இயக்கம்' என்ற பெயருடன் ஓர் அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது. பொதுத்தொண்டில் ஆர்வமுடைய மாணவர் பலர் அதில் சேர்ந்து சிறந்த பயிற்சி பெற்று வருகின்றனர். நானும் அவ்வியக்கத்தில் ஓர் உறுப்பினனாகச் சேர்ந்துள்ளேன்.

சமூக சேவை செய்வதை மக்களின் இன்றியமையாக் கடமைகளுள் ஒன்றாக வள்ளுவர் கூறியுள்ளார்.

'ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்'

என்பது வள்ளுவர் வாக்கு. மற்றையவர்க்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்பவனே உயிர் வாழ்பவனாவான். அங்ஙனம் செய்யாதவன் நடைப்பிணமேயாவான் என்பது இதன் கருத்து. பிறர்க்கு உதவி செய்வதனால் தனக்குக் கேடு வருமாயின், அக் கேட்டினை ஒருவன் தன்னை விற்றாயினும் கொள்ள வேண்டும் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

சமூகத்தொண்டாற்ற முற்படுபவர்கள் தந்நலம் கருதாமல் பிறர் நலம் கருதும் மனப்பான்மையுடையவராக இருத்தல் வேண்டும். அத்தகைய மனப்பான்மையை இளமையிலேயே மாணவர்கள் உள்ளத்தில் வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே எங்கள் பள்ளியில் மாணவர் சமூகநல இயக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எங்கள் இயக்கத்தில் ஐம்பது மாணவர்கள் உள்ளனர். அவர்கள் ஐந்து அணிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வோரணியிலும் பதின்மர் உள்ளனர். ஒவ்வோரணிக்கும் ஒரு மாணவன் தலைவனாக உள்ளான். ஆசிரியர் ஒருவர் அனைவர்க்கும் தலைவராக உள்ளார். ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை காலையில் எங்கட்குப் பயிற்சி அளிக்கின்றனர். சாலைகளில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தல், கூட்டங்களில் அமைதியை நிலைநாட்டல், வழி தெரியாதவர்களுக்கு வழிகாட்டல், விபத்துக்களில் சிக்கியவர்கட்கு முதல் உதவி அளித்தல், சுற்றுப்புறச் சுகாதாரம் காத்தல், கிராமங்கட்கும் சேரிகட்கும் சென்று சுகாதார வசதிகளைச் செய்து தரல், கல்வியறிவில்லார்க்குக் கல்வி போதித்தல் போன்ற பல துறைகளில் எங்கட்குச் சிறந்த பயிற்சிகள் தரப்படுகின்றன.

ஒவ்வொரு வாரமும் ஒவ்வோரணி ஒவ்வொரு கடமையைச் செய்ய வேண்டும். சென்ற வாரம் எங்கள் அணி சாலை போக்குவரத்துத் துறையில் சிறந்த பணியாற்றியது. காவல் துறையினரும் எங்களுடன் இருந்து போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் முறைகளை யெல்லாம் எங்கட்குக் கற்பித்தனர். இந்த வாரம் சேரி சீர்திருத்தத் துறையில் எங்கள் அணி ஈடுபட இருக்கின்றது. சேரிப் பகுதிகட்குச் சென்று அங்குள்ளவர்கட்குச் சுகாதார வாழ்க்கையின் இன்றியமையாமையைத் தக்க படங்கள் வாயிலாக விளக்கிச் சொற்பொழிவாற்றவும், துப்புரவுப் பணிகளை நாங்களே செய்யவும் திட்டமிட்டுள்ளோம். மற்றும் எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் மாலை நேரங்களில் சேரிப் பகுதிக்குச் சென்று அங்கு வாழும் கல்வியறிவற்ற பெரியோர்களுக்குக் கல்வி கற்பிக்கும் பணியைத்தொடர்ந்து செய்து வருகின்றனர். எங்களுடைய நன் முயற்சியைப் பொதுமக்கள் பாராட்டுவதுடன் அண்மையில் எங்கள்

பள்ளிக்கு வருகைபுரிந்த கல்வி அமைச்சரும் புகழ்ந்து பாராட்டியது எங்கட்குப் பெருமகிழ்ச்சி தந்தது.

இந்த இயக்கத்தில் ஈடுபட்டது முதல் நான் சுறுசுறுப்பும் கட்டுப்பாடும் கடமை உணர்ச்சியும் உடையவனாய் விளங்குகின்றேன்; உடலுரத்தையும் உள்ள உரத்தையும் போற்றி வளர்த்து வருகின்றேன்; எல்லோரிடமும் அன்பாகப் பழகவும், இனிமையாகப் பேசவும், ஒற்றுமையாக வாழவும் பழகிக் கொண்டுள்ளேன். என்னைப் பொறுத்த வரையில் இவ்வியக்கத்தால் எனக்குப் பெருநன்மை ஏற்பட்டுள்ளது என்று கூறுவேன். வாய்ப்பு ஏற்பட்டால் நீயும் இத்தகைய இயக்கத்தில் சேர்ந்து தொண்டாற்ற முற்படுவாயாக. வணக்கம்.

இங்ஙனம்,
அன்புள்ள நண்பன்,
V. இளங்கோ.

பயிற்சி

திருக்குறளின் மேன்மையை அயல்நாட்டு நண்பன் ஒருவனுக்கு விளக்குவது போல ஒரு கடிதம் எழுதுக.

16. அரசியல் அலுவலகங்களுக்கும், ஊராட்சி, நகராட்சி மன்றங்களுக்கும் விண்ணப்பம் எழுதல்

மாதிரி :

முதியோர் கல்வி நிலையத்திற்கு இடம் உதவ வேண்டுதல்

இளைஞர் மன்றம்,
25, ஸ்டாரன்ஸ் சாலை,
சென்னை.
5—11—67

உயர் திரு, நகராண்மைக் கழக ஆணையாளர் அவர்கள்,
சென்னை.

பண்பு நலம் சான்ற ஐயா,

வணக்கம்.

சென்னை மாநகரின் வடபால் அமைந்த இப் பகுதியில் பல்வேறு தொழில் நிலையங்களில் பணியாற்றும் தொழிலா

ளர்கள் சிறப்பாக நெசவாலைத் தொழிலாளர்கள் நிரம்ப வாழ்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் கல்வியில் பின்தங்கியவர்களாக உள்ளனர். சிலர் கல்வி வாசனை அற்றவர்களாகவும் உள்ளனர். கல்வி யருமை அறியாத அவர்கள் உலகியலை உணர முடியாமல் உழைப்பதும் உண்பதும் உறங்குவதும் ஓய்ந்த நேரங்களில் வம்பு விளையாட்டுக்களில் ஈடுபட்டு வீண்பொழுது போக்குவதுமாக உள்ளனர். அந்த வம்பு விளையாட்டுக்கள் சில சமயங்களில் வாய்ச் சண்டை, கைச்சண்டைகளுக்கு வழிகோலுவதும் உண்டு. புறக்கண்ணிருந்தும் அகக்கண் இல்லாக் குறையால் அவல நிலையில் வாழ்ந்துவரும் அவர்கள் நிலை மிகவும் இரங்கத்தக்கதாய் உள்ளது!

இப்பகுதியில் வாழும் கல்வியறிவற்ற மக்களுக்கு ஓரளவு கல்வி கற்பித்து அவர்களுடைய அறிவுக் கண்ணைத் திறந்துவைக்கும் சீரிய தொண்டில் ஈடுபடும் வகையில் முதியோர் கல்வி நிலையம் ஒன்றைத் தொடங்கி நடத்த எங்கள் இளைஞர் மன்றம் முடிவு செய்துள்ளது. எங்கள் மன்றத்தில் பயன் கருதாது பணி செய்யும் ஆர்வமுடைய இளைஞர்கள் பலர் உள்ளனர். ஆனால் முதியோர் கல்விநிலையம் நடத்துவதற்கு ஏற்ற இடவசதி இல்லை. ஆதலால் தாங்கள் அருள்கூர்ந்து ஸ்டாரன்ஸ் சாலையில் உள்ள நகராண்மைக் கழகப் பள்ளியில் மாலை நேரங்களில் முதியோர் கல்வி நிலையம் நடத்த எங்கள் மன்றத்திற்கு அநுமதி வழங்கினால் அது எங்கள் முயற்சிக்குப் பேருதவியாக இருக்கும். அதற்காகத் தாங்கள் விதிக்கும் எந்த நிபந்தனையையும் நாங்கள் ஏற்றுக்கொண்டு நல்ல முறையில் செயலாற்றுவோம் என உறுதி கூறுகின்றோம்.

அருள்கூர்ந்து எங்கள் வேண்டுகோளை ஏற்று எங்கள் தொண்டு சிறக்க உதவுமாறு பெரிதும் வேண்டிக் கொள்கின்றோம்.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
எழிலரசன்,
இளைஞர் மன்றச் செயலாளன்.

பயிற்சி

உன் தெருவின் சுகாதாரச் சீர்கேட்டை விளக்கி நகராண்மைக் கழக ஆணையாளர்க்கு ஒரு விண்ணப்பம் எழுதுக.

17. கற்பனைக் கட்டுரை

[ஒருவர் தாமே ஒரு செய்தியைக் கற்பனை யாகப் புனைந்து எழுதும் கட்டுரை.]

மாதிரி:

அன்னையின் கண்ணீர்

ஒருநாள் மாலை. கதிரவன் மறையும் நேரம். இளந் தென்றல் மெல்லெனத் தவழ்ந்து கொண்டிருந்தது. விடு முறையில் என் சிற்றூருக்குச் சென்றிருந்த நான் இன்பப் பொழுது போக்குக்காக ஆற்றங்கரைப் பக்கம் சென்றேன். அங்கு வானளாவ உயர்ந்து குளிர் நிழல் பரப்பி நின்ற ஆல மரத்தின் அடியில் கிடந்த பாறையொன்றிற் சாய்ந்தவாறு அமர்ந்தேன். எதிரில் ஆற்றில் சல சலவெனப் பண்ணி சைத்து ஓடிக் கொண்டிருந்த நீரில் மீன்கள் துள்ளி விளை யாடிக் கொண்டிருந்தன. கரையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரைப் பச்சைப் பசேலெனப் பயிர்கள் செழித்து வளர்ந்திருந்தன. பச்சைக் கம்பளம் காற்றில் நெளிவது போல அவை தென்றலில் தலையசைத்த காட்சி என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது.

இத்தகைய இயற்கை இன்பத்தில் மூழ்கிய நான் என்னை மறந்தேன்.

"நளிர்மணி நீரும் நயம்படு கனிகளும்
குளிர்பூந் தென்றலும் கொழும்பொழிற் பசுமையும்
வாய்ந்து நன்கிலகுவை வாழிய அன்னை!"

என்று பாவேந்தர் பாரதியார் பாரதத் தாயைப் புகழ்ந்து பாடிய பாட்டடிகளை என்வாய் முணுமுணுத்தது. என் மனக்கண் முன் இமயம் முதல் குமரி வரை விரிந்து பரந்த பாரத நாடு காட்சியளித்தது. வளமும் எழிலும் வாய்ந்த பாரத நாடு இன்று உரிமை பெற்ற திருநாடாய் உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்கும் மாட்சி என் உள்ளத்தைச் சிலிர்க்க வைத்தது. அந்தப் பெருமித நினைவிலேயே அமிழ்ந்து கண்ணை மூடி மெய்மறந்திருந்த என்னை யாரோ தட்டி எழுப்புவதை உணர்ந்தேன்; திடுக்கிட்டுக் கண் விழித்தேன்.

என் எதிரே அழகே உருவான அன்னை ஒருத்தி நின்று கொண்டிருந்தாள். அவள் தலையில் பன்னிற மணி

கள் பதித்த பொன்னாலான முடி ஒளி வீசிக் கொண்டிருந்தது. மார்பில் மணிமாலைகள் தவழ்ந்தன. நீலப் பட்டாடை உடலைச் சூழ்ந்து பளபளத்தது. முகத்தில் என்றும் வாடாத இளமை அழகு சுடர்விட்டது. அந்த அழகுத் தேவியைச் சூழ ஒரு தெய்விக மணம் கமழ்ந்தது.

அந்தத் தெய்வத் தாயைக் கண்ட நான் என்னையறியாமல் எழுந்து நின்றேன். கைகள் தலைமேற் குவிந்தன. கண்களில் மகிழ்ச்சி கண்ணீர் பெருகியது. நா தழு தழுக்க, 'தாயே! தாங்கள் யார் எனத் தெரியவில்லையே', என்று பணிவுடன் கூறினேன்.

அது கேட்டு அத்தாயின் முகத்தில் வியப்பு விரிந்தது. "பெற்ற தாயினும் பிறந்த பொன்னாடு உயர்ந்தது என நீ அறியாயா? அன்னையை அறியாத அருமை மகனே! என் மார்மீதும் தோள்மீதும் மகிழ்ந்து விளையாடியும் என்னைப் புரிந்து கொள்ள முடிய வில்லையா? என்னைக் கவனித்துப்பார்!" என்றுக் கூறிக் கண்ணீர் ஒழுக நின்றாள் அவ்வன்னை.

நான் கூர்ந்து கவனித்தேன். என்னே வியப்பு! அவள் அணிந்த முடி இமயமாய்ப் பொலிந்தது. மார்பில் தவழ்ந்த மாலைகள் கங்கை முதலான ஆறுகளாய்க் காட்சியளித்தன. நீலப் பட்டாடை கடல்களாய் அலைவீசி ஆர்த்தன. அவள் மேனியில் தவழ்ந்த கொள்ளை அழகு பசுமை நிறைந்த வயல்களாகவும், எழில் குலுங்கும் பொழில்களாகவும், சிந்தையைக் கவரும் சிற்றூர்களும் பேரூர்களும் நகரங்களுமாகவும் தோற்றமளித்தன. ஆ! அவள் யார் எனப் புரிந்து விட்டது. ஆம்! பாரனைத்தும் போற்றும் பாரதத் தாயே அவள்.

தாயின் திருக்கோலம் கண்ட சேயாகிய நான் என் அறியாமையைக் குறித்து நாணினேன். "அம்மா! என்னை மன்னிக்க வேண்டும். உன் கோலம் முழுவதும் கண்டறியாத நான் உன்னைப் புரிந்து கொள்ள முடியாத பேதையானேன்" என்று கதறினேன்; அவள் காலடியில் விழுந்தேன். பாரதத் தாய் தன் மலர்க் கரங்களால் என்னை மகிழ்வோடு வாரியணைத்து உச்சி மோந்து மகிழ்ச்சிக் கண்ணீர் சொரிந்தாள்.

நான் அவள் திரு முகத்தையே நோக்கி வியந்து நின்றேன். எழிலொழுகும் அம் மதி முகத்தில் சோகத்தின் சாயல் புலப்பட்டது. அவள் புன்னகையில் துக்கம் தோய்ந்திருந்தது.

நான் பதற்றத்துடன், "ஏனம்மா! தங்கள் திருமுகத்தில் துக்கத்தின் சாயல் தோன்றுகிறது. முந்நூறு ஆண்டுகளாய்த் தங்களைப் பிணித்திருந்த அடிமைத்தளை அகன்றதே! இழிவு ஒழிந்ததே! தாங்கள் பெற்ற செல்வங்களின் பேருழைப்பால் பெருவாழ்வு பிறந்ததே! பெருமிதத்துடன் தலைநிமிர்ந்து, உவகையுடன் காட்சியளிக்க வேண்டிய தாங்கள் இங்ஙனம் துயர்ப்படக் காரணம் என்னம்மா?" என்று கனிவுடன் வினவினேன்.

அது கேட்டு அன்னை கண்கலங்கினாள். அவள் பளிங்கு முகத்தில் கண்ணீர்த்துளிகள் முத்தென உருண்டோடின. "அன்பு மகனே! என் அடிமை நிலை ஒழிந்து உயர்நிலை பெற்றது குறித்து உள்ளம் பூரிக்கத்தான் செய்கின்றேன். ஆனால்..."

"ஆனால் என்னம்மா" என்று ஆவலுடன் கேட்டேன் நான்.

"என் அன்புச் செல்வனே! என் மனத்தை அரிக்கும் வேதனையை என்னென்று சொல்வேன். என் அடிமைத் தனத்தை அகற்ற ஆர்த்தெழுந்தபோது உங்களிடம் காணப்பட்ட ஒற்றுமை, தியாக உணர்வு, கட்டுப்பாடு, கடமை உணர்ச்சி யாவும் இன்று சீர் குலைந்து விட்டனவே! சாதி மத பேதங்கள் தீராத நோயாய் உங்களை உருக்குலைத்து வருவது போதாது என்று உங்களுக்குள் எத்தனை கட்சிகள்! எவ்வளவு வேற்றுமைகள்! அவைகள் ஒற்றுமையைச் சிதைக்கும் தீய சக்திகளாக உருவெடுத்து விட்டனவே. 'உடல், பொருள் ஆவியைத் துறந்தும் பெற்ற தாய்நாட்டைக் காப்போம், உரிமை பெறுவோம்' என்று உழைத்த உங்கள் தியாக உணர்வு இன்று எங்கு ஓடி ஒளிந்தது? பதவி வெறியாலும் பணப்பித்தினாலும் இன்று உங்களிடையே காணப்படும் சுயநல உணர்ச்சியை நினைத்தாலே என் நெஞ்சம் நடுங்குகிறதே. உங்களிற் சிலர் உடன் பிறந்தார்களையே வஞ்சிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கள்ள வாணிகம்

புரிந்தும், கொள்ளை லாபம் பெற்றும், கலப்படம் புரிந்தும், பொருள்களைப் பதுக்கியும் சுயநல வேட்டையாடுவதையும் அதனால் என் ஏழை மக்கள் படும்பாட்டையும், காணும் போது பெற்றவயிறு எரிகின்றதே! இதற்காகவா நான் உரிமை பெற்றேன்! என் அன்புமகன், ஆற்றல் சான்ற தலை மகன் காந்தி இருந்தால் எனக்கு இக்கதி ஏற்பட் டிருக்குமா'' என்று கதறி அழுதாள் அன்னை.

அன்னையின் கண்ணீர் என் நெஞ்சத்தை வாள் கொண்டறுப்பதைப் போல் வாட்டியது. நாணத்தால் தலை குனிந்து நீண்ட பெருமூச்சு விட்டேன். என் உள்ளத்தில் ஓர் உறுதி பிறந்தது. நான் அன்னையின் முகத்தை நோக் கினேன். உள்ளத்தில் பிறந்த உறுதி முகத்தில் சுடர்விட, ''அம்மா இன்று முதல் நான் இந்நாட்டு மக்களிடையே ஒருமைப் பாட்டை வளர்க்கும் பணியையே என் தலையாய கடமையாகக் கொள்வேன். நாட்டை அரித்துக் குலைத்து வரும் தீமைகளை ஒழிக்கப் பாடுபடுவேன். என்வாழ்வையே இதற்காகத் தியாகம் செய்வேன்; இஃது உறுதி'' என்று சூளுரைத்தேன்.

அன்னையின் முகத்தில் மகிழ்ச்சி மின்னியது. அவள் அன்போடு என் தலையைக் கோதி, ''மகனே! உன்னைப் போல எல்லோரும் உறுதிகொண்டு விட்டால் எனக்கு என்ன குறை'' என்று கூறிப் பெருமூச்சு விட்டாள். நான் 'அம்மா!' என்று அவள் பாதங்களை அன்புடன் பற்றினேன். அப்போது என் தலையில் ஓர் ஆலம்பழம் விழுந்து தெறித் தது. திடுக்கிட்டு எழுந்தேன்.

எதிரே ஒருவரையும் காணவில்லை. கண்களைக் கசக்கி விட்டுப் பார்த்தேன்; திகைத்து நின்றேன்; இதுவரை நான் கண்டனவெல்லாம் கனவென்று உணர்ந்தேன். தென்றலின் சுகத்தில் என்னை மறந்து நான் உறங்கி இருக் கிறேன். அந்தச் சிறிய உறக்கத்தில் என்ன அற்புதமான கனவு!

அக்கனவையே எண்ணி எண்ணி வியப்பும் மகிழ்வும் கொண்ட நான், கனவில் உரைத்த சூளுரையை நனவில் நிறைவேற்றவேண்டும் என்ற உள்ள உறுதியுடன் வீடு திரும்பினேன்.

பயிற்சி

பின்வரும் பொருள்களைப் பற்றிக் கற்பனை செய்து கட்டுரை எழுதிப் பழகுக.

1. நான் முதலமைச்சரானல்...
2. தஞ்சைக் கோபுரம் பேசினல்...

18. நிறைவேறிய தீர்மானங்களை உரிய இடங்களுக்கு அனுப்பிவைத்தல்

[கூட்டங்கள், மாநாடுகள் முதலியவற்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை உரிய இடங் கட்கு அனுப்பி வைக்கும் முறையை மாணவர் கள் அறிந்து கொள்ள வேண்டுவது இன்றி யமையாததாகும்.]

மாதிரி :

இளைஞர் பொழுது போக்கு மன்றம் தீர்மானங்கள்

உயர்திரு,

நகராண்மைக் கழக ஆணையாளர் அவர்கள்,
சென்னை மாநகராட்சி,
சென்னை.

ஐயா,

சென்னை முப்பத்தொன்பதாம் வட்டத்தைச் சார்ந்த சூளை நெடுஞ்சாலையில் தமிழார்வம் மிக்க இளைஞர்கள் பலர் கூடி ‘இளைஞர் பொழுது போக்கு மன்றம்’ ஒன்று நடத்தி வருகின்ருேம். அம்மன்றம் தமிழிளைஞர்களின் முன்னேற்றத்துக்கும் அறிவு வளர்ச்சிக்கும் உரிய துறை களில் சிறந்த பணியாற்றி வருகிறது. அம்மன்றத்தின் சார் பில் 29-10-67 ஞாயிறு மாலை 4 மணிக்குப் புலவர் முருக வேள் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைத் தங்கள் மேலான பார்வைக்கு அனுப்பி வைத்துள்ளேன். அருள்கூர்ந்து அவற்றைக் கவனித்து ஆவன செய்தருள வேண்டுகிறேன்.

தீர்மானங்கள்

1. சென்னை முப்பத்தொன்பதாம் வட்டத்தைச் சார்ந்த சூளை நெடுஞ்சாலையைச் சூழ்ந்த பகுதிகளில் வசிக்கும் தமிழிளைஞர்கள், பல்வேறு துறைகளில் பணியாற்றும் பொதுமக்கள் ஆகியவர்தம் அறிவு வளர்ச்சிக்கும் பொழுது போக்குக்கும் பயன்படக் கூடிய வகையில் இப்பகுதியில் ஒரு நூல்நிலையமும், படிப்பகமும் இல்லாமை பெருங்குறையாக உள்ளது. இன்றைய இளைஞர்களே எதிர்கால இந்நாட்டின் குடிமக்கள். அவர்கள் இளமையிலேயே பலதுறை அறிவும் பெற்று விளங்கினால் தான் எதிர்காலத்தில் நம் நாடு சிறக்கும். ஆதலால் அதற்கு வசதியாக இப்பகுதியில் சிறந்ததொரு நூல் நிலையத்தையும் படிப்பகத்தையும் அமைத்துக் கொடுக்குமாறு இப்பகுதி வாழ்மக்களின் சார்பில் இக்கூட்டம் சென்னை மாநகராட்சியை வேண்டிக் கொள்கிறது.

2. இளைஞர் பொழுது போக்கு மன்றத்தைச் சார்ந்த இளைஞர்கள் மாலை நேரங்களில் உடல் நலம் தரும் பல்வகை விளையாட்டுக்களிலும் ஈடுபட்டு விளையாடிக் களிக்க வசதியாகச் சென்னை மாநகராட்சிக்குரிய கண்ணப்பர் திடலில் ஒரு பகுதியை ஒதுக்கித் தருமாறு இக்கூட்டம் மாநகராட்யைப் பணிவுடன் வேண்டிக் கொள்கிறது.

இளைஞர் பொழுதுபோக்கு மன்றம்,
சூளை நெடுஞ்சாலை,
சென்னை 7.

இங்ஙனம்,
V. செங்குட்டுவன்,
செயலாளன்.

பயிற்சி

உங்கள் பள்ளியில் நடைபெறும் மாணவர் சங்கச் சார்பில் சில தீர்மானங்களை உருவாக்கி உரிய இடங்களுக்கு அனுப்பி வைப்பதுபோல எழுதிப் பழகுக.

19. ஒரு பொருள் அல்லது சூழ்நிலை பற்றி ஒட்டியும் வெட்டியும் உரையாடல் அமைத்தல்

[ஒரு கருத்தை ஆதரித்தும் மறுத்தும் இருவர் தங்களுக்குள் பேசுவதுபோல எழுதல்.]

மாதிரி :

கல்லூரிகளில் தாய்மொழி மூலம் கல்வி

வளவன் : நண்ப! கல்லூரிகளிலும் தாய்மொழி வாயிலாகவே எல்லாப் பாடங்களையும் கற்பிக்க வேண்டும் என்று கூறுகிறார்களே. அது பற்றி நீ என்ன நினைக்கிறாய்! அம்முறை நம் நாட்டிற்கு நன்மைதரக் கூடியது என்று எனக்குத் தோன்றவில்லை.

செழியன் : வளவ! ஏன் அங்ஙனம் கருதுகிறாய்? நம் நாடு உரிமை பெற்றபின் தாய்மொழிக்கு முதன்மை தந்து அதனையே ஆட்சி மொழியாக ஆக்கியுள்ளனர். அரசியல் நடவடிக்கைகள் அனைத்தும் தாய்மொழியிலேயே நடக்க ஏற்பாடு செய்து வருகின்றனர். நீதி மன்றங்களிலும் இனி தாய்மொழியே இடம்பெறும். இந்நிலையில் கல்லூரிகளில் தாய்மொழி பயிற்று மொழியாவதுதானே முறையாகும்?

வளவன் : செழிய! தாய்மொழி ஆட்சி மொழியானது குறித்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்; அதனை வரவேற்கிறேன். ஆட்சி மொழியாவது வேறு. பயிற்று மொழியாவது வேறு. கல்லூரிகளில் தாய்மொழியைப் பயிற்று மொழியாக்குவதனால் நம் அறிவு வளர்ச்சி தடைப்படும். ஆங்கிலம் உலகைக் காணும் பலகணியாக உள்ளது. விஞ்ஞானம், பொறியியல், மருத்துவம் போன்ற துறைகளில் சிறந்த அறிவுபெற ஆங்கிலத்தைவிட்டால் வழி ஏது? அந்த உயர் கலைகளை எல்லாம் தாய்மொழி மூலமாகக் கற்கப் புகுவது நடைபெறக்கூடிய செயலா?

செழியன் : வளவ! 'முயற்சி திருவினையாக்கும்' என்ற வள்ளுவர் வாய்மொழியைப் போற்றும் நீயா இவ்வாறு கூறுகிறாய்? தாய்மொழியால் இயலுமா? என்ற குறுகிய நோக்கம், தன்னம்பிக்கையற்ற தன்மை ஆகியவற்

றினுலேயே நாம் தாழ்நிலையடைகிறேம். உலகில் நம்மைத் தவிர வேறு எந்த நாட்டினர் அயல் மொழிமூலம் கல்வி கற்கின்றனர்? வளமற்ற கடினமான ஜப்பான் மொழி பேசுகின்ற ஜப்பானியரும் தங்கள் தாய்மொழி வாயிலாகவே எல்லாக் கல்வியும் கற்கின்றனர். அதனுலேயே இன்று அவர்கள் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சியுற்றுப் பேரறிஞர்களாக விளங்குகின்றனர். அறிவு நலம் சிறந்த நம் நாட்டு மக்கள் அயல்மொழி வாயிலாகக் கற்பதனுலேயே பின்தங்கியுள்ளனர்.

வளவன் : செழிய! நீ கூறுவது எனக்கு வியப்பினையே விளைக்கிறது. இத்துணை ஆண்டுகளாக நாம் ஆங்கிலத்தின் வாயிலாகக் கல்வி கற்றதனுல் எவ்வகையில் தாழ்ந்துவிட்டோம் என்பது எனக்கு விளங்கவில்லை. அது நம் முன்னேற்றத்துக்கு எவ்வகையில் இடையூருக நின்றது என்பதனைக் கூறு பார்க்கலாம்.

செழியன் : வளவ! பிற நாடுகள் எல்லாம் விஞ்ஞானத்தில் முன்னேற்றமடைந்து புதுமைகள் பலவற்றைக் கண்டு பொருளாதாரத்தில் வளர்ச்சியுற்றுச் சிறக்க நாம் தாழ்ந்த நிலையில் உள்ளோம். அதற்குக் காரணம் அயல் மொழிவாயிலாக நாம் கல்வி கற்பதுவே. அயல்மொழி வாயிலாகக் கற்பதால் முதலில் நாம் அம் மொழியில் நல்ல தேர்ச்சி பெற வேண்டியுள்ளது. நம் காலமும் முயற்சியும் அதிலே வீணுகின்றன. அதனுல் நம் ஊக்கம் தளர்கிறது. கல்வியில் ஆர்வம் குன்றுகிறது. பலர் கல்வியில் தேர்ச்சி பெருதொழிவதற்கு அதுவே காரணம். அயல்மொழி வாயிலாகக் கற்பதனுல் மாணவர்கள் ஆசிரியர்கள் கற்பிக்கும் செய்திகளை மனப்பாடம் செய்து தேர்வு எழுதி வெற்றிபெற முடிகிறதே ஒழியத் தாமாகச் சிந்தித்து அறிவை வளர்த்துக் கொள்ள முடிவதில்லை. அதனுலேயே நம் நாட்டில் சிறந்த விஞ்ஞானிகளோ, தேர்ந்த மருத்துவரோ, தொழில் நுட்பக் கலைஞர்களோ தோன்ற முடியவில்லை. இந்த இழிநிலை நம்மைவிட்டு நீங்க வேண்டுமானுல் நாம் நம் தாய்மொழி வாயிலாகவே எல்லாப் பாடங்களையும் கற்க வேண்டும்.

வளவன் : செழிய! ஆங்கிலத்தின் மூலம் எல்லாப் பாடங்களையும் கற்பதனுல் மாணவர்கள் தாமாகச் சிந்தித்து அறிவை வளர்த்துக்கொள்ள முடிவதில்லை என்பதனை நான்

ஓரளவு ஒத்துக் கொள்கின்றேன். என்னுடைய கவலை யெல்லாம் எல்லாப் பாடங்களையும் தாய்மொழி வாயிலாகக் கற்பிப்பதற்கு ஏற்ற வசதி இல்லையே என்பதுதான். பல துறைக் கலைகளைப் பற்றிய நூல்கள் நம் மொழியில் இல்லை. விஞ்ஞான நுட்பங்கள், தொழில் நுட்பங்கள் ஆகிய வற்றைச் சரியான முறையில் விளக்கத் தக்க கலைச் சொற்கள் இல்லை. தாய்மொழி மூலமாகக் கற்பிக்கத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லை. இந்நிலையில் இவற்றை யெல்லாம் உருவாக்கிக் கொண்டு நாம் தாய்மொழி வாயிலாகக் கற்கத் தொடங்குவதற்குள் உலகின் மற்றைய பகுதியினர் எவ்வளவோ முன்னேறி விடுவர். நாம் பின் தங்கிவிடுவோம்.

செழியன் : வளவ! நீ கூறுவது விந்தையாகவே உள்ளது. உலகில் இன்று காணப்படும் விஞ்ஞானப் புது மைகள் ஆகிய யாவும் ஆங்கில நாட்டிலேயே தோன்றிவிட் டனவா? பல்வேறு நாடுகளில் தோன்றிய அவற்றைப் பற்றிய செய்திகளை ஆங்கில அறிஞர்கள் உடனுக்குடன் தாய்மொழியில் ஆக்கிக் கொண்டனர். அவர்களால் முடி வது நம்மால் முடியாதா? நம் நாட்டுப் பேரறிஞர்கள் முயன்றால் ஒரு சில ஆண்டுகளில் எல்லாக் கலைகளையும் பற்றிய நூல்களை உருவாக்க முடியாதா? தமிழ் என்ன சொல் வளம் இல்லாத மொழியா? கலைச் சொற்களைப் படைக்க முடியாதா? ஆசிரியர்கள் முயன்றால் தாய்மொழி மூலம் கற்பிப்பது அவர்கட்கு அருமையோ? இப்போது உயர்நிலைப் பள்ளிவரை தாய்மொழி வாயிலாகக் கற்பிக்க வில்லையா?

வளவன் : கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவானேன் என்று நான் கருது கிறேன். ஆங்கிலத்தில் உள்ள சிறந்த நூல்களைப் பயன்படுத்தி நம் அறிவை வளர்த்துக் கொள்வதை விடுத்து, அவற்றை யெல்லாம் நம் தாய்மொழியில் மொழிபெயர்க்கும் வேலையில் ஈடுபட்டு நம் பொன்னான நேரத்தையும் உழைப்பையும் வீணாக்குவானேன்? அந்த நேரத்தையும், உழைப்பையும் பயன்படுத்தினால் நாம் அத் துறைகளில் மற்ற நாட்டினரைப் போல் முன்னேற்றமடைய லாமே.

செழியன் : வளவ! உன் எண்ணம் விசித்திர மாகவே உள்ளது. நம் மொழிகளில் இல்லாத கலைகளை எல்லாம் நம் மொழியில் மொழிபெயர்ப்பதனால் நம் தாய் மொழி வளம் பெருதா? அதற்காகச் செலவிடும் நேரத்தை வீண் என்று கருதலாமா? 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்செல்வங்கள்யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்று கவியரசர் பாரதியார் கூறியதை மறந்தனையா? ஆதலால் நம் மொழியில் இல்லாத கலைகளை எல்லாம் உருவாக்கும் முயற்சியே நாம் உடனடியாகச் செய்ய வேண்டிய பணி. அதற்குத் தாய்மொழிமூலம் கல்வி கற்பதே நமக்குத் தூண்டு கோலாய் அமையும் என்பது என் எண்ணம்.

வளவன் : செழிய! உன் கருத்துப்படி தாய்மொழி மூலம் கல்வி கற்பது எளிதாக—சிறந்ததாகக் கூட இருக் கலாம். அதனல் விளையும் மற்ருெரு தீமையை நாம் மறந்து விட முடியுமா?

செழியன் : அஃது என்ன? மறக்க முடியாத அவ் வளவு பெரிய தீமையா?

வளவன் : தாய்மொழி வாயிலாகக் கல்வி கற்றவர்கள் நம் மாநிலத்தைத் தவிர அண்டை மாநிலங்களில் சென்று பணியாற்ற முடியுமா? அயல்நாடுகட்குச் சென்று தம் அறிவை வளர்த்துக்கொள்ள முடியுமா? கிணற்றுத் தவளையாக அன்ருே வாழ நேரும்!

செழியன் : வளவ! நீ அடிப்படையை மறந்து பேசு கிருய். ஆங்கில மொழியைப் படிப்பது கூடாது என்று நான் கூறவில்லையே. அம் மொழியை இப்போது படிப் பதைக் காட்டிலும் இன்னும் சிறப்பாக ஆழமாகப் படிக்க வேண்டும். அதற்கு அரசாங்கம் ஏற்பாடுசெய்ய வேண்டும். ஆங்கில மொழியைக் கற்பது வேறு. அம் மொழியின் வாயிலாகவே எல்லாப் பாடங்களையும் படிக்க வேண்டும் என்பது வேறு. நான் ஆங்கில மொழிவாயிலாகப் பிற பாடங்களைக் கற்பிக்கலாகாது; தாய்மொழி வாயிலாகவே கற்பிக்க வேண்டும் என்றுதான் கூறுகின்றேன். அங்ஙனம் தாய்மொழிமூலமாகக் கற்றவர்கள் தேர்ந்த ஆங்கிலப் பயிற் சியும் பெற்றிருப்பதனல் அவ்வறிவைக் கொண்டு எங்கும் பணியாற்றலாம். அதற்கொன்றும் தடையில்லையே.

வளவன் : செழிய! நன்று. உன்னுடைய விளக்கங்கள் எனக்கு மனத் தெளிவைத் தந்தன. என் மனத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கின. தமிழ் மக்கள் அறிவுத் துறையில் பின் தங்கிவிடக் கூடாதே என்ற எண்ணமே நான் இங்ஙனம் பேசக் காரணமாயிருந்தது. இப்போது உன் கருத்தை நான் ஏற்கின்றேன்.

செழியன் : நண்பா! நன்றி! வா போகலாம்.

பயிற்சி

பின்வரும் பொருள்கள் பற்றி ஒட்டியும் வெட்டியும் உரையாடல்கள் அமைத்துப் பழகுக.

1. விஞ்ஞான வளர்ச்சியினால் விளையும் நன்மை தீமைகள்.
2. குடிசைத் தொழிலும் ஆலைத் தொழிலும்.
3. கிராம வாழ்க்கையும் நகர வாழ்க்கையும்.
4. படக்காட்சியினால் விளையும் நன்மை தீமைகள்.

20. நூல் மதிப்புரை எழுதல்

[ஒரு நூலைப் படித்து அதன் சிறப்பியல்புகளையும், குற்றம் குறைகளையும் உள்ளபடியே எடுத்துக்கூறுவது மதிப்புரையாகும். விருப்பு வெறுப்பற்ற மனநிலையுடன் ஆராயும் திறமும், கருத்துக்களைச் சுவைபட எடுத்துக் கூறும் திறமும் அதற்கு வேண்டும். இங்குக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் இயற்றிய 'ஆசியசோதி' என்னும் நூலுக்கு எழுதப்பட்ட மதிப்புரையொன்று மாதிரியாகத் தரப்பட்டுள்ளது. அதுபோல மாணவர்கள் தாம் பயிலும் நூல்களுக்கு மதிப்புரை எழுதிப் பழகுதல் நலம் பயக்கும்.]

மதிப்புரை

நூலின் பெயர் : ஆசிய சோதி
ஆசிரியர் : கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
வெளியீடு : புதுமைப் பதிப்பகம்
விலை: ரூ. 2.

உலக இன்பத்திற்காகத் தம் அரச வாழ்வைத் துறந்து ஆண்டியாய் அலைந்து, போதிமரத்தடியில் ஞானம் உணர்ந்த பகவான் புத்தரின் வாழ்க்கை வரலாற்றைச் சுவையாக எடுத்துரைக்கும் நூல் ஆசியசோதி!

எட்வின் ஆர்னல்டு என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய (Light of Asia) என்னும் கவிதை நூலைத் தழுவிக் கவிமணி அவர்களால் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

தேனினும் இனிய செந்தமிழ்க் கவிதைகளால் பாடப் பட்ட இந்நூல், புத்தரின் தியாக வாழ்வின் சிறப்பைப் படிப்பவர்தம் ஊனுருக, உள்ளம் உருக எடுத்துக் கூறுவ துடன் தமிழின் இனிமையை-பெருமையை அழகை நுகர் வதற்கும் ஏற்றதோர் இலக்கியமாகத் திகழ்கிறது. தேசிக் விநாயகர்க்குக் 'கவிமணி' எனும் பட்டம் தகும் தகும் எனக் கட்டியம் கூறுகின்றது இவ்வினிய கவிதை நூல்.

புத்தர் அவதாரம், அருள் உரிமை, சித்தார்த்தன் கேட்ட தேவகீதம், சித்தார்த்தன் துறவு, புத்தரும் ஏழைச் சிறுவனும், கருணைக்கடல், புத்தரும் சுசாதையும், புத்தரும் மகனிழந்த தாயும் என்ற பிரிவுகளையுடைய இந்நூல் எங் குத் தொட்டாலும் இனிக்கும் சர்க்கரைப் பதுமையைப் போல் ஒவ்வொரு பகுதியும் கற்பவர்க்குக் கழி பேரின்பம் விளைப்பதாக அமைந்துள்ளது.

புத்தர் அவதாரப் பகுதியில் அசித முனிவர் குழந்தை யைக் கண்டு வணங்கி வாழ்த்தும்போது "மன்னர் மன்னவ! மானிடத்தருவில், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கப்பால் ஒரு முறை மலரும் ஒண்மலர் இதுவாம்" என்று குறிப்பிட்டது அந்த அவதாரத்தின் பெருமையை உள்ளபடியே உலகுக்கு உணர்த்துவதாய் அமைந்துள்ளது. புத்தரின் அன்னை மாயாதேவி உலக வாழ்வைத் துறப்பாள் என்பதற்குக் கூறப்பட்ட 'ஏந்திய முத்தினை ஈன்றபின் இப்பி, மாண்டு மண்ணில் மறைவதுபோல' என்ற உவமை மிகவும் பொருத்தமானதாகும்.

சித்தார்த்தன் துறவு என்ற பகுதி உலக வாழ்வின் இயல்பினைப் படம்பிடித்துக் காட்டுவதாக உள்ளது. உலகம் வாழத் தம் சொந்த வாழ்வைத் தியாகம் செய்ய வேண்டுவதன் இன்றியமையாமையைச் சித்தார்த்தரின் சிந்தனையின் வாயிலாக வெளிப்படுத்துகிறது.

புத்தரும் ஏழைச்சிறுவனும் என்ற பகுதி தீண்டாமையின் கொடுமையைச் சுட்டிக்காட்டி மக்களுக்கு நல்லறிவூட்டுவதாய் உள்ளது.

ஓடும் உதிரத்தில்—வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும்—சாதி
தெரிவ துண்டோ அப்பா!
எவர் உடம்பினிலும்—சிவப்பே
இரத்தம் நிறமப்பா
எவர்விழி நீர்க்கும்—உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா

என்ற பாடல்கள் சாதிபேதம் பாராட்டுதலுக்குத் தரப்பட்ட நல்ல சவுக்கடியாகும்.

ஆசிய சோதியின் சிகரமாய் அமைந்த பகுதி 'கருணைக் கடல்' என்பதாகும். வாய்பேசா ஊமை உயிர்களாகிய ஆடுகட்காகப் பிம்பிசாரனுடைய யாகசாலையில் புத்தர் வாதிட்ட நிகழ்ச்சியை விளக்கும் இப்பகுதி மிகவும் உருக்கமானதாகும்.

"மைந்தருள் ஊமை மகனை ஒரு மகன்
வாளால் அறிந்து கறி சமைத்தால்
தந்தையும் உண்டு களிப்பதுண்டோ இதைச்
சற்றுநீர் யோசித்துப் பாருமையா"

என்று புத்தர் புகன்ற மொழி கன்மனத்தையும் கரைக்கக் கூடியதாயுள்ளது.

இறுதியில் அமைந்த 'மகனிழந்த தாயும் புத்தரும்' என்ற பகுதி தாயன்பின் உயர்வைச் சித்திரிப்பதாக உள்ளது. குழந்தைப் பாசத்தால் மயங்கிய பெண் ஒருத்திக்குச் சாவறியா வீட்டில் கடுகு வாங்கிவரப் பணித்து அதன்மூலம் இறப்பும் பிறப்பும் இயற்கை நியதி; அதனை வெல்ல ஒருவராலும் ஆகாது என்ற அரிய உண்மையை அநுபவமூலமாக அறியச்செய்த புத்தரின் செயல் நூலறிவினும் அநுபவ அறிவே உயர்ந்தது என்பதனைத் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றது.

இங்ஙனம் பல அரிய கருத்துக்களையும் உயரிய உண்மைகளையும் விளக்கும் சுவையூற்றாக விளங்கும் ஆசிய சோதியைக் கற்று இன்புறுதல் தமிழ் மக்களின் தலையாய கடமையாம்.

பயிற்சி

இங்ஙனம் நீ படித்த நூல் நிலையப் புத்தகங்களுக்கு மதிப்புரை எழுதிப் பழகுக.

21. செய்யுள்திரண்ட பொருள் எழுதல்

[செய்யுளின் பொருளை நன்கு உணர்ந்து அவற்றின் திரண்ட கருத்தை இனிய எளிய அழகிய உரைநடையில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.]

மாதிரி :

சேய்மை அண்மையில் உயிர்க்கொரு துணையெனச் [சிறந்த
வாய்மை யாலகம் தூய்மையாம் மற்றிலை புறத்தைத்
தூய்மை செய்வது நீரலால் சொல்லின் வேறுளதோ
நோய்மை செய்யினும் வாய்மையே நோன்பெமக் கறிதி.

பதியிழந்தனம் பாலனை இழந்தனம் படைத்த
நிதியிழந்தனம் இனிநமக் குளதென நினைக்கும்
கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலே மென்றூர்
மதியிழந்துதன் வாயிழந்து அருந்தவன் மறைந்தான்.

திரண்ட பொருள்

விசுவாமித்திர முனிவருடைய சூழ்ச்சியால் அரிச்சந்திரன் தன் மனைவி சந்திரமதியைத் தானே வெட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது விசுவாமித்திர முனிவர் அவர்கள் முன்தோன்றி, "ஏன் இந்தத் துன்பம்? முன்னம் நீ எனக்குத் தந்த நாட்டையும் செல்வத்தையும் தரவில்லை என ஒரு பொய்யுரைத்து அவற்றைப் பெற்று இன்பமாக வாழலாமே" என்று கூறினர். அப்போது அரிச்சந்திரனும் சந்திரமதியும் இவ்வாறு கூறுகின்றனர்.

"இம்மையிலும் மறுமையிலும் உயிருக்கு உற்ற துணையாகச் சிறந்து விளங்குவது வாய்மையேயாகும். அவ்வாய்மையினாலேயே உள்ளம் தூய்மைபெறும். உடம்பைத் தூய்மைசெய்வது நீரே. அதுபோல உள்ளத்தைத் தூய்மை செய்வது வாய்மையே. ஆதலால் தாங்கள் இன்னும் எத்தகைய துன்பங்களை எங்கட்கு விளைவித்தாலும் வாய்மையைக் கடைப்பிடிப்பதே எங்கள் உறுதியான கொள்கையாம். இதனைத் தாங்கள் உணர்வீர்களாக.

நாங்கள் நாட்டை இழந்துவிட்டோம்; எங்கள் ஒரே மகனையும் இழந்துவிட்டோம்; நாங்கள் பெற்றிருந்த செல்வங்களை எல்லாம் இழந்துவிட்டோம். இனி நாம் மறுமையில் அடையக்கூடியதாகக் கருதப்படும் வீடுபேற்றையே இழக்க நேர்ந்தாலும் நாங்கள் வாய்மை தவறோம்,'' என்று அரிச்சந்திரனும் சந்திரமதியும் கூறிய உறுதிமொழியைக் கேட்டு விசுவாமித்திர முனிவர் அறிவிழந்து, பேச வாயிழந்து அங்கிருந்து மறைந்தார்.

பயிற்சி

உங்கள் பாட நூலில் அமைந்த சிறந்த செய்யுட் பகுதிகள் சிலவற்றைத் தேர்ந்து அவற்றின் திரண்ட கருத்துக்களைச் சிறு சிறு வாக்கியங்களால் அழகாக எழுதிப் பழகுக.

22. கூட்டங்கள், மாநாடுகளுக்கு வரவேற்புரை எழுதல்

மாதிரி :

வரவேற்பு நல்லுரை

சென்னைக் குறள்நெறி மன்றத்தின் சார்பில் நடைபெற்ற
வள்ளுவர் விழாவிற்குத் தலைமை வகித்த
டாக்டர் மு. வரதராசனார் அவர்கட்கு
அன்புடன் வழங்கிய
வரவேற்பு நல்லுரை

ஆன்றவிந்தடங்கிய சான்றாண்மைச் செல்வரே!

வருக! வருக! தங்கள் வரவு நல்வரவாகுக! தமிழ்த்தாயின் தலைமகனாய், தமிழ் மக்களின் கண்மணியாய் விளங்கும் தகைசான்ற தமிழ்ப்பேரறிஞரே! தங்களை எங்கள் மன்றச் சார்பில் வரவேற்கும் பேறு பெற்றமை குறித்துப் பெருமிதம் கொள்கின்றோம்; பேரின்பம் அடைகின்றோம்.

தமிழ்நலம் பேணும் தகைசால் பெரியீர்!

அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழி தொன்மையும் பெருமையும் வாய்ந்த உயர்தனிச் செம்மொழியாகும்; இலக்கிய வளமும் இலக்கணச் சிறப்பும் வாய்ந்த பெருமொழி

யாகும். நீண்ட நெடுங்காலமாக மக்கள் வாழ்வோடு ஒட்டி அவர்கள் உயிராய், உணர்வாய் வளர்ந்துள்ள நம் தாய்த் தமிழ்மொழி இக்காலச் சூழ்நிலேக்கு ஏற்ற எழிலும் நலமும் பெற்று விளங்கத்தக்க வகையில் அரிய ஆராய்ச்சி நூல்கள், சிந்தனேக் கட்டுரைகள், நெஞ்சத்தைத் தொடும் நெடுங் கதைகள், உணர்வைத் தூண்டும் சிறுகதைகள் என எண்ணற்ற நூல்களே ஆக்கி அளித்துத் தமிழ் வளர்த்து வரும் தங்களே வாழ்த்துதல் அல்லது புகழும் திறமில்லேம்.

வள்ளுவர் வழிவந்த தெள்ளுதமிழ்ப் புலவீர்!

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்து தம் அறிவால்-ஆற்றலால் உலகுக்கு ஒளிநெறி காட்டினர் வள்ளுவர். அவர் வழியில் இன்று தங்களேக் காண்கின்றோம். வள்ளுவர் வகுத்துரைத்த உயரிய நெறிமுறைகளே உள்ளவாறுணர்ந்து அவற்றைத் தமிழகத்தில் பரப்ப 'வள்ளுவம்' என்னும் அரிய குறள் விளக்க நூலே வகுத்தளித்த தாங்கள் இவ்வள்ளுவர் விழாவிற்குத் தலேமை ஏற்பது சாலப் பொருத்தம் என்று எண்ணிப் பெருமகிழ்வு கொள்கின்றோம்.

உள்ளுந்தொறும் இனிக்கும் உயர்குணக்குன்றே!

தாங்கள் நாடறிந்த பூஞ்சோலே; 'தமிழகத்தின் பெர்னுட்ஷா' என்று தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்களால் பாராட்டப்பட்ட பண்பாளர். நுண்ணறிவும் சிந்தனேத் தெளிவும் செயலாற்றலும் உயரியகொள்கைகளும் வாய்ந்த தங்களேப்போன்ற சான்றோர்கள் தமிழ் இளேஞர்கட்குக் கலங்கரை விளக்கம் போன்றவர்களாவர். இன்றைய இளேஞர்கள் எண்ணத்தால், சொல்லால் மட்டும் உயர்வதோடன்றிச் செயலாலும் உயரவேண்டும் என்று எடுத்துக்கூறி அவர்களுக்கு நல்வழிகாட்டிவரும் தங்களே நாடு போற்றுகிறது. நல்லோர் நெஞ்சம் எல்லாம் வாழ்த்துகிறது. நாங்களும் வாழ்த்தி வரவேற்கிறோம்.

நாவீறுபடைத்த நாவலரே!

தங்கள் வருகையால் எங்கள் மன்றம் பெருமைபெற்றது. எங்கள் உள்ளம் உயர்வுபெற்றது. தங்கள் சிந்தையில் தேங்கி நிற்கும் செந்தமிழ் வெள்ளத்தைத் தேனெனப் பாலெனப் பாய்ச்சி எங்கள் சிந்தையைச் செழிக்கச் செய்யு

மாறு வேண்டிக்கொண்டு தங்களை வருக வருக என வாயார, உளமார வரவேற்கின்றோம்.

இங்ஙனம்,

சென்னை 5-11-67. வி. திருமாவளவன் செயலாளன்.

பயிற்சி

உங்கள் பள்ளிக்கு வருகைதரும் அறிஞர்கட்கு வரவேற்புரை எழுதிப் பழகுக.

23. பிரிவுரை எழுதல்

[ஒருவர் ஓய்வுபெற்றோ, பதவி மாற்றம் பெற்றோ, வேறு வகையிலோ பிரிந்து செல்லும்போது அவரைப் பாராட்டியும் அவர் பிரிவுக்கு இரங்கியும் கூறும் நன்மொழிகள்.]

மாதிரி :

சேயாறு கழக உயர்பள்ளித் தமிழாசிரியர் உயர்திரு புலவர் கோ. இளவழகனார் எம். ஏ. அவர்கள் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் பதவி ஏற்றுச்சென்றபோது பள்ளி மாணவர்கள் உளம்நெகிழ்ந்து கூறிய

பிரிவுரை

எங்கள் உளக்கோயிலில் குடிகொண்ட ஏந்தலே !

தங்கள் பொன்னார் திருவடிகட்கு வணக்கம். நுண்மாண் நுழைபுலம் மிக்க தாங்கள் தங்கள் அறிவுக்கும் தகுதிக்கும் ஏற்ற வகையில் கல்லூரியில் பேராசிரியர் பதவி பெற்றமை குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்; பேரின்பம் கொள்கிறோம். தாங்கள் மேலும் பல உயர்ந்த பதவிகளைப் பெற்றுத் தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் சிறந்த தொண்டாற்றிப் பேரும் புகழும் பெற்றுப் பெருவாழ்வு வாழவேண்டும் என உளமார வாழ்த்துகின்றோம்.

நலமெலாம் நிறைந்த நல்லாசிரியரே !

அமிழ்தினும் இனிய நம் தாய்த் தமிழ்மொழியையும் ஆங்கிலத்தையும் அமைவரக் கற்ற பெருமை சான்ற தாங்கள் மலையன்ன மாட்சியும், மலரன்ன முகப்பொலிவும், துலாக் கோல் போன்ற நடுவு நிலையும் வாய்ந்தவராய்-மாணவர்கள்

பால் அன்பும் இன்சொல்லும் உடையவராய்—நல்லாசிரியர் ஒருவர்க்குரிய பண்பு நலன்கள் யாவும் ஒருங்கமையப் பெற்று விளங்குவது கண்டு உள்ளம் பூரிக்கின்றோம்; தந்தையினும் மிக்க பரிவோடு எங்களைக் காத்து நன்னெறிப் படுத்தி வந்த தங்களைப் பிரிய நேர்ந்த நிலை குறித்து மனம் கவல்கின்றோம்.

மன இருளோட்டிய மாமதி யனையீர்!

கற்க வேண்டியவற்றைக் கசடறக் கற்றுக் கற்றவழி நிற்கும் பண்பு நிறைந்த தாங்கள், தங்கள் அறிவொளியால் எங்கள் அறியாமை இருளை அகற்றி, அறிவும் ஒழுக்கமும் அருங்குணங்களும் நிறைந்த நல்ல இளைஞர்களாக உருவாக்கினீர்கள். தாங்கள் பசுமரத்தாணியெனப் பதியக்கூடிய வகையில் எங்கட்கு எடுத்துரைத்த அறிவுரைகளையும் பொருள் பொதிந்த நன்மொழிகளையும் நாங்கள் என்றும் மறவோம்; அவற்றைப் பொன்னெனப் போற்றி யொழுகிப் பேரும்புகழும் பெற்றுத் தங்கட்குப் பெருமை சேர்ப்போம் என இவ்வமயத்தில் தங்கட்கு உறுதி கூறுகின்றோம்.

கேட்டார்ப் பிணிக்கும் சொல்லின் செல்வரே!

மாணவர் நிலையறிந்து, திறமறிந்து அவர் தம் சிந்தையிற் செலச் சொல்லும் சொல்வன்மை வாய்ந்த தங்கள் தமிழ்ப் பாட வகுப்புக்கள் எங்கள் நெஞ்சத்தில் நிழலாடுகின்றன. தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பால்நினைந்தூட்டும் தாயினும் பரிந்தூட்டி எங்கள் சிந்தையைச் செழிக்கச் செய்த தங்கள் பேருதவிக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்ய வல்லேம்! தங்களைத் தெய்வமாகப் போற்றி வணங்குதல் அல்லது வேறு செய்ய இயலாதவராய்த் திகைக்கின்றோம்.

பிரிந்து செல்லும் பெருந்தகைப் புலவீர்!

தங்கள் பிரிவை நினைக்கும்போது எங்கள் நெஞ்சம் நெகிழ்கிறது! கண்கள் குளமாகின்றன! நா தழுதழுக்கிறது! என் செய்ய வல்லேம்!

'உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்'

என்ற வள்ளுவர் வாய்மொழியை எண்ணி ஆறுதல் கொள்வதைவிட வேறு வழியறியோம். தாங்கள் எங்குச் சென்

ருலும் எங்களை நினைவிற் கொள்ளவேண்டும் என்று வேண்டுகிறோம். தங்கட்கு நீண்ட ஆயுளையும் நல்லுடற் பேற்றையும் எல்லாவகை நலங்களையும் அருளிக் காக்கு மாறு இறைவனை இறைஞ்சுகிறோம்.

சேயாறு
25–11–67

இங்ஙனம்,
தங்கள் நல்வாழ்வை விரும்பும்,
அன்புமிக்க மாணவர்கள்.

பயிற்சி

ஓய்வுபெறும் ஆசிரியர், மாறுதல் பெற்றுச் செல்லும் அரசியல் அலுவலர், வேற்றூர் செல்லும் நண்பர் ஆகியவர் தம் பிரிவுக்கு இரங்கிப் பிரிவுரை எழுதிப் பழகுக.

24. வெள்ளி விழாக்காலப் புகழுரையும் மறுமொழியும்

[ஒரு சங்கம் அல்லது பள்ளி போன்றவற்றின் இருபத்தைந்தாம் ஆண்டின் முடிவில் கொண்டாடப்படும் வெள்ளி விழாவில் கூறப் படும் புகழுரைகளும், மறுமொழிகளும்.]

மாதிரி :

பள்ளி பழைய மாணவர் சங்கத்தின் வெள்ளி விழாவின்போது பழைய மாணவர்கள் கூறிய புகழுரை.

அன்புமிக்க தலைவர் அவர்களே! நண்பர்களே! புகழ் பெற்ற நம் தாய்ச்சாலையில் கல்வி பயிலும் மாணவ மணி களே! உங்கள் அனைவர்க்கும் எங்கள் உளம் கனிந்த நன்றி! வணக்கம்.

நம் தாய்ச்சாலை பழமையும் பெருமையும் வாய்ந்த உயரிய கல்வி நிலையமாகும். இக்கல்வி நிலையத்தில் கல்வி பயின்று அறிவும் ஆற்றலும் உயரிய ஒழுக்கமும் வாய்க்கப் பெற்ற எங்களைப் போன்ற பழைய மாணவர்கள் பல்லாயிர வர் பாரதத்தின் பல பகுதிகளிலும் உயர்நிலையில் வாழ்வ தோடு, கடல் கடந்த அயல்நாடுகளிலும் சிறந்த பதவிகளில் அமர்ந்து நம்பள்ளியின் சிறப்பைப் பாரறியச் செய்து வரு கின்றனர்.

நம் பள்ளியில் மாணவர்கட்கு ஆசிரியர்கள் பாடங்களைக் கற்பிப்பதோடு கட்டுப்பாட்டையும், கடமை உணர்ச்சியையும் போதிக்கின்றனர். ஒழுக்கமே உயிரினும் சிறந்தது என்னும் உண்மையை மாணவர்கள் உளங்கொளப் பயிற்றுகின்றனர். இவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தெய்வ நம்பிக்கையே மனித வாழ்வை வளப்படுத்தும் உயிர்ச்சத்தாகும் என்ற உணர்வை இளைஞர்கள் உள்ளத்தில் ஊன்றி, அவர்களை நன்னெறிப் படுத்தி வருகின்றனர்.

மாணவர்கள் நூலறிவோடு உலகியலறிவும் பெற்றுச் சிறக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு ஆசிரியர்கள் மாணவர்கட்குப் பல துறைப்பயிற்சிகளும் அளித்து வருகின்றனர். ஏட்டுப் படிப்பு மட்டுமே கல்வியாகாது. தொழிற்படிப்பும் கல்வியே என்ற எண்ணம் மாணவர்கள் நெஞ்சத்தில் நன்கு பதிந்து அவர்கள் பிற்கால வாழ்வில் பல்வகைத் தொழில்களில் நாட்டம் கொள்ள ஊக்குவதற்காக நம் தாய்ச்சாலையில் மாணவர்கட்குப் பல்வேறு தொழில்களிலும் பயிற்சியளித்து வருகின்றனர்.

இவ்வுயரிய கல்வி நிலையத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவரும் தந்நலம் கருதாமல் மாணவர் நலம் கருதி அரும்பாணியாற்றி வருகிறார்கள். அவர்கள் அயரா உழைப்பாலும், புகழ்பெற்ற தலைமையாசிரியர் அவர்களின் ஒப்பற்ற வழி காட்டுதலாலும் இக்கல்வி நிலையம் இன்று நம் நாட்டில் உள்ள தலைசிறந்த கல்வி நிலையங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.

இத்தகைய மாண்புமிக்க பள்ளியில் பயிலக் கொடுத்து வைத்ததற்காக நாங்கள் பெருமிதம் அடைகின்றோம். இப்பள்ளியில் பயின்ற நல்ல பழக்கவழக்கங்கள் நாங்கள் எங்கள் வாழ்வில் சிறக்கப் பேருதவி புரிந்து வருகின்றன என்பதை உறுதியாய்க் கூறுகின்றோம். நாங்கள் எங்கு வாழ்ந்தாலும் நம் தாய்ச்சாலையை மறவாமல் இதன் பெருமை மேலும் ஓங்க எங்களால் இயன்ற உதவிகளைச் செய்வோம் என்பதனை உள்ளன்போடு அறிவித்துக் கொள்கின்றோம்.

இப்பள்ளியில் பயிலும் இன்றைய மாணவர்கட்கு அவர்களுடைய மூத்த சகோதரர்கள் என்ற முறையில்

ஒரு வார்த்தை கூற விரும்புகின்றோம். நீங்கள் அனைவரும் 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்ற மெய்யுரையை மறவாமல் உங்கள் ஆசிரியர்களிடம் அன்பும் மரியாதையும் உடையவர்களாய்க் கீழ்ப்படிந்து நடந்து கொள்வீர்களாக. நம் பள்ளியின் ஒழுங்கு முறை கல்வித் துறையினராலும், நம் நாட்டுப் பேரறிஞர்களாலும், நம் பள்ளிக்கு வந்த அயல் நாட்டினராலும் பாராட்டிப் போற்றப் பெற்றது. அந்தப் பெருமைக்கு இழுக்கு வராமல் காக்கவேண்டியது உங்கள் பொறுப்பாகும்.

உங்களால் நம் தாய்ச் சாலையின் புகழ் மேலும் ஓங்க வேண்டும். நீங்கள் பள்ளி இறுதித் தேர்வில் நல்ல முறையில் தேர்ச்சி பெற்று நம் பள்ளி ஏனைய பள்ளிகட்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழுமாறு நடந்துகொள்ளவேண்டும். அதற்கு ஆண்டவன் அருள் பாலிப்பானாக என்று கூறி எங்கள் நல்வாழ்த்துக்களை உங்கட்கு அறிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்,
பள்ளியின் பழைய மாணவர்கள்.

மறுமொழி

சீரும் சிறப்பும் வாய்ந்த நம் தாய்ச்சாலையின் பழைய மாணவர்களே! உங்கள் அனைவர்க்கும் இப்பள்ளியிற் பயிலும் உங்கள் இளைய சகோதரர்களாகிய மாணவர்களின் சார்பில் என் அன்பு கலந்த வணக்கத்தை அறிவித்துக்கொள்கின்றேன்.

பழைய மாணவர் சங்க வெள்ளி விழாவின்போது நீங்கள் உள நிறைவோடு எங்கட்குக் கூறிய நல்வாழ்த்துக்களுக்கும் அறிவுரைகளுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை அறிவித்துக் கொள்கின்றேன்.

நம் தாய்ச் சாலையில் பயின்று இன்று இக்கல்வி நிலையத்தின் தூதுவர்களாய் நாட்டின் பல பகுதிகளிலும் வாழ்ந்து இதன் பெருமையை உயர்த்தி வரும் உங்கட்கு இப்பள்ளி மாணவர்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர். நீங்கள் இந்நிலையத்தில் பயின்றபோது எவ்வெவ்வாறெல்லாம் ஒழுகி இப்பள்ளியின் பெருமையைக் காத்து வந்தீர்களோ அப்பெருமை சிறிதும் குன்றாத வகை

யில் நாங்களும் நல்ல முறையில் ஒழுகி இத்தாய்ச் சாலையின் புகழைக் காப்போம் என்று உறுதி கூறுகின்றோம்.

எங்களுடைய கல்வி நலத்திலும் நல் வாழ்விலும் அக் கறைகொண்டு நீங்கள் கூறிய அறிவுரைகளைப் பொன்னே போல் போற்றுவோம். நம்பள்ளி ஆசிரியர்களைத் தெய்வங் களாகப் போற்றி, அவர்கள் மன மகிழ நடந்து, நல்ல கல்வி கற்போம்; நம் பள்ளியின் ஒழுங்குமுறையை உயிரெனக் காப்போம்; அல்லும் பகலும் அயராதுழைத்துக் கல்வி கற்றுத் தேர்வில் சிறந்த வெற்றி பெற்று நம் பள்ளியின் பெருமையை உயர்த்துவோம் என உறுதி கூறுகிறோம். உங்களுடைய நல்வாழ்த்துக்களும் ஆதரவும் எங்கட்கும், நம் தாய்ச்சாலைக்கும் என்றும் வேண்டும் என்று வேண்டி உங்கள்அனைவர்க்கும் என் வணக்கத்தையும் நன்றியையும் அறிவித்துக் கொள்கின்றேன். வாழ்க நம் தாய்ச்சாலை.

இங்ஙனம்,
வி. இளங்கோவன்,
மாணவச் செயலாளன்.

பயிற்சி

ஒரு சங்கம் அல்லது நிறுவனத்தின் வெள்ளிவிழாக் காலப் புகழுரையையும், மறுமொழியையும் எழுதுக.

ஒரு கூட்டுறவு வங்கி அல்லது வணிக நிலையத்தின் வெள்ளி விழாக்காலப் புகழுரையையும் மறுமொழியையும் எழுதுக.

25. நாடகக் காட்சிகள் அமைத்தல்

[வரலாற்று நிகழ்ச்சிகளையும், காவியக் கதை களையும், நாடகக் காட்சிகளாக அமைத்து நடித் தால் பார்ப்பவர் மனத்தில் அவை நன்கு பதியும். உள்ளத்தைத் தொடக்கூடிய எளிய இனிய உரையாடல்கள் மூலம் நாடகக் காட்சிகளை அமைத்தல் வேண்டும். நாடகக் காட்சிகளை வரிசைப்படுத்திக்கொண்டு பிறகு பொருத்தமாக உரையாடல்களை அமைக்கவேண்டும். காட்சி களின் தொடக்கத்தில் காட்சி எண், இடம், காலம், உறுப்பினர் ஆகியவற்றையும் குறிப் பிடுதல் வேண்டும்.]

மாதிரி :

எங்கும் இலாப் பொருள்

காட்சி 1.

இடம் : ஒரு சோலை காலம் : முற்பகல்

உறுப்பினர்கள் : புத்தர், ஆனந்தன் (சீடன்) சீடர்கள், கௌதமி.

(புத்தர் மேடையில் அமர்ந்திருத்தல், அவரைச் சூழ்ந்து சீடர்கள் அமர்ந்திருத்தல்.)

பிட்சு : சுவாமி! தங்களைக் காணவிரும்பி ஒரு மங்கை வந்துள்ளாள். அவள் மிகவும் வருத்தமான நிலையில் உள்ளாள்.

புத்தர் : அப்படியா! உடனே அப்பெண்மணியை இங்கு அழைத்துவா.

(கௌதமி அழுதுகொண்டே ஓடிவந்து புத்தர் காலடிகளில் விழுந்து புலம்பல்.)

புத்தர் : அம்மா! எழுந்திரு. அழாதே அம்மா! நீ யார்? உனக்கு நேர்ந்த துன்பம் யாது?

கௌதமி : சுவாமி நான் பக்கத்தில் உள்ள சிற்றூரில் வாழ்பவள். கௌதமி என்பது என் பெயர். என் ஒரே மகன் இவன். பால் மணம் மாருத பாலகனாகிய இவன் செடி கொடிகட்கு இடையே விளையாடித் திரிந்த போது பாம்பு கடித்து இறந்துவிட்டான். மலர்ச் செண்டு போன்ற அவன் மதிமுகம் வாடிக்கிடப்பதைப் பாருங்கள். தாங்கள் மனம் வைத்தால் என் மகன் பிழைக்கக்கூடும் என்று அறிந்து காடும் மலையும் கடந்து வந்தேன். எங்ஙனமாவது என் மகனைப் பிழைக்கச் செய்யவேண்டும். சுவாமி! தங்களைத் தவிர எனக்கு வேறு கதியில்லை.

புத்தர் : அம்மா! கவலைப்படாதே. உலகில் பிறந்தவர்கள் அனைவரும் ஒருநாள் இறப்பது உறுதி. இறப்பு என் பது இயற்கை நியதி. இறந்தவரைப் பிழைப்பித்தல் யாராலும் ஆகாதம்மா!

கௌ : சுவாமி! தாங்கள் அப்படிச் சொல்லி என்னைக் கைவிடலாகாது. நீண்ட நாட்கள் பிள்ளை இல்லாமல் தவம் செய்து பெற்ற மகன் இவன்! என்னை விட்டு அரைக் கணமும் பிரிந்தறியாத இப்பாலகனைப் பிரிந்து

நான் எங்ஙனம் வாழ்வேன். தோள் மேலும், மார் மேலும் இட்டு வளர்த்த என் மனம் எங்ஙனம் ஆறுதலடையும்? கண்ணே! மணியே! கட்டிக் கரும்பே! எனக் கொஞ்சிய நான் இனி யாரை அங்ஙனம் அழைப்பேன்? கருணை கூர்ந்து என் மகன் உயிர்பெற்று 'அம்மா' என வாய்குளிர அழைக்குமாறு செய்யுங்கள்.

புத்தர் : (சிறிது சிந்தித்து) அம்மா! இறந்த உன் மகன் உயிர் பிழைக்க வேண்டுமானுல் நீ ஒரு காரியம் செய்ய வேண்டும்.

கௌ : சுவாமி! எது வேண்டுமானுலும் செய்யத் தயாராக இருக்கின்றேன். என் உயிரையே வேண்டுமானுலும் தருகின்றேன். என் ஒரே மகன் உயிர் பிழைத்தால் போதும்!

புத்தர் : அம்மா! ஒரு பிடி கடுகு இருந்தால் வாங்கி வா!

கௌ : சுவாமி! கடுகா! ஒரு பிடியா? பத்துப்பிடி வேண்டுமானுலும் வாங்கி வருகின்றேன். இதோ ஒருநொடியில் கொண்டு வருகின்றேன்.

(செல்லுகிருள்)

புத்தர் : அம்மா! அவசரப்படாதே. நான் கூறுவதனைக் கவனமாகக் கேட்டுக்கொள். ஒருபிடி கடுகு போதும். ஆனுல்....

கௌ : ஆனுல் என்ன சுவாமி!

புத்தர் : ஒருவரும் இதுவரை இறவாத வீட்டிலிருந்து அந்தக் கடுகை வாங்கிவரவேண்டும். அப்போதுதான் உன் மகனைப் பிழைக்க வைக்கமுடியும்.

கௌ : சுவாமி! அப்படியே! இதோ அரைக்கணத்தில் கொண்டு வருகிறேன்.

(கௌதமி போதல்)

ஆனந்தன் : சுவாமி! தங்கள் செய்கை எங்களுக்கு வியப்பைத்தருகிறது. இறந்தவரை எழுப்புதல் ஆகாத செயல் என்று தாங்கள் ஒருமுறை கூறியதாக நினைவு.

புத்தர் : ஆம்! உண்மையே.

ஆன : அங்ஙனமாயின் சுவாமிகள் அப்பெண்மணிக்கு அங்ஙனம் கூறியது எதுபற்றியோ? அவள் ஏமாற்றமடைய மாட்டாளோ?

புத்தர் : ஆனந்தா! ஒவ்வொருவரும் நூல்களைப் படித்தோ, பெரியோர் வாய்மொழிகளைக் கேட்டோ அறிவதைக் காட்டிலும் அநுபவத்தால் அதிகம் தெரிந்து கொள்கிறார்கள். பிள்ளைப் பாசத்தால் கலங்கிய அவளைத் தேற்றமுடியாது என்று கருதியே அநுபவத்தின்மூலம் உண்மை உணரச்செய்தேன். நான் கூறுவதன் உண்மையைச் சிறிது நேரத்தில் நீயே அறிந்துகொள்வாய்.

காட்சி 2.

இடம் : சோலை **காலம் :** பிற்பகல்

உறுப்பினர்கள் : புத்தர், கௌதமி, ஆனந்தன்

(கௌதமி திரும்பி வருதல்)

புத்தர் : அம்மா! கடுகுகிடைத்ததா! விரைவிலேயே வந்துவிட்டாயே! எங்கே இப்படிக்கொடு.

கௌ : சுவாமி! தங்கள் பெருமையை உணர்ந்தேன்; அறியாமையால் நான் கூறியதை மன்னிக்க வேண்டுகிறேன். நான் செல்லாத வீடில்லை! ஏறாத வாயில் இல்லை! சாவறியாத வீடு இத்தரணியிலேயே இல்லை என்று அறிந்தேன்; 'இறத்தல் இயற்கை நியதி; அதனை மாற்றல் இயலாது' என்று தாங்கள் கூறிய உண்மையை உணர்ந்தேன்; மகன்மேல் வைத்த பாசத்தை உதறித்தள்ளினேன். கடுகைக் கொண்டு கலங்கிய என் மனத்தின் மாயையை ஓட்டிய மாமுனிவரே! எனக்கு நல்வழி காட்டியருளுமாறு வேண்டுகிறேன்.

புத்தர் : அம்மா! மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். எங்குமில்லாத பொருளைத் தேடிச்சென்ற நீ நான் நினைத்த பொருளையே பெற்றுவந்தாய். உன் உள்ளத் தெளிவைப் போற்றுகிறேன். அங்கமெல்லாம் வாயாகக் கொண்டு அழுதாலும் நின் மகன் எழுந்து உன் துயரத்தைப் போக்க மாட்டான். ஆதலால் கவலைப் படாதே. உன் கடமையில் கருத்தைச்செலுத்து. காலம் உன் கவலையை மாற்றும். போய் வா அம்மா!

கௌ : சுவாமி! தங்கள் திருவுள்ளப்படியே செய்கின்றேன். நான் சென்று வருகின்றேன்.

(செல்லுதல்)

ஆன : சுவாமி! தங்கள் கருணையால் நானும், எல்லா ஞானங்களினும் அநுபவ ஞானமே மேலானது என்ற உண்மையை உணர்ந்துகொண்டேன்.

புத்தர் : ஆனந்தா! உணர்ந்தால் மட்டும் போதாது. இந்த முறையில் நாட்டுமக்கள் நல்லறிவு பெற நல்ல பிரசாரம் செய்யவேண்டும்.

காட்சி முடிவு.

பயிற்சி

உங்கள் பாடத்தில் வந்த கதை நிகழ்ச்சிகளை நாடகக் காட்சிகளாக அமைத்துப் பழகுக.

26. மாணவர் மன்றங்களுக்கு விதிகள் அமைத்தல்

மாதிரி :

[பள்ளி மாணவர் சங்கங்கட்குரிய பொருத்தமான சட்டதிட்டங்களை வரையறுத்து அமைத்தல்.]

பள்ளி மாணவர் மன்ற விதிமுறைகள்

1. நம் உயர் பள்ளியில் பயிலும் மாணவர்கள் அனைவரும் மன்றத்தின் உறுப்பினர்களாவர்.

2. மன்ற உறுப்பினர் கட்டணமாக ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் ரூபா ஒன்று செலுத்துதல் வேண்டும்.

3. பள்ளித் தலைமையாசிரியரே இம்மன்றத்தின் நிரந்தரத் தலைவராவர். தலைமைத் தமிழாசிரியர் துணைத்தலைவராகப் பணியாற்றி வருவார்.

4. ஒவ்வோராண்டும் பள்ளி தொடங்கியவுடன் மாணவர்கள் அனைவரும் கூடி மன்றச் செயலாளர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர், செயற்குழு உறுப்பினர் ஒன்பதின்மர் ஆகியவர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்குழுவினர் ஓராண்டு வரையில் பதவி வகிக்கும் உரிமையுடையவராவர்.

6. மன்றச் சார்பில் வாரந்தோறும் சொற்பொழிவுப் பயிற்சிக் கூட்டங்கள் நடத்துதல் வேண்டும். திங்களுக்கு ஒரு முறை தக்க சான்றோர்கள் தலைமையில் பொதுக் கூட்டங்கள் நடத்தவேண்டும். திருவள்ளுவர், கம்பர், இளங்கோவடிகள், பாரதியார், காந்தியடிகள் போன்ற சான்றோர்களின் விழாக்களை உரிய காலங்களில் சிறப்பாகக் கொண்டாடுதல் வேண்டும்.

7. (அ) மாணவர்களின் அறிவாற்றல்களை வளர்க்கக் கூடிய வகையில் ஆண்டுதோறும் சொற்பொழிவு, கட்டுரை, கதை, கையெழுத்து, மனப்பாடம் முதலிய துறைகளில் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு ஆண்டு விழாவில் பரிசுகள் வழங்கி ஊக்குவிக்க வேண்டும்.

(ஆ) பள்ளியில் மட்டும் அல்லாமல் வெளியிடங்களில் நடைபெறும் பல்வகைப் போட்டிகளிலும் மாணவர்கள் கலந்துகொண்டு வெற்றி பெறக்கூடிய வகையில் உரிய பயிற்சிகள் அளித்தல்வேண்டும்.

8. (அ) மாணவர்கள் கட்டுரை, கதை முதலியவற்றை எழுதும் திறமையை வளர்க்க ஒவ்வொரு வகுப்புக்கும் கையெழுத்து மாத இதழ் நடத்தவேண்டும்.

(ஆ) அவற்றில் வெளியாகும் சிறந்த கட்டுரை, கதைகள் முதலியவற்றை ஆண்டிறுதியில் அச்சு இதழாக வெளியிட்டு மாணவர்களை ஊக்குதல் வேண்டும்.

9. (அ) மன்றச் சார்பில் சிறந்ததொரு படிப்பகத்தை நிறுவி மாணவர்கட்குப் பயன்படக் கூடிய நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்களை வருவித்து மாணவர்கள் ஆர்வமுடன் படிக்க வகைசெய்யவேண்டும்.

(ஆ) ஒவ்வொரு நாளும் நாளிதழ்களில் வெளியாகும் செய்திகளைக் கரும்பலகையில் எழுதி மாணவர்கள் கவனிக்குமாறு செய்ய வேண்டும்.

10. ஆண்டின் முடிவில் மன்றத்தின் ஆண்டு விழாவைத் தக்க தலைவர் தலைமையில் சிறப்பாகக் கொண்டாட வேண்டும்.

145963

பயிற்சி

மாணவர் பொழுது போக்கு மன்றம், இளைஞர் விளையாட்டுச் சங்கம், பள்ளி மாணவர் கூட்டுறவுச் சங்கம் போன்றவற்றிற்கு விதிமுறைகள் வகுத்துப் பழகுக.

சென்னை-600 008.
TB
P21(11) N67

209

MOOVAR TAMIL ILAKKANAM

(MOZHI PAYIRCHI - KATTURAI PAYIRCHI)

For XI STANDARD

By

Vidwan G. VILVAPATHY

PRICE Rs. 1-75